தமிழ்மொழி வரலாறு

இ.ஆ.ப. தேர்வு - கருவி நூல்

தமிழ் வளர்ச்சித்துறை

தமிழ் மொழி வரலாறு

(இந்திய ஆட்சிப்பணித் தேர்வு-தாள் : 1)

பொதுப் பதிப்பாசிரியர்
முனைவர். ம. இராசேந்திரன்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
குறளகம், இரண்டாம் தளம்
சென்னை - 600 108

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	**தமிழ் மொழி வரலாறு** (இந்திய ஆட்சிப்பணித் தேர்வு-தாள் : 1)
பொதுப் பதிப்பாசிரியர் மற்றும் வெளியீட்டாளர்	:	இயக்குநர் தமிழ்வளர்ச்சிஇயக்ககம் குறளகம், இரண்டாம் தளம் சென்னை - 600 108
பதிப்புரிமை	:	தமிழ்நாடு அரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியிடப்பட்ட ஆண்டு	:	1999
பயன்படுத்தப்பட்ட தாள்	:	70 ஜிஎஸ்எம் (த.நா.அ.தா)
நூலின் அளவு	:	20 x 16.5
விலை	:	உரு. **35**
ஒளியச்சுக் கோவை & அச்சிட்டோர்	:	இராயப்பேட்டை எழுது பொருள், அச்சுத் துணைப்பொருள்கள் தயாரிப்பாளர் கூட்டுறவுச் சங்கம் இராயப்பேட்டை, சென்னை-14.
நூல் கிடைக்குமிடம்	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம் குறளகம், இரண்டாம் தளம் சென்னை - 600 108 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை - 600 113.

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
நாள்: 20.4.1999

அணிந்துரை

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இந்திய ஆட்சிப்பணி அலுவலர் தேர்வுகளுக்குச் செல்லக்கூடிய தமிழக இளைஞர்களுக்குப் பயன்படும் நூல்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, தற்போது ''தமிழ் மொழி வரலாறு'' என்னும் நூலினை வெளியிடுவது அறிந்து மகிழ்கின்றேன். அரசு நிருவாகம் சிறப்பாக இயங்கிடவும், வகுக்கப்படும் திட்டங்கள் செம்மையாய் நிறைவேற்றப்பட்டு உரிய பயன்கள் மக்களுக்குச் சென்றடையவும் பொறுப்பேற்றுச் செயல்படுபவர்கள் இந்திய ஆட்சிப் பணி (இ.ஆ.ப.) அலுவலர்கள்.

தமிழகத்தில் தலைமைச் செயலாளர், துறைச் செயலாளர்கள் உட்பட மொத்தம் 316 இ.ஆ.ப. அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இ.ஆ.ப. அலுவலர்கள் மத்தியத் தேர்வாணையத்தின் வாயிலாகவும், மாநில அரசு அலுவலர்கள் பதவி உயர்வு மற்றும் தெரிவு செய்தல் வாயிலாகவும் மத்திய அரசினால் பணியமர்த்தப்படுகின்றனர். மத்தியத் தேர்வாணையம் நடத்திடும் இ.ஆ.ப. தேர்வுகளைத் தற்போது தமிழிலும் எழுதலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை ஏற்பட்டபின் தமிழகத்திலிருந்து இத்தேர்வில் வெற்றிபெற்று வருபவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருவது பெரிதும் மகிழத்தக்கதாகும்.

இ.ஆ.ப. தேர்வுகளைத் தமிழில் எழுதுவோர்க்கு வழிகாட்டி ஊக்கமளித்திடும் வகையில் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததுடன் இப்பணிகளை விரைந்து நிறைவேற்றுமாறு தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களையும் கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையில் இ.ஆ.ப. தேர்வுகளில் ''தமிழ் மொழி மற்றும் இலக்கிய வரலாறு'' என்னும் தேர்வுக்குப் பயன்படும் ''தமிழ்மொழி வரலாறு'' என்னும் நூலினைத் தகுதிவாய்ந்த பேராசிரியப் பெருமக்களின் துணையோடு தயாரித்துத் தமிழ் வளர்ச்சித் துறை தற்போது வெளியிடுகிறது.

இந்நூல் இ.ஆ.ப. தேர்வில் பங்குபெறும் தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்குப் பெரிதும் துணைபுரியும். இந்நூலை உருவாக்கி வெளியிடும் முயற்சியில் ஈடுபட்ட தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத்துறை அமைச்சர், தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்

துறையின் செயலாளர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் அனைவரையும் உளமாரப் பாராட்டுகிறேன். இதர நூல்களையும் உடன் வெளியிட்டுத் தமிழக இளைஞர்கள் பயன்பெற உதவிடுமாறு, தமிழ் வளர்ச்சித் துறையைக் கேட்டுக் கொள்வதுடன் இந்நூல்களைப் பயன்படுத்தி இ.ஆ.ப. தேர்வுகளில் வெற்றிகளை ஈட்டிப் பெருமை சேர்த்திடுமாறு தமிழக இளைஞர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(மு. கருணாநிதி)

முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்**
தமிழ் ஆட்சிமொழி,
தமிழ்ப் பண்பாடு, இந்துசமய
அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
நாள்: 20.4.1999

முன்னுரை

இந்தியாவைப் பல்வேறு மாநிலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மாநிலத்தையும் ஆளுகின்ற பொறுப்பை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை பெற்ற கட்சியினர் ஏற்கிறார்கள். மக்களாட்சியில் பெரும்பான்மை மக்களின் மனப்பாங்கிற்கு இடமளித்து நடத்துவதாக இந்த ஆட்சி அமையும். முதலமைச்சர், அவர் தலைமையின் கீழ் இயங்கும் அமைச்சரவை என்ற அமைப்பு இருந்தாலும், தலைமைச் செயலகமும், சார்நிலை அலுவலகங்களும், மாவட்ட அலுவலகங்களும்தான் நிருவாகப் பணிகளைக் கவனிக்கின்றன. இந்த நிருவாகப் பணிகளுக்குத் தலைமை தாங்குபவர்கள் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட இந்திய ஆட்சிப் பணியாளர்கள். இன்று தமிழக ஆட்சி - 31 செயலாளர்கள் பொறுப்பிலும் ஒரு தலைமைச் செயலாளர் பொறுப்பிலும் வருகிறது. இந்த வகையில் தமிழகத்தில் 316 இ.ஆ.ப. அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். மத்தியத் தேர்வாணையத்தின் வாயிலாகத் தேர்வு எழுதுபவர்கள் தங்களுடைய பாடங்களை ஆங்கிலத்தின் வாயிலாகவோ அல்லது இந்தி மொழியின் வாயிலாகவோ எழுதுகின்றனர். அப்படி அவர்கள் எழுதுகிறபோது, புகுநிலை **(Preliminary Examination)** என்ற தேர்வு எழுதி வெற்றி பெற்றாக வேண்டும். அதனையடுத்து, முதன்மைத் தேர்வில் **(Main Examination)** வெற்றி பெற்றாக வேண்டும். இதில் வெற்றி பெற்றவர்கள் நேர்காணலுக்குச் **(Interview)** சென்று அங்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்த நிலையில், சில பல ஆண்டுகளாகவே அந்தந்த மாநில மொழிகளில் இத்தேர்வை எழுதமுடியும் என்ற சூழ்நிலையும் அதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளன. அண்மைக் காலமாகத் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு தேர்வு எழுதி வெற்றி பெற்று வருபவர்களின் எண்ணிக்கை கணிசமாகவே உயர்ந்துள்ளது. இது வரவேற்புக்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும். இப்படித் தமிழ்வழியில் எழுதுபவர்களும் தமிழ்ப் பாடங்கள் என்று இரண்டு தாள்களில் தேர்வு எழுதியாக வேண்டும். ஆங்கில வழியில் தேர்வு எழுதுபவர்களாக இருந்தாலும் அவர்களும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாக இருப்பின், அந்த இரண்டு தமிழ்த்தாள்களையும் எழுதியாக வேண்டும். எனவே, இந்தத் தமிழ்த்தாள்களைப் பற்றிய ஆய்வில் தமிழ் ஆட்சிமொழித்துறை கவனம் செலுத்தத் தொடங்கியது. ஒவ்வொரு மாநில மொழியும் ஆட்சி

மொழியாக அது செயற்படக்கூடிய காலத்தில் தமிழக உறுப்பினர்களே தமிழ்நாட்டுக்குள் பணியாற்ற வருகிறபோது, அவர்களுக்கு உறுதுணையாக இருக்கவும், ஒருவேளை அவர்கள் தமிழ்நாட்டுக்குள் பணியாற்ற இயலாமல் மதிப்பெண் அடிப்படையில் வேறு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அவர்களும் எழுதி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாகவும் இந்தத் தமிழ்த்தாள்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்கின்றனர். அப்படிப்பட்ட நிலையில் தமிழ் வளர்ச்சித் துறையினுடைய பணி வெகுவாகத் தேவைப்படுகிறது.

தமிழிலுள்ள இரண்டு தாள்களில் ஒன்று - முற்றிலும் தமிழிலக்கியம் தொடர்பானது. அவை பொதுவானவை என்பதால் யார் வேண்டுமானாலும் படித்துக்கொள்ளலாம். அதற்கேற்ற உரை நூல்களும், திறனாய்வு நூல்களும் ஏராளமாக வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, 'திருக்குறள் காமத்துப்பால்', 'பாரதிதாசனின் குடும்ப விளக்கு' போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். எனவே, இவற்றுக்கான விளக்கம் எழுதுவதில் தமிழக அரசு கவனம் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், அடுத்து இருக்கின்ற ''தமிழ்மொழி வரலாறு'' என்ற தாள்தான் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இயல்பாகத் தமிழ் இளங்கலை முடித்துவிட்டு, முதுகலை வகுப்பில் சேருகிறபோது, சிலர் தமிழ் முதுகலை (M.A., Tamil Literature) என்ற வகுப்பிலும், சிலர் மொழியியல் முதுகலை (M.A. Linguistics) என்ற வகுப்பிலும் சேர்ந்துவிடுகின்றனர். மொழியியல் பாடங்களைப் பார்க்கும்போது அவ்வளவு மேற்போக்காகப் பயின்றுவிடுவோம் என்று யாரும் உள்ளே நுழையமுடியாது. ஒலி அடிப்படையிலும், இலக்கணக் கூறுகள் எங்கெங்கு எப்படி மாறுபடுகின்றன என்ற அடிப்படையிலும் மொழியியல் பாடங்கள் விரிவடைகின்றன. அதிலும் ஆங்கிலமொழித் தொடர்கள் பல இதனோடு இணைக்கப்படுகின்றன. எனவே, இந்தப் பாடங்களில் கடுமையான ஆர்வமும், ஆழமும் இருந்தால்தான் சிறப்பாகச் செய்யமுடியும். முறையாக இந்தப் பாட வகுப்பில் சேர்ந்து படிப்பவர்களுக்கே இது கடினமாகத் தோன்றும்போது, தமிழ் முதுகலையே படிக்காமல் வணிகவியல் படிப்பவரோ, வேளாண்மைப் பட்டம் பெற்றவரோ (Agri.,) இரண்டு தமிழ்த் தாள்களைத் தேர்ந்தெடுப்போம் என்ற அடிப்படையில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குள் நுழையும்போது, பெரிய அளவில் இடர்ப்படுகின்றனர். அதிலும் திட்டவட்டமாக இந்த நூலைத்தான் படிக்கவேண்டும் என்று இல்லாமல் பலவற்றையும் படித்து வினாவுக்கேற்ற விடையை ஒழுங்கு செய்வது என்பது மிகவும் கடினமாகும்.

இதையெல்லாம் மனத்தில் கொண்டுதான் தமிழ் வளர்ச்சித்துறை இ.ஆ.ப., தேர்வு எழுதுபவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில், தமிழ்மொழி வரலாற்றைத் தயாரித்தளிக்க முடிவு செய்தது.

கேட்டதெல்லாம் கொடுக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் இதற்காக ரூ. 3 இலட்சத்தை ஒதுக்கியுள்ளார்கள். அந்த அடிப்படையில் வெளிவருகிற முதல் நூல்தான் இப்போது உங்கள் கையில் தவழுகின்றது. கட்டுரைகளைப் பல்வேறு தலைப்புகளில் பிரித்துக்கொண்டு எழுதித் தந்த 9 பேராசிரியர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருக்கிறது என்று சொல்லி இ.ஆ.ப., தேர்வுக்குப் படிக்க முனைந்த தோழர்களுக்கு இந்த நூல் கண்களாகவே விளங்குகிறது. அந்த அளவிற்கு இந்த நூல் சிறப்புப் பெற்றுள்ளது.

'இந்திய மொழிக்குடும்பங்கள்' பற்றியும், அதனையடுத்துத் 'திராவிட மொழிக் குடும்பம்' பற்றியும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. திருந்திய திராவிட மொழிகள் **(Cultivated)**, திருந்தாத திராவிட மொழிகள் **(Uncultivated)** என்று கால்டுவெல் வகுத்த வழியிலேயே இங்கு மொழிகள் பட்டியலிடப்படுகின்றன. அதிலும் வட திராவிடம், நடுத் திராவிடம், தென் திராவிடம் என்ற பிரிவுகளின் கீழும் இவை அமைகின்றன.

'தமிழ்' எனும் தலைப்பில் கட்டுரை விரிவாக அமைந்துள்ளது. பெயரெச்சம், வினையெச்சம் ஆகியவை பற்றிய செய்திகள் விரிவாக இடம்பெற்றுள்ளன. அடுத்து, 'தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றிய கட்டுரை. கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளுக்கும், இப்போது நாம் பயன்படுத்தும் எழுத்துகளுக்கும் உள்ள வேறுபாடுகள் நமக்குத் தெரியும். இதுபற்றிய கட்டுரையும் விரிவாக அமைந்துள்ளது.

அடுத்து, 'தமிழ்மொழி வரலாறு' என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. 2,000 ஆண்டுகளாக அவ்வப்போது ஆட்சி செலுத்தியவர்களின் செல்வாக்கால் எந்த அளவிற்குத் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன என்பதையும், பிற மொழிச் சொற்கள் கலந்ததால் வெவ்வேறு பகுதிகளில் ஒலியிலும் பேச்சு வழக்கிலும் சொற்கள் மாறுபட்டுப் பல புதிய மொழிகள் பிரிந்துள்ளதையும் இந்த இடத்தில் நாம் சிந்தித்தாக வேண்டும்.

அடுத்து, 'தற்காலத்தில் தமிழின் வளர்ச்சி' குறித்து ஒரு கட்டுரை உருவாகியுள்ளது. 'சைக்கிள்' என்ற சொல்லுக்கு ''மிதிவண்டி'' என்ற சொல்லைப் பயன்படுத்தும் நாம் அதன் உறுப்புகளுக்குச் சொற் பட்டியலை உருவாக்கியுள்ளோமா என்ற வினா கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தமிழின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக நிற்கின்ற தொல்காப்பியத்தைப் பற்றிய கட்டுரையில் எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றின் அமைப்பு முறைகள் அலசி ஆராயப்படுகின்றன. மொழிகளின் ஆழமான பகுதிகளை நோக்கி இந்தக் கட்டுரை

செல்லுகிறது. ஒலியியலில் (Phonetics) விரிவான செய்திகள் இடம்பெற்றுள்ளன. அடுத்த கட்டுரை 'தமிழ் உருபனியலும் தொடரியலும்' பற்றியதாகும். இதிலேயே தொடரமைப்பு இலக்கணமும் அலசி ஆராயப்படுகிறது.

'பெயர்த் தொடரமைப்பு' குறித்து அடுத்த கட்டுரை செல்கிறது. அடுத்த கட்டுரை 'மொழி' குறித்தும், அதன் கிளை மொழிகள் குறித்தும் பேசுகிறது. வட்டார வழக்குகள் (Regional Dialects) எப்படி அமைந்துள்ளன என்ற உண்மையை இவ்வியலில் காணலாம்.

மொத்தத்தில் இந்தக் கட்டுரைத் தொகுப்பு - தமிழில் இ.ஆ.ப., தேர்வுகளை எழுதுகிற எல்லார்க்கும் மிக அருமையாகப் பயன்படப்போகிறது என்பதை எண்ணும்போது, பெரும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை, இதுபோன்று ஆழ்ந்த முயற்சிகளில் ஈடுபட்டு அரிய படைப்புகளை வெளிக்கொணருவது காலத்தால் செய்யப்பட்ட அருஞ்செயல் என்றே கருதுகிறேன். இதிலேயே இன்னும் பல பாடங்களுக்கு நூல்கள் வெளிவரவிருக்கின்றன என்பதிலும், இந்தக் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு வருங்காலத்தில் ஒரு பெரிய மலர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது என்ற வகையிலும் துறை பெருமிதம் கொள்கிறது.

எங்களை இப்பணிக்கு ஆளாக்கி, தந்தையாய் நின்று வழிகாட்டியும், தாயினும் சாலப் பரிந்தும் வளர்த்து வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

(மு. தமிழ்க்குடிமகன்)

முனைவர் **ம. இராசேந்திரன்**
தமிழ் வளர்ச்சி இயக்குநர்

தமிழ்வளர்ச்சி இயக்ககம்,
குறளகம்,
சென்னை - 108.
நாள் : 20.4.1999

நன்றியுரை

ஒளிவுமறைவற்ற வெளிப்படையான நிருவாகத்தை மக்களுக்கு அளிக்கும் நோக்குடன் செயற்பட்டுவரும் தமிழ்நாடு அரசு, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எனும் இலக்கினை எய்திட - ஆட்சியில், ஆவணத்தில், அயலவர்தம் காட்சியில் தமிழை இடம்பெறச் செய்திடப் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. பெயர்ப்பலகைகளில் தமிழ், காட்சியில் தெரிகிறது. அரசு ஆணைகள் அனைத்தும் தமிழில் என்பதால் ஆவணங்களில் தமிழ் இடம்பெறத் தொடங்கிவிட்டது. ஆட்சியில் தமிழைக் கொண்டுவர, கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆட்சியில் தமிழைக் கொண்டுசெல்வதில் இருவகையான பணிகள் இன்றியமையாதவையாகும். முதலாவது நிருவாக மொழியாகத் தமிழை வளர்த்தெடுத்தல். இதற்காக ஆட்சிச்சொல் அகராதி, சிறப்புச் சொல் துணை அகராதிகள் ஆகியவற்றை அரசு வெளியிட்டு வருகிறது.

இரண்டாவது ஆட்சிப்பணியாளர்களிடம் தமிழைக் கொண்டு செல்வது. இதில் ஆட்சிப்பணிக்கு வந்த பின்னர்த் தமிழை அறிந்து பயன்படுத்தத் தொடங்குவது ஒருநிலை. ஆட்சிப்பணித் தேர்வு நிலையிலேயே தமிழைக் கொண்டுசெல்வது இன்னொரு நிலை.

ஆட்சிப்பணித் தேர்வு எழுதுகிறவர்கள் தமிழை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுக்கவும், தமிழிலேயே தேர்வெழுதவும் இப்போது பெருவிருப்புடன் முன்வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான தரமான குறிப்பு நூல்களும் கருவி நூல்களும் தமிழில் போதுமான அளவில் இல்லை என்ற குறையினைப் போக்கும் வகையிலும், தமிழில் தேர்வெழுத முன்வருவோரை ஊக்கப்படுத்தும் போக்கிலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வாழ்த்துக்களோடும், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி- தமிழ்ப் பண்பாடு (மற்றும்)இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடும், தமிழ் அறிஞர்களின் ஒத்துழைப்போடும் இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குப் பயன்படும் 'தமிழ் மொழி வரலாறு' எனும் இந்த நூல் தமிழ்நாடு **அரசின் தமிழ்** வளர்ச்சித் துறை வாயிலாக வெளிவருகிறது.

இந்நூலிற்கு அணி செய்யும் வகையில் அணிந்துரை வழங்கி அருளிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், முன்னுரை நல்கிச் சிறப்பித்திருக்கும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு (மற்றும்) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், உரிய நேரத்தில் ஆணைகளை வழங்கி உதவிய தமிழ் வளர்ச்சி- பண்பாடு (மற்றும்) அறநிலையத் துறை அரசுச் செயலருக்கும், அலுவலர்களுக்கும், இந்திய ஆட்சிப் பணித் தேர்வுப் பாடத்திட்டத்தையொட்டிக் கட்டுரைகள் எழுதித்தந்துள்ள தமிழறிஞர்களுக்கும், நூல் உருவாக உழைப்பை நல்கியுள்ள ஆலோசனைக் குழு மற்றும் தனிக்குழு உறுப்பினர்களுக்கும், தமிழ் வளர்ச்சித் துறையின் முன்னாள் இயக்குநருக்கும், இந்நூற்பணியில் உதவிய இத்துறையின் உதவி இயக்குநர்கள் திருவாளர்கள் வை. கண்ணபுரக்கண்ணன், கூ.வ. எழிலரசு ஆகியோருக்கும் பணியாளர்களுக்கும், விரைந்து நூல் வெளிவர ஒத்துழைத்த அச்சகத்தார்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ம. இராசேந்திரன்

பொருளடக்கம்

இயல் ஒன்று	பக்கம்
இந்திய மொழிக்குடும்பங்கள்	1
-முனைவர் ஜி. ஜான்சாமுவேல்	
இயல் இரண்டு	
தமிழ்	45
-முனைவர் தி. நடராசன்	
இயல் மூன்று	
தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்	95
- திரு. நடன. காசிநாதன்	
இயல் நான்கு	
தமிழ்மொழி வரலாறு	117
- முனைவர் செ. வை. சண்முகம்	
இயல் ஐந்து	
தற்காலத்தில் தமிழின் வளர்ச்சி	135
- முனைவர் சா. வளவன்	
இயல் ஆறு	
தொல்காப்பியம் - எழுத்து, சொல், பொருள் அமைப்பு முறை	149
- முனைவர் சரளா இராசகோபாலன்	
இயல் ஏழு	
தமிழ் உருபனியலும் தொடரியலும்	197
- முனைவர் பொன். கோதண்டராமன்	
இயல் எட்டு	
பெயர்த் தொடர் அமைப்பு	235
- முனைவர் கி. அரங்கன்	
இயல் ஒன்பது	
மொழி	247
- முனைவர் கு. இன்னாசி	

இயல் ஒன்று

இந்திய மொழிக் குடும்பங்கள்

இயல் ஒன்று

இந்திய மொழிக்குடும்பங்கள்

உலகின் மொழிவளம் மலிந்த நாடுகளுள் ஒன்றாக இந்தியா கருதப்படுகிறது. பல்வேறு இனக்குழுக்களின் -பண்பாடுகளின் - மொழிக்குடும்பங்களின் சங்கமமாக இந்நாடு திகழ்கின்றது. இந்த நாட்டில் 1652-க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இந்தக் கணிப்பு நாள்தோறும் மாறி வருவதைக் காணலாம். புதிய புதிய மொழிகள் மொழி ஆய்வு தொடர்பான ஒவ்வொரு களப்பணியின்போதும் கண்டுபிடிக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் உயர்வதற்குரிய வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றிய தகவல்களும் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருகின்றன. தொடக்க நிலையில் இந்திய மொழிகள் அனைத்தும் சமற்கிருதத்திலிருந்து படிப்படியாகத் தோன்றியவை என்று தவறாகக் கணிக்கப்பட்டது. கல்கத்தாவிலுள்ள ஆசியக் கல்விச் சங்கத்தைத் (**Asiatic Society**) தோற்றுவித்த சர். வில்லியம் ஜோன்ஸ் சமற்கிருதம் இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தோடு தொடர்புடையது என்பதை 1786இல் நிலைநாட்டியபோது இந்திய மொழிகள் பற்றிய பழைய கண்ணோட்டங்கள் மாற்றம் காணத் தொடங்கின. திராவிடவியலின் தந்தை என்று அழைக்கப்படும் டாக்டர் கால்டுவெல் தென்னாட்டில் பேசப்படும் தமிழ், மலையாளம், தெலுங்கு, *கன்னடம் முதலான ஒன்பது மொழிகள் சமற்கிருதத்திலிருந்து மாறுபட்ட* திராவிட மொழிக்குடும்பம் என்னும் தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்று 1856-இல் நிறுவிய போது தென்னிந்திய மொழிகள் பற்றிய பழைய கருதுகோளை மறுஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய நிர்பந்தம் தோன்றியது.

இவ்விரு மொழிக் குடும்பங்களைத் தவிர, திபத்தோ - சீன மொழிக்குடும்பம், ஆஸ்ட்ரிக் அல்லது முண்டா மொழிக்குடும்பம் ஆகிய இரு வேறுபட்ட மொழிக் குடும்பங்களும் இந்திய மொழிக்குடும்பத்தில் இணைந்து கொண்டன.1864-இல் மாக்ஸ்முல்லர் முண்டாவைத் தனி மொழிக்குடும்பமாகக் கண்டறிந்தார். இந்நிலையில் இந்திய நாட்டில் வேறுபட்ட நான்கு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் பேசப்படுவதாகக் கருதப்பட்டு வந்தது. தற்போது அந்தமான் நிகோபர் தீவிலுள்ள மொழிகளும் ஒரு தனி மொழிக்குடும்பமாகக் கருதப்படுகின்றது. வேறு ஒரு மொழிக்குடும்பம் நெடுங்காலம் வழக்கிலிருந்து காலப்போக்கில் அழிந்திருக்க வேண்டும் என்றும்,

''நகலி'' என்ற மொழி அதன் எச்சம் என்றும் கருதப்படுகின்றது. இந்நிலையில் வேறுபட்ட ஆறு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் இந்நாட்டில் தற்போது வழக்கில் உள்ளனவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் மொழியியலார் பலர் முற்சுட்டிய நான்கு மொழிக்குடும்பங்களையே இந்தியாவின் மொழிக்குடும்பங்கள் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்திய மொழிகள் பற்றிய வளமான தகவல்கள் பலவகைப்பட்டனவாக அமைந்து மொழி ஆய்வாளர்களை அதிக வியப்பில் ஆழ்த்துகின்றன. இம்மொழிகளுள் நகலி, பாலி, பிராகிருதம் முதலானவை ஏட்டளவில் மட்டுமே உள்ளன. ஏட்டளவில் உள்ள சமற்கிருதம் சமயச் சடங்குகளில் பயன்படுத்தப் படுவதோடு சிறுபான்மையினரால் பேசவும் படுகின்றது. பல்வேறு இனங்களாக, பல்வேறு மொழிக்குழுவினராக இருந்த பரந்துபட்ட இந்நாட்டு மக்களின் மொழி, பண்பாடு ஆகியவற்றின் இடையில் சில பொதுமைப் பண்புகள் ஊடும் பாவுமாக இழையோடியதன் விளைவாக இந்தியப் பொதுமைப் பண்பாடு (Pan-Indian Culture) கி.மு. 6-ஆம் நூற்றாண்டளவில் தொடர்ந்து ஏற்பட்ட பண்பாட்டு இனக்கலப்பால் அரும்பத் தொடங்கியது. மேற்கூறிய மொழிக்குடும்பங்கள் பலவற்றிற்கும் இடையில் சொற்கள், இலக்கணக் கூறுகள் தொடர்பான ஏராளமான கொள்வினை கொடுப்பினைகள் ஏற்பட்டன. பெரும்பாலான இந்திய மொழிகளில் இலக்கிய மரபுகளும் காலப் போக்கில்தான் அரும்பின; எழுத்துகளும் காலப் போக்கில்தான் தோன்றின.

1866-இல் வியன்னாவில் கூடிய கீழ்த்திசை மாநாடு (Oriental Congress) இந்திய மொழிகள் பற்றிய கள ஆய்வினை மேற்கொள்ளு மாறு இந்திய அரசை வற்புறுத்தியது. இதை ஆய்வு செய்து 1881-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பில் பிறந்த இடம், பேசும் மொழி என்ற இரு தகவல்களையும் கூடுதலாகத் திரட்ட முடிவு செய்யப்பட்டது. அதோடு தனி நபரின் தாய்மொழி எது என்ற தகவலும் இக்கணக் கெடுப்பில் இடம் பெற்றது. இக்கணக்கெடுப்பு இந்திய மொழிகள் பற்றிய ஏராளமான புதிய தகவல்களைத் தந்து நின்றது. இந்திய மொழிகளின் கள ஆய்வுத் திட்டம் (Linguistic Survey of India) செயல்வடிவம் பெறத் தொடங்கிய போது சர். ஜார்ஜ் ஆபிரகாம் கிரியர்சன் (Sir, George Abraham Grierson) இத்திட்டத்தின் மேலாளராக 1898-இல் நியமனம் பெற்றார். 29 ஆண்டுகளில் நிறைவு பெற்ற இக்களப் பணியின் கண்டுபிடிப்புகள் பற்றிய முதல் தொகுதி 1927-இல் வெளியானது. இதில் 179 மொழிகளும், 544 கிளைமொழிகளும் இந்திய நாட்டில் உள்ளதாகச் சுட்டப்பட்டது. இதன் பின்னிணைப்பில் 872 மொழிகள் இந்திய நாட்டில் உள்ளதாகச் சுட்டப்பட்டது. மேற்கூறிய திட்டத்தால் இந்திய மொழிகள் பற்றிய ஏராளமான புதுத் தகவல்கள் கிடைத்தன.

1961-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணிப்பில் 1652 மொழிகள் இந்தியாவில் பேசப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்றில் ஒரு பங்கு, அதாவது 574 மொழிகள் இந்தோ-ஆரிய மொழிகளாக உள்ளன. இவற்றைப் பேசியோர் அன்றைய மக்கட் தொகையில் 73.30 விழுக்காட்டினர் ஆவர். திபெத்தோ-சீனமொழிக் குடும்பத்தின் ஒரு பகுதியான திபெத்தோ- பர்மிய மொழியினை 0.73 விழுக்காட்டினர் பேசினர் என்ற தகவலும் தெரியவந்துள்ளது. சீனோ-திபெத்திய மொழிக்குடும்பத்தில் 226 மொழிகள் கண்டறியப்பட்டுள்ளன.

திராவிட மொழிக்குடும்பத்தில் 153 மொழிகள் உள்ளன என்று இக் கணக்கெடுப்பு தெரிவித்துள்ளது. இதில் பலவற்றை மொழியியலார் தனி மொழிகளாகக் கொள்ளாது வட்டார வழக்குகளாகவே கொள்கின்றனர். இந்திய மொழிக் குடும்பத்தில் பேசுவோரை வைத்து மதிப்பிடும்போது திராவிட மொழிக்குடும்பம் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது. இந்திய மக்கட் தொகையின் 24.47 விழுக்காட்டினர் இம்மொழிகளைப் பேசுகின்றனர். ஆஸ்ட்ரோ - ஆசிய மொழிக் குடும்பத்தில் 65 மொழிகள் உள்ளன. 1961ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணிப்பின்படி இம்மொழிகளைப் பேசுவோர் வெறும் 6,192,495 பேர் எனத் தெரிகின்றது. இவற்றோடு வகை பிரித்தறிய முடியாத 530 மொழிகளும் உள்ளன என்று இக்கணக்கெடுப்பு புலப்படுத்தியது.

1981-இல் மேற்கொள்ளப்பட்ட மக்கட் தொகைக் கணக்கெடுப்பு இந்திய மொழிகள் பற்றிய பல புதிய வெளிச்சங்களை மேலும் தந்தது. இந்தி பேசுவோர் எண்ணிக்கை 1971-இல் 38 விழுக்காடாக இருந்தது. இது 1981 இல் 42.88 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 1981ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படித் திராவிட மொழிகளைப் பேசுவோரில் 17.14 விழுக்காடு மலையாள மொழி பேசுவோரும் 9.69 விழுக்காடு தமிழரும் 6.85 விழுக்காடு தெலுங்கரும் 6 விழுக்காடு கன்னடர்களும் இந்தி மொழியைக் கற்றுப் பேசும் திறமுடையோராகத் திகழ்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

1981ஆம் ஆண்டுக் கணிப்பின்படி 6106 பேர் மட்டுமே சமற்கிருத மொழியைப் பேசுகின்றனர். பீகாரில் 1745 பேரும், உத்தரப் பிரதேசத்தில் 1166 பேரும் கர்நாடகாவில் 882 பேரும் மகாராட்டிரத்தில் 559 பேரும் இதனைப் பேசுகின்றனர். பிறர் இந்தி, மராத்தி, கன்னடம் ஆகிய மொழிகளோடு சமற்கிருதத்தையும் பேசுகின்றனர். இவர்கள் இருமொழி வழக்கினர் **(Bilinguals)** ஆவர்.

பேசுவோரின் எண்ணிக்கையினை அடித்தளமாகக் கொண்டு இந்திய நாட்டு மொழிக்குடும்பங்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்.

1. ஆரியன் அல்லது இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம்
2. திராவிட மொழிக் குடும்பம்
3 முண்டா அல்லது கோல் அல்லது ஆஸ்ட்ரோ-ஆசியமொழிக் குடும்பம்
4. சீனோ-திபெத்திய மொழிக்குடும்பம்

இந்திய மொழிக்குடும்ப ஆய்வில் திராவிட மொழிகள் பற்றிக் கால்டுவெல் மேற்கொண்ட ஆய்வு மிகச்சிறப்பு வாய்ந்தது. கால்டுவெல்லைத் தொடர்ந்து ஜான்பீம்ஸ் என்பவர் இந்தியாவின் தற்கால ஆரிய மொழிகளின் ஒப்பிலக்கணம் (**Comparative Grammar of the Modern Aryan Languages of India**) என்ற நூலின் மூன்று தொகுதிகளை முறையே 1872, 1875, 1879 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டுள்ளார். இது இந்திய மொழிகள் பற்றிய ஆய்வில் பல புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளது. புகழ்பெற்ற சமற்கிருத மொழி அறிஞரான திரு. ராமகிருட்டிண கோபால் பந்தர்கர் 1877-இல் மும்பைப் பல்கலைக்கழகத்தில் இந்தோ-ஆரிய மொழிகள் பற்றிய விரிவான சொற்பொழிவு ஆற்றியுள்ளார். ஆரிய மொழிகள் சமற்கிருதம், பிராகிருதம், பாஷா என்ற மூன்று நிலைகளில் முறையே பழைய இந்தோ-ஆரியம், இடைக்கால இந்தோ-ஆரியம், புதிய இந்தோ-ஆரியம் என்ற படிநிலைகளில் காலந்தோறும் வளர்ந்துள்ளதை இவர் தமது உரையில் விரிவாக விளக்கிக் காட்டினார். இவற்றைத் தொடர்ந்து சிந்தி, இந்துத்தானி, வங்காளமொழி, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மைதிலி, காஷ்மீரி போன்ற பல்வேறு தனித்தனி மொழிகளின் வளர்ச்சி பற்றியும் அறிஞர்கள் பலர் ஆய்ந்து நல்ல பல நூல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்திய மொழிகளின் வரலாறு

நீக்ரோ இனத்தவர்கள் தொடக்க நிலையில் தமது மொழிகளை இந்திய மண்ணில் நிலைநிறுத்தியிருக்கலாம் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. இந்த இனத்தவரின் கூறுகளைத் தமிழ் நாட்டிலுள்ள இருளர்கள், காடர்கள், பணியர்கள், குறும்பர்கள் ஆகியோரிடம் காண்கின்றோம். தமது மொழியை இழந்து தற்போது இவர்கள் தமிழ் மொழியிலிருந்து முகிழ்த்த பல கிளைமொழிகள் அல்லது வட்டார வழக்குகளைப் பேசுகின்றனர்.

திபெத்தோ-பர்மிய மொழிக்குடும்பம் சார்ந்த மொழிகளைப் பேசும் மங்கோலிய இனத்தைச் சார்ந்த மக்களைக் ''கிரதர்கள்'' என்று வேதகால ஆரியர் அழைத்தனர். இவர்களைப் பற்றிய குறிப்பு அதர்வண, யஜுர் வேதங்களில் உள்ளன.

ஆஸ்ட்ரிக்மொழி பேசுவோர் சீனாவிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. சிலர் திராவிடர்களுக்கு முன்னர் இந்தியாவிற்கு வந்த மத்திய தரைப்பகுதியினரே இவர்கள் என்பர் திராவிடர்கள் ஆசியா மைனர், கிழக்கு மத்தியத் தரைக்கடற்பகுதி ஆகிய இடங்களிலிருந்து வந்திருக்க வேண்டுமென்று பொதுவாகக் கருதப்படுகின்றது. இதற்கு மாறுபட்ட கருத்துகளும் உள்ளன.

கிழக்கு ஈரான் வடமேற்கு இந்தியப் (**North-western India**) பகுதிகளில் வாழ்ந்த ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்து இந்தியாவிலுள்ள நகர நாகரிகங்களை (**City-culture**) அழித்தனர். இந்தியாவில் முதலில் கிழக்கு வடக்குப் பஞ்சாப் பகுதிகளில் தங்கிய அவர்கள் பல்வேறு பகுதிகளிலும் பரந்தனர். இவர்கள் இந்தோ-ஆரிய மொழிகளின் பரவுதலுக்கு அடிகோலி நின்றனர். இவ்வாறு பல்வேறு காலங்களில் வந்து சேர்ந்த பல்வேறு இனத்தவரின், மொழியினரின் சங்கமமாக, கலவையாக இந்தியப் பண்பாடு உருப்பெற்றது.

இந்தோ-ஆரிய மொழிகள்

தற்கால இந்தோ-ஆரிய மொழிகளைக் கீழ்க்காணும் ஆறு பிரிவுகளில் அடக்க முடியும்.

I. வடமேற்கு மொழிகள் : மேற்கு பஞ்சாபி, சிந்தி ஆகிய மொழிகள் இப்பிரிவில் அடங்கும்.

II. தெற்குப்பகுதி மொழிகள் : மராத்தி, கொங்கணி ஆகியன இப்பிரிவிலுள்ள குறிப்பிடத்தக்க மொழிகள்.

III. கிழக்குப்பகுதி மொழிகள் : ஒரியா, வங்காளி, அசாமி, மைதிலி, மகஹி, போஜ்புரி ஆகியன இப்பிரிவில் அடங்கும்.

IV. கிழக்கு-நடுப்பகுதி மொழிகள் : கோசாலி, அவதி போன்றன இப்பிரிவினைச் சார்ந்தன.

V. நடுப்பகுதி மொழிகள் : இந்தி, கரிபோலி, உருது, பங்கரு, கிழக்குப் பஞ்சாபி, ராஜஸ்தானி, குஜராத்தி, சௌராஷ்ட்ரி போன்றன இப்பிரிவின் குறிப்பிடத்தக்க மொழிகள்.

VI. வடக்கு அல்லது இமயமலை மொழிகள் : கொர்காலி, நேபாளி, கர்வாலி போன்றவை இப்பிரிவினைச் சார்ந்தவை.

பழைய இந்தோ ஆரிய மொழிக்குடும்பத்தில் ஏராளமான பேச்சுவழக்கு மொழிகள் இருந்தன. அவற்றுள் மகதி, அர்த்த மகதி, சூரசேனி போன்றவை உலகப்புகழ் பெற்றவை. இலக்கிய வழக்குப் பெற்றவையான சமற்கிருதம் பாலி, பிராகிருதம் போன்ற மொழிகள் புகழ் பெற்றவை. இவற்றுள் சமற்கிருதம், இந்திய நாட்டுப் பொதுமொழியாகச் செயற்பட்டுள்ளது. தமிழுக்கு நிகரான பழைமை, இலக்கியம்,

பாரம்பரியம் ஆகியவற்றை இம்மொழி பெற்றுத் திகழ்கின்றது இந்தியவியல் என்றால் சமற்கிருதவியல் என்று தொடக்க நிலையில் பிற நாட்டினர் கருதும் அளவுக்கு இந்தியப் பண்பாட்டின - இலக்கியப் பாரம்பரியத்தின்-ஆற்றல்மிக்க வடிகாலாக இம்மொழி செயற்பட்டு வந்தது. பிராகிருதமும், பாலியும் மிகச் செல்வாக்குப் பெற்ற பழைய இந்திய மொழிகளாக அமைகின்றன. பௌத்த சிந்தனைகள், தத்துவங்கள் ஆகியவற்றைப் பீடுடன் சுமந்து நிற்கும் ஆற்றல் மிக்க மொழியாகப் பாலிமொழி ஏற்றம் பெற்றுள்ளது. தற்போது புதிய இந்தோ-ஆரிய மொழிகளாக உருவெடுத்துள்ள அனைத்து மொழிகளும் கி.பி.1000-க்குப் பின்னரே முழுவடிவைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் பஞ்சாபி மொழி, குறிப்பாக மேற்குப் பஞ்சாபி வேத காலச் சமற்கிருதத்திலிருந்து உருவானது. இதிலிருந்து சிந்தி மொழி காலப்போக்கில் கிளைத்தெழுந்துள்ளது. பஞ்சாபி மொழி குர்முகி எழுத்துகளைப் பயன்படுத்தும். இது காஷ்மீரி மொழி பயன்படுத்தும் சரதா எழுத்துகளோடு தொடர்புடையது முஸ்லீம்கள் இம்மொழியில் எழுதும்போது பாரசீக எழுத்துகளைப் பயன்படுத்துகின்றனர். இந்துக்கள் தேவநாகரியைப் பயன் படுத்துகின்றனர். ஒரே மொழி பல்வேறு வகை எழுத்துகளால், பல்வேறு சமயத்தினரால் எழுதப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. பஞ்சாப் பகுதிகளில் பேசப்படும் சிந்திமொழி ஆறு வட்டார வழக்குகளையும் ஏராளமான இலக்கியச் செல்வங்களையும் பெற்றுள்ளது.

வட இந்தியப் பகுதியின் மிகப் பெரிய தற்கால மொழியாக இந்தி மொழி ஏற்றம் பெற்றுள்ளது. பஞ்சாப், சிந்து, குஜராத்தின் வடபகுதி, மகாராட்டிரம்,ஒரிசா, வங்காளம், தெற்கு நேப்பாளம் ஆகிய பகுதிகளில் வழங்கும் பேச்சு மொழியே இந்துத்தானிஎன்று சுட்டப்பட்டது இவற்றுள் தில்லிப் பகுதியில் பேசப்பட்ட வட்டார வழக்கு 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் பெருமுக்கியத்துவம் பெற்றுத் தரப்படுத்தப்பட்டு உயர்தர இந்தியாகப் பெருவழக்குப் பெற்றது.

இந்தியும், உருதுமொழியும் மிகவும் தொடர்புடையன. இவற்றின் இலக்கணமும், சொற்களும் ஒன்றாகவே உள்ளன உருது இசுலாமியர்களின் ஆதரவில் தெக்கணத்திலும் (Deccan) பின்னர் தில்லியிலும் மிகப் பெரிய வளர்ச்சியினைக் கண்டது. இது பாரசீக-அரபி மொழிகளின் வரிவடிவையும் அம்மொழிகளின் சொற்களையும் பெருமளவிற்குக் கடன் வாங்கியது. பார்சி மொழியின் பெருந்தாக்கம் பெற்ற உருதுமொழி 18-ஆம் நூற்றாண்டின் இடையில்தான் மிகச் சிறப்பான வளர்ச்சி கண்டது உருது மொழி பாரசீக-அரேபிய மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கத் தயங்கியது கிடையாது. ஆனால் இந்தி, நாகரி வரிவடிவத்தைப் பயன்படுத்தியதோடு,

பிராகிருதத்திலிருந்தும், சமற்கிருதத்திலிருந்தும் சொற்களைப் பெறுவதில் ஆர்வம் காட்டியது. இதுவே இவ்விரு மொழிகளுக்கும் இடையேயுள்ள அடிப்படை வேறுபாடாக அமைந்துள்ளது

இந்துத்தானியோடு மிகவும் தொடர்புடைய கோசாலி பிரிவில் பல குறிப்பிடத்தக்க கிளைமொழிகள் உள்ளன. இவற்றைக் கிழக்குப்பகுதி இந்திமொழி (Eastern Hindi) என்று கூறும் மரபும் உள்ளது.

மகதமொழிப் பிரிவில் போஜ்புரி (Bhojpuri) சிறப்பு வாய்ந்த மொழியாக உள்ளது. இப்பிரிவிலுள்ள மைதிலி மொழி பீகாரின் வடபகுதியிலும், மகஹிமொழி (Magahi) பீகாரின் தென்பகுதியிலும் வழங்குகின்றன. கிழக்கு மகதம் (Eastern Magadham) என்ற பிரிவில் வங்காளி, அசாமி, ஒரியா ஆகிய மொழிகள் உள்ளன. வங்கமொழி 7 கோடி மக்களால் பேசப்படுகின்றது. இம்மொழி பேசுவோரில் பெரும்பாலோர் கிழக்குப் பாகிஸ்தானில் உள்ளனர். இலக்கிய வளம் மிக்க இம்மொழியில்தான் தாகூர் அரிய பல இலக்கியப் படைப்புகளை நல்கியுள்ளார்.

அசாமி, ஒரியா ஆகிய மொழிகள் நல்ல இலக்கியவளம் உடையன ஒரியமொழி 17 ஆம் நூற்றாண்டில் முழு வளர்ச்சி பெற்றுள்ளது. வங்காளமொழியோடு இணையாக வைத்து நோக்கும் பல நல்ல இலக்கியங்கள் இம்மொழியில் தோன்றின.

இராஜஸ்தானி மொழியும் இந்தியிலிருந்து பிரிந்து ஒரு தனி மொழியாக மலர்ந்துள்ளது பல வட்டார வழக்குகளின் இணைவாகவே இம்மொழி காட்சி தருகின்றது. மார்வாடி இலக்கியங்களையே இராஜஸ்தானி இலக்கியங்கள் என்று அழைக்கிறோம். இராஜஸ்தானியோடு மிகவும் தொடர்புடைய மொழியாகக் குஜராத்தி காணப்படுகின்றது. இவ்விரு மொழிகளோடு தொடர்புடைய மற்றொரு மொழியாகச் சௌராட்டிரம் காட்சி தருகின்றது. தமிழகத்திலும், ஆந்திராவிலும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள சௌராட்டிரர்கள் இதனைப் பேசுகின்றனர்.

வட இந்திய மொழிகளில் குறிப்பிடத்தகுந்த மொழியான மராத்தி மொழி 2 1/2 கோடி மக்களால் பேசப்படுகின்றது. 12-ஆம் நூற்றாண்டு முதல் பல இலக்கிய வளங்களை இம்மொழி பெற்றுத் திகழ்கின்றது.

கோவா, மகாராட்டிரக் கடற்கரைப் பகுதி ஆகியவற்றில் கொங்கணிமொழி பேசப்படுகின்றது. இது மராத்தியோடு மிக நெருங்கிய தொடர்புடையது. ஹல்பி என்ற மொழி மத்தியப் பிரதேசத்தின் பஸ்தர் (Bastar) மாவட்டத்தில் பேசப்படுகின்றது. இதன் இலக்கண வடிவம் மராத்தியோடு ஒற்றுமையுடையது போன்று காணப்பட்டாலும் ஒரிய, போஜ்புரி போன்ற மொழிகளுடன் இது கொண்டுள்ள உறவு அதிகமானது

இமயமலை மொழிகள்

இம்மொழிகள் காஷ்மீரத்தின் கிழக்குப்பகுதி முதல் பூதான் (Bhutan) வரையுள்ள நிலப்பரப்பில் பேசப்படுகின்றன. பஹரி அல்லது இமாலி என்று அழைக்கப்படும் இம்மொழிகள் பல கிளைமொழிகளையும் வட்டார வழக்குகளையும் பெற்றுத் திகழ்கின்றன. இப்பகுதியில் வாழும் மக்களிடையே நேபாள மொழி செல்வாக்குப் பெற்றுள்ளது. இந்தியாவில் வாழும் நேபாள மக்கள் இம்மொழிக்கும் இந்திய நாட்டின் தேசிய மொழிகளுள் ஒன்றாக அறிந்தேற்பு தரப்பட வேண்டும் என்று கோருகின்றனர்.

ஆஸ்டிரிக் மொழிகள் (Austric Languages)

இந்திய நாட்டின் தொன்மையான மொழிக்குடும்பமான ஆஸ்டிரிக் மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பல பிரிவுகளாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளன. முண்டா அல்லது கோல் மொழிகள் கிழக்கு இந்தியப் பகுதிகளிலும் நடு இந்தியப் பகுதிகளிலும் வழக்கிலுள்ளன. தேயிலைத் தோட்டங்களில் பணி புரியும் முண்டாரி அல்லது சந்தாலி மொழிகளைப் பேசுவோரால் இவை வடக்கு வங்காளம், அசாம் போன்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். இம்மொழிகள் சோட்டா நாக்பூர், ஒரிசா, மத்தியப் பிரதேசம், வங்காளம் போன்ற பகுதிகளில் பேசப்படுகின்றன. ஹோ, பிர்ஹோரர், பூமிஜ், கோர்வா போன்ற மொழிகள் இப்பிரிவில் குறிப்பிடத்தக்கன. சவரா, கடபா போன்ற மொழிகளும் முண்டாப் பிரிவோடு தொடர்புடையன.

காசி (Khasi) மலையில் வாழ்வோரால் இக்குடும்பத்தின் வேறு சில மொழிகள் பேசப்படுகின்றன. சந்தாலி மொழி 30 இலட்சம் மக்களால் பேசப்படுகின்றது. முண்டாரியிலும்,ஹோ (HO) விலும் ஏராளமான வாய்மொழி இலக்கியங்கள் உள்ளன. 19-ஆம் நூற்றாண்டில் ஏராளமான பிறநாட்டுக் கிறித்தவச் சமயத் தொண்டர்கள் இம்மொழிகளின் வாய்மொழி வழக்காறுகளைப் பயன்படுத்திப் பல நூல்களையும் வெளியிட்டுள்ளனர். சந்தாலி மொழியிலுள்ள இலக்கியங்கள் பெரும்பாலும் ரோமன் எழுத்துகளில் அச்சிடப்பட்டுள்ளன. ஆஸ்டிரிக் மொழிகளுள் ஒன்றான காசி (Khasi) மொழி மூன்று இலட்சம் மக்களால் பேசப்படுகின்றது. ரோமன் எழுத்துகளில் இம்மொழியின் இலக்கியங்கள் பல கிறித்தவ அருட் தொண்டர்களால் அச்சிடப்பட்டுள்ளன.

சீன - திபெத்திய மொழிகள்

இம்மொழிகளைத் தை-சீனம், திபெத்தோ-பர்மன் என்று இருபெரும் பிரிவாகப் பகுப்பர்.

சியாமிஸ் அல்லது தாய் (Thai) மொழியினை இப்பிரிவில் சிலர் அடக்கிக் காண்பர். வேறு சிலர் இதை மறுக்கின்றனர். அஹோம் (Ahom) கம்தி (Khamti) ஆகிய மொழிகள் முதல் பிரிவில் குறிப்பிடத்தக்கன. இரண்டாவது பிரிவில் பழைய திபெத்து, பழைய பர்மிய மொழி ஆகியன அடங்கும். இப்பிரிவு மொழிகளுள் பல கிளை மொழிகளும் உள்ளன.

இக்குடும்பத்தின் குறிப்பிடத்தக்க மொழிகளாக மணிப்புரி, நிவாரி (Niwari) ஆகியன அமையும். மணிப்புரி தற்போது வங்காளமொழி எழுத்துகளால் எழுதப்படுகின்றது. நிவாரி மொழி நேப்பாளியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த இந்தியர்களால் பேசப்படுகின்றது. லெப்சா (Lepcha) என்ற மற்றொரு மொழியும் இப்பிரிவில் உள்ளது.

பிறமொழிகள்

அந்தமான், நிகோபார் தீவுகளில் இரு பிரிவுகளைச் சார்ந்த மொழிகள் உள்ளன. அந்தமான் மொழி பிற நீக்ரோ இனத்தவர்களின் மொழிகளோடு உறவுடையது. அந்தமான் மொழியைப் பேசுவோர் எண்ணிக்கை ஏறத்தாழ ஆயிரமாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

நிகோபார் மொழி ஏறத்தாழ 10,000 பேரால் பேசப்படுகின்றது. இதை ஆஸ்ட்ரிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி என்றும் சிலர் கருதுவர்.

சீன மொழியைப் பேசுவோரும், சோமாலி மொழி பேசுவோரும், அரபிய மொழி, இரானிய மொழி பேசுவோரும் இந்திய நாட்டில் உள்ளனர். ஏறத்தாழ 1.5 இலட்சம் பேர் ஆங்கிலத்தை வீட்டு மொழியாகப் பேசுகின்றனர். கோவாவில் போர்த்துக்கீஸ் மொழியும் புதுச்சேரியில் பிரஞ்சுமொழியும் பேசுவோர் கணிசமாக உள்ளனர்.

அரபிமொழியும், பாரசீக மொழியும் இந்தியாவில் பேசப்படும் பிறமொழிகளுள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் பாரசீக மொழி இந்திய மொழியாகவே பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

17 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆங்கில மொழி இந்தியாவில் பேராதிக்கம் செலுத்தத் தொடங்கியது. வங்காளம் தான் ஆங்கிலத்தின் வளர்ப்புப் பண்ணையாகத் திகழ்ந்தது. இம்மொழியும் இதன் இலக்கியங்களும் இந்திய நாட்டு இலக்கியங்கள் மீதும் மொழிகள் மீதும் ஏற்படுத்திய பாதிப்புகள் மிகவும் குறிப்பிடத்தக்கன. இந்திய மக்களையும் மொழிகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் நவீனப்படுத்துவதிலும், தேசிய ஒருமைப்பாட்டைத் தோற்றுவிப்பதிலும், மக்களாட்சிக் கோட்பாடுகளைப் பரப்பி வருவதிலும் இம்மொழியின் பங்களிப்பு கணிசமானது.

திராவிட மொழிக்குடும்பம்

திராவிட மொழி ஆய்வின் தொடக்க நிலை

தென்னிந்தியப் பகுதிகளில் பெரும்பாலும் வழங்கப்பட்டு வரும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய 25 மொழிகளைத் திராவிட மொழிகள் என்று அழைக்கின்றோம். இவற்றுள் பிராகுயி மொழி வட இந்தியாவிலுள்ள பலுச்சிஸ்தான் பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றது. குருக், மால்டோ போன்ற சில மொழிகளும் வட இந்தியப் பகுதிகளில் பேசப்படுகின்றன திராவிட மொழிக் கல்வியும், இனக்கல்வியும் இன்று பல்கிப் பெருகி வளர்ந்துள்ளது. எனினும் தொடக்கநிலையில் அதன் ஆய்வு தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய ஒரு சில மொழிகளைப் பற்றியதாகவே இருந்தது. கி.பி. 1816-இல் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்த பேராசிரியர் பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ் (**Francis Whyte Ellis**) என்பவர், பேராசிரியர் **A.D.** கேம்பல் (**A.D. Campbell**) என்பவர் எழுதிய 'தெலுங்கு மொழி இலக்கணம்' (**A Grammar of the Teloogoo Lanugage**) என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் ஒரு தனிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்று கூறி அவற்றிற்கிடையேயுள்ள தொடர்பினைச் சுட்டிக் காட்டினார். 19 ஆம் நூற்றாண்டில் வடமொழியை ஆராய்ந்த ராஸ்க் என்பவர் சமற்கிருதச் சொற்களிலிருந்து வேறுபட்ட சொற்கள் சிலவற்றைப் பிரித்து அவை மலபார் மொழிகளுக்குரிய (திராவிட மொழிகள்) சொற்கள் என்று கூறிச் சென்றார். கி.பி. 1844-இல் கிறித்தவ லாசர் என்பவர் தென்னிந்தியாவில் ஒரு தனி மொழிக் குடும்பமாகத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சுட்டிக் காட்டினார். இக்காலத்தில் சிராம்பூரில் வாழ்ந்த கிறித்தவ மதப் பாதிரியான வில்லியம் கேரி (**William Carey**) என்பவர் தமிழ், தெலுங்கு போன்ற மொழிகள் தனிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்றும், அவை வட இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்றும் நிறுவிச் சென்றார். இதையடுத்து, பேராசிரியர் ஸ்டீவன்சன் (**Stevenson1841-44**) என்பவர் வடமொழி தவிர்த்த ஏனைய மொழிகளை ஆய்ந்து தென்னிந்திய மொழிகள் தனிக்குடும்பத்தினைச் சார்ந்தன என்றார். இதற்கு முன்னர் பேராசிரியர் ஆர். ஈ. ராபர்ட்ஸ் (**R.E. .Roberts -1779**) என்பவர் பேச்சுவழக்கில் மட்டுமுள்ள மால்டோ மொழி பற்றி ஆராய்ந்து கட்டுரை ஒன்றினை எழுதிச் சென்றார். தோடா மொழி பற்றிப் பேராசிரியர் ஸ்மிட் (**B. Schmidt - 1837**) என்பவரும், பிராகுயி மொழி பற்றிப் பேராசிரியர் லீச் (**R. Leech -1838**) என்பவரும் பல ஆய்வுகளை மேற்கொண்டனர். இவர்களைத் தொடர்ந்து தொடக்க நிலையில் கோண்டி மொழி பற்றி வாய்சே (**Voysey - 1844**) என்பவரும், படகா மொழி பற்றி எம். பஹ்லர்

(M. Buhler - 1849) என்பவரும், குயி மொழி பற்றி ஜான் பெர்சிவல் ஃபிரை (John Percival Frye - 1851) என்பவரும் ஆராய்ந்தனர். இந்நிலையில் எச். பி. ஹாட்ஜன் (H.B. Hodgson) என்பவர் 1848, 1856 ஆகிய ஆண்டுகளில் நடு இந்தியாவிலும், இமயமலைப் பகுதிகளிலும், தென்னிந்தியப் பகுதிகளிலுமுள்ள பழங்குடி மக்களின் சொற்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அவை தென்னிந்தியாவிலுள்ள மொழிகளின் இனத்தவை என்று சுட்டிச் சென்றார். அதோடு பேராசியர் மாக்ஸ்முல்லர் (Max Muller) என்னும் மொழி நூல் பேரறிஞர் தென்னிந்திய மொழிகளை 'நிஷத மொழிகள்' (Nishada Languages) என்று பெயரிட்டு அவை வடமொழியிலிருந்து மாறுபட்டவை என்று சுட்டிக் காட்டினார்.

டாக்டர் கால்டுவெல்

கி.பி 1856-இல் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை என்று போற்றப்படும் டாக்டர் கால்டுவெல் (R. Caldwell) இம் மொழிகளைத் திராவிடம் என்னும் பெயரால் அழைத்தார். அவர் இந்திய மொழிகளில் திராவிட மொழிகள் ஒரு தனிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்றும், அவை இந்தோ-ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையன அல்ல என்றும் நிறுவினார். அவர் தென்னிந்தியாவிலுள்ள பண்பட்ட மொழிகளான (Cultivated Languages) தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளோடு சில பண்படாத மொழிகளும் (uncultivated Languages) திராவிட இனத்தோடு உறவுடையன என விளக்கினார். வெளிநாட்டு மொழிகளாகிய சித்திய மொழிகளோடு திராவிட மொழிகள் தொடர்புடையன என்பதையும் நிலைநாட்டித் தம் ஆய்வினை 1856 - இல் நூலாக வெளியிட்டார். டாக்டர் கால்டுவெல்லைப் போன்று பேராசிரியர்கள் மாக்ஸ்முல்லர், எஃப். ஒ. ஸ்கிரேடர் (F.O. Schrader) என்பவர்களும் திராவிட மொழிகள் சித்திய மொழிகளோடு உறவுடையன என்று நிறுவ முயன்றனர்.

டாக்டர் கால்டுவெல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஐந்து மொழிகளையும் பண்பட்ட மொழிகளாகவும், தோடா, கோடா, கோண்டு, கூ என்ற நான்கையும் பண்படாத மொழிகளாகவும் கருதினார். அவர் பிராகுயி, மால்டோ போன்ற மொழிகளைச் சுட்டிச் சென்றாரே தவிர அவற்றைப் பற்றிய சிறப்பாராய்ச்சியினை மேற்கொள்ளவில்லை. 1875 இல் வெளியிட்ட பதிப்பில் முன்னர் திருந்திய மொழிகளாகக் குறிப்பிட்ட ஐந்தோடு கொடகு மொழியினையும் திருந்தாத மொழிகளோடு ராஜ்மகால், ஓராவோன் ஆகிய மொழிகளையும் அவர் இணைத்தார். டாக்டர் கால்டுவெல் ஒப்பிலக்கணம் எழுதிய காலத்தில் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் தவிர்த்த ஏனைய மொழிக் குடும்பங்களில் ஒப்பியல் ஆய்வு அதிக அளவிற்கு வளர்ச்சியடையவில்லையென ஜூல்ஸ்ப்ளாக் (Jules

Bloch) குறிப்பிடுகின்றார். டாக்டர் கால்டுவெல் தமது நூலை வெளியிடுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஸ்லாவ் (Slav), கெல்டிக் (Celtic) மொழிகளின் இலக்கணங்கள் வெளியாயின. லைசர் (Schlieher) என்பவர் எழுதிய லித்வேனிய மொழியின் (Lithuanian) இலக்கணமும் சில காலங்களுக்கு முன்னர்தான் வெளியானது. மேலும் ஒலியியல் ஆய்வு டாக்டர் கால்டுவெல்லின் காலத்தில் அறிவியல் கண்ணோட்டத்தோடு மிகுந்த வளர்ச்சியினைப் பெறவில்லை. திருந்திய மொழிகள் என்று அவர் குறிப்பிட்ட சில மொழிகளைத் தவிர ஏனைய மொழிகளை ஆய்வதற்குரிய வாய்ப்புகளும், சான்றுகளும் அவர் காலத்தில் மிகக் குறைவாகவே இருந்தன. இவ்வாறு ஒப்பியல் ஆய்வும், ஒலியியல் ஆய்வும் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்த காலத்தில் குறைந்த வசதிகளோடு சிறந்த ஆய்வினை அவர் மேற்கொண்டு தன் ஆய்வுக்காக டாக்டர் பட்டமும் பெற்றுள்ளார். இவருடைய ஆய்வு பெரும்பாலும் தென் திராவிட மொழிகளைப் பற்றியதாக இருப்பதால் இதனைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று பொதுநிலையில் சுட்டுவதை விடத் தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று அழைப்பதே பொருந்தும் என்கிறார் டாக்டர் தெ. பொ.மீனாட்சிசுந்தரனார்.

டாக்டர் கால்டுவெல்லுக்குப் பின்

கி.பி. 1866 ஆம் ஆண்டு வியன்னாவில் கூடிய மொழியாராய்ச்சி மாநாடு டாக்டர் ராபர்ட் என். கஸ்ட் (Robert N. Cust) என்பவரின் தலைமையில் ஒரு மொழி ஆராய்ச்சிக் குழுவை இந்தியாவிற்கு அனுப்பி இந்திய மொழிகளினியல்பை ஆராய வேண்டுமென்று முடிவு செய்தது. இப்பணி பல ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1894 இல் தொடங்கியது. இதன் தலைமைப் பொறுப்பைப் பேராசிரியர் ஜி. ஏ. கிரியர்சன் (G.A. Grierson) ஏற்றார். 1891 இல் நடைபெற்ற கணக்கெடுப்பு (Census report) இம்மொழி ஆய்வுக் குழுவிற்குப் பெரிதும் துணை செய்தது. இந்திய மொழி பற்றிய இக்கள ஆய்வில் (Linguistic Survey of India) உதவி புரிந்த டாக்டர் ஸ்டெங் கெனோவின் (Sten Konow) முண்டா மொழிகள், திராவிட மொழிகள் பற்றிய கருத்துகள் 1906 இல் வெளியிடப்பட்டபோது திராவிட மொழிகளின் ஒப்பாய்வு புத்துயிர் பெறத் தொடங்கியது. இக்கள ஆய்வின்முதற்பகுதியில் தென்னிந்திய மொழிகள் விலக்கப்பட்ட போதிலும் 4ஆம் பகுதியில் திராவிட, முண்டா மொழிகள் இடம் பெற்றன. டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்ட 12 மொழிகளோடு, கொலாமி, நாயக்கி என்னும் இரு மொழிகளையும் இணைத்துக் கிரியர்ஸன் திராவிட மொழிகள் 14 எனக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தின் பல்வேறு தனி மொழிகள் பற்றிய பல்வேறு வகையான ஆய்வுக்கட்டுரைகள் மொழி நூலறிஞர் பலரால் வெளியிடப்பட்டன. 1913 ஆம்ஆண்டில் குவி

மொழியினைப் பற்றிய ஆய்வினைப் பிட்ஜெரால்டு என்பவர் மேற்கொண்டு அம்மொழி திராவிட மொழிக் குடும்பத்தின் ஒரு தனி மொழியே என்ற முடிவுக்கு வந்தார். 1964 இல் பேராசிரியர் ஜூல்ஸ்பிளாக் என்பவர் 'திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு' **(Structure Grammatical des Languages Dravidiennes)** என்னும் நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்டார். திராவிட மொழிகள் பற்றிய இவரது கொள்கைகள் பலவற்றைப் பேராசிரியர் பரோ போன்ற அறிஞர்கள் பின்னர் மறுத்துரைத்தனர்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சமற்கிருதப் பேராசிரியராகப் பணி புரிந்த தாமஸ் பரோ என்பவர் திருந்தாத மொழிகளுக்கு முதலிடம் கொடுத்து அவைகளின் தன்மைகளை ஆய்ந்து பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இக்காலத்தில்தான், திராவிட மொழிகளைத் தென் திராவிடமொழிகள் **(South Dravidian)**, நடுத் திராவிட மொழிகள் **(Central Dravidian)**, வட திராவிட மொழிகள் **(North Dravidian)** என்று பிரித்து அவைகளின் இயல்புகளைத் தனித்தனியாக ஆராயும் நிலை ஏற்பட்டது. 1950-இல் பர்ஜி மொழியை ஆராய்ந்து அதனையும் பெங்கோ மொழியினையும் திராவிட மொழிக் குடும்பத்தின் தனிக் கிளைமொழிகள் என்று கண்டறிந்தார் பேராசிரியர் பரோ. இவருடன் இணைந்து ஆய்வு நடத்திய பேராசிரியர் பட்டாச்சாரியா என்பவர் கோண்டா, கடபா ஆகிய மொழிகளை ஆய்ந்து அவை தனி மொழிகள் என்று கண்டறிந்தார். தோடா மொழி பற்றிய தனி ஆய்வைச் சிறப்பாக மேற்கொண்ட கலிபோர்னியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் எமனோ தன் ஆய்வினைத் தனி நூலாக **(Dravidian Linguistics - Ethnology and Folk Tales)** வெளியிட்டார். மேலும் திராவிட மொழிகளின் ஒலியியல் பற்றிய ஒப்பியல் ஆய்வுகளையும் தனி நூலாக அவர் வெளியிட்டுள்ளார். **(Dravidian Comparative Phonology - A Sketch)** பேராசிரியர் பரோவின் ஒப்பாய்வு பற்றிய பல்வேறு கட்டுரைகளும், இத்துறை ஆய்வுக்குப் புத்தொளியூட்டின. பரோ, எமனோ ஆகிய இரு அறிஞர்களும் இணைந்து 'திராவிட மொழிகளின் அடிச்சொல் அகராதி' **(A Dravidian Etymological Dictionary)** ஒன்றினைத் தயாரித்து வளரும் ஒப்பியல் ஆய்விற்கு அடிகோலினர்.

இத்துறையில் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியரான எல்.வி. இராமசுவாமி ஐயர் குறைவான வசதிகளோடு நிறைவான ஆய்வுகள் பலவற்றை வியத்தகு முறையில் செய்துள்ளார். உஸ்மானியப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான பி எஸ். கிருஷ்ணமூர்த்தியும், திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்ட டாக்டர் பி.எச். சுப்பிரமணியம் என்பவரும் இத்துறையில் சிறப்பாக குறிப்பிடத் தகுந்தோராவர். டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் வ.அய். சுப்பிரமணியம், டாக்டர்

ச.அகத்தியலிங்கம், டாக்டர் செ.வை சண்முகம், டாக்டர் என். குமாரசாமி ராஜா, டாக்டர் மோ. இசுரேல், டாக்டர் முத்துசண்முகம் பிள்ளை, டாக்டர் பொற்கோ ஆகியோர் ஒப்பாய்வுத் துறையில் சிறந்த தொண்டாற்றி வருகின்றனர். அண்ணாமலைப்பல்கலைக்கழகம் இத்துறையில் சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டு பல நூல்களை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. டாக்டர் கமில் சுவலபில் (Kamil Zvelebel), டாக்டர் எம். எஸ். ஆன்டர்னோ (M.S. Andronov) ஆகியோரும் இத்துறையில் சிறந்த பணியாற்றியுள்ளனர். இத்துறையில் திராவிட மொழியியல் கழகம், இந்திய மொழிகளின் மைய நிறுவனம் ஆகியன ஆற்றியுள்ள பணிகள் குறிப்பிடத்தக்கன. ஒலியியல் ஆய்வு சிறப்பாக வளர்ச்சி பெற்ற போதிலும், சொல்லியல், தொடரியல் பற்றிய ஒப்பாய்வு இன்னும் ஓரளவு பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. எனினும் மாற்றிலக்கண நெறிமுறைகளின் அடிப்படையில் தொடரியல் தொடர்பான ஆய்வுகள் இன்று புத்துயிர் பெற்றுள்ளன. தொடக்கநிலையில் 12 மொழிகளையே திராவிட மொழிகளாகக் கருதினர். ஆனால் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பல்வேறு மொழிகள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கிளை மொழிகள் என்று கருதப்பட்ட இருளா, எருகலா, கொறகா, தங்கா, குறும்பா, சோழிகா போன்ற சில மொழிகள் தனி மொழிகள் என்று நிறுவப்பட்டன. இப்போது திராவிடமொழிகள் முப்பதுக்கும் மேலாகப் பெருகியுள்ளன.

திராவிட மொழிகள்: உறவு நிலையும் உட்பிரிவுகளும்

திராவிடம்

தென்னிந்தியப் பகுதிகளில் வழங்கப்படும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய திராவிட மொழிகள் இலக்கண வகையால் ஒரு தனிப்பட்ட பொது அமைப்பினையும், வழங்குமிடத்தால் ஒரு நெருக்கத்தினையும் கொண்டுள்ளன. மேலும் மொழிக்கு இன்றியமையாத வேர்ச்சொற்கள் (Roots) இம்மொழிகளில் பொதுப்படையாகவே அமைந்துள்ளன. எனவே இம்மொழிகளெல்லாம் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்பது தெளிவு. இம்மொழிகளை மேல்நாட்டு ஆய்வாளர்கள் 'மலபார் மொழிகள்' என்றும், 'தமுலிக்' என்றும் வழங்கி வந்தனர். தென்னிந்திய மொழிகளில் உயர்தனிச் செம்மொழியாகத் திருத்தம் பெற்றுத் திகழும் தமிழ் மொழியின் பெயராலேயே இவ்வினம் முழுவதையும் சுட்டுவதில் தவறு ஏதும் இல்லை. எனினும் 'தமிழ்' என்பது குறிப்பிட்ட ஒரு மொழியின் பேராக அமைவதால் பல்வேறு மொழிகளைக் கொண்ட இக்குடும்பம் முழுவதையும் சுட்டுவதற்குப் பரந்த நோக்கோடு பிறிதொரு பெயரை அமைப்பதே சிறப்புடையது என்று கருதித் திராவிடம் என்ற பெயரைத் தான் கையாளுவதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

'திராவிட' என்ற வடசொல்லுக்கு மூன்று வடிவங்கள் (Dramida, Dravida, Dra-vida) உள்ளன. முதலில் இச்சொல் தமிழ் மொழி பேசப்பட்ட இடத்தைச் சுட்டுவதற்குப் பயன்பட்டது என்றும், ஆந்திரம், கேரளம் என்னும் சொற்கள், மேற்கூறப்பட்டதற்கு நிகராகத் தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் பேசப்பட்ட இடங்களைச் சுட்டப் பயன்பட்டன என்றும் தெரிகின்றது. இப்பெயரைத் தேர்ந்தெடுப்பதற் குரிய காரணங்களைக் கூறும் டாக்டர் கால்டுவெல் வரலாற்று நிலையில் தனக்கு முன்னர் யார் யார் இப்பெயரினைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை விரிவாக ஆராய்கின்றார். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த வடமொழி எழுத்தாளரான குமரிலபட்டர் என்பவர் தென்னிந்திய மொழியினத்தைக் குறிக்க 'ஆந்திர-திராவிட பாஷா' என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். ஆனால் இத்தொடர் உண்மையிலேயே திராவிட முதலியன (Dravida adi) என்றிருப்பதாகப் பேராசிரியர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார் கூறுகின்றார். மனுசுமிருதியில் தென்னிந்திய மக்கள் திராவிடர் என்ற பொதுப்பெயரால் சுட்டப்படுவதையும் மேற்கோளாக டாக்டர் கால்டுவெல் காட்டிச் செல்கின்றார். பாகத மொழிகளைத் தொகைப்படுத்திய ஆய்வாளர்களும் தென்னிந்திய மொழியினங்களைத்'திராவிடி' என்னும் பெயரால் குறிக்கின்றனர். பேராசிரியர் ஜே.ஜே. மூர் (J.J. Muir) என்பவர் தமது நூல் ஒன்றில் 'திராவிடம் ஒரு சிறு பிராகிருதம்' (Vibhasha Minor Prakrit) எனறு ஒரு வடமொழி ஆய்வாளர் குறிப்பிடுவதைக் காட்டுகின்றார். எஸ். கே. சட்டர்ஜி என்னும் மொழி நூலறிஞர் இடைக்காலத்தில் பிராமணர்கள், 'பஞ்ச திராவிடா' என்று திராவிடம் என்ற சொல்லைப் பரந்த பொருளில் பயன்படுத்தியதைக் குறிப்பிடுகின்றார். கி.பி. 1854 இல் வாழ்ந்த பேராசிரியர் பாபு இராசேந்திரலால் என்னும் இந்திய மொழி நூல் அறிஞரும் 'திராவிடி' என்ற பெயரால் தென்னிந்திய மொழிகளை அழைக்கின்றார் மேலும் இரவீந்திரநாத தாகூர் எழுதிய நாட்டுப் பாடலிலும் திராவிடம் என்ற சொல் பரந்த நிலையிலேயே ஆளப்படுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும்போது டாக்டர் கால்டு வெல் கருதுவதைப் போன்று பல்வேறு காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் தென்னிந்திய மொழியினங்களையும், மக்களையும் சுட்டுவதற்குத் திராவிடம் என்ற சொல்லைக் கையாண்டுள்ளமை தெளிவு பெறும்.

மக்களும் மொழியும்

இந்தியாவில் உள்ள நான்கு மொழிக்குடும்பங்களில் திராவிட மொழிக் குடும்பம் மிகவும் தொன்மை வாய்ந்தது மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிங்களை ஏற்படுத்திச் சிந்து - பஞ்சாப் பள்ளத்தாக்குகளில் நாகரிகத்தோடு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் என்பதையும், ஆரியர்கள் வருகையால் தென்னிந்தியப் பகுதிகளுக்கு இவர்கள் துரத்தியடிக்கப்

பட்டனர் என்பதையும் வரலாற்றறிஞர்கள் வற்புறுத்திச் சொல்கின்றனர். பலுச்சிஸ்தானத்தில் பேசப்படும் பிராகுயி மொழி, திராவிடர்கள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்ற உண்மையைப் பறைசாற்றுகின்றது என்பார் மொழியியலறிஞர் பேராசியர் எஸ். கே. சட்டர்ஜி. சிந்து - கங்கைப் பகுதிகளில் திராவிட மொழிகள் பேசப்பட்டு வந்ததை ஹீராஸ் பாதிரியாரும் ஒப்புக் கொள்ளுகின்றார்.

தொடக்க நிலையிலிருந்தே ஆரிய மொழிக்குடும்பமும் திராவிட மொழிக் குடும்பமும் ஒன்றன் மீது மற்றொன்று ஆழமாகத் தாக்குரவு செலுத்தியுள்ள உண்மை நிலையைக் கண்டு கொள்ள முடிகின்றது. இத்தகைய கொள்வினைக் கொடுப்பினைகளின் விளைவாக இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையில் எண்ணற்ற ஒற்றுமைக் கூறுகள் ஏற்பட்டுள்ளன. ஆரிய மொழிகளில் காணக் கிடைக்கும் திராவிட மொழிச் சொற்கள் பற்றியும், திராவிட மொழிகளில் காட்சி தரும் ஆரிய மொழிக்குடும்பச் சொற்கள் பற்றியும் பல்வேறு நிலைகளில் பல்வேறு அறிஞர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர் அமைப்பினைப் பொறுத்தவரையில் தமிழ், கன்னடம் போன்ற திராவிட மொழிகளுக்கும், வங்காளி, இந்தி போன்ற வட இந்திய மொழிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதை பேராசிரியர் எஸ். கே. சட்டர்ஜி போன்றோர் சுட்டிக் காட்டியுள்ளனர். தொடர் அமைப்பினைப் போன்று ஒலியன் நிலையிலும் இவ்விரு குடும்பங்களைச் சார்ந்த மொழிகளுக்கிடையில் ஒற்றுமைக் கூறுகள் பல உள்ளன. சான்றாக, திராவிட மொழியினத்தைச் சார்ந்த பிராகுயி மொழியில் காணப்படும் 'எ' கர, 'ஒ'கர உயிர் ஒலியன்களின் இழப்பினை **(Loss of short e and o)** இந்தோ-ஆரிய மொழிகளிலும் காணலாம். அவ்வாறே இந்தோ-ஆரிய மொழிகளில் உள்ளது போன்ற மூக்கின உயிர் ஒலியன்களையும் **(Nasal Vowel)** சந்தியக்கரத்தினையும் **(Diphthong)** பிராகுயி, குருக் போன்ற திராவிட மொழிகளில் சந்திக்கின்றோம். இந்தோ-ஆரிய மொழிகளைப் பின்பற்றித் தற்காலத் திராவிட மொழிகள் பலவற்றிலும் உயிர்ப்பு ஒலிகள் **(Aspirates)** தோற்றம் பெறுவதும் மேற்கூறிய உறவு நிலைகளுக்குச் சான்றாக அமையும். இந்தோ-ஆரிய மொழிகளைப் பின்பற்றிப் பழைய திராவிட மொழிகளில் இல்லாத கூட்டுத் தொடர்கள் **(Compound sentences)** தற்காலத் திராவிட மொழிகளில் அதிகமாக வளர்ச்சி பெற்றுள்ளமையும் இங்குக் கருத்தில் கொள்ளுதற்குரியது. இந்தோ-ஆரிய மொழிகளின் தாக்குரவு திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் சொற்களின் நிலையில்தான் பெருமளவிற்குக் காட்சி தருகின்றது எனலாம். சில திராவிட மொழிகளில் **70 விழுக்காடு வரை இந்தோ - ஐரோப்பிய மொழிச் சொற்களைக் காண முடிகின்றது.**

திராவிட மொழிகள் உராலிய மொழிக் குடும்பத்தோடு (Uralian) நெருங்கிய உறவு கொண்டுள்ளன என்பதை டாக்டர் கால்டுவெல் போன்ற ஒப்பியல் மொழிநூலறிஞர்கள் சுட்டிச் சென்றுள்ளனர். இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையில் காணக்கிடைக்கும் பொதுவான சொற்கள் (Word co-incidences) பலவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்த டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகள் மங்கோலிய மொழிகளோடு உறவுடையன என்று விளக்கினார். இத்துறையில் தொடர்ந்து ஆய்வு நிகழ்த்திய அறிஞர்களால் கால்டுவெல்லின் கருத்துகளை உறுதியாக நிலைநாட்டவோ முற்றிலும் மறுக்கவோ இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்துறையில் ஆய்வு நிகழ்த்திய எஃப். ஓ. ஸ்கிரேடர் என்பவர் இவ்விரு மொழிக்குடும்பங்களுக்கிடையே உள்ள தொடர்பு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இவ்விரு குடும்ப மொழிகளையும் பேசிய மக்கள் நெருங்கி வாழ்ந்த உண்மை நிலைக்குச் சான்று பகர்வதாக அமைகின்றது என்கிறார். ஆனால் இதற்கு மாறுபட்ட கருத்து பேராசிரியர் பரோவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் கருத்துப்படி இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையேயுள்ள தொடர்பு இடநெருக்கத்தால் ஏற்பட்ட தொடர்பாக அமையாது குடும்ப உறவாகவே (Genetic Relationship) அமைகின்றது.

இவ்விரு மொழிக்குடும்பங்களுக்கிடையே காணப்படும் எழுபத்திரண்டு இணைச் சொற்களை ஆராய்ந்த பேராசிரியர் பரோ வேறு எந்த மொழிக் குடும்பங்களுக்கிடையிலும் காண முடியாத அளவிற்கு நெருங்கிய குடும்ப உறவு இவ்விருமொழிக் குடும்பங்களுக்கிடையில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். கால இடைநிலைகளைப் பொறுத்த வரையில் இவ்விரு மொழிக்குடும்பங்களுக்கிடையிலும் நெருங்கிய உறவுகள் உள்ளன. சான்றாக, திராவிட மொழிகளில் இடம் பெறும் இறந்தகால இடைநிலையான -த்- உருபினை ஹங்கேரிய மொழிகளில் காண்கின்றோம். தோடா, கோடா போன்ற திராவிட மொழிகளில் எதிர்காலம், நிகழ்காலம் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டத் தனித்தனி இடைநிலைகள் இல்லை. இப்போக்கினை உராலிய மொழிகளிலும் காண்கின்றோம்.

பெர்மியன் (Permian) தவிர்ந்த ஏனைய அனைத்து உராலிய மொழிகளிலும் இறந்தகாலம் (Past), இறந்தகாலம் அல்லாதன (Non-Past) என்ற இரு பிரிவே உள்ளன. தென் திராவிட மொழிகளில் காணக்கிடைக்கும் எதிர்கால இடைநிலையான 'வ'கரத்திற்கு நிகரான இடைநிலையினை உக்ரிய மொழிகளிலும் காணலாம். புராதன உராலிய மொழிகளில் (Proto-Uralian) திராவிட மொழிகளில் உள்ளது போன்ற உருபுகளை இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை ஆகியவற்றில் காண முடிகின்றது.

திராவிட மொழிகள் மத்தியத் தரைக்கடல் பகுதிகளிலுள்ள பல மொழிகளோடும், திராவிட மக்கள் நில நடுக் கடற்பகுதி (Mediterranean People) மக்களோடும் பல நிலைகளில் நெருங்கிய உறவு கொண்டுள்ளனர் என்பதை டாக்டர் ஜேம்ஸ் ஹார்னல் (James Harnell) முதலிய மானிடவியல் அறிஞர்கள் விளக்கிச் செல்கின்றனர். இக்கருத்தைப் பேராசிரியர் ரிச்சர்ட்ஸ் (Richards) என்பவரும் தான் எழுதிய "Some Dravidian Affinities, and their Sequel' என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். திராவிட மக்களைப் பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்ட மானிடவியல் பேராசிரியரான டாக்டர் ஜார்ஜ் ஆலிவர் சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர்கள் திராவிட மக்களே என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். பண்டைய கிரேக்க மக்கள் பொதுவாகத் திராவிட மக்களை Damirika என்ற பெயரால் சுட்டினர். திராவிட மக்கள் பேசிய மொழிகளின் தாக்கத்தை ஆரிய மொழிகளிலும் காண முடிகின்றது. ஆரிய மொழிகளிலுள்ள வளைநா ஒலிகள் (Retroflex) திராவிட மொழிகளின் தாக்கத்தால் ஏற்பட்டதாகப் பேராசிரியர் எஸ். கே. சட்டர்ஜி கருதுகின்றார். இத்துறையில் பேராசிரியர் பர்ரோ போன்ற மேல்நாட்டு அறிஞர்களும் பல ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர்.

திராவிட மொழிகள் ஆசிய மொழிகளான கொரிய மொழி, ஜப்பானிய மொழி ஆகியவற்றோடு கொண்டுள்ள உறவு அறிஞர் பலரால் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பேராசிரியர் எச்.பி. ஹியூபர் (H.B. Hubber) என்பவர் தாம் எழுதிய 'கொரிய மொழி திராவிட ஒப்பாய்வு' (A Comparative Study of Korean Language and Dravidian Family) என்ற நூலில் கொரிய மொழியில் திராவிட மொழிகளின் பாதிப்பு, குறிப்பாகத் தமிழ் மொழியின் தாக்குரவு அதிகமாகக் காணப்படுவதாகக் காட்டிச்செல்கின்றார். டாக்டர் சுசுமோ ஓனோ (Susumu Ohno) என்னும் ஜப்பானிய மொழி நூல் வல்லுநர் திராவிட மொழிகளுள் தலைமையிடத்தைப் பெறும் தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்கும் இடையேயுள்ள உறவுகளைப் பலநிலைகளில் விரிவாக ஆய்வு செய்து ஜப்பானிய மொழியின் மூலமொழி தமிழே என்று முடிவு செய்துள்ளார். தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்குமிடையே ஒலிநிலையில் ஏற்பட்ட தொடர்புகளைத் 'தமிழ் - ஜப்பானிய ஒலி ஒற்றுமைகள்' 'Sound Correspondences Between Tamil and Japanese' என்ற தனி நூலாக 1980 இல் அவர் வெளியிட்டுள்ளார். தமிழர்களுக்கும் ஜப்பானியர் களுக்குமிடையே பண்பாட்டு நிலைகளில் காணக் கிடைக்கும் உறவுகளை 'ஜப்பானியர், தமிழர் உலகப் பார்வையும் சடங்குகளும்' "World View and Rituals among Japanese and Tamils' என்ற தலைப்பில் தனி நூலாக 1985 இல் வெளியிட்டுள்ளார். இவ்வ தொடர்பாக மேலும் பல அரிய ஆய்வுகள் ஜப்பான் நாட்டில் நடந்து வருவது குறிப்பிடத் தக்கது.

இன்றைய நிலையில் திராவிட மொழிக் குடும்பம் உலகமொழிக் குடும்ப வரிசையில் ஆறாவது அல்லது ஏழாவது இடத்தைப் பெறுகின்றது. 1961 இல் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணிப்பின்படி இந்திய மக்களில் 28 அல்லது 29 விழுக்காட்டினர் இம்மொழிகளைப் பேசுகின்றனர் எனத் தெரிகின்றது. இந்தியாவில் வழங்கும் நான்கு மொழிக் குடும்பங்களுள் இது ஒன்றே முழுமையான இந்திய நாட்டு மொழிக் குடும்பமாகக் கருதப்படும் நிலையினையுடையது என்பது குறிப்பிடத் தக்கது.

திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

உலகம் முழுவதிலும் ஏறத்தாழ நாலாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இம்மொழிகளைப் பல்வேறு குடும்பங்களாகப் பிரித்து ஆராய்கின்ற ஒப்பியலறிஞர்கள் இம்மொழிக் குடும்பங்களில் எட்டுக் குடும்பங்களே தலைசிறந்தன என்பர். இவ்வெட்டுக் குடும்பங்களுள் ஒன்றான திராவிட மொழிக் குடும்பம், ஏனைய மொழிக் குடும்பங்களோடு பல பொதுத் தன்மைகளைப் **(Shared features)** பகிர்ந்து கொண்டாலும் தனக்கெனச் சில தனித்தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றது.

1. பல்வேறு மொழிகள் தனிநிலை மொழிகளாகவும் **(Synthetic languages)** பகுப்புநிலை மொழிகளாகவும் **(Analytical Languages)** அமைய, திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகளாக **(Agglutinative Languages)** அமைகின்றன. ஏனைய மொழிகளில் காலங்காட்டும் உருபுகள் போன்றவை தனித்து நிற்கத் திராவிட மொழிகளில் கால இடைநிலைகள், பால்காட்டும் விகுதிகள் ஆகியன வினையடிகளோடு ஒட்டியே அமைந்து நிற்கின்றன.

எ.கா. வந்தான் → வா+ந்+த்+ஆன்

2. வழக்கில் அதிகமாகப் பயின்று வரும் பொருட்களைக் குறிக்கும் அடிப்படைச் சொற்கள் **(Basic Vocabularies)** மொழிக்கு மொழி மாறுபட்ட போதிலும் திராவிட மொழிகள் அனைத்திலும் அவை பொதுவாக மாறாமல் ஒன்று போலவே அமைகின்றன.

எ.கா.	தமிழ்	-	கண் **(Kan)**
	மலையாளம்	-	கண்ணு **(Kannu)**
	தோடா	-	கொண் **(Kon)**
	கொடகு, தெலுங்கு	-	கன்னு **(Kannu)**
	பர்ஜி	-	கெண் **(ken)**
	குருக்	-	ஃகன் **(kkan)**

3. எண்ணுப் பெயர்களும் ஏறத்தாழ அனைத்துத் திராவிட மொழிகளிலும் அதிக மாறுதல்களின்றி ஒன்று போலவே அமைந்துள்ளன.

எ.கா. மூன்று, மூனு, மூன்னு, மூறு என்பன.

4. ஆங்கிலம் போன்ற மொழிகளில் பெரும்பாலான சொற்கள் மெய்யெழுத்துகளைக் கொண்டே முடிய, திராவிட மொழிகளில் அதிகமான சொற்கள் உயிரெழுத்துகளைக் கொண்டே முடிகின்றன. மெய்யைக் கொண்டு முடியும் சொற்கள் கூட ஒலித்துணையாக உயிரைப் பெற்று நிற்கின்றன.

எ.கா. நாள் → நாளு

இங்கு ஒலித்துணையாக 'உ'கர உயிர் வந்து இணையக் காண்கிறோம். மூக்கொலிகளைக் கொண்டு முடியும் சொற்களில், இறுதி மூக்கின மெய் அதன் முன்னர் வரும் உயிரொலி மூக்கொலிச் சாயல் பெற்று நிற்கும் இயல்பினைத் திராவிட மொழிகளில் காணலாம்.

எ.கா. அவன் → அவ் (ava)

இடையின ஒலிகளைக் கொண்டு முடியும் சில சொற்களில் அவ்வொலிகள் பேச்சு வழக்கில் கெட்டு உயிரீறு பெற்ற சொற்களாக நிற்றலுமுண்டு.

எ.கா. பந்தல் → பந்த
கந்தல் → கந்த

5. திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் குறிலும் நெடிலும் அடிப்படை ஒலியன்களாக உள்ளன. இவை பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

எ.கா. மது → மாது

மேலும் இவை தனித்தனி வரி வடிவத்தையும் பெற்றுள்ளன. ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் இவ்வேறுபாடு கிடையாது.

6. திராவிட மொழிகளில் ஒரு சொல் இ, எ என்னும் முன்னுயிர்களைக் கொண்டு தொடங்கினால் பெரும்பாலும் 'ய'கரத்தை மொழி முதலில் உடம்படுமெய்யாகப் (glide) பெறுவதுண்டு.

எ.கா. இலை → யிலை

இதனைப் போன்றே பின்னுயிர்களான உ, ஒ என்பன 'வ'கர உடம்படு மெய்யினைப் பெறும்.

எ.கா. உறி → வுறி

திராவிட மொழிகளின் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், தொடரமைப்பு ஆகியவற்றின் தனித்தன்மைகளைப் பின்னர்க் காண்போம்.

உட்பிரிவுகள்

இம்மொழிகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் உட்பிரிவுகள் ஏற்படுத்துவதில்

ஒப்பியல் அறிஞர்கள் பலரும் ஆரம்ப நிலையிலிருந்தே கருத்து செலுத்தி வருவதைக் காணலாம். டாக்டர் கால்டுவெல் இம்மொழிகள் கொண்டுள்ள இலக்கியவளம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இவற்றைத் திருந்திய மொழிகள் என்றும், திருந்தா மொழிகள் என்றும் பொதுவாக இரு கூறுபடுத்தினார். இத்தகைய பாகுபாடு பண்பாட்டு ஆய்வுக்கு அதிகத் துணை செய்யுமே தவிர மொழி ஆய்விற்கு அதிகம் துணை நிற்காது. மேலும் தமிழ் மலையாளத்தோடு உறவு கொண்டுள்ளது என்று திராவிட மொழிகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பை ஒருவாறு டாக்டர் கால்டுவெல் விளக்கிச் சென்றார். டாக்டர் ஸ்டெங் கெனோ (Sten Konow) திராவிட மொழிகளைத் தமிழ்த் தொகுதி (Tamil Group), தெலுங்குத் தொகுதி (Telegu Group) என்று இரண்டாகப் பிரித்துள்ளார். இதுவே பின்னர் தென் திராவிடம், நடுத் திராவிடம் என்னும் பிரிவுகள் ஏற்படத் துணை நின்றது என்பர். மொழி நூலார் திராவிட மொழிகளை,

1. அவை வழங்கும் இடம் (Geographical Distribution)
2. மாறுதல்களின் பொதுமை (Shared Innovation),
3. அவைகளுக்கிடையேயுள்ள அடிப்படைப் பண்புகள் (Commonness)

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பலவாறு கூறுபடுத்துவர். எனினும் பொதுவாகத் தற்கால ஒப்பியல் அறிஞர்கள் அவை வழங்கும் நிலப்பரப்பினைக் கொண்டு அவற்றைத் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்று மூன்றாகக் கூறுபடுத்தி ஆய்கின்றனர்.

தென் திராவிட மொழிகள்



தமிழ், மலையாளம், இருளா, கொடகு, கோடா, தோடா, கன்னடம், படகா, துளு ஆகிய ஒன்பது மொழிகளும் தென் திராவிட மொழிகள் என்று கருதப்படுகின்றன. இவற்றுள் தமிழும் மலையாளமும் மிகப் பிற்காலத்தில் பிரிந்ததால் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன. தமிழ், மலையாள மொழிகளோடு அடுத்த நிலையில் கோடா, தோடா ஆகிய மொழிகள் நெருங்கிய உறவு கொண்டுள்ளதாகப் பேராசிரியர் எமனோ கருதி வந்தார். ஆனால் பேராசிரியர் எல்.வி. இராமசாமி ஐயர் கொடகு மொழிதான் தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாள மொழிகளுக்கடுத்த நிலையில் உறவுடையது என்று நிலை நாட்டுகின்றார். தென் திராவிட மொழிகளுள் துளு மொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபடுவதால் பேராசிரியர்கள் எமனோ, பி.எச். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இம்மொழியினை நடுத் திராவிட மொழிக்கூட்டங்களோடு இணைத்துவிட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். ஆனால் டாக்டர் பி.எஸ். சுப்பிரமணியம் இதைத் தென் திராவிட மொழி என்று கொள்வதே ஏற்புடைத்து என்றும், தென் திராவிட மூல மொழியிலிருந்து **(Proto-South Dravidian)** துளு மொழி முதலில் பிரிந்த காரணத்தினால்தான் அது தமிழ், மலையாளம் போன்ற மொழிகளிலிருந்து அதிக அளவு வேறுபடுகின்றது என்றும் விளக்கிக் காட்டினார்.

தென் திராவிடமொழிகளுள் படகா மொழி கன்னடத்தின் கிளை மொழியாக **(Sister language)** உள்ளது. இதனைப் பேசுகின்ற மக்கள் நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். தோடா, கோடா போன்ற மொழிகளும் நீலகிரி மலைப் பகுதிகளிலுள்ள பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன. கன்னடம், துளு, கொடகு போன்றன கர்நாடக மாநிலப் பகுதியில் வழக்கிலுள்ளன. துளு மொழி 1798ஆம் ஆண்டில் பேராசிரியர் ஆர்.ஈ. ராபர்ட் **(R.E. Robert)** என்பவரால் தனிமொழி என்று சுட்டிக் காட்டப்பட்டது. 1837 ஆம் ஆண்டில் தோடா மொழி தனி மொழி என்று தெரிய வந்தது. 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பின்படி, இம்மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது.

1.	தமிழ்	-	3.056 கோடி
2.	மலையாளம்	-	1.701 கோடி
3.	இருளா	-	4617
4.	கொடகு	-	80 ஆயிரம்
5.	கோடா	-	900
6.	தோடா	-	800
7.	கன்னடம்	-	1.742 கோடி

8. படகா - 70 ஆயிரம்

9. துளு - 5.1 இலட்சம்

தென் திராவிட மொழிகள் முதலில் தமிழ் - கன்னடக் கிளை என்றும், துளு என்றும் பிரிந்திருக்க வேண்டும். துளு மொழி இவ்வாறு முதலில் தனி மொழியாகப் பிரிந்த பின்னர் தமிழ் - கன்னடக் கிளை, தமிழ் - கொடகுக் கிளை என்றும், கன்னடம் என்றும் பிரிந்திருக்க வேண்டும். கன்னட மொழி பிரிந்து சென்ற அடுத்த நிலையில் தமிழ் - கொடகுக் கிளையிலிருந்து கோடா - தோடா மொழிகளிணைந்த கிளை பிரிந்திருக்க வேண்டும். இவை பிரிந்தபின்னர் தமிழ் - மலையாளம் கிளையிலிருந்து கொடகு மொழி தனியாகப் பிரிந்து சென்றது. இறுதி நிலையில் மலையாளம் தனியாகப் பிரிந்திருக்க வேண்டுமென்றும், தென் திராவிடக் கிளையிலிருந்து முறையே துளு, கன்னடம், கோடா, தோடா, கொடகு, மலையாளம் என்பன படிப்படியாகப் பிரிந்திருக்க வேண்டுமென்றும் விளக்கிச் செல்கின்றார் டாக்டர் பி.எஸ். சுப்பிரமணியம்.

தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

1. ஏனைய திராவிடமொழிகளில் பெண்பால் ஒருமையும், அஃறினை ஒன்றன்பாலும் ஒன்றாக இணைந்தே உள்ளன. ஆனால் தென் திராவிட மொழிகளில் உயர்திணை ஒருமையில் ஆண்பால், பெண்பால் என்ற பிரிவைக் காண்கின்றோம். மேலும் பெண்பால் ஒருமைக்கெனத் தனி விகுதிகள் தென் திராவிட மொழிகளில் உள்ளன.

2. ஒலியன்களின் நிலையைப் (Distribution of phonemes) பொறுத்தவரையிலும் தென் திராவிடமொழிகள் சில தனித் தன்மைகளைப் பெற்றிருக்கின்றன. மொழி முதலில் வருகின்ற 'ச'கர ஒலி இம்மொழிகளில் கெட்டு விடுகின்றது. இதனைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

எ.கா. பர்ஜி - சுப்பு

தமிழ் - உப்பு

3. இம்மொழிகளில் ஒரு சொல் வெடிப்பொலியினை (Plosives) இறுதியில் கொண்டு முடியுமென்றால் அச்சொல் ஒலித்துணையாக 'உ'கர ஒலியினைப் பெறுகின்றது. இத்தகைய ஒலியினை ஒலித்துணை உயிர் (Euphonic or Enunciative Vowel) என்பர். தென் திராவிட மொழிகளில் இவ்வுகர ஒலி இடை இதழ்குவி ஒலியாக (Half rounded) உள்ளது.

4. தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் வரும் 'இ'கர, 'உ'கர ஒலிகள் முறையே 'எ'கர, 'ஒ'கர ஒலிகளாகத் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் மாறி விடுகின்றன. இதனையும் பின்னர் விளக்கமாகக் காண்போம்.

5 கன்னட மொழியில் 'க'கர ஒலி மொழி முதலில் வந்து, அதை அடுத்து முன்னுயிர் (Front Vowel) வந்தால் அக் 'க'கர ஒலி தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் 'ச'கர ஒலியாக மாறும்.

எ.கா. கன்னடம் - கிவி

தமிழ் - செவி

ஆனால் தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் முன்னுயிர்களோடு இணைந்து வரும் 'க'கர ஒலியையடுத்து ட், ண், ள் போன்ற வளை நா ஒலிகள் (Retroflex sounds) வரும் போது இம்மாற்றம் ஏற்படுவதில்லை.

6. தென் திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் மூலத் திராவிட வேற்றுமை ஏற்கும் வடிவங்களான (oblique form) யன், யம் (* yan, *yam) என்பவை என், எம் என்று மாறிவிடுகின்றன.

7. மேலும் இவ்விரு மொழிக் கூட்டங்களிலும் அஃறிணையில் பன்மை விகுதி கட்டாய உறுப்பாக (obligatory) கருதப்படமாட்டா.

எ.கா. பத்து மாடுகள்

பத்து மாடு

8. ஏனைய திராவிட மொழிகளில் இறந்தகால இடைநிலைகள் மிகக் குறைவாக உள்ளன.ஆனால் தென் திராவிட மொழிகளில் மூலத் திராவிட இடைநிலைகளான -த்-; -ந்த்-; -த்த்-; -இ-(*-t-; -*nt-; -*tt-; *i) என்னும் நான்கும் பயின்று வருவதைக் காணலாம். கன்னடம், துளு ஆகிய இரு மொழிகள் மட்டுமே இதற்கு விதி விலக்கானவை.

9. வியங்கோள் விகுதிகளைப் பொறுத்த வரையில் க *- kka' என்னும் விகுதி தென் திராவிட மொழிகளில் மட்டுமே உள்ளது.

10. தொடர் வடிவில் எச்ச வடிவங்களோடு (Non -Finite forms) 'வேண்டும்' என்பதை இணைத்து உடன்பாட்டுப் பொருளையும், 'உம்' விகுதிக்குப் பதிலாக 'ஆ'காரம் அல்லது -ஆம் விகுதியை இணைத்து எதிர்மறைப் பொருளையும் உணர்த்தும் சிறப்பியல்பு தென் திராவிட மொழிகளுக்கே உரியது.

எ.கா. வர வேண்டும்

வர வேண்டாம்

11. 'ண்', 'ள்' ஆகிய வளைநா ஒலிகள் தென் திராவிட மொழிகளில் மட்டுமே விளக்கமாக உள்ளன. ஏனைய மொழிகளில் அவை திரிந்தும் மயங்கியும் காணப்படுகின்றன.

தென் திராவிட மொழிகளில் தமிழ்

சிறப்பியல்புகள்

1. ஏனயை திராவிட மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது வடமொழித் தாக்குதல் மிகவும் குறைந்து காணப்படும் மொழி தமிழ் மொழியே. தமிழ் மொழியில் வட சொற்கலப்பினைத் தொல்காப்பியர் காலத்திலிருந்தே காண்கின்றோம். எனினும் வட சொற்களைக் கையாண்ட அறிஞர்கள் அதனைத் தமிழ் ஒலியமைப்பிற்கேற்பப் பெரும்பாலும் மாற்றியே கையாண்டுள்ளனர்.

தொல்காப்பியத்திலும், நன்னூலிலும் இதற்கு விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''

என்ற தொல்காப்பிய நூற்பா இதற்குச் சான்று பகரும்.

2. தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகள் தொன்மையான மொழிகளாக இருந்தும், ஏராளமான மக்களால் பேசப்படும் மொழிகளாக இருந்தும், எழுத்து வடிவிலமைந்த தொன்மையான இலக்கிய, இலக்கணங்களைக் கொண்ட மொழி தமிழாகவே உள்ளது.

3. ஏனைய திராவிட மொழிகளில் இலக்கிய வடிவும், பேச்சு வடிவமும் முற்றிலும் வேறுபடுவதைக் காண்கின்றோம். தமிழில் இவ்வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

4. ஏனைய திராவிட மொழிகளிலும், ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழியிலும் கால வேறுபாடு மொழியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆங்கில மொழியை எடுத்துக் கொள்வோமெனில் சாசர் கையாண்ட ஆங்கிலத்திற்கும், தற்கால ஆங்கிலத்திற்குமிடையே மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டு இரண்டும் இரு வேறு மொழிகளோ என்ற ஐயத்தைக் கூட எழுப்புகின்றது. இவ்வேறுபாடு தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது.

5. ஏனைய திராவிட மொழிகளைவிடச் சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழே. ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் (Synonyms) அமைவது தமிழ் மொழியின் சொல்வளத்திற்குச் சான்றாகக் காட்சி தருகின்றது.

6. ஏனைய திராவிட மொழிகளில் பழங்காலக் கல்வெட்டுகள் அனைத்தும் வேற்று மொழிகளிலேயே அமைந்துள்ளன. ஆனால் தமிழின் தொன்மையான கல் வெட்டுகளில் அதிகமானவை தமிழிலேயே அமைவதைக் காண்கின்றோம்.

7. தமிழின் பல அடிச் சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் **(Metathesis)** என்ற விதிப்படி தெலுங்கு மொழியில் வடிவம் மாறியமைவதைக் காணலாம். சுட்டுப் பெயர்களும், மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் இத்தகைய மாற்றங்களைப் பெறுகின்றன.

எ.கா. சுட்டுப்பெயர் - அதனை > தானி - தெலுங்கு

மூவிடப்பெயர் - அவர் > வாரு - தெலுங்கு

8. கன்னடம், தெலுங்கு ஆகிய தொன்மையான மொழிகளும் மலையாளமும் தற்காலத் தமிழோடு வேறுபட்ட போதிலும் அவை பழந்தமிழ் வடிவங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அமைவது தமிழின் தொன்மைக்குச் சான்றாகும். 'இராமசரிதம்' முதலிய பழைய மலையாள இலக்கியங்கள் கூட, தற்கால மலையாள மொழி பேசும் மக்களைவிடத் தமிழ் பேசும் மக்களால் எளிதில் புரிந்து கொள்ளும்படி அமைந்திருக்கின்றன.

9. பிறமொழித் தாக்குதல் மிகக் குறைவாகவும், தொன்மையான வடிவங்களையும் இலக்கணக் கூறுகளையும் **(Grammatical category)** பேணிப் பாதுகாக்கும் இயல்பு அதிகமாகவும் உள்ளமையால் ஏனைய திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குத் தமிழே பெருந்துணை புரிகின்றது.

ஏனைய திராவிட மொழிகளை விடவும் தமிழ் மொழி தனக்கென ஒரு பெரும் இலக்கணப் பாரம்பரியத்தினைப் பெற்றுத் திகழ்கின்றது. அகத்தியரை முதுபெரும் இலக்கண ஆசிரியராகக் கருதுகின்ற மரபைக் கிழக்குக் கடற்கரைப் பகுதி நாடுகளிலும் தமிழகத்திலும் காண்கின்றோம். சமணர்களும் பௌத்தர்களும் கூட அகத்தியரைத் தமிழறிவித்த துறவியாகப் பேசுவதைக் காணலாம்.

சமற்கிருத இலக்கண நூல்களின் தொடர்பு தமிழகத்தில் வேரூன்றிய காலக் கட்டத்தில் 'தொல்காப்பியம்' தோன்றியிருக்கும் என்று கருத வாய்ப்புகள் உள்ளன. இந்நூல் பழைய இந்திய நாட்டிற்கேயுரிய இலக்கண மரபினை **(Pan-Indian School of Grammar)** ஒட்டியமைகின்றது. உடம்படு மெய்யின்றி எழுதும் மரபினை இந்நூல் புலப்படுத்துவதால் உடம்படுமெய் **(Glides)** கட்டாய விதியாக ஏற்றுக்கொள்ளப்படும் முன்னர் இந்நூல் தோன்றியிருக்கலாம். தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பல இலக்கண நூல்கள் பல்வேறு காலக்கட்டங்களில் தமிழ் மொழியில் பிறப்பெடுத்துள்ளன.

இவற்றுள் பல சமற்கிருத இலக்கண மரபினைப் பின்பற்றி அமைந்துள்ளன. அவற்றுள் 'வீரசோழியம்', 'பிரயோக விவேகம்' ஆகியன குறிப்பிடத்தக்கன.

பேசப்படும் பகுதி

தொல்காப்பியப் பாயிரத்தில் வடவேங்கடம் - தென்குமரி ஆகியன தமிழ் வழங்கிய நிலப்பகுதிகளாகக் குறிப்பிடப்படுகின்றன. காக்கைப்பாடினியார் என்னும் புலவர் தமிழ் வழங்கிய எல்லையினை

''வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை. . . ''

என்று வரையறுக்கின்றார்.

டாக்டர் கால்டுவெல் தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்டுப் பழவேற்காடு முதல் குமரி வரை பரந்து கிடக்கும் நிலப்பகுதி தமிழ் வழங்கும் இடம் என்கிறார். தென் திருவிதாங்கூர்ப் பகுதிகளில் குமரிமுனையிலிருந்து திருவனந்தபுரம்வரை இம்மொழி பேசப்பட்டு வருவதைக் காண்கிறோம். மேலும் கண்ணனூர் போன்ற மலையாளப் பகுதிகளிலும், வட இந்தியாவின் சில பகுதிகளிலும் இம்மொழியைப் பேசும் மக்கள் உள்ளனர். இவற்றைத் தவிர, இலங்கை, மலேசியா போன்ற தீவுகளிலும் முற்காலத்திலிருந்தே தமிழ் மொழி பேசப்பட்டு வருவதைக் காணலாம். இம்மொழி ஆறு கோடி மக்களால் இன்று பேசப்படுகின்றது. இதனைப் பேசுவோர் சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, பர்மா, மொரிசியஸ் போன்ற நாடுகளிலும் பெருவாரியாகக் காணப்படுகின்றனர். சிங்கப்பூரில் இது ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மொழியை ஒரு சர்வதேச மொழி என்றே குறிப்பிடலாம். இந்திய மொழிகளுள் சமற்கிருத மொழிக்கு அடுத்த நிலையில் பன்னாட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ள மொழியாக இது காட்சியளிக்கின்றது. உலகச் செம்மொழிகளின் வரிசையில் இடம்பெறும் அனைத்துத் தகுதிகளையும் தமிழ் மொழி பெற்றுத் திகழ்கின்றது.

தமிழும் திராவிடமும்

தமிழ் என்னும் சொல்லை ஆராய்கின்ற டாக்டர் கால்டுவெல் 'திராவிடம்' என்னும் சொல்லைத் 'தமிழ்' என்பதற்கு இணையான வடசொல் என்று கொண்டு இவ்விரு சொற்களுக்குமிடையில் ஒலியளவில் மிகுந்த வேறுபாடு இருப்பினும் அடிப்படை ஒன்றே என்று குறிப்பிட்டு, 'திராவிடம்' என்ற சொல்லே படிப்படியாக மாறி இறுதியில் 'தமிழ்' என்று புத்துருப் பெற்றது என்கிறார். இச்சொல்லாய்வைப் பல்வேறு அறிஞர்களும் மறுத்துரைக்கின்றனர். தொல்காப்பியர் காலத்திலிருந்தே இம்மொழியைக் குறிக்கத் 'தமிழ்' என்னும் சொல் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

'தமிழென் கிளவி'	-	தொல்.
'தமிழ் கூறு நல்லுலகம்'	-	தொல். - பாயிரம்.
'தமிழ்தலை மயங்கிய'	-	புறம்.
'தமிழ்கெழு கூடல்'	-	புறம்.

என்பன போன்ற தொடர்களே இதற்குச் சான்றாகும். மேலும் தமிழ் மக்கள் தம்மொழிக்குத் தம்மொழியிலேயே பெயரமைக்காமல் பிறமொழிச் சொல்லொன்றைப் பெயராக அமைத்துக் கொண்டனர் என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. டாக்டர் கால்டுவெல்லும் தன் கூற்றை ஏனையோர் மறுத்துரைப்பதைச் சுட்டிச் செல்கின்றார்.

மேல்நாட்டார்கள் இம்மொழியைத் 'தமுலிக்' என்றும், மலபார் என்றும் அழைத்து வந்தனர். கி.பி.1766-இல் 14-ஆம் லூயி மன்னன் தமிழன் ஒருவனுக்கு (ஆனந்தரங்கம் பிள்ளையின் உறவினர்) தமிழர் தலைவன் என்னும் பொருள்படும் 'மலபார் தலைவன்' என்ற பட்டத்தை வழங்கியுள்ளதைக் காண்கின்றோம். கோல்புருக் என்னும் அறிஞரும் தமிழை மலபார் என்று மேல்நாட்டார் அழைத்ததைக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

தெலுங்கர்களும், கன்னடர்களும் தமிழ் மொழியை 'அரவம்' என்று அழைப்பதைக் குறித்துப் பல்வேறு கருத்துகளைக் கால்டுவெல் விரிவாகக் கூறிச் செல்கின்றார். டாக்டர் குண்டர்ட் **(Herman Gundert)** 'அரவம் என்பதை 'அறவம்' என்று கொண்டு, தமிழ் மொழியில் ஏனைய மொழிகளைவிட அறநெறி இலக்கியங்கள் மலிந்துள்ளதால் 'அறம் நிறைந்த மொழி' என்னும் கருத்துப்பட 'அறவம்' என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்பார். சிலர் 'அருவாநாடு' என்பதன் திரிபே 'அரவம்' என்பர். வடமொழியில் அரவம் **(a - rava)** என்றால் ஒலியற்றது என்பது பொருள். தமிழில் 'ஹ' போன்ற மூச்சொலிகள் இன்மையால் இம்மொழி 'அரவம்' என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தையும் டாக்டர் கால்டுவெல் தெரிவிக்கின்றார். எனினும் கன்னடர்களும், தெலுங்கர்களும் தமிழை 'அரவம்' என்று அழைத்ததன் காரணம் சிறப்பாகப் புலப்படவில்லை.

தமிழ் மக்கள்

திராவிட மொழிகளுள் தொன்மை வாய்ந்த, பண்பட்ட, உயர்தனிச் செம்மொழியாய் இலக்கண, இலக்கிய வளம் பெற்றுத் திகழும் தமிழ் மொழியினைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்களின் ஆற்றலினையும், சிறப்பினையும் வியந்து பாராட்டும் டாக்டர் கால்டுவெல் இம்மக்களை நாகரிக மேம்பாட்டின் உச்ச நிலையில், உலகிற்கு அறிவூட்டும் பேரொளியாக விளங்கிய கிரேக்க நாட்டு மக்களோடு ஒப்பிட்டுப் பேசுகின்றார். இந்துக்களுள் மூட நம்பிக்கைகளும், பழக்க

வழக்கங்களும் குறைந்தவர்கள் தமிழ் மக்களே என்பது டாக்டர் கால்டுவெல்லின் மதிப்பீடு. பல்வேறு நாட்டு மக்களோடு தொன்றுதொட்டே கலாச்சார, பண்பாட்டு, வாணிகத் தொடர்புகள் கொண்டு, வாழ்வின் முறையிலும் மொழியிலும், கொள்வன கொண்டு, கொடுப்பன கொடுத்து, மொழியையும் வாழ்வையும் வளஞ்செய்து வாழுமியல்பு தமிழ் மக்களின் பரந்த மனப்பான்மைக்கும், அறிவு வேட்கைக்கும் சான்றாகக் காட்சி தருகின்றது.

மலையாளம்

தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, திராவிட மொழிகளில், உறவு நிலையில் தமிழுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்படும் சிறப்பினைப் பெற்று, வளர்ந்து வரும் இலக்கியச் செல்வங்களுடன் புதுப் பொலிவு பெற்றுத் திகழும் மலையாள மொழி, பண்டைத் தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியான சேர நன்னாட்டில் பேசப்பட்டு வருகின்றது. இம்மொழியைப் பேசும் மக்களின் தொகை ஏறத்தாழ இரண்டு கோடி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதி தமிழ் பேசப்படும் பகுதியாகவே இருந்தது என்பதற்கு இப்பகுதியில் எழுந்த 'பதிற்றுப்பத்து', 'சிலப்பதிகாரம்' முதலிய நூல்களே சான்றாகும். மேலும் மலையாள மொழியின் தொடக்க நிலையில் எழுந்த இலக்கியங்களிலும் தமிழின் ஆதிக்கமே மிகுந்துள்ளது என்ற உண்மை நிலையும் நினைவில் கொள்ளத்தக்கது. பின்னர் கி.பி.15-ஆம் நூற்றாண்டு வரை சமற்கிருத மொழியின் தாக்கமும், அதன் பின்னர் ஆங்கிலம் போன்ற மேல்நாட்டு மொழிகளின் ஆதிக்கமும் இம்மொழியில் மிகுந்தன.மேல் நாட்டு மொழிகளின் தாக்கம் மிகுந்தபோது ஏராளமான மேல்நாட்டுப் பாதிரிமார்கள் இம்மொழிக்குப் பல இலக்கண நூல்களை எழுதிக் குவித்தனர்.

மலபார் கடற்கரை சிறந்த துறைமுகமாக அமைந்திருந்ததால் கிரேக்கர், யூதர், போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் இப்பகுதிக்கு வந்து வாணிகத் தொடர்பு கொள்ள வாய்ப்பாக இருந்தது. வடமொழியாளர் மலையாளம், தமிழ் ஆகியவற்றைத் திராவிடம் என்ற பொதுப் பெயராலேயே சுட்டினர். எனினும் முற்காலத்திலிருந்தே இந்நாட்டைக் குறிக்கக் 'கேரளம்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர் என்பதற்கு கி.மு. 3ஆம் நூற்றாண்டில் எழுந்த அசோகனது கல்வெட்டிலுள்ள 'கேரளபுத்திரா' என்ற தொடரே சான்றாகும்.இந்நாட்டு மன்னனைப் பிளினி என்பவர் 'செலபத்ராஸ்' (Celobotras) என்றும், தாலமி 'கெரபத்ராஸ்' (Kerabothros) என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். இயற்கையமைப்பில் இப்பகுதி வளைந்து காணப்படுவதால் 'கொங்கு நாடு' என்ற பெயரும் ஏற்பட்டது.

தமிழிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிரிந்து சென்ற மொழியாக இருந்தபோதிலும் இம்மொழி திராவிட மொழிகளின் வினைமுற்றுக்களிலுள்ள பால்காட்டும் விகுதிகளை **(Pronominal Terminations)** விலக்கியுள்ளது. மேலும் அளவு கடந்து வடமொழிச் சொற்களை ஏனைய திராவிட மொழிகளை விடவும் மலையாள மொழி அதிகமாக ஏற்றுள்ளது. தமிழில் 'ஐ'கார ஈற்றைக் கொண்டு முடியும் சொற்களெல்லாம் இம்மொழியில் 'அ'கர ஈற்றைப் பெறுகின்றன.

எ.கா. மலை >- மல

தமிழில் வல்லொலியும் மூக்கொலியும் இணைந்து வரும் இணைவுகள் **(Nasal + Stop clusters)** மலையாளத்தில் இரு மூக்கொலிகளின் இணைவுகளாக ஓரினமாதலைக் **(Assimilation)** காணலாம்.

இம்மொழிக்கு டாக்டர் குண்டர்ட் இலக்கண நூலும் அகராதியும் அமைத்துள்ளார். அவர் தமிழிலிருந்து மலையாளம் தோன்றியது என்ற கருத்தை ஒத்துக்கொள்ளாமல் கொடுந்தமிழின் ஒரு கிளை மலையாளம் என்றும், மற்றொரு கிளை தமிழ் என்றும் குறிப்பிடுகின்றார். 'கேரளபாணினியம்' என்ற நூலை எழுதிய பேராசிரியர் ஏ.ஆர். இராசராசவர்மா என்பவரும் மலையாளம் தமிழிலிருந்து தோன்றியது என்ற டாக்டர் கால்டுவெல்லின் கொள்கையை மறுக்கின்றார். வேறு சிலர், தமிழ் மொழி மலையாளத்திலிருந்து தோன்றியது என்னும் கொள்கையை நிலை நாட்ட முயலுகின்றனர். இக்கொள்கை பேராசிரியர் ஆத்தூர் கிருஷ்ணபிஷரூலி என்பவரால் எழுதப்பட்டது. இதனை டாக்டர் கே.எம். ஜார்ஜ் என்பவரும் வழிமொழிகின்றார்.

வரலாற்றுணர்வோடும், மொழி நூலுணர்வோடும் இவ்விரு மொழிகளையும் நோக்குவோருக்கு இக்கொள்கை வியப்பையும் நகைப்பையும் விளைவிக்கும். சிலம்பும், பதிற்றுப்பத்தும், புறநானூற்றில் பல பாடல்களும் முன்னர்த் தமிழ் மொழி வழங்கிய, தற்போதைய மலையாள மொழி வழங்கும் சேர நாட்டில் முகிழ்த்தன என்பது தெளிவு. இப்போதுள்ள தமிழ் நாட்டோடு படிப்படியாகக் கலாச்சார, பண்பாட்டு, இலக்கியத் தொடர்புகளை இழந்ததாலும், வடமொழித் தொடர்பு மிகுந்ததாலும் இப்பகுதியில் பேசப்பட்டு வந்த தமிழ் மொழி வேறு ஒரு மொழியாக வளரத் தொடங்கியது. காலப்போக்கில் தமிழிலிருந்து மலையாளம் முற்றிலும் வேறுபட்ட போதிலும், 'இராமசரிதம்' முதலிய தொன்மையான இலக்கியங்கள் மலையாளம் பேசும் மக்களைவிடத் தமிழ் பேசும் மக்களால் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்திருக் கின்றன. பழைய மலையாள இலக்கியங்களில் தமிழ் ஒலியன்களான பன்னிரண்டு உயிரும், பதினெட்டு மெய்யுமே மிகுதியாக உள்ளன. கிரந்த எழுத்தை யொட்டி மலையாளத்திற்கு எழுத்துகள் அமையவே

பிற்காலத்தில் மற்ற வடமொழி ஒலிகளும் மலையாளத்தில் மிகப் பயின்று கலப்புற்றன. பண்டைய மலையாள மொழியின் இலக்கியங்கள் வடமொழியைவிடத் தமிழையே பின்பற்றி அமைந்திருக்கின்ற இயல்பினை டாக்டர் குண்டர்ட் அவர்களும், டாக்டர் கே.எம். ஜார்ஜ் அவர்களும் ஒத்துக் கொள்ளுகின்றனர். எனவே டாக்டர் கால்டுவெல் கூறுவதைப் போன்று தமிழின் மிகத் திரிந்த கிளைமொழி மலையாளம் என்று கொள்வதே பொருத்தம். இலக்கிய வளத்திலும், படைப்பாற்றலிலும் இன்றைய நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தில் மிக உயர்ந்த இடத்தை மலையாளமே பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கன்னடம்

இம்மொழி கர்நாடக மாநிலத்திலும், மராத்தி நாட்டின் தென் பகுதியிலும் பேசப்படுகின்றது. இதனைக் 'கருநாடகம்' என்றும், 'கானரிஸ்' என்றும் அழைப்பர். நீலகிரி மலைப்பகுதிகளில் வாழும் படகர்கள் பேசும் மொழி, கன்னட மொழியோடு பெரிதும் தொடர்புடையதாகத் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கன்னட மொழியைப் பேசுகின்ற மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ இரண்டு கோடி என்று கணக்கிடப்படுகின்றது. 'கர்நாடகா' என்ற வடசொல் திரிந்து இம்மொழியின் பெயராக அமைகின்றது என்பர் வடநூலார். எனினும் டாக்டர் குண்டர்ட் இதனைத் திராவிடச் சொல்லாகவே கருதுகின்றார். இம்மொழியில் பழங்கன்னடம், புதுக் கன்னடம் என்ற இரு வகையுண்டு. இவற்றில் புதுக் கன்னடத்தின் எழுத்து முறை தெலுங்கு மொழியின் எழுத்து முறையை ஒட்டி அமைந்திருக்கின்றது. பேராசிரியர் ஏ.எஸ். ஆச்சாரியா **(A.S. Acharya)** என்பவர் இம்மொழியில் பல சிறந்த ஆய்வுகளை நடத்தியுள்ளார். இம்மொழியின் ஒலியன்கள் பற்றி எச்.எஸ். பிலிகிரி **(H.S. Biligiri)** என்பவர் ஆராய்ந்துள்ளார்.

தேவாங்கா கன்னடம்

கன்னட மொழியின் வட்டார வழக்குகளில் **(Dialects)** ஒன்று தேவாங்கா கன்னடம் என்பது. தமிழ் நாட்டிலுள்ள சின்னாளப்பட்டி, அருப்புக்கோட்டை போன்ற பகுதிகளில் வாழும் தேவாங்க செட்டியார் என்னும் பிரிவினர் இதனைப் பேசுகின்றனர். இது கர்நாடகப் பகுதியில் வழங்கும் கன்னட மொழியைப் போலன்றித் தமிழ்ச் சொற்களை அதிகமாக ஏற்றுத் தமிழோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காட்சியளிக்கின்றது. தொன்மையான தமிழிலக்கியங்களில் இடம் பெற்று அழிந்துபோன சொற்கள் பலவற்றை இது இன்றும் பேணிக் காப்பது குறிப்பிடத்தக்கது.

எ.கா. வெண் திங்கள் **>** பெலிதிங்கலு (தே. கன்னடம்)

ஒலியன்களின் நிலைகளைப் பொறுத்தவரையிலும் இது மைசூர்ப் பகுதிகளிலுள்ள கன்னட மொழியிலிருந்து மாறுபடுகின்றது. மொழி முதலில் தமிழில் 'ப'கர ஒலி வருமிடங்களிலெல்லாம் கன்னட மொழியில் 'ஹ'கர ஒலி வருதல் இயல்பு. ஆனால் தேவாங்கா கன்னடத்தில் மொழி முதலில் 'ஹ'கர ஒலி கெட்டு விடுகின்றது.

எ.கா. தமிழ் - பால் > ஹாலு (கன்னடம்) > ஆலு (தே. கன்னடம்)

கௌடா கன்னடம்

கர்நாடக நாட்டின் தென்பகுதியிலும் கூர்க் மாவட்டத்திலுமுள்ள கௌடர்கள் பேசும் கன்னடமொழியின் ஒரு வட்டார வழக்கே கௌடா கன்னடம். இது கன்னட மொழியிலிருந்து பல நிலைகளிலும் மாறுபடுகின்றது. இவ்வட்டார வழக்கில் 14 உயிர் ஒலிகளும் (9 குறில், 5 நெடில்), 22 மெய் ஒலிகளும் உள்ளதாக இதனை ஆராய்ந்த டாக்டர் கே. குஷலப்பா கௌடா குறிப்பிடுகின்றார். பேராசிரியர் உபாத்தியாயா **(Upadhyaya)** என்பவர் 1968-இல் கன்னட மொழியின் நான்கு வட்டார வழக்குகளை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். கன்னட மொழியின் பேச்சு வடிவம் பற்றிப் பேராசிரியர் வில்லியம் பிரைட் **(William Bright)** விரிவாக ஆராய்ந்துள்ளார்.

படகா

இம்மொழியைப் பேசுகின்ற மக்கள் நீலகிரி மாவட்டத்திலுள்ள ஊட்டி, குன்னூர்ப் பகுதிகளில் பெரும்பான்மையாக உள்ளனர். இதனைக் கன்னட மொழியின் வட்டார வழக்காகவே ஒப்பியலறிஞர் பலரும் கருதி வந்தனர். எனினும் தற்போது இது தனி மொழியாகக் கருதப்படுகின்றது. 70 ஆயிரம் மக்கள் இம்மொழியைப் பேசுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இம்மொழியை ஆராய்ந்த பேராசிரியர் எமனோ தோடர், கோடர் ஆகியோர் நீலகிரிப் பகுதியில் குடியேறிய காலத்திற்கு நெடுநாளைக்குப் பின்னரே படகா மொழியினர் வடக்கிலிருந்து அங்கு வந்து குடியேறினர் எனவும், இவர்களின் மொழி கன்னட மொழியோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்றும் தெளிவுபடுத்துகின்றார். பழந் தமிழிலக்கியங்களில் குறிக்கப்படும் வடுகர்களே படகர்கள் என்பது பலர் கருத்து. இம்மொழியை டாக்டர் எஸ். அகத்தியலிங்கம் விரிவாக ஆய்ந்துள்ளார்.

துளு

இம்மொழியை டாக்டர் கால்டுவெல் திருந்திய மொழியாக ஏற்றுக் கொண்ட போதிலும் இதற்கு வரிவடிவமோ, இலக்கிய வளமோ கிடையாது. பேசில் மிஷனைச் சார்ந்த பாதிரிமார்கள் **(Basle Missionaries)** இம்மொழியில் பல நூல்களைத் தோற்றுவித்து அவற்றைக்

கன்னட மொழியின் வரிவடிவில் அச்சிட்டனர். மைசூர் மாநிலத்தை அடுத்து ஓடும் சந்திரகிரி, கல்யாணபுரி என்ற இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி துளு மொழி பேசப்படும் எல்லையாகக் குறிக்கப்படுகின்றது. எனினும் இப்பகுதியில் வாழும் மக்கள் துளு மொழியினை மட்டும் பேசாது வேறு பல மொழிகளையும் பேசி வருகின்றனர். இம்மொழிக்குப் பேராசிரியர் ஜே.பிரிகல் **(J. Brigel)** என்பவர் இலக்கணம் எழுதியுள்ளார். ஏ.மான்னர் **(A. Manner)** என்பவர் துளு - ஆங்கில; ஆங்கில - துளு அகராதிகளை முறையே 1886, 1888 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டுள்ளார். எல்.வி. இராமசுவாமி ஐயரும் இம்மொழியில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். பேராசிரியர் உபாத்தியாயா இம்மொழிக்கு பேரகராதி **(Lexicon)** ஒன்றினைத் தயாரித்துள்ளார்.

கொடகு

எழுத்தும் இலக்கிய வளமும் பெறாது வழக்களவிலேயே நின்று நிலவும் இம்மொழியினை டாக்டர் மோக்லிங் **(Mogling)** என்பவர் ஆய்ந்து இது தமிழோடு பெருங்கேண்மையுடையது என்று கூறிச்சென்றார். பின்னர் வந்த பேராசிரியர் எல்.வி. இராமசாமி ஐயரும் இம்மொழி தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளோடு கொண்டுள்ள தொடர்பை விளக்கியுள்ளார். மேஜர் கோல் **(R.A. Cole)** என்பவா இதன் இலக்கணத்தையும் பல பாடல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இம்மக்கள் பெரும்பாலும் ஒதுங்கி வாழ்வதால், நீலகிரியிலுள்ள பழங்குடி மக்களின் மொழியைப் போன்று இம்மொழியும் தொன்மைப் பண்பு மாறாமல் இருந்து வருகின்றது. ஒரு பெண் பல ஆடவர்களை மணந்து கொள்ளும் வழக்கம் இவர்களிடம் இருப்பதாக ஏ.சி. பர்னல் **(A.C. Burnell)** என்பவர் குறிப்பிடுகின்றார். இம்மொழியின் உயிர் ஒலிகளைப் பேராசிரியர் எமனோ விரிவாக ஆராய்ந்துள்ளார்.

தோடா

நீலகிரிமலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களான தோடர்கள் பேசும் இம்மொழியினைக் கி.பி. 1837-ஆம் ஆண்டிலேயே பேராசிரியர் பெர்னாட் ஸ்கிமிட் **(Bernhard Schmid)** என்பவர் ஆராய்ந்து திராவிட மொழிக் குடும்பத்தோடு தொடர்புடைய மொழி இது என்று குறிப்பிட்டுச் சென்றார். இம்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை 1961-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணிப்பின்படி ஏறத்தாழ 800 என்று தெரிகின்றது. பேராசிரியர் எமனோ இம்மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை 600 என்று குறிப்பிடுகின்றார். எனினும் சில காலங்களுக்கு முன்னர் இவர்களின் எண்ணிக்கை சற்று அதிகமாக இருந்திருக்க வேண்டுமென்றும், போதைப் பொருட்களை உட்கொள்ளும்

பழக்கத்தாலும், பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொன்றுவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தமையாலும் இவர்கள் எண்ணிக்கையில் குறைந்து விட்டனர் என்று கால்டுவெல் குறிப்பிடுகின்றார். இம்மக்களைப் பற்றிப் பேராசிரியர் கொலோனல் மார்ஷல் **(Colonel Marshall)** என்பவர் விரிவான நூல் ஒன்று எழுதியிருப்பதாகத் தெரிகின்றது. இவர்களைப் பற்றிப் பேராசிரியர் டபிள்யு. எச். ஆர். ரிவர்ஸ் **(W.H.R. Rivers)** என்பவர் விரிவாக ஆராய்ந்து 770 பக்க அளவில் தோடர்கள் **'The Todas'** என்னும் நூலை 1906-இல் வெளியிட்டதாகத் தெரிகின்றது. ஒப்பியல் ஆய்வுக்குப் பெரிதும் துணை செய்யும் இம்மொழியைப் பற்றியும், இம்மொழி பேசும் மக்களைப் பற்றியும் பேராசிரியர் எமனோ 1935-38 வரை மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். இம்மொழியிலுள்ள ஒலியமைப்பு முறையும், ஒலிகளும் உச்சரிப்பதற்கு அரிதாக உள்ளன. **sh, ch, th** முதலிய ஒலிகள் இம்மொழியில் ஒலி நயத்திற்காகச் சொற்களின் இடையில் திணிக்கப்படு கின்றன. டாக்டர் ஜி.யு. போப் **(G.U. Pope)** இதனைத் தோடா மொழிக்கேயுரிய தனிச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்.

எ.கா. **palli (dairy) > palthi**

இம்மொழியின் சொற்களின் முதலசையில் ஒலியழுத்தம் உள்ளது. இம்மக்களின் தொன்மையான மொழி பழங்கன்னடம் என்று டாக்டர் போப் குறிப்பிடுவது ஆய்வுக்குரியது. இம்மொழி இம்மக்களோடு நெருங்கி வாழும் கோடர்களாலும், படகர்களாலும் கூட எளிதில் புரிந்து கொள்ள முடியாவண்ணம் கடினமாக உள்ளது. இது தமிழ், மலையாளம், கன்னடம் ஆகியவற்றின் வட்டார வழக்கு **(Dialect)** அல்ல என்றும், தனிமொழி என்றும் பேராசிரியர் எமனோ நிறுவுகின்றார். இம்மொழிபற்றி டாக்டர் கால்டுவெல்லுக்கு முன் பிரெடெரிக் மெட்ஸ் **(Friedrich Metz)** என்பவர் ஆராய்ந்ததாகத் தெரிகிறது. மலையாள மொழியைப் போலன்றி இம்மொழியின் வினைமுற்றுகளில் பாலறிகிளவிகள் உள்ளன. தெலுங்கு மொழியில் காணக்கிடக்கும் மொழிமாற்றமும் இம்மொழியில் இல்லை. தோடா மொழியின் இலக்கண அமைப்புகளில் பல பழந்தமிழோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளன. ர், ற் ஆகிய ஒலி வேறுபாடு ஏனைய திராவிட மொழிகளைவிடத் தோடாவில் மிகத் தெளிவாக உள்ளது.

கோடா

இம்மொழியும் நீலகிரி மலைப்பகுதிகளில் வாழும் தோடர்களைப் போன்ற மற்றொரு இனத்தவர்களான கோடர்களால் பேசப்பட்டு வருகின்றது. இம்மொழியைப் பேசும் மக்களின் தொகைஏறத்தாழ 900 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இம்மக்கள் பெரும்பாலும் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். டாக்டர் கால்டுவெல் இம்மொழி கன்னட மொழியின் கொச்சை மொழி போலக் காட்சியளிப்பதாகக் குறிப்பிடுகின்றார். எனினும் இது தனிமொழி என்று நிறுவப்பட்டுள்ளது.

தோடா மொழியினைச் சிறப்பாக ஆராய்ந்த பேராசிரியர் எமனோ இம்மொழியினையும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இருளா

நீலகிரி மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களான இருளர்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். ஆனைமலைப் பகுதியில் வாழும் இருளர்கள் 'வட்டக்காட இருளர்கள்' எனப்படுவர். நீலகிரியில் வாழ்பவர்கள் 'மலைத்தேச இருளர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். பேராசிரியர் கமில் சுவலபில் இம்மக்கள் பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். மேலும் இம்மொழியில் ஆய்வு செய்துள்ளோரில் குறிப்பிடத் தகுந்தவர்களாக ஜெரார்ட்.எப்.டிப்லாத் (Gerard F. Diffloth) ஆர். பெரியாழ்வார் ஆகியோரும் அடங்குவர். குறும்பர்கள், படகர்கள் ஆகியோருடன் இம்மக்கள் நெருங்கிப் பழகுவதால் குறும்பா, படகா ஆகிய மொழிகளின் சொற்கள் இவர்களது மொழியில் ஏராளம் கலந்துள்ளன.

தென் திராவிட மொழிகளுள் கசபா, குறும்பா போன்ற மொழிகளையும் இணைத்துப் பேசும் மரபு உள்ளது.

நடுத் திராவிட மொழிகள்

தெலுங்கு-குவி கிளை



கொலாமி - நாயக்கி கிளை



நடுத் திராவிட மொழிகளைத் தெலுங்கு - குவி கிளை என்றும், கொலாமி - நாயக்கி கிளை என்றும் மொழி நூலார் இரு கூறுபடுத்துவர். தெலுங்கு - குவி கிளையில் தெலுங்கு, கோண்டி, கோண்டா, குயி, குவி, பெங்கோ, மண்டா ஆகிய ஏழு மொழிகள் உள்ளன கொலாமி - நாயக்கி கிளையில் கொலாமி, நாயக்கி, பர்ஜி, கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகிய மொழிகள் உள்ளன இவற்றுள் கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகியன தனி மொழிகள் அல்ல என்றும், ஒரே மொழியின் கிளைகள் என்றும் சிலர் வாதிடுவர். நடுத்திராவிட மொழிகளுள் தெலுங்கு மொழியை தென் திராவிட மொழிகளோடு இணைத்து ஆய்வது பழைய மரபு. ஆனால் இப்போது அது நடுத்திராவிட மொழிகளோடு இணைக்கப்படுகின்றது. கொலாமி, நாயக்கி, பர்ஜி, கடபா ஆகியன தென் திராவிட மொழிகளுக்குள் சில தனித் தன்மைகளைக் கொண்டு திகழ்வதால் அவற்றை ஒரு தனிக் கிளையாக பரோ, பட்டாச்சாரியா ஆகியோர் விளக்கிக் காட்டப் பேராசிரியர் எமனோவும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

நடுத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்

1. தென் திராவிட மொழிகளில் முன்னுயிர்களின் முன்னர் வரும் மொழி முதல் ‘க’கர ஒலி, ‘ச’கர ஒலியாக மாறுவதைக் காணலாம். ஆனால் நடுத் திராவிட மொழிகளில் இம்மூலத் திராவிட ஒலியான ‘க’கரம் மாறாமலே நிற்கின்றது.

2. வளைநா ஒலியான (**Retroflex Consonant**) ‘ள’கர ஒலி, நாயக்கி தவிர்த்த ஏனைய மொழிகளில் காணப்படவில்லை.

3. நடுத் திராவிட மொழிகள், நெடில் ஒலிகளே இல்லாத ஒரியா போன்ற மொழிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட போதிலும் தமக்கேயுரிய குறில் நெடில் வேறுபாட்டை இழக்காமல் பேணிக் காக்கின்றன.

4. ஏனைய திராவிட மொழிகளைப் போன்று எழுவாய் வடிவில் மூவிடப் பெயர்களின் முதலுயிர் நீண்டும், வேற்றுமை ஏற்கும் வடிவில் குறுகியும் நிற்குமியல்பு இம்மொழிகளிலும் உள்ளன.

5. மூலத் திராவிட மூக்கொலியான ‘ண’கரம் பெரும்பாலும் ‘ன’கர ஒலியாக இம்மொழிகளில் மாறுகின்றது. எனினும் கோண்டா, பெங்கோ, மண்டா, குவி, கடபா, ஒல்லாரி போன்ற மொழிகளில் இவ்வொலி சிறுபான்மை திரியாமல் வழங்கலுண்டு.

6. தென் திராவிடமொழிகளில், மொழி முதலில் ‘ட’கர ஒலி வருவதில்லை. ஆனால் நடுத்திராவிட மொழிகளில் இது சில இடங்களில் மொழி முதலில் வருகின்றது.

7. ஒலியன்கள் இடம் பெயர்ந்து நிற்றலை (**Metathesis**) குயி, குவி, பெங்கோ, மண்டா போன்ற மொழிகளில் அதிகமாகக் காண முடிகின்றது.

8. இம்மொழிகளில் ஆண்பால், ஆண்பால் அல்லாதன (**Masculine and Non-Masculine**) என்ற இருவகைப் பாகுபாட்டினை ஒருமையிலும் பன்மையிலும் காணமுடிகின்றது. தெலுங்கில் இப்பாகுபாடு ஒருமையில் மட்டுமே உள்ளது.

9.பெண்பால் உறவுப்பெயர்கள் (**Kinship terms**)-ஆள் (**-al**) விகுதியைப் பெற்று அமையும் மரபினை நடுத் திராவிட மொழிகளில் காணமுடிகின்றது.

10. தென் திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் பன்மையினை உணர்த்துவதற்குப் பலவின்பால் விகுதியைக் கட்டாயம் இணைத்தாக வேண்டும் என்ற நிலை கிடையாது. ஆனால் இம்மொழிகளில் அஃறிணைச் சொற்கள் பன்மையுணர்த்த வேண்டுமாயின் பலவின்பால் விகுதி கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

11. தென் திராவிட மொழிகளில் 'அவன்' என்பது படர்க்கை ஆண்பால் ஒருமை மூவிடப் பெயராக உள்ளது. ஆனால் நடுத் திராவிட மொழிகளில் இதற்கு இணையாக **avant** என்ற வடிவம் உள்ளது.

1961-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணிப்பின்படி நடுத் திராவிட மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க் கண்டவாறு தெரிய வருகின்றது

1.	தெலுங்கு	-	3.767 கோடி
2.	கோண்டி	-	15 இலட்சம்
3.	கோண்டா	-	13 ஆயிரம்
4.	பெங்கோ	-	1300
5.	குயி	-	9.4 இலட்சம்
6.	குவி	-	1.9 இலட்சம்
7.	கொலாமி	-	50 ஆயிரம்
8.	நாயக்கி	-	1500
9.	பர்ஜி	-	20 ஆயிரம்
10.	கடபா	-	8 ஆயிரம்

நடுத் திராவிட மொழிகளில் தெலுங்கு

தொன்மைச் சிறப்பிலும் சொல்வளத்திலும் தெலுங்கு மொழியைத் தமிழுக்கு அடுத்த நிலையில் குறிப்பிடலாம். இதன் இனிமை நோக்கி இதனைச் 'சுந்தரத் தெலுங்கு' என்று பாரதியாரும், 'களி தெலுங்கு' என்று

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் பாராட்டிச் சென்றுள்ளனர். ஐரோப்பியர்கள் இம்மொழியினை 'ஜெண்டு' (Gentiles என்ற போர்த்துக்கீசியச் சொல்லின் திரிபு) என்று அழைத்தனர். தமிழ் நாட்டின் வடக்கேயுள்ள ஆந்திரப் பகுதியில் இம்மொழி பேசப்படுகின்றது. வடமொழியாளர்கள் இம்மொழியினை 'ஆந்திரம்' என்று அழைத்து வந்தனர். இம்மொழியின் பெயர்க் காரணத்தை ஆய்பவர்கள் திரிலிங்கம் (மூன்று கோயில்கள்) என்னும் சொல்லே தெலுங்கு என்று திரிந்தது என்றும், இனிமை என்னும் பொருள் பயக்கும் 'தெனுகு' என்னும் சொல்லே தெலுங்கு என்று மருவி வழங்கியது என்றும் பலவாறு கருதுவர். சீனப் பயணியான யுவான்சுவாங் (Hieun Tsang) இம்மொழி வட இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டது என்று சுட்டிச் செல்கின்றார். இம்மொழிக்கு மேல்நாட்டார்கள் பல இலக்கண நூல்களை எழுதியுள்ளனர். நன்னயபட்டர் போன்ற வடமொழி அறிஞர்கள் இம்மொழியில் இலக்கியம் பல செய்தமையால் இம்மொழியும் வடமொழித் தொடர்பை மிகுதியாகப் பெற்றுள்ளது தெலுங்கர்கள், ஆந்திரர்கள் என்றும், கலிங்கர்கள் என்றும் இரு வகைப்படுவர். தமிழைவிட அதிகமான மக்கள் பேசும் இம்மொழி பல்வேறு படைப் பிலக்கியங்களைக் கொண்டு சிறப்பாக வளர்ந்து வருகின்றது. இம்மொழியின் வினையடிகளைப் பேராசிரியர் பி.எச். கிருட்டிணமூர்த்தி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

திணை, பால் பாகுபட்டைப் பொறுத்தவரையில் ஏனைய நடுத் திராவிட மொழிகளிலிருந்து தெலுங்கு சற்று வேறுபட்டு நிற்கக் காணலாம். ஒருமையில் ஆண்பால், ஆண்பால் அல்லாதன என்ற பிரிவு தெலுங்கில் உள்ளது. இந்நிலையினைக் குரூக், மால்டோ முதலிய வட திராவிட மொழிகளில் அதிகமாகக் காண்கிறோம். திணை, பால் பாகுபாட்டைப் பொறுத்தவரையில், தெலுங்கு, குரூக் ஆகிய மொழிகளின் அமைப்பே மிகத் தொன்மையானது என்று கருதுகின்றார் டாக்டர் பி.எஸ். சுப்பிரமணியன். குயி மொழியோடு தெலுங்கு பல நிலைகளில் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. குயி மொழியில் உள்ளது போன்ற ஒலி இடம் பெயர்ந்து நிற்குமியல்பினைத் தெலுங்கு மொழியிலும் காணமுடிகின்றது. பன்மை விகுதிகளைப் பொறுத்த வரையில் கோண்டா, கோண்டி, குயி, குவி போன்ற மொழிகளி லிருந்து தெலுங்கு சற்று வேறுபடுகின்றது. இது போன்ற பல பொதுவான உறவு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெலுங்கு, கோண்டா, கோண்டி, குயி, குவி போன்ற மொழிகளை நடுத்திராவிட மொழிகளுள் ஒரு தனிப்பிரிவாகப் பிரித்து ஒப்பியல் அறிஞர்கள்.

கோண்டி

இம்மொழியைப் பேசும் மக்கள் கோண்டுவனம் என்று அழைக்கப்படும் நடு இந்தியாவின் காடுகளில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இவர்கள் தங்களைக் 'கோயிதோர்' என்று அழைக்கின்றனர். இம்மக்களைப் பற்றிய பல செய்திகளைப் பேராசிரியர் டால்டன் **(Colonel Dalton)** என்பவரின்''வங்காள மக்களின் வரலாறு'' **(Ethnology of Bengal)** என்ற நூலும் மைய மாநிலங்களின் அரசிதழ் **(Gazetteer of the Central Provinces)** என்ற நூலும் தருகின்றன. கல்கத்தாவிலுள்ள பிஷப் கல்லூரியின் பேராசிரியரான ஜே.சி. டிரிபெர்கு **(J.C. Driberg)** என்பவர் ஒரு சுருக்கமான இலக்கணக் கட்டுரையினை எழுதி வெளியிட்டுள்ளார். பேராசிரியர்கள் சி.ஜி. செனிவிக்ஸ் **(C.G. Chenegvix Trench)** என்பாரும்,புனித எச்.டி.வில்லியம்சன் ஹென்றி டிரம்மண்டு (**Willamson, Rev. Henry Drummond**) என்பாரும் இம்மொழிக்கு எழுதிய இலக்கண நூல்கள் குறிப்பிடத்தக்கன. பேராசிரியர் ஆபிரகாம் லிண்ட் **(Abraham A. Lind),** ஏ.என்.மிட்சல் **(A.n. Mitchell)** ஆகியோரும் இம்மொழி பற்றி ஆய்ந்துள்ளனர்.

குவி அல்லது கோந்த்

இம்மொழியைப் பேசும் மக்கள் கோண்டவனத்தின் பகுதிகளிலும், ஒரிசாவிலுள்ள சில குன்றுகளிலும் வாழ்கின்றனர். இவர்களைக் கோண்டர்கள், கந்தர்கள், கூ **(Ksus)** என்றெல்லாம் அழைப்பதுண்டு. இம்மொழிக்கென வரிவடிவமோ, எழுத்து வடிவிலமைந்த இலக்கியங்களோ கிடையாது. ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்கள் இம்மொழியினைப் பேசி வருகின்றனர். குழந்தைகளைத் திருடி வந்து தெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கத்தை இம்மக்கள் முன்னர் மேற்கொண்டிருந்ததாகத் தெரிகின்றது.

குயி

இம்மொழி ஒரிசாவிலுள்ள கோறாபுத் மாவட்டப் பகுதிகளில் பேசப்படுகின்றது. ஏறத்தாழ ஒன்பது இலட்சம் மக்கள் இதனைப் பேசி வருவதாகத் தெரிகின்றது. இம்மொழியின் இலக்கணத்தைப் பேராசிரியர் டபிள்யு. டபிள்யு. வின்ஃபீல்டு **(W.W.Winfield)** என்னும் மேனாட்டறிஞர் எழுதியுள்ளார். இதைத் தவிரப் பேராசிரியர் பெரிரா **(J.E.Friend - Pereira)** என்பவரும் ஓர் இலக்கணநூல் எழுதியுள்ளார். பரோ , பட்டாச்சாரியா ஆகிய இரண்டு அறிஞர்களும் இணைந்து இம்மொழி பற்றிய ஆய்வுகள் பல நடத்திக் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டுள்ளனர்.

கோண்டா

ஆந்திரப் பிரதேச எல்லைப் பகுதிகளில் பேசப்படும் இம்மொழியின் இலக்கண அமைப்பு போன்றவற்றை உசுமானியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பி.எச் கிருஷ்ணமூர்த்தி ஆராய்ந்து பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார் பேராசிரியர் எஸ்.பட்டாச்சாரியா என்பவர் இதன் இலக்கணத்தையும், பல சொற்களையும் ஆராய்ந்து 'கோண்டா மொழி' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். இதைத்தவிர, பேராசிரியர்கள் பரோ, பட்டாச்சாரியா ஆகியோர் தொகுத்த பல குறிப்புகளும் இம்மொழியைப் பற்றி அறியத் துணை செய்கின்றன. இம்மொழியை ஏறத்தாழ 13 ஆயிரம் மக்கள் பேசி வருகின்றனர்.

கொலாமி

மத்தியப் பிரதேசத்தில் வழங்கப்படும் இம்மொழியை ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் பேசி வருகின்றனர். பேராசிரியர் சேது மாதவராவ் என்பவர் இம்மொழியின் இலக்கண நூல் ஒன்றினை எழுதி 1950-இல் வெளியிட்டுள்ளார். இம்மொழி பற்றி ஆராய்ந்து பேராசிரியர் எமனோ சிறந்த கட்டுரை ஒன்றினை 1955-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். வில்லியம் பிரைட் என்பவரும் இம்மொழி பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். பேராசிரியர்கள் பரோவும், பட்டாச்சாரியாவும் இணைந்து இம்மொழியில் பல ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

நாயக்கி, பர்ஜி

நாயக்கி மொழி மத்தியப் பிரதேசப் பகுதிகளிலும் மகாராட்டிரத்திலும் பேசப்படுகின்றது. இம்மொழியினை ஏறத்தாழ 1500 பேர் பேசி வருவதாகத் தெரிகின்றது. பேராசிரியர் பரோவும், பட்டாச்சாரியாவும் இணைந்து இம்மொழியை விரிவாக ஆய்ந்துள்ளனர். பர்ஜி மொழியும் மத்தியப்பிரதேசப் பகுதிகளில் பேசப்படுகின்றது. இம்மொழி பேசும் பகுதியின் மேற்கில் பஸ்தர் **(Bastar)** பகுதியும், கிழக்கில் கோறாபுட் **(Koraput)** பகுதியும், வடக்கில் ஜகதல்பூர் **(Jagdalpur)** பகுதியும், தெற்கில் ஜெய்ப்பூரும் **(Jaypore)** அமைந்திருக்கின்றன. 1961-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணிப்பின்படி 19,847 பேர் இம்மொழியினைப் பேசி வருவதாகத் தெரிகின்றது. பேராசிரியர் கிரியர்சனின் மொழி ஆய்வு நூல் இரண்டு பக்க அளவில் இம்மொழிபற்றி மிகச் சுருக்கமாகப் பேசுகின்றது. இம் மொழியைத் தவறுதலாகக் கோண்டி மொழியின் வட்டார வழக்கு என்று குறித்து விட்டனர். 1953 -ஆவது ஆண்டில் பேராசிரியர்கள் பரோவும், பட்டாச்சாரியாவும் இதனைத் தனிமொழியென முதன் முதலில் நிறுவிச் சென்றனர். மேலும் இவர்கள் இம்மொழியில் நான்கு விதமான வட்டார வழக்குகள் இருப்பதாகவும் காட்டிச் செல்கின்றனர்.

கடபா

ஒரிசாவிலும் மத்தியப்பிரதேசத்தின் சில பகுதிகளிலும் இம்மொழி பேசப்படுகின்றது கடபா ஒல்லாரி ,கடபா சில்லூர் ஆகிய இரண்டையும் ஒரே மொழியாகச் சிலர் கொள்கின்றனர். ஆனால் பேராசிரியர்கள் பரோ, பட்டாச்சாரியாஆகியோர் இவற்றைத் தனிக்கிளைகள் என்று கருதுகின்றனர். கடபா ஒல்லாரி பற்றி இவ்விரு அறிஞர்களும் ஆராய்ந்து தம் ஆய்வை 1957-இல் வெளியிட்டுள்ளனர். கடபா சில்லூர் பற்றிப் பேராசிரியர்கள் பி.எச்.கிருட்டிணமூர்த்தியும், பட்டாச்சாரியாவும் ஆய்ந்துள்ளனர். சிலர் இம்மொழியைத் தவறாகப் 'போயா' **(POYA)** என்றழைத்ததாகத் தெரிகின்றது.

பெங்கோ, மண்டா

பெங்கோ மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1300 எனத் தெரிகின்றது. இம்மொழி மிக அண்மையில் பேராசிரியர் பரோவால் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தனி மொழி என்று நிறுவப்பட்டது. மண்டா மொழி பற்றிய எந்த ஆராய்ச்சியும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. எனினும் பேராசிரியர்கள் பரோவும், பட்டாச்சாரியாவும் இம்மொழி பற்றிய பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

வட திராவிட மொழிகள்



பிராகுயி, மால்டோ, குருக் ஆகிய மூன்று மொழிகளும் வட திராவிட மொழிப்பிரிவில் அடங்கும். தற்போது ஆந்திரப் பகுதிகளில் வழங்கும் கோயா என்ற மொழியைத் தனிமொழி என்று கண்டு அதனையும் வட திராவிட மொழியோடு இணைத்துள்ளனர். எனினும் சிலர் கோயா மொழியைக் கோண்டி மொழியின் வட்டார வழக்காகவே' கருதுகின்றனர்.

வட திராவிட மொழியின் சிறப்பியல்புகள்

1. மூலத் திராவிட ஒலியான 'க'கரம் மொழி முதலில் இ,ஈ தவிர்ந்த முன்னுயிர்களின் முன்னர் வரும்போது வட திராவிட மொழிகளில் அது

'ஹ'கர ஒலியாக (X) மாறி விடுகின்றது. இம்மாற்றத்தை உரசொலியாதல் (Fricativisation) என்பர்.

எ.கா.	தமிழ்	-	Kan
	மால்டோ	-	Xuanu
	பிராகுயி	-	Xan
	குருக்	-	Xann

2. மொழி முதலில் இடம் பெறும் மூலத் திராவிட ஒலியான 'வ' (*v) இம்மொழிகளில் 'B' ஒலியாக மாறும்.

எ.கா.	தமிழ்	-	Vay
	குருக்	-	Bai
	பிராகுயி	-	Ba

3. மொழி முதலில் வரும் 'ச'கர ஒலி உ,எ,ஊ,ஏ ஆகிய உயிர்களின் முன்னர் இம்மொழிகளில் 'க'கர ஒலியாக மாறுகின்றது.

எ.கா.	தமிழ்	-	சுடு
	குருக்	-	குடு
	மால்டோ	-	குடு

4. குருக், மால்டோ மொழிகளில் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை மூவிடப் பெயர்களின் வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் ஆகியவை நான்காம் வேற்றுமை வடிவங்களாகவே உள்ளன.

5. இம்மொழிகளில் முறையே இறந்தகால இடைநிலையாக -க்-கும் (*_K_) எதிர்கால இடைநிலையாக -ஒவும் (*-O-) உள்ளன.

வட திராவிட மொழிகளுள் பிராகுயி முதலில் பிரிந்திருக்க வேண்டுமென்றும், குருக், மால்டோ ஆகிய இரண்டும் நெடுங்காலம் இணைந்துநின்று பின்னர்க் காலப்போக்கில் தனி மொழிகளாகப் பிரிந்திருக்க வேண்டுமென்றும் தெரிகிறது.

1961-ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி வட திராவிட மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. குருக் - 11.4 இலட்சம்
2. மால்டோ - 90 ஆயிரம்
3. பிராகுயி - 3 இலட்சம்

குருக்

இம்மொழியை டாக்டர் கால்டுவெல் 'ஒராவோன்' என்று குறிப்பிடுகின்றார். இம்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 11.4 இலட்சமாக உள்ளது. இவர்கள் பீகார், அசாம், வங்காளம்,

மத்தியப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் பரந்து காணப்படுகின்றனர். பேராசிரியர் கொலோனல டால்டன் (Colonel Dalton) இம்மக்களைப் பற்றிய குறிப்புகளை 'வங்காள மக்களின் வரலாறு' (Ethnology of Bengal) என்ற நூலில் தருகின்றார் பட்சச் என்னும் பாதிரியார் (Rev. F. Batsch) இம்மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளார். இம்மக்கள் கொங்கணத்திலிருந்து வந்ததாகவும், பாடலிபுர மலைகளில் வாழ்ந்ததாகவும் கூறிக் கொள்கின்றனர். இம்மக்களுக்கும் மால்டோ மொழி பேசும் மக்களுக்கு மிடையே மிகுந்த தொடர்புள்ளதாக டாக்டர் கால்டுவெல் கூறிச் செல்கின்றார். இம்மொழிக்குரிய அகராதி ஒன்றினையும், இலக்கணநூல் ஒன்றினையும் 1924-ஆம் ஆண்டில் பேராசிரியர் ஏ.கிரிக்நாட் (A.Grignard) என்பவர் தயாரித்து வெளியிட்டுள்ளார். மேலும் ஃபென்ட்கன் (Fend-Hahn) என்பவரும், சி.பி. லெசஸ் (C.B.Leses) என்பவரும் இம்மொழிக்குரிய அகராதியைத் தயாரித்துள்ளனர்.

மால்டோ

இம்மொழியை ஏறத்தாழ 90 ஆயிரம் மக்கள் பேசுகின்றனர். இவர்கள் பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர் இதன் சொற்கள் பலவற்றைப் பேராசிரியர் பி.எச். ஹாட்ஜன் (B.H. Hodgson), கேம்பல் (Sir, George Campell) முதலியோர் தொகுத்துள்ளனர். இம்மொழி ஆய்விற்கு எர்னஸ்ட் ட்ரோயெஸ் (Ernest Droese) என்பவர் 1884-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டுள்ள 'மால்டோ மொழி அறிமுகம்' (Introduction to the Malto Language) என்ற நூல் பெரிதும் துணை செய்கின்றது.

இம்மொழியைப் பேசும் மக்கள் தங்களை 'மாலர்' (மனிதர்கள்) என்று அழைக்கின்றனர். இம்மொழியை ஆய்ந்த கிரியர்சன், மாலர் என்னும் சொல் மலை என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது என்றும், மாலர் என்பது மலை மனிதர்கள் என்னும் பொருளுடையது என்றும் குறிப்பிடுகின்றார். இம்மொழிக்கு இலக்கிய வளம் கிடையாது. எனினும் கிறித்துவத் தொண்டர்கள் பலர் இம்மொழியில் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

இம்மொழியின் உயிரொலிகளைப் பொறுத்தவரையில் குறில் நெடில் வேறுபாடு பொருள் மாற்றத்திற்கு அடிப்படைக் கருவியாக அமைகின்றது. உயிரொலிகள் சொற்களில் எல்லாவிடங்களிலும் இடம்பெறுகின்றன. எனினும் நெடில் உயிரொலிகள் மொழியின் இறுதியில் இடம்பெறுவது கிடையாது.

தடையொலிகள் (Stops), உரசொலிகள் (Fricatives), மூக்கொலிகள் (Nasals), வருடொலிகள் (Trills), பிரிவளி ஒலிகள் (Laterals), ஆடொலிகள் (Flaps) இடை உயிர்கள் (Semi-Vowels) என

இம்மொழியின் மெய்யொலிகள் ஏழாகக் கூறுபடுத்தப்படுகின்றன. பொதுவாக இம்மொழியில் உயிர்ப்பொலிகள் (Aspirated stops) இடம் பெறவில்லை.

பிராகுயி

பலுச்சிஸ்தான் பகுதிகளில் பேசப்படும் பிராகுயி மொழியினை டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்டுச் சென்ற போதிலும் அதைத் திராவிட மொழிக்குடும்பத்தில் இணைத்து விரிவாக ஆராயவில்லை. டென்னிஸ் டி.எஸ். பிரே (Denys De Saumarez Bray) என்பவர் பிராகுயி மொழியைத் திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழி என்று நிறுவினார். பேராசிரியர் எமனோ 1962-ஆம் ஆண்டில் பிரர்குயி மொழி வட திராவிட உட்பிரிவைச் சார்ந்தது என்று தெளிவாக விளக்கினார். மூலத் திராவிட மொழியிலிருந்து முதல் நிலையில் பிரிந்த மொழி பிராகுயி மொழியாகத்தான் இருக்கவேண்டும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது திராவிட மக்களும் பிராகுயி மக்களும் ஒரே இனத்தவர் என்று கொள்வதற்கு ஏற்புடைய சான்றுகள் இல்லை. எனினும், திராவிட மொழியைப் பேசுவோரின் கலப்பு அவர்களிடையே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று இராமச்சந்திர தீட்சிதர் கருதுகின்றார். இம்மொழி பேசும் மக்கள் பாகிஸ்தானிலுள்ள கலத் (Kalat), ஹயர்பூர் (Hairpur) மாவட்டங்களிலும், ஈரான், ஆபகானிஸ்தான் பகுதிகளிலும பரந்து காணப்படுகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகளிலும் பலுச்சி என்னும் மொழியே பெருவழக்கிலுள்ளது. பிராகுயி மொழி திராவிட மொழியாகக் கருதப்பட்டபோதிலும் பாரசீக மொழியோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஏறத்தாழ மூன்று இலட்சம் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். சிலர் இம்மொழி பேசுவோரின் எண்ணிக்கை ஏறத்தாழ ஐந்து இலட்சம் என்று குறிப்பிடுகின்றனர். இம்மொழி பற்றி ஆய்ந்து பேராசிரியர் எமனோ பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

எருகலா என்ற மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தின் மற்றொரு கிளைமொழியாகக் கருதப்படுகின்றது. கோயா மொழியின் இலக்கண அமைப்பு தொடர்பாகவும் பல்வேறு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தேவநேயப் பாவாணர் எழுதிய 'திராவிடத் தாய்' எனும் நூலிலும், 'The Primary Classical Language of the world' எனும் நூலிலும் தமிழுக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் இடையே உள்ள உறவு குறித்த செய்திகளை விரிவாகக் காணலாம்.

இயல் இரண்டு

தமிழ்

இயல் இரண்டு

தமிழ்

தமிழ் மொழி வரலாற்றில் 'தமிழ்' என்பதற்குத் தோன்று தொட்டு இன்று வரை வடிவம் பற்றியும் பொருள் பற்றியும் பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன.

தொல்காப்பியம்

தமிழின் தொன்மை இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் 'தமிழ்' என்னும் சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது.

''தமிழென் கிளவியும் அதனோ ரற்றே'' (தொல், எழுத். 386)

இங்குத் தமிழ் என்னும் ழகர ஈற்றுச் சொல் ஏனைய ழகர ஈற்றுச் சொற்களைப் போன்று அக்குச் சாரியை ஏற்று வரும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இந்நூற்பாவழித் தமிழ் என்னுஞ் சொற் பொருள் பற்றியோ அடிச்சொல் பற்றியோ அறிவதற்கில்லை.

காதல்

பழந்தமிழ் இலக்கியமாகிய பத்துப்பாட்டில் ஒன்றான குறிஞ்சிப் பாட்டின் குறிப்புரையில் இடம் பெற்றுள்ள ''இது ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடியது'' என்ற குறிப்புவழித் தமிழ் என்பதற்குக் காதல் எனப் பொருள் இருப்பதை அறியமுடிகிறது.பரிபாடல் ஒன்பதாம் பாடலிலும்

''தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்றுப் பயன்'' (பரி. 9-25)

(பொருள் இலக்கணத்தை உடைய குளிர்ந்த தமிழை)

தமிழ் என்பதற்குக் காதல் என்ற பொருள் இருப்பதை அறிய முடிகிறது.

செந்தமிழ் (Refined Tamil)

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில்

'செந்தமிழ் நிலத்து' (தொல், சொல். 398)

என்ற தொடர் காணப்படுகிறது. இங்குச் செந்தமிழ் என்பது உயர்தமிழ் எனப் பொருள் தருகிறது.

மேலும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் ''செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்'' (தொல், சொல். 400) என்ற தொடர் காணப்படுகிறது. இங்கும் மேற்கூறிய பொருளே கிடைக்கிறது.

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் ''தமிழ் கூறும் நல்லுலகம்'' என்ற தொடர் காணப்படுகிறது. இங்குத் தமிழ் மொழி பேசப்படும் நல்ல உலகம் என்ற செய்தி கிடைக்கிறது. தமிழ் என்பதன் பொருள் தெரியவில்லை.

சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்களில் சிறுபாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு, பரிபாடல் ஆகியவற்றில் 'தமிழ்' என்னுஞ் சொல்லாட்சி பல இடங்களில் பயின்று வந்துள்ளது.

சங்க இலக்கியங்களில் தமிழ் என்பதற்கு மொழி **(Language)** நாடு, **(Country),** மக்கள் **(People)** என்ற பொருள்கள் இருப்பதை அறிய முடிகிறது.

மொழி

1. ''கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே'' (சிறுபாண், 65-67)
(தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரையும் வறிதே)

2. 'தமிழ் கெழு கூடற் றண்கோல் வேந்தே'' (புறம். 58)
(தமிழ் பொருந்திய மதுரையின் குளிர்ந்த செங்கோலையுடைய வேந்தன்)

3. ''அது உஞ் சாலும் நற்றமிழ் முழுதறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்'' (புறம். 50)
(நல்ல தமிழ் முழுதும் அறிந்தமைக்கு)

4. ''தமிழ் வையைத் தண்ணம் புனல்'' (பரி. 6.60)
(தமிழையுடைய வையையாற்றின் கண் வந்த குளிர்ந்த அழகிய புதுநீர்)

'தமிழ்' எனும் சொல் இங்கெல்லாம் மொழி என்னும் பொருளில் பயின்று வந்துள்ளது.

நாடு

1. ''தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து '' (புறம். 51)
(குளிர்ந்த தமிழ்நாடு மூவேந்தர்க்கும் பொதுவென்று கூறப் பொறானாய்)

2. *''மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்''* (புறம், 35)
(குளிர்ந்த தமிழ் நாட்டிற்கு உரியவராகிய)

3. *''வையக வரைப்பிற் தமிழகங் கேட்ப''* (புறம், 168)
(உலகத்து எல்லையுள் தமிழ்நாடு கேட்க)

4. *''தண்டமிழ் வரைப்பகங் கொண்டியாகப்''* (புறம், 198)
(குளிர்ந்த தமிழ் நாட்டெல்லை முழுதும்)

5. *''நோயிலராக நங்காதலர் வாய்வாள்*
தமிழகப் படுத்த இமிழிசை முரசின்'' (அகம். 227)
(தமிழ்நாடு முழுதினையும் அகப்படுத்தி ஒலிக்கும் புகழமைந்த முரசினையும்)

'தமிழ்' எனும் சொல் இங்கெல்லாம் நாடு என்னும் பொருளில் பயின்று வந்துள்ளது.

மக்கள்

1. *''தமிழ் தலை மயங்கிய தலையாலங் கானத்து''* (புறம். 19)
(தமிழ்ப்படை கைகலந்த தலையாலங்கானத்துக்கண்)

2. *''கொண்டி மிகைபடத் தண்தமிழ் செறித்துக்*
குன்றுநிலை தளர்க்கும் உருமிற் சீறி'' (பதிற். 63)
(தண் தமிழ் மறவர்களாகிய படையினைச் செலுத்திச் சென்று)

'தமிழ்' எனும் சொல் இங்கெல்லாம் மக்கள் (போர் வீரர்) என்னும் பொருளில் பயின்று வந்துள்ளது.

சிலப்பதிகாரம்

பழைமையான காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரத்திலும் முற்கூறியவாறே மொழி, நாடு, மக்கள் என்ற பொருள்களை உணர்த்துமாறு தமிழ் என்னும் வடிவம் பல இடங்களிலும் பயின்று வந்துள்ளது.

மொழி

1. *''வண்டமிழ் மறையோர்க்கு வானுறை கொடுத்த''* (*சிலப்*. 23-63)
''வளவிய தமிழுணர்ந்த அந்தணனுக்கு''
(துறக்கத்து உறைதலைத் தந்த)

2. *''தண்டமிழாசான் சாத்தனி ∴துரைக்கும்''* (*சிலப்*. 25-66)
(தமிழ் ஆசிரியனாகிய சாத்தன்)

இங்கெல்லாம் தமிழ் என்பது மொழி என்னும் பொருளில் பயின்று வந்துள்ளது.

நாடு

1. ''இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய'' (சிலப். 25-165)
   (முழங்கும் கடலை வேலியாகவுடைய இந்நிலம் முழுவதையும் தமிழ் நாடாக்க விரும்பி)
2. ''தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி'' (சிலப். 25-171)
   (தென்திசைக் கண்ணதாகிய வளமிக்கத் தமிழ்நாட்டு வில்லுங் கெண்டையும் புலியுமென்றும்)
3. ''இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறிய'' (சிலப். 3-37)
   (தமிழ் நாட்டினர் அறிய)
4. ''தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டு'' (சிலப். 8-2)

இங்கெல்லாம் தமிழ் என்பது நாடு என்னும் பொருளில் பயின்று வந்துள்ளது.

அரசன்/படைவீரர்

1. ''வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம்
   தென்றமி ழாற்றல் காண்குதும் யாமெனக்'' (சிலப். 26-185)
   (வடநாட்டு அரசரனைவரும் தென்றமிழின் (அரசரின்) ஆற்றலையாம் காண்போம் என்று)
2. ''செறிகழல் வேந்தன் தென்றமி ழாற்றல்
   அறியாது மலைந்த ஆரிய மன்னரை'' (சிலப். 27-5)
3. ''தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரின்'' (சிலப். 28-153)
   (தமிழ் நாட்டு வேந்தரை)
4. ''வடவாரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்'' (சிலப். 25-158)
   (தமிழ்ப்படை கைகலந்த செருக்களத்தில்)

இங்கெல்லாம் தமிழ் என்னும் சொல் அரசர்/படைவீரர் என்னும் பொருள்களில் பயின்று வந்துள்ளது.

மூவகைத் தமிழ்

சிலப்பதிகாரத்தில்
'ஆடல் பாடல் இசையே தமிழே' (சிலப். 3-45)

என்ற வரியிலிருந்து மூவகைத் தமிழ் பற்றிய செய்தியினையும் அறிய முடிகிறது. மேலும் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் உரையில் 'ஓருந்தமி ழொருமூன்று முலகின்புற வகுத்து' என்பதின் வழியும் மூவகைத் தமிழ் பற்றித் தெரிய முடிகிறது.

இனிமை

சீவகசிந்தாமணி

சிந்தாமணிக் காப்பியத்தில்

''தமிழ் தழீஇய சாயலவர் தங்குமலர்த் தூநீர்
உமிழ் கரகம் ஏந்த வுரவோனமர்ந்து பூசி'' (*சிந்தாமணி. 2026*)

இங்குத் தமிழ் தழீஇய சாயலவர் என்பதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் 'இனிமை தழுவிய சாயலையுடையவள்' என்று பொருள் கூறியுள்ளார் தமிழ் மொழி வரலாற்றில் தமிழ் என்பதற்கு இனிமை என்னும் பொருள் சீவகசிந்தாமணி காலத்திலேயே தோன்றிவிட்டது என அறிய முடிகிறது.

இராமாயணம்

இராமாயணக் காப்பியத்தில்

''வண்டு தமிழ்ப் பாட்டிசைக்குந் தாமரையே'' (*இனிய பாட்டு*)

இங்குத் தமிழ் என்பது இனிமை என்னும் பொருளில் வந்துள்ளது.

பாரதியார்

பாரதியார், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்குங் காணோம்'' எனக் குறிப்பிடுவதிலிருந்து அவரும் தமிழுக்கு இனிமை எனப் பொருள் கொண்டுள்ளார் என உணர முடிகிறது.

பாரதிதாசன்

பாரதிதாசன்,

''தமிழுக்கும் அமுதென்று பேர்''

எனக் குறிப்பிடுவதிலிருந்து தமிழை அமுது என்று சுட்டியுள்ளார். அமுது என்பதும் இனிமை என்ற பொருளையே தருகிறது.

தமிழ் என்னும் சொல் பற்றியும் பொருள் பற்றியும் தமிழ் நாட்டு அறிஞர்களும், பிற நாட்டு அறிஞர்களும் பல்வேறு செய்திகளை முன் வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டு அறிஞர்கள்

சபாபதி நாவலர்

''வீரசோழியப் பதிப்புரைகாரர் தமிழ்ச்சொற்கு 'இதழ், இமிழ், உமிழ், கமழ், கவிழ், குமிழ், சிமிழ், என ழகரப் பேறு பெற்ற பதங்கள் போலத் தமிழ் என்னுஞ் சொல் தனிமைப் பொருள் குறித்த 'தமி' யென்னும் வினையடியாற் பிறந்து வினை முதற் பொருளுணர்த்திய விகுதி குன்றி ழகரம் விரிந்து தனக்கிணையில்லாப் பாடையென்னும் பொருள் பயக்கும்''

''தமிழுக்குத் தென்மொழி யென்றும் பெயர் உண்டு''.

''பிரயோக விவேக நூலார் திரமிளமென்னும் ஆரியச் சொல் தமிழெனத் திரிந்தது'' என்பன போன்ற செய்திகள் திராவிடப் பிரகாசிகை என்னும் நூலில் (ப.14) காணப்படுகின்றன.

ரா. இராகவையங்கார் (1941)

இனிமை என்னும் பொருள்படும் தமிழ் என்னுஞ் சொல்லே நம் நாட்டு மொழிகளுள், தொன்மையும் முதன்மையும் பெற்ற இத்தென்னாட்டுத் தாய் மொழிக்குப் பெயராய்ப் பண்டைக் காலந் தொடங்கி வழங்கி வந்ததென்பதற்கு அகச் சான்றுகளும் புறச் சான்றுகளும் உள்ளன.

தமிழ் என்னுஞ் சொல் இனிமை என்னும் பொருளைக் குறிக்க வந்த இலக்கியச் சான்றுகள் பலவற்றை இராகவையங்கார் 'தமிழ் வரலாறு'' என்னும் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் வடமொழியாளர் தமிழ் என்னும் பெயரையே தம் மொழிக்கு இணங்கிய இன்னோசை கருதியும் தம்மெழுத்திற்கியைவது கொண்டும் 'த்ரமிள' என ரேபல் (ரகாரம்) கொடுத்து முதற்கண் வழங்கினரென்றும் நாளடைவில் அதுவே திரவிட, திராவிட என மாறிற்றென்றும் அங்ஙனம் மாறிய சொல்லைத் தம் மொழியாகவே நினைந்து ''த்ரு'' என்பதனடியாகப் பிறந்ததென்று அதற்கு இனியதல்லாததோர் பொருளை ஏற்றிவிட்டனரென்றும் துணிதலே தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆகத் தமிழ் என்பதற்கு இனிமை என்பதே பொருள். தமிழ் என்பதே த்ரமிள > திரவிட > திராவிட எனத் திரிந்தது என்பது ரா. இராகவையங்கார் கருத்தாகும். (தமிழ் வரலாறு பக்.4-13)

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

வே.வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் 'தென்மொழிகள்' என்னும் நூலில் 'தென்னாட்டில் வழங்கும் மொழிகளுள் இலக்கண இலக்கிய வளம் பெற்றவை தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம்

ஆகும். இம்மொழிகளையும் இவற்றோடு தொடர்புடைய துளு, குயி, கோண்டு முதலிய மொழிகளையும், வடநாட்டில் ஆங்காங்கு ஒரோவழி வழங்கும் 'ஒராஒன்' முதலிய மொழிகளையும் சேர்த்து அம்மொழிகள் பன்னிரண்டிற்கும் பொதுவாகத் திராவிடம் என்னும் பெயரிட்டு வழங்கியவர் டாக்டர் கால்டுவெல்' என்பார். வடமொழிக் காவியங்களில் 'த்ராவிடம்' என்பது தமிழ் மொழியை மட்டுமே குறிப்பதாய் உளது. ஒரு காலத்தில் ஆந்திரம், கன்னடம், திராவிடம் (தமிழ்), கூர்ஜரம், மகாராட்டிரம் ஆகிய இத்தேசங்களில் வாழ்ந்த மக்களைப் 'பஞ்சத்ராவிடர்' என்று வழங்கி வந்தனராயினும் கூர்ஜரமும் மகாராட்டிரமும் திராவிட மொழியினத்தில் உட்பட மாட்டா என்று பின்னர் அவற்றை நீக்கியுள்ளனர்.

'த்ராவிடம் என்னுஞ் சொல்லின் பழைய வடிவம் 'த்ரமிடம்' என்பது. 'த்ரமிடம்' என்னுஞ் சொல்லே வடமொழி மகாபாரதத்தில் சில இடங்களில் வழங்கப்பட்டுள்ளது. ஸ்ரீமத் ராமாநுஜ பாஷ்ய வியாக்கியானத்தில் 'த்ரமிடர்' என்று ஓர் ஆசாரியர் குறிக்கப்பட்டுள்ளார்.

வேதாந்தாசார்யர் திருவாய்மொழியின் பொருளை அமைத்துத் தாம் செய்த வடமொழி நூலுக்குத் 'த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி' என்று பெயரிட்டிருக்கின்றார். இவற்றால் 'த்ரமிட' என்னுஞ் சொல்லே பரத காலம் முதற்கொண்டு வேதாந்தாசார்யர் காலம் வரை வழங்கி வந்துளதென்று அறியலாம். 'த்ரமிடம்' என்பதன் தொல் வடிவம் தமிழ் என்பதே. தமிழ் என்னுஞ் சொல் தமிழ், தமிழம், த்ரமிளம், த்ரமிடம் என்று திரிந்துளது என்பது மொழி நூல் ஆராய்ச்சியாளருடைய கருத்து' என்று விளக்கம் தந்துள்ளார். ('தென் மொழிகள்' பக்கம் XIV, XV)

பிறநாட்டு அறிஞர்கள்

கால்டுவெல்

தமிழ் என்பதிலுள்ள ழகர வொற்றை ளகர வொற்றாகத் திரித்துத் 'தமிள்' என்று ஒரு சிலர் வழங்குவர். ஐரோப்பியர் முதலில் அதைத் 'தமுள்' என்றே புகன்று வந்தனர். பிரெஞ்சுக்காரர் இவ்வாறாகவே எழுதி வைத்தனர். ஆனால் அவர்களுக்கு முன்போந்த போர்த்துக்கீசியர்கள் தமுள் என்றோ தமிள் என்றோ கூறாமல் 'மலபார்' என்றே தமிழ் மொழியைக் குறித்து வந்தனர்.

தமிழ் என்னுஞ் சொல்லுக்கு நேர் வடமொழிச் சொல் திராவிடம் என்பதாம். இச்சொல் தமிழர் அல்லது திராவிடர் வாழ்ந்த நாட்டையும் அவர்கள் பேசிய மொழியையும் ஒருங்கே குறிப்பதாகும். தமிழ் என்ற சொல்லின் ஒலி வடிவிற்கும் திராவிடம் என்ற சொல்லின் ஒலி வடிவிற்குமிடையே எத்துணையோ வேறுபாடு காணப்படினும் இரண்டும் ஒரே வேரிலிருந்தே பிறந்ததாகக் கருதுவதற்குமிடமுள்ளது. இக்கருத்து

ஒப்புக் கொள்ளப்படின் தமிழ் என்ற சொல்லே பின்னர்த் திராவிடம் எனத் திரிபுற்றது என்றுகூறுவதைக் காட்டிலும் திராவிடம் என்ற சொல்தான் தமிழ் என்று பின்னர்த் திரிபுற்றது என்று கூறுதல் எளிதும் நேரிதுமாம்.

திராவிடம் என்ற சொல் திரமிடம் எனப் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளது. திராவிடம் என்பது திரவிடம் எனக் குறுகி திரவிடம், திரமிடம் என்றாயிற்று என முடிபு செய்தல் ஒருவாறு பொருந்தும். இந்த இரு சொற்களும் தமிழில் வழங்குகின்றன எனினும் திரமிடம் என்ற சொல்லே தமிழ் நிகண்டுகளில் முதலிடம் பெறுகிறது. இந்தத் திரமிடம் என்பதே திரமிளம் என்று மாறியதாகத் தாரநாதரின் நூல் குறிப்பிடுகிறது. மலையாள மொழிப் புராணங்களில் இவ்வுருவமே காணப்படுகின்றது என்பது குண்டர்ட் கருத்து. பாலி மொழியில் திரமிளம் என்பது தமிளோ என வழங்கப்பட்டுள்ளது. இத் தமிளோ என்பதே தமிழ் என்றாயிற்று. இதுகாறுங் கூறியவற்றால் திராவிடம் என்பதுதான் தமிழ் எனத் திரிந்தது என்பது ஒருவாறு விளங்கும்.

(திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம், பக். 11-15)

கமில் சுவலபில்

திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதியில்,

தமிழ்	:	**தமிழ் 'தமிழ்மொழி, தமிழ் மக்கள், தமிழ்நாடு**
மலையாளம்	:	தமிழ் 'தமிழ்மொழி'
தோடா	:	தொபிழ்
கன்னடம்	:	தமிழா, தம்பழா
துளு	:	தமிழு, தம்புழு

என்ற மேற்கூறிய வடிவங்கள் தென்திராவிட மொழிகளில் மட்டும் காணப்படுகின்றன. மேற் கூறப்பட்ட வடிவங்களுள் மூலத்திராவிட மொழி வடிவமாகத் தமிழ் என்பதை நாம் கொள்ளலாம். தமிழ் என்பதை மூலத்திராவிட வடிவமாகக் கொண்டால் அது பல்வகைப் பொருளைத் தருவதாய் அமைந்து விளங்குகிறது. இதர வடிவங்களைப் பழந்தமிழ் - முன்னைத்தமிழ் வடிவிலிருந்து கடன் வாங்கியதாகவோ அல்லது முன்னைத் தமிழிலிருந்து / மூலத் தென் திராவிடச் சொல்லிலிருந்து ஏற்பட்ட புத்தாக்கமாகவோ கருதுதல் வேண்டும்.

அ) தமிழ்ப் பேரகராதியின்படித் தமிழ் என்பது 'தமி' என்பதனோடு தொடர்புடையது. தமி - 'தனிமை', 'இணையில்லாதது' எனப் பொருள் உணர்த்தும். தமிழ் என்பதை மேற்கூறிய பொருள்களின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டாலும் தமிழ் என்ற சொல்லின் ஆக்கத்தை உருபொலியன் **(Morphophonemically)** நிலையிலோ கட்டமைப்பு **(structurally)** நிலையிலோ ஏற்றுக் கொள்வதற்கு இயலாததாய் உள்ளது.

தமிழில் ழ் என்பதை ஈரசை அடிச்சொல்லாகிய 'தமி' என்பதனோடு ஒட்டப்பட்ட ஆக்க உருபனாகக் கொள்வதற்குச் சான்றுகள் இல்லை. மற்றும் ழ் என்பது திராவிட மொழிகளில் ஆக்க உருபனாக இருப்பதாகத் தெரியவில்லை.

ஆ) திராவிட மொழிகளின் இயல்பான சொல்லாக்க முறைப்படி நோக்கினால் தமிழ் என்ற சொல்லாக்கத்தை வேர் -CVC ஆக்க ஒட்டு VC என்று கொள்ள வேண்டும்.

1. தமிழ் என்பதைத் தம்-இழ் என்னும் இரண்டு வேர் உருபன்களாகக் கொள்ளலாம். அவை இரண்டும் தனித் தனிப் பொருள் உடையன. எனவே தம்-இழ் என்னும் சொற்களுக்குக் கூட்டுப்பொருள் கிடைக்கும். அதாவது அவர்கள் - இனிமையான ஒலி அல்லது நம் சொந்தமான - இனிமையான ஒலி. இவ்வழிமுறை ச.வே. சுப்பிரமணியன் என்பவரால் தரப்பட்டது.

2. தமிழ் என்பதைத் தம்-வேர் உருபன் (தனிப்பொருளுடையது) இழ்-ஆக்க உருபன் என்பவை இணைந்த வடிவம் எனக் கொள்ளல் வேண்டும் என்பது கமில் சுவலபில் கருத்து.

முதலாவது கூறப்பட்ட தமிழ் என்பது இரண்டு வேர்ச்சொற்களால் ஆனது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. இரண்டு வேர்ச் சொற்களால் ஆன கூட்டுச் சொல் திராவிட மொழிகளில் அருகியே காணப்படுகின்றன. அருகிய நிலையில் காணப்படக்கூடிய கூட்டுச் சொல்லாக அதாவது பதிலிப்பெயர் + தனித்த சொல் என்ற நிலையில் அமைந்து வருவது குறிப்பிடத் தக்க வகையாகும். எனவே அவ்வமைப்பு தெளிவற்ற ஒன்று. மாறாகத் திராவிட மொழிகளில் வேர் உருபன் + ஆக்க உருபன் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய இயல்பான வடிவமாகும். தம் -இழ் என்ற பிரிப்பு வேர் உருபன் + ஆக்க உருபன் என்ற அமைப்புக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

மேலும் தமிழ் என்பதற்கு நாம் 'இனிமையான ஒலி' என்று பொருள் கொள்வதும் பொருத்தமாகவில்லை. உண்மையாகக் கூறப்போனால் தமிழ் என்பது அரவம் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. தமிழர் என்பவர் அரவர் என்று அழைக்கப்பட்டுள்ளனர். திராவிட மொழி வேர்ச்சொல் அகராதி சொல்வரிசை 313இல்

தமிழ்	:	அரவ
தெலுங்கு	:	அரவமு
கன்னடம்	:	அரவ

என இடம்பெற்றுள்ளன.

தமிழில் அரவம் என்பதற்கு இனிமையற்ற ஒலி, ஓசையின்மை, ஊளை, முனகல், குழப்பம், குழப்பமான ஒலி எனப் பொருள்கள் உள்ளன.

அரவம் என்பதற்கு மக்கள் வழக்கில் உள்ள பொருள் தொடர்புடையதாக உள்ளது தமிழின் பெருவழக்கு ஒன்றில் தமிழின் ஒலி 'மண்பானைக்குள் கூழாங்கல்லால் ஏற்படும் கடகடவெனு மொலி' அல்லது மலையருவியில் கூழாங்கல் உருண்டு ஏற்படும் ஒலி' என்று காணப்படுகிறது. இது உண்மையில் பொருத்தமற்ற விளக்கம். ஆனாலும் இது 'அவர்கள் இனிமையான ஒலி' என்பதற்கு முற்றிலும் வேறுபாடானதாய் உள்ளது.

அடுத்து -ழ் என்பதை ஆக்க உருபனாகக் கொள்வதற்குத் தெளிவான சான்று இல்லை. அதே போன்று இழ் என்பதை வேர் உருபனாகக் கொள்வதும் பொருத்தமற்றதாகும். மேலும் இழ் என்பதற்குக் கூறப்படும் பொருளும் தெளிவற்றதாக உள்ளது.

தமிழ் என்னும் வடிவைப் போன்று திராவிட மொழிகளில் மேலும் சில வடிவங்கள் உள்ளன. அவை இழ் என்னும் ஆக்க ஒட்டு ஒட்டப்பட்ட ஓரசைப்பெயர் அல்லது வினை வடிவங்களாக உள்ளன.

(தி.வே.அ. - திராவிட வேர்ச்சொல் அகராதி)

167	அமிழ்	-	மூழ்கு
14	அவிழ்	-	become loose, untied.
268	அவிழ்	-	boiled rice
270	அவிழ்	-	Single grain of boiled rice
466	இமிழ்	-	to sound, hum (இமிழ் - அகம் 22)
2489	இமிழ்	-	to sprout, shoot forth
2542	இமிழ்	-	to restrain, fasten, tie
636	உமிழ்	-	to spit, gaugle, emit, vomit
1335	கவிழ்	-	be capsized, turned bottom upwards
1742	குமிழ்	-	Coomb beak
1743	குமிழ்	-	knob, stud
2106	குமிழ்	-	Conical குமிழி Bubble
2542	சிமிழ்	-	to bind entrap
2923	நெகிழ்	-	become loose, blossom
3200	நெகிழ்	-	be manifest, shine
267	நவிழ்	-	to extinguish
4618	மகிழ்	-	to rejoice, exwel, joy, toddy
4893	முகிழ்	-	to bud, put forth buds, appear
4894	முகிழ்	-	bubble.

மேலே கூறிய பட்டியலில் உள்ள சொற்களில் இழ் என்பது ஆக்க ஒட்டாக அமைந்து வந்துள்ளது என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை. தமிழ் என்பதைத் த-மிழ் எனப் பிரிப்பதற்கும் வாய்ப்பில்லை.

தமிழ் என்பதைத் தம் - ஒரு வேர் உருபன் இழ் என்றும் அதனைத் தொடர்ந்து மொழியில் அதிகமாகப் பயின்று வரும் ஒரு ஆக்க உருபு இணைந்த வடிவம் எனக் கொள்வதே பொருத்தமானது. இழ் என்பது தெளிவற்ற புதைந்த நிலையிலான பொருளை உணர்த்துவதாக உள்ளது. இழ் என்பது பல வேர்ச் சொற்களுடன் இணைந்து சொல்லாக்கம் பெறும்பொழுது ஏற்படும் செய்முறை ஒரு தன்மை மாற்றத்தோடு தொடர்புடையதாய் உள்ளது. அதாவது அவிழ்த்தல், திறத்தல் அல்லது ஓர் ஒலியை வெளிப்படுத்துவதைச் சுட்டும் வினை என்னும் நிலையில் அமைந்துள்ளது.

தம் என்னும் முதல் பகுதி எதனை உணர்த்துகிறது?

இவ்வினாவிற்கு இரண்டு உகந்த விளக்கங்களைக் கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. முதலாவது, தம் - என்பது படர்க்கைப் பன்மை மூவிடப் பெயரின் வேற்றுமை ஏற்கும் வடிவமாகிய தம் என்பதுடன் தொடர்புடையது. பிரதிபலிப்பு வடிவமாகிய (**Reflexive**) தாம் (அவை - அவைதாம்) என்பது அடிச்சொல் அடிப்படையில் தம்-இ 'தனித்த' தனிமை என்பதனோடு தொடர்புடையது. தமிழ் என்பதனுடைய அடிநிலைப் பொருள் 'அவர்கள்' என இருத்தல் வேண்டும். இழ் என்பதைக் கட்டுண்ட ஆக்க உருபாகக் கொள்ளல் வேண்டும். அது சிறிதளவு விரிகிறது, ஒலியுடன் திறக்கிறது என்ற பொருள்களைச் சுட்டுவதாய் உள்ளது. ஆகத் தம் - தான் (**Self**) (அதாவது நாம் தான், நீங்கள் தான், அவர்கள் தான்) எனப் பொருள் தரும்.

தம் - இழ் என்பது ஒருவருடைய ஒலியுடன் திறக்கிறது எனக் குறிப்பிடும்.

திராவிட மொழிகளில் வேர்ச்சொற்களில் இறுதி மெய்களாக அமைந்து வரும் - ம்/வ்/க் என்பனவற்றுள் ஒன்றிற்கு மாற்றாக இன்னொன்று அமைந்து வருவதைக் காண முடிகிறது. மேற்கூறியவற்றுள் க் என்னும் கடையண்ண வல்லின எழுத்தையே பழைமையானதாகக் கொள்ள வேண்டும்.

அமிழ்	<	*	அகிழ்			
இமிழ்	<	*	இவிழ்	<	*	சிகிழ்
உமிழ்	<	*	உவிழ்	<	*	உகிழ்

மேற்கூறிய விளக்கத்தின் அடிப்படையில் தமிழ் < தம் + இழ் < தவ் + இழ் < தக் = இழ் என்று வந்ததாகக் கொள்ளல் வேண்டும். அப்பொழுது தக் - என்பது தமிழிலுள்ள தகு 'பொருத்தமானது' 'தகுதியானது'. 'சிறந்தது', என்பதனோடு தொடர்புடையது. எனவே

மறைபொருளாகத் தமிழ் (தமிழ் மொழி) என்பதற்கு < தகிழ் பொருத்தமான தகுதியான, சிறந்த 'இழ்' என்னும் ஆக்க உருபு தெளிவற்ற பொருளுடைய ஒலி எனக் கொள்ளல் வேண்டும். ஆகத் தமிழ் < தகிழ் என்பது 'சிறந்த செய்முறை' எனப்பொருள் தரும். அதாவது தமிழ் என்பதற்கு முறையான (Proper) (செய்முறையினை உடைய) பேசுதல் (Speaking) எனக் கொள்வது பொருத்தமானதாகும் எனக் கமில் சுவலபில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(Kamil Zvelebil "The Word Tamil" IJDL, 1986.)

கோஸ்கினேன்

தமிழ் என்பதைத் தாமரை என்பதன் துணை கொண்டு விளக்கலாம். தமிழில் உள்ள அமிழ் 'மூழ்கு' (தி.வே.அ. 167) என்னும் வடிவம் அம்/ஆம் (நீர்) என்பதனோடு தொடர்புடையது. தமிழ் என்பது அமிழ் என்பதனோடு ஒத்துள்ளது. தமிழ் என்பது நீர் என்பதனோடு தொடர்புள்ளதாக இருந்திருக்கலாம். மக்கள் பெயர்களும் மொழிகளின் பெயர்களும் பெரிதும் வாழ்கின்ற, வழங்குகின்ற இடங்களிலிருந்து ஆக்கம் பெற்றுள்ளன. திராவிட மொழிகளாகிய கூவி, கூபி, கூயி என்பவை கூ என்பதோடு கூ (< கோ) 'மலை' தொடர்புடையவை எனக் கொள்ளப்படும்.

தமிழில் தம் தட்டம் 'சிறிய பறை' (தி.வே. அ. 3082) என்ற சொல் உள்ளது. இது ஓர் ஒலிக் குறிப்புச் சொல். இச்சொல்லில் முதலாவதாக அமைந்திருப்பது தம் - என்பதாகும். கடலின் அலைகள் பேரொலி எழக் காரணமாயுள்ளன. ஆகத் தமிழ் என்பது 'கடல் சார்ந்த' பகுதி என்பதைச் சுட்டியிருக்கலாம். **(Koskinen, "Tamarai and Tamil" IJDL, 1996.)**

சவுத் வொர்த்

திராவிட மொழிகளுள் பெரும்பாலானவை அவை வழங்கும் நிலத்தின் அல்லது பேசும் மக்களின் பெயர்களிலிருந்து ஆக்கம் பெற்றதாகத் தோன்றுகிறது.

குறும்பா/குருபா	(தி.வே.அ.1844)
கோதா	(தி.வே.அ.1762)
கன்னடா	(தி.வே.அ.1284)
தெலுகு	(தி.வே.அ.3246)
துளு	(தி.வே.அ.3363)

இவை மேற்கூறிய (மொழி) வழங்கும் நாடு/மொழி என்னும் பொருள்களைத் தருகின்றன.

வேறு சில மொழிகள் புவியியல் சார் சொல்லிலிருந்து ஆக்கம் பெற்றவைகளாகத் தோன்றுகின்றன.

கொடகு 'மேற்கு' (தி.வே.அ. 1649)

குடுக் 'மேற்கு'

கோண்டி 'மலை' (வாசி) < தி.வே.அ. 2178)

மலையாளம் (மலை-ஆள்) 'மலைவாசி' (தி.வே.அ. 4742)

பிராகூய் < - ப - ரோக்-இ 'மலைவாசி'.

திராவிட மொழிகளின் பெயர்கள் சில வேறு அடிப்படையிலும் தோற்றம் பெற்றுள்ளன.

தோடா :தோட் 'முக்கிய மனிதன்' (தி.வே.அ.2470)

மால்டோ : ஆண் மனிதன்

இம்மொழிகள் 'மனிதன்' என்னும் பொருளை உணர்த்துகின்றன.

திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதியில் இருளா, பெலாரி, கொரகா, கொலாமி, நாயகி, பர்ஜி, கடபா, பெங்கோ மண்டா போன்ற மொழிகளுக்குப் பொருள் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.

மேற்கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் திராவிட மொழிகள் பலவற்றின் பெயர்கள் வழங்குமிடம் **(Region)** இனக்குழு **(Ethnic Groups)** என்பவைகளிலிருந்து ஆக்கம் பெற்றுள்ளன என்பது தெளிவாகிறது. இது போன்ற ஆக்கம் தென் ஆசியாவின் பிற பகுதிகளிலும் உலகின் பல பகுதிகளிலும் பொதுவாகக் காணப்படுவதாகும். இந்துஸ்தானி பங்களா, சிங்களா, ராஜஸ்தானி, குஜராத்தி, சிந்தி, பஞ்சாபி என்பன தெற்கு ஆசியாவில் காணப்படுபவை, இங்கிலிஸ், டெயுத்ஸ்சு, பிரான்ச்சைஸ், ரஸ்கி, சைமர்வ், மாக்யர், நார்ஸ்க், நிகோன் - கோ (ஜப்பானியன்) நிகோன் - ஜப்பான் என்பன உலகின் பல பகுதிகளில் காணப்படுபவை.

தமிழ்

தமிழைப் பொறுத்தவரை அச்சொல் முதலில் மொழியைக் குறித்தது, பின்னர் அது நிலத்தையும் இனத்தையும் குறித்துள்ளது. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் 'தமிழென் கிளவியும் அதனோரற்றே' என்னும் நூற்பாவில் தமிழ் என்பது ஒரு சொல் நிலையில் மட்டும் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியச் சொல்லதிகாரத் தொடராகிய 'செந்தமிழ் நிலத்து' (உயர் தமிழ் நில எல்லையில்) என்பதில் தமிழ் என்பது தெளிவாக மொழியினைக் குறிக்கிறது.

மேலும் திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதியில் 'தமிழ்' என்பதற்குத் 'தமிழ், மக்கள்', தமிழ்நாடு என்ற பொருள்கள் தரப்பட்டுள்ளன. அதே சமயத்தில் பிற மொழிகளாகிய மலையாளம், தோடா, கன்னடா, துளு என்பவைகளுக்கு 'மொழி' என்ற பொருள் மட்டுமே தரப்பட்டுள்ளது என்பதும் மேற்கூற்றுக்கு அரண் சேர்ப்பதாய் உள்ளது.

செந்தமிழ் 'உயர்தமிழ்' என்ற தொடரில் உள்ள மொழியைச் சுட்டும் தமிழ் என்பது கமில்சுவலபில் அவர்களால் முன்வைக்கப்பட்ட தகு- என்பதிலிருந்து உருவானது என்பதற்கு முரண்படுவதாக உள்ளது.

தகு - பொருத்தமான, தகுதியான, உயர்ந்த, 'தமிழ் என்பது அதுதானே' பொருத்தமான, உயர்ந்த மொழி எனப்பொருள் உணர்த்துவதாக இருந்தால் அதனோடு செந்-என்னும் அடை சேர்க்க வேண்டியதில்லை.

தொல்காப்பியரைப் பொறுத்தவரை, 'தமிழ்' என்ற சொல் (பொருத்தமான, தகுதியான, உயர்ந்த) என்ற பொருள்களைத் தரவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. மேலும் கமில்சுவலபில் குறிப்பிட்டது போலத் தமிழ் என்பது அப்பொருள்களைச் சுட்டினால் சாதாரண மொழிக்கு (Ordinary Speech) வேறுபொருள் தரும் சொல்லை எதிர்பார்க்க வேண்டும். (அதாவது சமற்கிருதம் உயர் மொழி - ப்ராக்ருதம் - பேச்சுமொழி என்பது போல) ஒருவேளை தமிழில் அதுபோன்ற சொல் இருக்கலாம். ஆனால் நான் அது போன்ற சொல்லை அறிந்ததில்லை. சாதாரண மொழியைக் குறிப்பதற்கான சொல் இல்லாதபோது தமிழ் என்பதே உயர்மொழிக்கும் சாதாரண மொழிக்கும் பொதுவாக உள்ளதாக உணர்ந்து கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து உணரும் உண்மை என்னவெனில் தமிழ் என்பதின் ஆக்கம்.

தம் 'Self' தானே (தி.வே.அ. 3196) மிழ் ~ முழ் 'பேசு, சொல், மொழி (தி.வே.அ. 4989) தமிழ் : முழ் - அங்கு 'Roar' மொழி 'பேசு, சொல்'. அதாவது ஒரு கூட்டுச் சொல்: அது உணர்த்தும் பொருள் ஒருவரின் சொந்த மொழி/ சொற்கள், மாறாகத் தம் என்பது பன்மை உணர்த்துவது எனக் கருதினால் 'நம் சொந்த மொழி' என்பது பொருள்.

ஒலியியலின்படி பேச்சு/மொழி என்பதற்கான சொல்லில் பல மொழிகளில் உ/ஒ (U~O) உறழ்வு நிலையில் அமைந்துள்ளன. சில சொற்களில் இ/உ உறழ்வும் உள்ளது.

(எ.டு.)	மலை	:	மிழவு - drum'
	தமிழ்	:	முழவு
	தமிழ்	:	அமிழ் / மூழ்கு

மலை : அமிழ்

கன் : அமுழ் / அகுழ்.

துளு : தம் (ப்) உளு 'தமிழ்'

ஒலியனியல் அடிப்படையிலும் பொருள் தரும் நோக்கிலும்

தம் < மிழ் 'நம்சொந்த மொழி' என்பதையே உண்மையான அடிச்சொல்லாகக் கொள்ளுதல் வேண்டும். (Southworth, IJDL 1977)

இவ்வாறாகத் தமிழ் என்பதற்கு இலக்கியப் படைப்பாளர்களும், மொழி ஆய்வாளர்களும் பல்வேறு செய்திகளை எடுத்தியம்பியுள்ளனர்.

துணை நூல்கள்

இலக்கணம் - இலக்கியம்

1. அகநானூறு
2. கம்பராமாயணம்
3. சிலப்பதிகாரம்
4. சீவக சிந்தாமணி
5. தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்
6. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்.
7. பத்துப்பாட்டு
8. பதிற்றுப்பத்து
9. பரிபாடல்
10. பாரதியார் கவிதைகள்
11. பாரதிதாசன் கவிதைகள்
12. புறநானூறு

ஆராய்ச்சி நூல்கள்

1. இராகவையங்கார் (ரா) தமிழ் வரலாறு
2. திராவிடப்பிரகாசிகை
3. வேங்கடராஜுலு ரெட்டியார், தென்மொழிகள்
4. கால்டுவெல், திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்
5. கமில்சுவலபில், தமிழ்ச்சொல் பற்றிய கட்டுரை, திராவிட மொழியியல் தேசிய இதழ், (IJDL) 1986
6. கோஸ்கினேன் ''தாமரை - தமிழ்'' கட்டுரை, திராவிட மொழியியல் தேசிய இதழ், 1996.
7. சவுத் வொர்த் , தமிழ் பற்றிய கட்டுரை, திராவிட மொழியியல் தேசிய இதழ், 1997.

பெயரெச்சம்

பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் இரண்டு வகையான பெயரெச்சங்களைக் குறிப்பிடுகிறது. அவை செய்த, செய்யும் என்னும் வாய்பாட்டு அமைப்புடையவை.

முற்றுவினை அல்லாத பெயருக்கு எஞ்சி நிற்கும் வினையே பெயரெச்சம் அல்லது பெயரெஞ்சு கிளவி எனக் குறிக்கப்படுகிறது.

செய்த, செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் உயர்திணைப் பெயரின் முன்னரும் அஃறிணைப் பெயரின் முன்னரும் அமைந்து நிற்கும். எனவே பெயரெச்சம் உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டு திணைகளுக்கும் பொதுவானது; ஐந்து பால்களுக்கும் பொதுவானது.

தொல்காப்பியர் செய்யும், செய்த என்னும் பெயரெச்சங்கள் நிலம், பொருள், காலம், கருவி, வினைமுதற் கிளவி, வினை என்னும் ஆறு பொருளுக்கும் ஒத்த உரிமையுடையனவாய் அமைந்து வரும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

''நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே''

(தொ.சொ. 234)

(எ.டு)

செய்யும் :	வாழுமில்	-	நிலம்
	கற்குநூல்	-	பொருள்
	துயிலுங் காலம்	-	காலம்
	வளையுங் கோல்	-	கருவி
	ஓதும் பார்ப்பான்	-	வினை முதல்
	உண்ணும் ஊண்	-	வினை
செய்த :			
	புக்கஇில்	-	நிலம்
	உண்டசோறு	-	பொருள்
	வந்தநாள்		காலம்
	வென்றவேல்	-	கருவி
	ஆடிய கூத்தன்	-	வினை முதல்
	போயின போக்கு	-	வினை

மேற்கூறியன போன்ற சான்றுகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

செய்யும்

'கூர் எயிற்று எகினம் நடுங்கும் நன்னகர்' (நற். 132) - நிலம்

'கதவம் காக்கும் கணையெழு அன்ன' (பதிற். 45) - பொருள்

'காலை யிசைக்கும் பொழுதொடு புலம்பு கொள'(பதிற்.81)
- காலம்

'ஆரமர் கடக்கும் வேலும்'' (புறம்.172) - கருவி

'மாக்கடல் நிவந்து எழுதரும் செஞ் ஞாயிற்று' (புறம். 4)
- வினைமுதல்

'ஓம்பாது ஈயும் ஆற்றல்' (புறம். 22) - வினை

செய்த

'பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்' (குறுந். 13)
- நிலம்

'தச்சன் செய்த சிறுமா வையம்' (குறுந். 61) - பொருள்

'கொங்கர்க் குடகடல் ஓட்டிய ஞான்றை' (புறம். 130) - காலம்

'வேந்துடன் றெறிந்த வேலே' (புறம் 308) - கருவி

'விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே' (குறுந். 210)
- வினை முதல்

தொல்காப்பியர் செய்யும் என்னும் அமைப்புடைய வினை, வினை முற்றாக அமைந்து வரும்போது பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மைப் பெயர்களுடன் (எழுவாயாக) பொருந்தி வருவதில்லை என்பார்.

''பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளா' (தொ. சொ. 227)

எனினும் மேற்கூறியதற்கு மாறாகச் 'செய்யும்' என்னும் அமைப்புடைய பெயரெச்சம் முன்னர் விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகிய இடத்துச் சொறகளோடு பொருந்தி வரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

''அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே'' (தொ. சொ. 235)

(எ.டு)

தன்மை

'தம்மொடும் அஞ்சும் நம்மிவண் ஒழிய' (நற். 73)

படர்க்கை

'ஏண்தேர் செய்யும் தச்சன்' (புறம். 37)

'வண்டுஅரற்றும் கூந்தலாள்' (கலி. 1)

'தெற்றிப் பாவை திணிமணல் அயரும் மென்றோள் மகளிர்' (புறம். 283)

'இருள்தூங்கு விசும்பின் அதிரும் ஏறொடு' (நற். 261)

'நீ செய்யும் கொடுமைகள்' (கலி. 77)

சங்க இலக்கியங்களில் 'செய்யும்' அமைப்புடைய பெயரெச்சம் குறிப்பு வினைகளின் முன்னர் அமைந்து வருவதையும் காண முடிகிறது.

'புள்அல்கும் துறைவ கேள்' (கலி. 113)

'வருவிருந்து அயரும் விருப்பினள்' (புறம். 326)

'ஒண்டழை அயரும் துறைவன்' (ஐங். 147)

செய்யும் >செய்ம்

தொல்காப்பியர் செய்யும் என்னும் அமைப்புடைய பெயரெச்சம் தன் இறுதியாகிய மகர ஒற்றுக்கு முன்வரும் உகரம் அது ஏறிவரும் மெய்யுடன் கெட்டு வருமிடங்களும் மொழியில் உள எனக் குறிப்பிட்டுள்ளார்.

''அவற்றுள்
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகரம்
அவ்விட னறித லென்மனார் புலவர்'' (தொ. சொ. 238)

(எ.டு.) வாவும் புரவி > வாம் புரவி

போகும் புழை > போம் புழை

சங்க இலக்கியத்தில்

'ஏமம் ஆம் சிறிதே' (நற். 113)

ஆகும் > ஆம்

'குழுவொடு புணர்ந்து போம் குன்று அழல் வெஞ்சுரம். (கலி. 25)

போகும் > போம்.

எதிர்மறை

தொல்காப்பியர் பெயரெச்சம் எதிர்மறைப் பொருளிலும் அமைந்து வரும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

''பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா''

(தொ. சொ. 236)

சங்க இலக்கிய மொழியிலும் 'செய்யா' 'செய்யாத' என்னும் அமைப்புடைய எதிர்மறைப் பெயரெச்சங்கள் பயின்று வந்துள்ளன.

செய்யா

'செய்யாப் பாவை கொய்யும் பொழுதே' (ஐங். 344)
'கல்லா யானை வேந்து பகை வெலற்கே' (ஐங். 429)

செய்யாத

'வெயில்ஒளி அறியாத விரிமலர்த் தண்காவிற்' (கலி. 30)
'ஆயிழாய் தாவாத எற்குத் தவறுண்டோ' (கலி. 86)

இல்லா

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் 'இல்லா' என்னும் எதிர்மறைப் பெயரெச்ச வடிவத்தினையும் சுட்டியுள்ளார்.

சங்க இலக்கிய மொழியில் இல்லா, இலா, இலாத அமைப்புடைய பெயரெச்ச வடிவங்கள் காணப்படுகின்றன.

இல்லா

'நாம் இல்லாப் புலம் பாயின்' (கலி. 27)
'தம்மலது இல்லா நம்இவண் ஒழிய' (அகம். 313)

இலா

''நிலை இலாப் பொருள் (கலி. 8)

இலாத

'ஈரம் இல்லாத இவன் தந்தை பெண்டிருள்' (கலி. 84)

தொல்காப்பியர் தம் நூலில் அல்அடியாகத் தோன்றும் எதிர்மறைப் பெயரெச்சங்களைக் குறிப்பிடவில்லை. ஆனால் சங்க இலக்கிய மொழியில் அல், அல்லா, அல்லாத என்னும் பெயரெச்ச வடிவங்கள் காணப்படுகின்றன.

அல், அல்லா, அல்லாத

'கேள்அல் கேளிர்' (அகம். 93)

'வாய்அல் கனவின்' (அகம். 39)

'நன்வாய் அல்லா வாழ்க்கை' (நற். 46)

'வாய்அல்லா வெண்மை உரையாது' (கலி. 88)

'கணைகழிகு அல்லாத கல்பிறங் காரிடை' (கலி. 20)

இடையே பிற சொற்கள் வருதல்

தொடரில் பெயரெச்சம் அமைந்து வரும்போது பெயரெச்சத்திற்கும் பெயருக்கும் இடையே இயையும் சொற்கள் அமைந்து வரலாம் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

''தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்'' (தொ. சொ. 237)

(எ.டு.) 'கொல்லுங் காட்டுள் யானை'

'கொன்ற காட்டுள் யானை'

சங்க இலக்கியத்தில்

'காதல் கொள்ளாப் பல்லிருங் கூந்தல் மகளிர் (புறம். 73)

இங்குக் 'கொள்ளா .... மகளிர்' என்ற தொடரில் 'பல்லிருங் கூந்தல்' என்னும் பிற சொற்கள் பெயரெச்சத்திற்கும் பெயருக்கும் இடையே அமைந்து வந்துள்ளன.

நன்னூல்

நன்னூலார் செய்த, செய்கின்ற, செய்யும் என்று சொல்லப்படுகின்ற சொற்களுக்கு இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களும் தொழிலும் தோன்றி வினைமுற்றுப் பெறுவதற்கு வேண்டப்பட்ட பாலொன்றும் தோன்றாது; அப்பாலுடனே செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் அறுவகைப் பொருட் பெயர்களும் ஒழிய நிற்பது பெயரெச்ச வினையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

'செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டிற்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி யறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே'' (நன். 340)

நன்னூலார் தொல்காப்பியர் கூறிய செய்திகளையே குறிப்பிட்டுள்ளார். ஆயினும் தொல்காப்பியர் சுட்டாத செய்கின்ற என்ற (நிகழ்காலம்) வாய்பாட்டுப் பெயரெச்சத்தினை நன்னூலார் சுட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்கின்ற	சாத்தன்
சாத்தன்	வினைமுதல்
கலம்	கருவி
இடம்	நிலம்
ஊண்	தொழில்
நாள்	காலம்
சோறு	செயப்படுபொருள்

செய்யும் > செய்ம்

நன்னூலாரும் தொல்காப்பியர் கூறியது போலச் செய்யும் என்னும் பெயரெச்சம் செய்ம் எனத் திரிந்து வருதலையும் குறிப்பிட்டுள்ளார்.

''*செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ்*'' (நன். 341)

ஆகும் பொருள் - ஆம் பொருள்

போகும் போது - போம் போது

குறிப்பு முற்றுப் பெயரெச்சம்

நன்னூலார் வினைக்குறிப்புமுற்று பெயரெச்சமாகியும் வரும் எனக் கூறியுள்ளார்.

'*குறிப்புமுற் றீரெச்ச மாகலு முளவே*' (நன். 351)

'*வெந்திறலினன் விறல் வழுதியொடு*'

என்பது 'வெந்திறலினனாகிய வழுதி' எனப் பொருள் படுதலாற் குறிப்பு முற்றுப் பெயரெச்சமாகி நிற்கிறது.

மேலும் நன்னூலார் பெயரெச்சம் அடுக்கியும் வரலாம் எனக் குறிப்பிட்டுத் தத்தம் எச்சமொன்று இறுதியில் வர, அதனோடனைத்தும் முடியும் எனச் சுட்டியுள்ளார்.

''*..................வினை வேறடுக்கினும்*
ஒரு தம் மெச்ச மீறுற முடியும்' (நன். 355)

(எ.டு.) கற்ற கேட்ட பெரியோர்

இடைப் பிற வரல்

பெயரெச்சமும் பெயரும் தொடரில் அமைந்து வரும்போது அவற்றினிடையே வேறு சொற்களும் அமைந்து வரலாம் என நன்னூலார் குறிப்பிட்டுள்ளார்.

''உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்

பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன'' (நன். 356)

தொல்காப்பியர் பெயரெச்சம் குறித்து எடுத்துக்கூறிய செய்திகளையே பெரிதும் நன்னூலாரும் கூறியுள்ளார் என அறிய முடிகிறது.

மொழியியல் நோக்கில்

இலக்கணக்காரர்கள் பெயரெச்சம் பற்றிய பல செய்திகளைத் தந்திருந்தாலும் இக்கால மொழியியல் நோக்கில் பெயரெச்சங்களை நோக்கும் போது மேலும் பல உண்மைகளை அறிய முடிகிறது.

இலக்கணக்காரர்கள் பெயரெச்சங்களுக்கு முடிக்கும் சொல்லாக நிலம், பொருள், காலம், கருவி, வினை முதல், வினை என்பவை அமைந்து வரும் என்று குறிப்பிட்டுள்ளனர். தமிழ் மொழியில் வினையடியாகத் தோன்றும் பெயரெச்சங்கள் எல்லாமே முன்னர்க் குறிப்பிட்ட ஆறு வகைப் பெயர்களையும் ஏற்று வருவதில்லை.

சில பெயரெச்சங்கள் சில குறிப்பிட்ட பெயர்களையே ஏற்று வரும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

படித்த பள்ளிக்கூடம்	-	நிலம்
படித்த பாடம்	-	பொருள்
படித்த நாள்	-	காலம்
படித்த	-	கருவி
படித்த பையன்	-	வினைமுதல்
படித்த பாட்டு	-	வினை.

இங்குப் படித்த என்னும் பெயரெச்சம் கருவிப் பெயரை ஏற்கவில்லை என்பதைக் காணமுடிகிறது.

படித்த பையன்

படித்த பாட்டு

இவை இரண்டும் பெயரெச்சத் தொடர்கள், ஆயினும் இவை வெவ்வேறு நிலையில் ஆக்கம் பெற்றுள்ளன. 'படித்த பையன்' என்ற தொடரிலுள்ள 'பையன்' என்பது 'படி' என்ற வினையின் எழுவாய் என்பதையும் 'படித்த பாட்டு' என்ற தொடரிலுள்ள 'பாட்டு' என்பது 'படி' என்ற வினையின் செயப்படு பொருள் என்பதையும் தெளிவாக உணர முடிகிறது.

'படித்த பையன்' என்ற பெயரெச்சத்தொடர் 'பையன் படித்தான்' என்ற முற்றுத் தொடரிலிருந்தும் 'படித்த பாட்டு' என்ற பெயரெச்சத் தொடர் 'அவர் பாட்டுப் படித்தார்' என்ற முற்றுத் தொடரிலிருந்தும் ஆக்கம் பெற்றுள்ளன.

படித்த பையன் - பெயரெச்சம் - எழுவாய்

படித்த பாட்டு - பெயரெச்சம் - செயப்படுபொருள்

மொழியியல் நோக்கில் பெயரெச்சம் என்பது முற்று வினைகளினின்றும் தோன்றியுள்ளது என்பதை உணர முடிகிறது. இலக்கணக்காரர்கள் சுட்டும் பெயரெச்ச முடிப்புச் சொற்கள் மொழியியல் தொடரியல் உறவுகளை உணர்த்துவனவாய் உள்ளன. இலக்கணக்காரர்கள் இவ்வுறவுகளைத் தெளிவுற விளக்காவிட்டாலும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என அறியலாம்.

துணை நூல்கள்

1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம்
2. தொல்காப்பியம், சொல்லதிகாரம்
3. நற்றிணை
4. புறநானூறு
5. பதிற்றுப்பத்து
6. குறுந்தொகை
7. கலித்தொகை
8. ஐங்குறுநூறு
9. அகநானூறு
10. நன்னூல்
11. T. Natarajan, The language of Sangam Literature and Tolkappiyam
12. பொன். கோதண்டராமன், ''பெயரெச்சம் பற்றித் தொல்காப்பியர்''
13. ச. அகத்தியலிங்கம் : } தொல்காப்பிய மொழியியல்
    க. முருகையன் (ப.ஆ.) }

வினையெச்சம்

வினையெச்சம் என்பதனைத் தொல்காப்பியர் 'வினையெஞ்சு கிளவி' என்றே விரவு வினைகளுள் ஒன்றாகச் சுட்டுவார். இருப்பினும் ஒருசிலவிடத்து 'எச்சம்' என்றும் குறிப்பிடுவார். வினையெச்சம் என்றால் என்ன? என்பது பற்றித் தொல்காப்பியர் வினையியலில் ஒன்றும் கூறினாரில்லை. ஆனால் எச்சவியலில் பத்துவகை எச்சங்களைத் தொகுத்துக் கூறும்பொழுது அவற்றுள் ஒன்றாக வினையெச்சத்தினையும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றி முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே'' (தொ.சொ. 432)

வினையெச்சமானது முடியுங்கால் தெரிநிலை வினையும், குறிப்பு வினையுங் கொண்டு முடியும்; குறிப்பு வினை கொண்டு முடியுமாயின் ஆக்கச் சொல்லோடுவரும் என்பது மேலை நூற்பாவின் பொருள். உரைகாரர்களும் இதற்கு உடன்படுவர். சான்றாக உழுது வந்தான் (தெரிநிலை வினைமுற்றுக் கொண்டு முடிந்தது), மருந்து உண்டு நல்லன் ஆயினான் (குறிப்பு வினை கொண்டு முடிந்து ஆக்கச்சொல் பெற்று வந்தது) எனச் சான்றுகளும் காட்டுவர்.

மோ. இஸ்ரயேல் அவர்கள் குறிப்பு வினைகளுள் குறை வினையடியாகத் **(Defective Verbs)** தோன்றும் சொற்கள் வினையெச்சத்தினைத் தொடர்ந்து நிற்குமாயின் ஆக்கச்சொல் பெற்று வரவேண்டியதில்லை என்பார்.

வந்து இலன், பார்த்து இலன்.
கொண்டு உளன், கொடுத்து உளன்.

எனவே குறிப்பு வினைகளிலும் பெயர், பெயரடை **(Noun or Adjective)** அடியாகத் தோன்றிய குறிப்பு வினைகள் வினையெச்சத்தினைத் தொடர்ந்து வந்தால்தான் ஆக்கச் சொல்பெற்று வரவேண்டும் என உரைகாரர்கள் காட்டும் சான்றுகளாலும் நிறுவ முடிகின்றது.

சங்க இலக்கியத்திலும்

''........ பகைவரும்
தந்துறை கொடுத்துத் தமர் ஆ யினரே'' (அகம் .44)

''துணிந்து பிறர் ஆயினள்'' (அகம் .35)

''அன்னி மிஞிலி போல மெய்ம் மலிந்து

ஆனா உவகையேம் ஆயினெம்'' (அகம் .262)

''அறிவு மயங்கிப் பிறிது ஆகின்று'' (நற் .397)

என அமைந்து வந்துள்ளனவும் மேலைக்கருத்தினை உறுதி செய்கின்றன.

உரைகாரர்களுள் இளம்பூரணர் வினையெச்சம் என்பதற்கு ''**வினைச்சொல்லை ஒழிபாக நிற்பது**'' என்றும், **சேனாவரையர்** ''**வினையை ஒழிபாக உடைய வினை**'' என்றும், **தெய்வச்சிலையார்** '**வினை**யெச்சமாவது மற்றொரு வினைச்சொல்லோடல்லது முற்றுப் பெறாது நிற்கும்; வினைச்சொல்லாவது பால் உணர்த்தாது காலம் காட்டி நிற்கும்' என்றும், நச்சினார்க்கினியர் 'முடிக்கும் வினையை ஒழிபாக உடைய வினைச்சொல்லும்' என்றும், கல்லாடனார் ''வினைச்சொல்லை ஒழிபாக உடைய சொல்'' என்றும் கூறுவர்.

இலக்கணக்காரர் நன்னூலார்

''**தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**
ஒழிய நிற்பது வினையெச்சமே'' (ந[illegible])

என்று கூறுவார். எவ்வாறாயினும் ''**வினையெச்சம் என்பது வினை**யடியாகத் தோன்றிக் கால உருபினைப்பெற்றோ, பெறாமலோ காலத்தினை உணர்த்திப் பால் காட்டும் உருபு எதுவுமின்றி இன்னொரு வினைகொண்டு முடியும் வினைச்சொல்'' என விளக்கம் கூறலாம்.

தொல்காப்பியர் வினையெச்சங்களை வினையியலில் தொகுத்துக் கூறும்பொழுது

''செய்து செய்யூச் செய்பு செய்தென
செய்யியர் செய்யிய செயின் செய செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி'' (தொ. சொ. 228)

என்று ஒன்பது வகையான வினையெச்சங்களைக் கூறியுள்ளார்.

மேலும் தொல்காப்பியர் இவ்வொன்பது வகை வினையெச்சங்களும் எவ்வெவ்வாறு முடிவுகளைப் பெற்றுவரும் (Synthactical level) என்றும் விளக்கியுள்ளார். அவ்வகையான விளக்கங்கள் இக்கட்டுரையில் இடம் பெறவில்லை. வினையெச்சங்களை வடிவ அமைப்பு (Morphological level) நிலையில் விளக்குவதே இக்கட்டுரையாளரின் ஆராய்ச்சி; இருப்பினும் சில முடிவுகளுக்குத் தொடரியல் நிலை விளக்கங்களும் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சங்க இலக்கியத்தில் வினையெச்சங்கள்

1. செய்து

செய் + த்+உ

செய் - வினையடி

த் - இறந்த கால உருபன்

உ - வினையெச்ச விகுதி.

''பால்கதிர் மண்டிலம் பகல் செய்து ஆற்றி
சேயுயர் பெருவரைச் சென்றவண் மறைய (நற். 69)

''தேற்றம் செய்து நப்புணர்ந்த இனி'' (ஐங். 23)

''இனியது கேட்டு இன்புறுக இவ்வூரே'' (குறுந். 34)

மேலை அடிகளில் அமைந்து வந்துள்ள 'செய்து' அமைப்புடைய வினையெச்சங்கள் இறந்த காலத்தினை உணர்த்தி நிற்கின்றன. தொல்காப்பிய உரைகாரர்களும் 'செய்து' அமைப்புடைய வினையெச்சமே பெரும்பான்மை வழங்கி வரும் என்றனர். எனவே தொல்காப்பிய நூற்பாவில் அது முதற்கண் கூறப்பட்டது என்ற உரைகாரர்கள் கருத்து சங்க இலக்கியத்திலும் உண்மையாகவே உள்ளது.

மேலும் தொல்காப்பியர்,

''செய்தெ னெச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்'' (தொ. சொ. 239)

என்னும் நூற்பாவில் 'செய்து' என்னும் இறந்தகாலம் உணர்த்தும் வினையெச்சம் எதிர்காலம் உணர்த்தும் இடங்களும் உண்டு எனக் காலமயக்கமும் குறிப்பிடுவார். அந்தக் காலமயக்கம் பற்றிய ஆய்வு இக்கட்டுரையில் இடம் பெறவில்லை.

2. செய்யூ

செய் + ஊ

செய் - வினையடி

ஊ - வினையெச்ச விகுதி

''மா மழை இடியூஉத் தளிசொரிந் தன்றே'' (ஐங். 423)

''வேங்கை விரிஇணர் சிதறித்தேன் சிதையூஉப்
பலவின் பழத்துள் தங்கும்'' (அகம். 292)

''துய்த்தலை மந்தியைக் கையீடுஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ'' (புறம். 158)

"கணைவிடு புடையூ கானம் கல்லென" (குறுந் 160)

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'செய்யூ' அமைப்புடைய வினையெச்சங்கள் இறந்த காலம் உணர்த்தும் என்பர். தெய்வச்சிலையார் 'செய்யூ' அமைப்புடைய வினையெச்சங்கள் இறப்பு அல்லது நிகழ்வினை உணர்த்தும் எனக்கூறுவார். எவ்வாறாயினும் 'செய்யூ' அமைப்புடைய வினையெச்சங்களை உருபன் பகுப்புச் செய்தால் காலம் உணர்த்த வெளிப்படை உருபன் (overt Morpheme) காணப்படவில்லை. இருப்பினும் சங்க இலக்கியத்தில் அவை இறந்தகாலமே உணர்த்தி நிற்கின்றன. மேலும் அவை மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

3. செய்பு

செய் + பு

செய் - வினை அடி

பு - வினை எச்ச விகுதி

"கழலோன் காப்ப கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வந்த" (குறும். 356)

"வளரத் தொடினும் வௌவுபு திரிந்து" (புறம். 260)

"தேறா நெஞ்சம் கையறுபு வாட" (நற். 345)

சேனாவரையர் 'செய்பு' அமைப்புடைய வினையெச்சங்கள் நிகழ்காலம் உணர்த்தி நிற்கும் எனக் கூறுவார். தெய்வச் சிலையார் 'செய்பு' அமைப்புடைய வினையெச்சங்கள் அவை வருகின்ற வருகை முறையினை வைத்துச் சூழ்நிலைகளுக்கேற்ப முக்காலமும் உணர்த்தி நிற்கும் எனக் கூறுவார். நச்சினார்க்கினியரும் 'செய்பு' அமைப்புடைய வினையெச்சங்கள் பெரும்பாலும் நிகழ்காலம் உணர்த்தும் என்று கூறுவார். உரைகாரர்கள் கூற்று இவ்வாறாக அமையினும் சங்க இலக்கியத்தில் 'செய்பு' அமைப்புடைய வினையெச்சங்களில் கால உருபன்கள் வெளிப்படையாக இல்லாவிடினும் அவை இறந்தகாலமே உணர்த்துகின்றன.

4. செய்தென

செய்து என

செய் + த் + என் + அ

செய் - வினையடி

த் - இறந்தகால உருபன்

என் - வினையடி

அ - வினையெச்ச விகுதி

'செய்து' என்னும் வினையெச்சத்தோடு 'என' என்னும் எச்சம் இணைந்து இரண்டும் சேர்ந்து ஒன்றாய் நின்று வினையெச்சமாகச் செயற்படுகின்றது எனலாம். இல்லையேல் இங்கு அமைந்துவரும் 'என' என்பதனை இணைப்பு உருபன் (Connective marker) ஆகவும் கொள்ளலாம்.

செய்து - என>செய்தென

''மெல்லம் புலம்பன் பிரிந்தென'' (குறுந். 5)

''வெந்திறல் கடுவளி பொங்காப் போந்தென'' (குறுந். 39)

''தண்புனல் வண்டல் உய்த்தென'' (ஐங். 69)

''மலரார் மலிர்நிறை வந்தென'' (ஐங். 72)

சங்க இலக்கியத்தில் 'செய்தென' அமைப்புடைய வினையெச்சங்கள் இறந்தகாலம் உணர்த்தி நிற்கின்றன. இலக்கண உரைகாரர்களும் இறந்த காலம் உணர்த்தும் என்றே கூறுவர். அவ்வகை வினையெச்சங்கள் சங்க இலக்கியத்தில் சற்று அருகியே வழங்கியுள்ளன. இன்றைய தமிழில் இவ்வகை வினையெச்சம் வழக்கில் இல்லை எனலாம்.

5. செய்யியர்

செய் + இயர்

செய் - வினையடி

இயர் - வினை எச்ச விகுதி

'' உணீஇயர் கையள் வருக'' (குறுந். 56)

''பிணன் உணீஇயர் எருவை இழிய'' (பதிற். 56)

''தண்வயிறு அலை இயர் சென்மோ'' (அகம். 106)

''பிடி உணீஇயர் '' (அகம். 59)

சங்க இலக்கியத்தில் 'செய்யியர்' அமைப்புடைய வினையெச்சங்கள் 'காரணப் பொருட்டு' (purposive) வினையெச்சங்களாகச் செயல்படுகின்றன. 'செய்யியர்' அமைப்புடைய வினையெச்சங்களில் வெளிப்படைக்கால உருபன் இல்லாவிடினும் அவை எதிர்காலம் உணர்த்துகின்றன. இலக்கண உரைகாரர்களும் 'செய்யியர்' அமைப்புடைய வினையெச்சங்கள் எதிர்காலம் உணர்த்தும் என்பர்.

சங்க இலக்கியத்தில் வரும் 'செய்யியர்' அமைப்புடைய வினையெச்சங்களுக்குச் சங்க இலக்கிய உரையாசிரியர்கள் வேறுவகையான காலமும் உணர்த்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

''இட்டிய குயின்ற துறைவயிற் செலீஇயர்'' (ஐங். 215)

''கொண்டல் ஆற்றி விண்தலைச் செறீஇயர்'' (நற். 89)

மேலைச் சான்றுகளில் அமைந்து வந்துள்ள செலீஇயர், செறீஇயர் என்னும் 'செய்யியர்' அமைப்புடைய வினையெச்சங்களுக்கு இலக்கிய உரைகாரர்கள் உரை எழுதும்பொழுது 'செலீஇயர்' என்பதற்குச் 'சென்று' என்றும், 'செறீஇயர்' என்பதற்குச் 'செறிவுற்று' என்றும் எழுதுவதிலிருந்து 'செய்து' அமைப்புடைய, வினையெச்சமாகக் கொண்டுள்ளனர் என்பதும் தெரிகிறது.

மேலும்

''வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்புஅழீஇ (நற். 82)

என்னும் அடியில் அமைந்துள்ள 'படீஇயர்' என்னும் வினையெச்சத்திற்கு உரை எழுதும்பொழுது 'பட்டதாக' என்றும் எழுதியுள்ளனர்.

மற்றும்

''எல்வளை ஞெகிழ்த்தோர்க் கல்லல் உறீஇயர்'' (நற். 56)

என்னும் அடியில் அமைந்துள்ள 'உறீஇயர்' என்னும் வினையெச்சத்திற்கு உரைஎழுதும் பொழுது 'உறுதலின்' (செயின் அமைப்பு) என்றும் எழுதி உள்ளனர். எனவே இலக்கிய உரைகாரர்கள் வினையெச்ச வடிவ அமைப்பு 'செய்யியர்' ஆக இருப்பினும் உரை எழுதும்பொழுது இதனைப் பிற அமைப்புகளாகவும் கருதியுள்ளனர் என்பதையும் உணர முடிகின்றது. இச்செய்தி மேலும் ஆய்விற்குரியது.

6. செய்யிய

செய் + இய

செய் - வினை அடி

இய - வினை எச்ச விகுதி.

''வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை'' (ஐங். 151)

''காணிய வருதும் யாமே'' (ஐங். 420)

''வெவ்வெங் கலுழித் தவ்வெனக் குடிக்கிய'' (குறுந். 356)

''காணிய சென்ற இரவல் மாக்கள் (புறம். 313)

சங்க இலக்கியத்தில் 'செய்யிய' அமைப்புடைய வினை யெச்சங்கள் 'காரணப் பொருட்டு' வினையெச்சங்களாகவே செயற் படுகின்றன. செய்யிய அமைப்புடைய வினையெச்சங்களில் வெளிப்

படைக் காலஉருபன் இல்லாவிடினும் அவை எதிர்காலம் உணர்த்து கின்றன. இலக்கண உரைகாரர்களும் 'செய்யிய' அமைப்புடைய வினை யெச்சங்கள் எதிர்காலம் உணர்த்தும் என்று கூறுவர்.

முற்கூறிய 'செய்யியர்' என்பதும் 'செய்யிய' என்பதும் சொல் வடிவில் (form) வாழியர், வாழிய என்னும் வியங்கோள் வினைமுற்றுகள் போன்று உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாம்.

செய்யியர், செய்யிய அமைப்புடைய வினையெச்சங்கள் குறைவாகவே சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

7. செயின்

செய் + இன்

செய் - வினை அடி

இன் - வினையெச்சக் கடப்பாட்டு உருபன்.

''இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்'' (குறுந். 397)

''கொன்னுஞ் சிவப்போள் காணின் வென்வேல்'' (அகம். 60)

''வேம்பின் பைங்காய் என் தோழி தரினே'' (குறும். 196)

''...........யான் நோக்கின் மெல்ல இறைஞ்சும் தலை'' (கலி. 61)

சங்க இலக்கியத்தில் 'செயின்' அமைப்புடைய வினையெச்சங்கள் கடப்பாட்டு வினையெச்சங்களாய்ச் செயற்படுகின்றன. சேனாவரையர் 'செயின்' அமைப்புடைய வினையெச்சங்கள் முக்காலமும் உணர்த்தும் என்பர். இலக்கியத்தில் 'செயின்' அமைப்புடைய வினையெச்சங்களிலும் வெளிப்படைக் காலஉருபன் இல்லை. சங்க இலக்கியத்தில் 'செயின்' அமைப்புடைய வினையெச்சங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப முக்காலமும் உணர்த்துகின்றன எனலாம். மேலும் சங்க இலக்கியத்தில் இவ்வகை அமைப்புடைய வினையெச்சங்கள் நிரம்பக் காணக் கிடைக்கின்றன.

8. செய

செய் + அ

செய் - வினை அடி

அ - வினை எச்ச விகுதி

''என்செயப் பசக்குந் தோழிஎன் கண்ணே'' (ஐங். 169)

''செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது (கலி. 142)

''கண்தர வந்த காம ஒள்ளெரி'' (குறுந். 305)

''அலமரல் வருத்தம் தீர யாழநின்'' (நற். 9)

'செய' அமைப்புடைய வினையெச்சங்களில் வெளிப்படைக் கால உருபன் இல்லை. சங்க இலக்கியத்தில் 'செய' அமைப்புடைய வினையெச்சங்கள் சூழ்நிலைக்கேற்ப முக்காலமும் உணர்த்துகின்றன. இலக்கண உரைகாரர்களும் 'செய' அமைப்புடைய வினை யெச்சங்கள் முக்காலம் உணர்த்தும் என்பர். மேலும் இவ்வகை வினையெச்சங்கள் சங்க இலக்கியத்தில் நிரம்பக் காணக் கிடைக்கின்றன.

9. செயற்கு

செயல் + கு

செயல் - தொழிற் பெயர்

கு - வினையெச்சக் காரணப் பொருட்டு உருபன்

சேனாவரையர் 'செயற்கென்னும் வினையெச்சம் உருபேற்று நின்று தொழிற்பெயரோடு ஒப்புமை உடைத்தாயினும், உருபும் பெயரும் ஒன்றாகாது. பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் அதனின் வேறாயினாற் போல, இதுவும் உருபேற்ற சுட்டுப் பெயரோடு ஒப்புமை உடைத்தாயினும் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் வேறாகவே கொள்ளப்படும் என்பது' என்றும், நச்சினார்க்கினியர் 'உண்டான் உண்டவள் என்னும் தொழிற் பெயர்கள் உண்டாற்கு உண்டவற்கு என நான்கன் உருபை ஏற்புழிச் செயற்கென்னும் எச்சப்பொருள் தரும் மயக்கம் இன்மையும், உணல் என்னும் வினைப்பெயர், குகரம் அடுத்துழி உண்டலைச் செய்தற்கென்றும் பொருள் தந்து அப்பொருட்டாயே நிற்றலின் வினைப்பெயர் நான்கன் உருபு எனக் கொள்ளாது வினையெச்சப் பொருள் தரும் உருபனாகக் கொள்ள வேண்டும் என உணர முடிகிறது' என்றும், கல்லாடனார் 'இனிச் செயற்கு என்பது உணற்கு வந்தான் என்பது, இஃது அதற் பொருட்டென்னும் பொருள்பற்றி வரும் எனின் அதுவுமோர், காலம் நோக்கிய வழிவினை எச்சமாகவும் கொள்க' என்றும் கூறுவதிலிருந்து ஈற்றுக்குகரத்தினை இருவகையாகவும் கொள்கிறார் எனத் தெரிகிறது. எவ்வாறாயினும் 'செயற்கு' அமைப்புடைய வினையெச்சங்களின் செயற்பாட்டிலிருந்து 'கு' உருபன் அமைப்பில் நான்காம் வேற்றுமை உருபோடு ஒத்து விளங்கினும் வினையெச்சக் காரணப்பொருட்டு உருபன் என்று கொள்வதே பொருந்தும்.

''யாவதும் இல்லை யான்செயற்கு உரியதுவே'' (குறுந். 383)

''நாம்செலற்கு ஏவுமதி வலவ தேரே'' (நற். 21)

''வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென'' (புறம். 208)

சங்க இலக்கியத்தில் 'செயற்கு' அமைப்புடைய வினையெச்சங்கள் காரணப்பொருட்டு வினையெச்சங்களாகச்

செயற்பட்டு எதிர்காலம் உணர்த்தி நிற்கின்றன. சேனாவரையரும், தெய்வச் சிலையாரும் 'செயற்கு' அமைப்புடைய வினையெச்சங்கள் எதிர்காலம் உணர்த்தும் என்றே கூறுவர். 'செயற்கு' அமைப்புடைய வினை யெச்சங்களும் சங்க இலக்கியத்தில் அருகியே காணப்படுகின்றன. பிற்கால இலக்கணநூலாராகிய நன்னூலார் வினையெச்சங்களைத் தொகுத்துக் கூறுவதில் 'செயற்கு' வினையெச்சத்தினைக் குறிப்பிட்டாரில்லை.

தொல்காப்பியர் தொகுத்துக் கூறிய ஒன்பது வினையெச்சங்களுள் முதல் நான்கும் இறந்த காலமும் ஏனையவை ஏனைக்காலமும் உணர்த்துவதிலிருந்து தொல்காப்பியரே நூற்பா அமைப்பதில் இறந்த கால வினை யெச்சங்களை முற்கூறி ஏனைக் கால வினையெச்சங்களைப் பிற்கூறினார் போலும் என எண்ண இடமளிக்கிறது. இக்கருத்தினைக் கல்லாடனாரும் வினையெச்சங்களின் வைப்பு முறையினை விளக்கும் பொழுது குறிப்பிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது

தொல்காப்பியர் மேலும் சில வினையெச்சங்களை எழுத் ததிகாரத்தில், புணர்ச்சி விதிகள் கூறுமிடத்துக் குறிப்பிட்டுள்ளார்.

10. செய்யா

''செய்யா' என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்.'' (தொ. எ. 222)

செய் + ஆ

செய் - வினையடி

ஆ - வினையெச்ச விகுதி.

'செய்யா' என்னும் வினையெச்சத்தினை நச்சினார்க்கினியரும், கல்லாடனாரும் 'செய்யூ' என்னும் வினையெச்சத்தோடு தொடர்புப்படுத்திக் கூறுவர்.

''பாயிருள் நீங்கப் பகல்செய்யா எழுதரு
ஞாயிறு அன்ன அவன் வசையில் சிறப்பு'' (மலை. 84)

''நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையா'' (புறம். 349)

''பசிபடு மருங்குலை கசிபுகை தொழாஅ'' (புறம். 260)

தெய்வச்சிலையார் 'செய்யா' அமைப்புடைய வினையெச்சங்கள் இறந்த காலம் அல்லது நிகழ்காலம் உணர்த்தும் என்பார்.

நச்சினார்க்கினியர் 'செய்யா' அமைப்புடைய வினையெச்சங்கள் இறந்தகாலம் உணர்த்தும் என்பார். 'செய்யா' அமைப்புடைய வினையெச்சங்களில் வெளிப்படைக் கால உருபன் இல்லாவிடினும் அவை சங்க இலக்கியத்தில் இறந்த காலமே உணர்த்துகின்றன.

செய்யா - செய்து

துடையா - துடைத்து

தொழா - தொழுது

மேலும் 'செய்யா' என்னும் வினையெச்சம் அமைப்பில் எதிர்மறை போன்று காணப்படினும் உடன்பாட்டுப் பொருளையே அளிக்கிறது இலக்கிய உரைகாரர்களும் உரை கூறும்பொழுது 'செய்து' அமைப்பிலேயே அதாவது 'செய்யா' என்றால் 'செய்து' என்றும், 'துடையா' என்றால் 'துடைத்து' என்றும் பொருள் எழுதியுள்ளனர். இவ்வகை வினையெச்சங்கள் சங்க இலக்கியத்தில் குறைவாகவே காணக் கிடைக்கின்றன.

இகர ஈற்று வினையெச்சங்கள்

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் இகர ஈற்றுப் புணர்ச்சிகளை விளக்கும் பொழுது

''இனி அணி என்னும் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியும் சுட்டு மன்ன'' **(தொ. எ. 236)**

என்னும் நூற்பாவில் இகர ஈற்று வினையெச்சங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

வருந்தி (நற். 67) கலங்கி (நற் 30)
காட்டி (நற். 47) கூறி (புறம். 43)
குழீஇ (குறுந். 303) கொளீஇ (நற். 67)
நோக்கி (நற். 298)

சங்க இலக்கியத்தில் இகர ஈற்று வினையெச்சங்கள் பல்வகை அமைப்பில் காணக் கிடைக்கின்றன. மேலும் இறந்த காலமே உணர்த்துகின்றன. இவ்வகை வினையெச்சங்கள் பொருள் உணர்த்தி நிற்கும்பொழுது 'செய்து' அமைப்பு வினையெச்சங்களாகின்றன. இலக்கண உரைகாரர்களும் இவ்வகை வினையெச்சத்தினைச் 'செய்து' அமைப்புடைய வினையெச்சங்களுடன் இணைத்துப் பேசுவர்.

யகர ஈற்று வினையெச்சங்கள்

தொல்காப்பியர் யகர ஈற்று வினையெச்சம் பற்றிக் குறிப்பிட்டாரில்லை. ஆனால் உரைகாரர்கள் யகர ஈற்று வினையெச்சங்களைக் கூறியுள்ளனர்.

கூய் (*கலி*. 38; புறம். 395)
போய் (*கலி*. 148)

சங்க இலக்கியத்தில் கூய், போய் என்பன இகர ஈற்று வினையெச்சங்களைப் போன்று இறந்த காலப் பொருளையே உணர்த்துகின்றன. கூய்,போய் என்பனவற்றின் ஈற்று யகரத்தினை இகரத்தின் மாற்று வடிவம் எனக் கொள்ளலாம். யகர ஈறு நெட்டெழுத்தினை அடுத்து மட்டுமே வருகிறது.

இன்றி

தொல்காப்பியர் 'இன்றி' என்னும் வினையெச்சத்தினையும் குறிப்பிட்டுள்ளார். (தொ. எ. 237)

> ''ஐயம் இன்றிக் கடுங்கூ வினளே'' (நற். 297)
> ''என்னை இன்றியும் கழிவது கொல்லோ'' (குறுந். 24)
> ''இடனின்றி இரந்தோர்க்கொன் றீயாமை (கலி. 2)

மேலை அடிகளில் 'இன்றி' என்னும் வடிவம் வினையெச்சமாய்ச் செயற்படுகின்றது.

இன்று

தொல்காப்பியர்

> ''இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி
> நின்ற இகரம் உகரமாதல்
> தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே'' (தொ.எ. 237)

என்று கூறுவார். அதாவது 'இன்றி' என்னும் வினையெச்சத்தின் ஈற்று இகரம் உகரமாகத் திரிந்து நிற்கும் முறை செய்யுளில் காணப்படும்.

> ''நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க'' (பெரும். 41)
> ''கார்எதிர் காலையாம் ஓவின்று நலிய'' (ஐங். 491)

மேலை அடிகளில் 'இன்று' வினையெச்சமாகச் செயற்படுகிறது.

அன்றி > அன்று

இன்றி பற்றிக் குறிப்பிட்ட தொல்காப்பியர் 'அன்றி' பற்றிக் கூறினாரில்லை. ஆனால் சங்க இலக்கியத்தில் அன்றியும் வினையெச்சமாகச் செயற்படுகிறது.

> ''உழையர் அண்மையின் உழப்பது அன்றியும்
> மழையும் தோழி மாறுபட் டன்றே'' (குறுந். 289)
>
> ''தொல்எழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின் (கலி. 29)

இன்றியின் ஈற்றுஇகரம் எவ்வாறு உகரமாகத் திரிந்து வினையெச்சமாகச் செயற்பட்டதோ அதனைப் போன்று அன்றியின் ஈற்று இகரமும் உகரமாகத் திரிந்து 'அன்று' என நின்று வினையெச்சமாகச் சங்க இலக்கியத்தில் செயற்படுகின்றது.

''படர்ந்த உள்ளம் பழுதன்றாக
வந்தனர் வாழி தோழி'' (அகம். 68)

''நாளன்று போகிப் புள்ளிடைத் தட்ப'' (புறம். 124)

இன்றி, அன்றி என்பன முறையே இல், அல் எனும் எதிர்மறையடியாகத் (Negative Root) தோன்றிய சொற்கள் ஆகும்.

அடுத்து, தொல்காப்பியர் வினையியலில் சில வினைமுற்றுகள் வினையெச்சமாதலையும் குறிப்பிட்டுள்ளார்.

செய்கென் கிளவி

தொல்காப்பியர் தன்மை ஒருமை வினைமுற்றுக்களின் விகுதிகளை,

''கடதற வென்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு
என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே'' (தொ.சொ. 203)

என்று கூறுவார். அடுத்த நூற்பாவாகிய

''அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்''. (தொ.சொ. 204)

என்பதில் 'செய்கு' என்னும் சொல் வினையெச்சமாகச் செயற்படுதலைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் 'அவ்வேழனுட் செய்கு என்னும் சொல் வினைகொண்டு முடியினும் அமையும். 'உண்கு வந்தேன்' என வரும்.

செய்கென் கிளவி வினையொடு முடியினும் அமைக எனவே செய்கும் என்னும் கிளவியும் வினையொடு முடியினும் அமைக என்பது போந்தாம்.

'உண்கும் வந்தேம்' என வரும்.

இனி அவை முடியினும் அமையும் எனவே பெயர் கொண்டு முடிதலே வலியுடைத்து என்பது போந்தாம்.

'உண்கு யான், உண்கும் யாம் என வரும். 'அவ்வியல் திரியா' என்பது அவையும் முற்றுச்சொல் இயல்பில் திரியா என்றவாறு' என்று விளக்கம் கூறியுள்ளார்.

சேனாவரையர் 'மேற்கூறப்பட்ட ஒருமைத்தன்மை வினை ஏழனுள் செய்கென்னுஞ் சொல் வினையொடு முடியுமாயினும் முற்றுச் சொல்லாதலிற் திரியாது என்றார்

(எ-டு) காண்கு வந்தேன் என வரும்;

காண்கு வந்தேன் என்ற வழிச் செய்கென் கிளவி வினையெச்சமாய்த் திரிந்ததாயின் செய்தென் எச்சமாதற் கேலாமையின், செயவென் எச்சமாய்த் திரிந்தது எனல் வேண்டும். வேண்டவே செயவெனெச்சத்திற்குரிய வினை முதல் வினையும் பிற வினையும் அது கொள்வான் சொல்லும்; வினை முதல் வினையல்லது கொள்ளாமையிற் செயவெனெச்சமாய்த் திரிந்தது என்றல் பொருந்தாது. பிறிதாறின்மையின், முற்றுச் சொல்லாய் நின்றது எனவே படும். அதனால் அவ்வியல் திரியாது என்றார் என்பது. அல்லதூஉம் செய்கென் கிளவி சிறுபான்மையல்லது பெயர் கொள்ளாமையின், பெரும்பான்மையாகிய வினைகோடல் அதற்கியல்பேயாம். ஆகவே அது திரிந்து வினைகொள்ளுமெனல் வேண்டாவாம். அதனாலும் முற்றாய் நின்று வினை கொண்டதென்றலே முறைமையென்றுணர்க' எனவும் விரித்துப் பொருள் உரைப்பார்.

தெய்வச்சிலையார், 'மேற்சொல்லப்பட்டவற்றுள் செய்கு என்னும் சொல் வினையொடு முடிந்துழியும் பாலுணர்த்தும் இயற்கையில் திரியாது 'காண்கு வந்தேன்' என வரும்; காண்குயான் எனப் பெயரொடு முடிதல் இலக்கணம் என்று கொள்க' என்று உரை கூறுவார்.

நச்சினார்க்கினியர், 'அவற்றுள் முற்கூறிய ஒருமைத் தன்மை வினை ஏழனுள், செய்கென்னும் முற்றுச்சொல் பெயரொடு முடியாது வினையொடு முடியினும், அம்முற்றுச் சொல்லாதற் தன்மையில் திரியாதென்று கூறுவர் புலவர் என்றவாறு.

(உ-ம்) 'காண்கு வந்திசிற் பெரும' என வரும். 'நோகோ யானே' எனப் பெயர்கோடல் சிறுபான்மையாம்' என உரைவிளக்கம் செய்வார்.

கல்லாடனார், 'மேற்சொல்லப்பட்ட ஏழனுள்ளும் செய்கு என்னும் சொல் பெயரொடு முடியாதே வினையொடு முடியினும் பெயரொடு முடிந்தனபோல அம் முற்றுச் சொல்லாகல் இயல்பின் திரியாது.

(எ-டு) உண்கு வந்தேன் என்பது.

(எ-டு) உண்கும் வந்தோம் என்பது' என்றும் உரைகூறி நிற்பார்.

பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி, ""Learned men say that, of them, the form "ceyku' does not lose its finite form when it is followed by another finite verb."

(எ-டு) 'காண்கு வந்திசிற் பெரும' (புறம். 17)

என்று விளக்கம் செய்வார்.

பிற்கால இலக்கண நூலாராகிய நன்னூலார்,

'செய்கென் ஒருமையும் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே (நன். 333)

என்று கூறுவார்.

சங்க இலக்கியத்தில் தன்மை ஒருமை வினைமுற்றுகளுள் அந்நான்கூர்ந்த குற்றியலுகரம் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்ட கு, டு, து, று என்னும் ஈறுகளுள் கு, டு ஈறுகளைக் கொண்ட வினைமுற்றுகளே மிக அருகிக் காணப்படுகின்றன து, று ஈற்று வினைமுற்றுகள் காணப்படவில்லை. மேலும் 'கு' ஈறுபெற்ற செய்கு என்னும் அமைப்புடைய சொற்கள் முற்றாகச் செயற்படுவதோடு எச்சமாகவும் செயற்படுகின்றன. அவ்வாறு அமைந்து வருமிடங்களும் சங்க இலக்கியத்தில் மிகக் குறைவாகவே உள்ளன.

''காண்கு வந்தனென் யானே'' (பதிற். 88)

''காண்கு வந்திசினே'' (பதிற். 16, 41)

''நிற்காண்கு வந்திசின்'' (புறம். 125)

''மையலை மாதோ விடுகு என்றேன்''

இப்பாடல் அடிகளிலிருந்து 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்னும் கூற்று உண்மை என்பது புலனாகின்றது எவ்வாறெனில் செய்கென் கிளவி தொடர்ந்து இன்னொரு வினைகொண்டு முடியுமாயின் அதனைத் தொடர்ந்துவரும் வினை முற்றுகள் தன்மை ஒருமையாகவே உள்ளன. இச்செய்தியைத்தான் மேலை அடிகள் வெளிப்படுத்துகின்றன. இக்கருத்தினைத்தான் தொல்காப்பியர் அந்நூற்பாவில் கூறியுள்ளார் எனலாம். அதனால்தான் செய்கென் கிளவி வினையொடு முடியினும் அவ்வியல் திரியாது என்று கூறுகிறார்.

சங்க இலக்கியச் சான்றுகளினடிப்படையில் 'அவ்வியல் திரியாது' என்ற தொடருக்கு உரைகூறின் செய்கு அமைப்புடைய வினைச்சொல் இன்னொரு வினைச்சொல் கொண்டு முடியுமாயின் முடிக்கும் வினைச்சொல், செய்கு எவ்வாறு தன்மை ஒருமை வினைச்சொல்லோ அதனைப் போன்று தன்மை ஒருமை வினைச் சொல்லாகவே இருக்கும் . இரண்டு வினைமுற்றுகள் அடுக்கி வருமாயின் முந்தியதை எச்சம் என்றும், பிந்தியதை முற்று என்றும் கொள்ளலாம். இவ்வாறு வினைமுற்றுகள் அடுக்கி வருமாயின் முந்தியதை முற்றெச்சம் எனக் கொள்வர். பிற்கால இலக்கண உரைகாரர்களும், தொடர் அமைப்பு இலக்கணக்காரர்களும். மேலும் இளம்பூரணர், கல்லாடனார், நன்னூலார் ஆகியோரும் மேலை நூற்பாவிலிருந்து ஓர் ஒப்புமையாக்கமும் செய்துள்ளனர். தொல்காப்பியர் 'செய்கு' என்னும் ஒருமை வினைபற்றிக் கூறியதனால் உரைகாரர்களும், நன்னூலாரும் 'செய்கும்' என்னும் பன்மை வினையும் வினையெச்சமாக

வரும் என்று ஒப்புமையாக்கம் செய்துள்ளனர் எனலாம். ஆனால் 'செய்கும்' வினையெச்சமாகச் செயற்படுகின்ற நிலை சங்க இலக்கியத்துள் காணப்படவில்லை.

'செய்கு' அமைப்புடைய வினை எச்சம் எதிர்காலத்தை உணர்த்தி நிற்கின்றது. மேலும் காரணப்பொருட்டு வினையெச்சமாகவே செயல்படுகின்றது.

செய் + க் + உ

செய் - வினையடி

க் - எதிர்கால உருபன் (இறப்பல் கால உருபன்)

உ - வினை எச்ச விகுதி.

மாரைக் கிளவி

தொல்காப்பியர் பலர்பால் வினைமுற்று விகுதிகளை

''அர்ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே'' (தொ.சொ. 206)

என்றும், அடுத்த நூற்பாவில்

''மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப'' (தொ. சொ. 207)

என்றும் குறிப்பிடுவர். மேலும் மாரைக்கிளவி பல்லோர் படர்க்கை வினை முற்றாக மட்டுமல்லாது காலக்கிளவியொடும் முடியும் என்றும் கூறியுள்ளார்.

இந்நூற்பாவுக்கு இளம்பூரணர், 'மார் என்பதூஉம் உயர்திணைப் படர்க்கைப் பன்மைக்கு உரித்து; அது பின்னை முடியுங்காலை வினைச்சொல்லோடு முடிதல் உடைத்து.

(வ.று) ஆர்த்தார் கொண்மார் வந்தார் என வரும்' என்றும், சேனாவரையர், 'முன்னையனவேயன்றி மாரீற்றுச் சொல்லும் பல்லோர் படர்க்கை உணர்த்தும். அது அவை போலப் பெயர் கொள்ளாது வினை கொண்டு முடியும்.

(எ-டு) எள்ளுமார் வந்தார், கொண்மார் வந்தார் என வரும்' என்றும்;

தெய்வச்சிலையார் 'மார் ஈற்று வினைச் சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம்; அது பெயரொடு முடிதலேயன்றி வினையொடும் முடியும் என்று சொல்லுவார்; (எ-டு) ஆ கொண்மார் வந்தார். இது வினையொடு முடிந்தது. 'பாடில் மன்னரைப் பாடன்மார் எமரே' இது பெயரொடு முடிந்தது.

'இதனையும், செய்கு என்பதனையும் வினையெச்சம் என்றதனாற் குற்றம் என்னை எனின் வினையெச்சம் பால் தோன்றாது. இவை பால் தோன்றலின் முற்று எனல் வேண்டும்' என்றும் கூறுவர்.

நச்சினார்க்கினியர், சேனாவரையர் உரையினை அவ்வாறே எடுத்தோதியுள்ளார்

கல்லாடனாரும் சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகளையே பின்பற்றி எழுதியுள்ளார்.

உரைகாரர்கள் 'மார்' ஈற்று வினைச்சொல் இன்னொரு வினைகொண்டு முடியப்பெறினும் தம்முடைய வினை முற்றாகும் நிலையினின்றும் திரியாது என, செய்கென் கிளவிக்குக் குறிப்பிட்டது போலவே கூறியுள்ளனர். மேலும் சான்றுகள் அனைத்தையும் மார் ஈற்று வினைச்சொல்லைத் தொடர்ந்துவரும் வினைச்சொல்லானது பலர் பால் வினைமுற்றுச் சொல்லாக வரும் என்பதாகவே காட்டியுள்ளனர்.

''ஒழியச் சென்மார் செல்ப'' (அகம். 285)

''கண்பனி துடைமார் வந்தனர் விரைந்தே'' (அகம். 269)
''மாலை நனி விருந்து அயர்மார்

''தேர்வரும் என்னும் உரைவா ராதே'' (குறுந். 155)

''கடவுள் ஓங்குவரை பேண்மார் வேட்டெழுந்து
கிளையொடு மகிழும் குன்ற நாடன்'' (நற். 165)

*''கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண் டழிக்கும் ஆவண மாக்களின்''* (அகம். 77)
*''துறைநணி மருத மேறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி இசைப்பிற்''* (பதிற். 27)

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'மார்' ஈற்று வினைச் சொற்கள் காணப்படுகின்றன. அவைகள் வினைமுற்றாகவும், வினையாலணையும் பெயராகவும், வினையெச்சமாகவும் செயற்படுகின்றன என்பதே மேலைச் சங்கப் பாடல்கள் அடிகளிலிருந்து புலனாகும் உண்மையாகும். 'மார்' ஈற்று வினைச் சொற்கள் இன்னொரு வினையைத் தழுவுமாயின் அவ்வினை, வினைமுற்றாக மட்டுமல்லாமல் வினையெச்சமாகவோ பெயரெச்சமாகவோ உள்ளன என்பதே. மார் ஈற்றுச் சொல்லை முடிக்கும் சொல் முற்றாக இருத்தல் வேண்டுவதில்லை. எனவேதான் தொல்காப்பியரும் ''காலக் கிளவியொடு முடியும் என்ப'' என்று கூறினார் போலும். மேலும் செய்கென் கிளவி பற்றிய நூற்பாவும், மாரைக் கிளவி பற்றிய நூற்பாவும் ஒன்றையொன்று விளக்குவனவாக உள்ளன எனலாம். செய்கென் கிளவி பற்றிய நூற்பாவில் கூறிய

'அவ்வியல் திரியாது' என்ற தொடரினை விளக்க மாரைக்கிளவி நூற்பாவும் ஒரு சான்றாக உள்ளது. எவ்வாறெனின் செய்கென் கிளவி வினைகொண்டு முடியும் பொழுது முடிக்கும் வினை அவ்வியல் திரியாமல் தன்மை ஒருமை வினைமுற்றாக இருத்தல் வேண்டும் என்றும் மாரைக்கிளவி ஏதேனும் ஒருவினை வினைகொண்டு முடியப்பெறும் என்றும் அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் மார் ஈற்று வினையெச்சம் காரணப் பொருட்டு வினையெச்சமாகச் செயல்படுகின்றது. (செய்-ம்-ஆர்) மேலும் செய்கென் கிளவியும், மாரைக் கிளவியும் ஒரு காலத்து வினைமுற்றுதான்; காரணப்பொருட்டு வினையெச்சமாகியது என்னும் கருத்தினையும் வலியுறுத்துகின்றது. இதனால்தான் நன்னூலாரும் 'வினைமுற்றே வினையெச்ச மாகலும்' என்று குறிப்பிட்டார் போலும். இன்றைய மாற்றிலக்கண மொழியியலாரும்கூட வினையெச்சங்கள் எல்லாம் முற்றுவின் மாற்றமே என்று கூறுவதும் இதனை உறுதி செய்கின்றது.

கூட்டு வினையெச்சங்கள் (Compound Verbal Participles)

தொல்காப்பியர் வினையெச்சங்களைத் தொகுத்துக் கூறிய பின்னர் அதனை அடுத்து

> ''பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
> அன்ன மரபின் காலங் கண்ணிய
> என்ன கிளவியும் அவற்றியல் பினவே'' (தொ.சொ.229)

என்றும் சில வினையெச்சங்களைக் குறிப்பிட்டுள்ளார். இங்கே கூறப்பட்டுள்ள பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் சொற்கள் மட்டும் வினையெச்சமாக வாரா. இவ்வாறு சொற்களும் பெயரெச்சத்தினைத் தொடர்ந்து நின்று ஈறாக அமைந்து இருசொல்லும் இணைந்து நின்றே வினையெச்சப் பொருள் உணர்த்தும். அதனால் இவ்வகை வினையெச்சங்களைக் கூட்டு வினையெச்சங்கள் (Compound Verbal participle) என்றழைக்கலாம்.

பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் ஆறு சொற்களும் பெயர்ச்சொற்களாம். ஆனால் இவை காலத்தினைச் சுட்டும் பெயர்ச் சொற்களாம். இப்பெயர்ச் சொற்கள் பெயரெச்சங்களைத் தொடர்ந்து நின்று வினையெச்சமாகச் செயற்படும் பொழுதும் ஏனைப் பெயர்கள் பெயரெச்சத்தினைத் தொடர்ந்து நிற்கும் பொழுதும் பெயரெச்சத்திற்கும், பெயருக்கும் இடையே இடைவெளி காணப்படுவது போன்று பெயரெச்சத்திற்கும் இப்பெயர்களுக்கும் இடையே இடைவெளி காணப்படாது. இக்கருத்தினை உரைகாரர்களுள் கல்லாடனாரும், பேராசிரியர்கள் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும், ச. அகத்தியலிங்கமும் குறிப்பிட்டுள்ளனர்.

வந்த முருகன் என்பதிலிருந்து வந்தக்கால் என்பது வேறுபாடுடையது.

வந்த முருகன்

வந்தக்கால்

தொல்காப்பியர் இவ்வாறு சொற்களும் பெயரெச்சத்தினைத் தொடர்ந்து ஈறாகி நின்று வினையெச்சங்களாகச் செயற்படும் என விரித்துக் கூறாவிடினும், உரையாசிரியர்கள் காட்டும் சான்றுகளும் சங்க இலக்கியத்தில் அவை பயின்று வந்துள்ளமையும் அவ்வாறு சொற்களும் பெயரெச்சத்தினைச் சார்ந்து நின்றுதான் வினையெச்சமாகச் செயற்படும் என்பதை உறுதி செய்கின்றன.

பின்

கண்ட பின்னே (குறுந். 306)

கிளந்த பின் (குறுந். 374)

தீர்ந்த பின் (பதிற். 68)

சங்க இலக்கியத்தில் 'பின்' என்னும் வடிவம் 'செய்த' அமைப்புடைய பெயரெச்சத்தோடு இணைந்து நின்றே வினையெச்சமாகச் செயற்படுகிறது.

பின்றை

கழிந்த பின்றை (நற். 126)

முடித்த பின்றை (நற். 102)

கழிப்பிய பின்றை (பொரு. 52, 102)

நீங்கிய பின்றை (மது. 404)

சங்க இலக்கியத்தில் 'பின்றை' என்னும் வடிவமும் பின், போன்று, செய்த, செய்யிய அமைப்புடைய பெயரெச்சங்களின் பின் இணைந்து வினையெச்சமாகச் செயற்படுகிறது.

பின்னர்

கொடுத்த பின்னர் (குறி. 174)

சங்க இலக்கியத்தில் 'பின்னர் என்னும் வடிவமும் செய்த அமைப்புடைய பெயரெச்சத்தின் பின் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

தொல்காப்பியர் பின்றை, பின்னர் என்னும் வடிவங்கள் பற்றிக் குறிப்பிடவில்லை. பின்றை, பின்னர் என்பவைகளைப் பின் என்பதன் மாற்று வடிவங்களாகக் கொள்ளலாம்.

முன்

கூறா முன் (பரி. 10)

என்னா முன் (பரி. 20)

மணவா முன் (அகம். 291)

சங்க இலக்கியத்தில் 'முன்' என்னும் வடிவம் 'செய்யா' அமைப்புடைய எதிர்மறைப் பெயரெச்சங்களின் பின்னரே இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

முன்னர்

புகழும் முன்னர் (குறுந். 252)

சொல்லா முன்னர் (குறுந். 256)

சங்க இலக்கியத்தில் 'முன்னர்' என்னும் வடிவமும் 'செய்யும்' அல்லது 'செய்யா' அமைப்புடைய பெயரெச்சங்களின் பின் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

தொல்காப்பியர் முன்னர் என்னும் வடிவம் பற்றிக் குறிப்பிடவில்லை. 'முன்னர்' என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிட்ட 'முன்' என்பதன் மாற்று வடிவமாகக் கொள்ளலாம்.

கால்

கொண்டக்கால் (கலி. 8)

ஒளிந்தக்கால் (கலி. 15)

தொலைந்தக்கால் (கலி. 15)

நாடுங்கால் (கலி. 16)

கொடுக்குங்கால் (கலி. 22)

சுலுழாக்கால் (கலி. 53)

இழவாக்கால் (கலி. 53)

ஆற்றாக்கால் (கலி. 53)

சங்க இலக்கியத்தில் 'கால்' என்னும் வடிவம் செய்த, செய்யும், செய்யா என்னும் அமைப்புடைய பெயரெச்சங்களின் பின்னர் இணைந்து நின்றே வினையெச்சமாகச் செயற்படுகிறது.

காலை

வந்தகாலை (அகம். 210) நின்ற காலை (பொரு. 89)

ஆகியகாலை (நற். 243) பெயரும்காலை (அகம். 318)

கார் செய் காலை (அகம். 314) நீர் திகழ்காலை (அகம். 234)

முரண் இல் காலை (அகம். 125) பண்புஇல் காலை (பொருள் 237)

சங்க இலக்கியத்தில் 'காலை' என்னும் வடிவம் செய்த, செய்யும், செய் அமைப்புடைய பெயரெச்சங்களின் பின்னரும் 'இல்' எனும் சொல்லின் பின்னரும் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

தொல்காப்பியர் 'காலை' என்னும் வடிவம் பற்றிக் குறிப்பிடவில்லை. காலை என்பதனைக் 'கால்' என்பதன் மாற்று வடிவமாகக் கொள்ளலாம்.

கடை

வந்தக் கடை (கலி. 22) நீத்தக் கடை (கலி. 147)
மேவாக் கடை (கலி. 62) காணும் கடை (கலி. 87)

சங்க இலக்கியத்தில் 'கடை' என்னும் வடிவம் செய்த, செய்யும், செய்யா அமைப்புடைய பெயரெச்சங்களின் பின்னர் இணைந்து நின்றே வினையெச்சமாகச் செயற்படுகிறது.

வழி

கொண்ட வழி (கலி. 12) புனைந்த வழி (கலி. 1414)
நண்ணு வழி (பொரு. 76) உள் வழி (கலி. 144)
இல் வழி (கலி. 87)

சங்க இலக்கியத்தில் 'வழி' என்னும் வடிவம் செய்த, செய்யும் அமைப்புடைய பெயரெச்சங்களின் பின்னரும் உள், 'இல்' என்னும் சொற்களின் பின்னரும் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

இடத்து

அளவிய இடத்தும் (தொ.பொ. 144)

ஆகிய இடத்தும் (தொ.பொ. 145)

சங்க இலக்கியத்தில் 'இடத்து' என்னும் வடிவம் பெயரெச்சத்தோடு இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படும் இடங்கள் காணப்படவில்லை. ஆனால் தொல்காப்பியர் மொழியில் ஒரு சில இடங்களில் 'இடத்து' என்னும் வடிவம் 'செய்யிய' அமைப்புடைய பெயரெச்சங்களின் பின்னர் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

மேலும் சங்க இலக்கியத்தில் ஞான்று, ஞான்றை, ஊங்கு போன்ற காலம் உணர்த்தும் சொற்கள் முன்னையன போலப் பெயரெச்சங்களைத் தொடர்ந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகின்றன.

ஞான்று

வந்த ஞான்று (நற். 386) கொண்ட ஞான்று (கலி. 103)
எய்திய ஞான்று (புறம். 364) விளங்கும் ஞான்று (அகம். 3)

சங்க இலக்கியத்தில் 'ஞான்று' என்னும் வடிவம் செய்த, செய்திய, செய்யும் அமைப்புடைய பெயரெச்சங்களின் பின்னர் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

ஞான்றை

வந்த ஞான்றை (அகம். 400) சென்ற ஞான்றை (புறம். 390)

சங்க இலக்கியத்தில் 'ஞான்றை' என்னும் வடிவம் செய்த அமைப்புடைய பெயரெச்சத்தின் பின்னர் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

ஊங்கு

காணா ஊங்கு (நற். 101) பரவா ஊங்கு (பதிற். 29)

சங்க இலக்கியத்தில் 'ஊங்கு' என்னும் வடிவம் செய்யா என்னும் எதிர்மறைப் பெயரெச்சங்களின் பின்னர் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது.

தொல்காப்பியம் குறிப்பிடாத ஞான்று, ஞான்றை, ஊங்கு என்னும் வடிவங்கள் ஒருகால் பிற்காலத்துத் தோன்றியனவாக இருக்கலாம்.

தொல்காப்பிய உரைகாரர்களும் வினையெச்சங்களும்

தொல்காப்பிய உரைகாரர்கள் வினையெச்ச நூற்பாக்களுக்கு உரை வரைந்த பொழுது வேறுசில வினையெச்சங்களையும் சுட்டியுள்ளனர். இளம்பூரணர் பான், பாக்கு என்பன வினையெச்ச ஈறுகளாய் அமைந்து வரும் எனக் கூறியுள்ளார். சேனாவரையர் பாக்கு, ஆன், உம், ஆல், மல், மை என்பவை வினையெச்ச ஈறுகளாய் அமைந்துவரும் எனக் கூறியுள்ளார். தெய்வச்சிலையார் உம், மல், மை, கிற், இன்றி, அன்று, இனி, நனி என்பவைகள் வினையெச்ச ஈறாகவோ வினையெச்சமாகவோ வரும் எனக் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் உம், ஏல், ஏன் ஆல், ஆயினும், ஆனும், மல், மை, பான், பாக்கு, வான், வாக்கு, அல்லது, அல்லால் என்பன வினையெச்ச ஈறாகவோ வினையெச்சமாகவோ வரும் எனக் கூறியுள்ளார். கல்லாடனார் ஆல், உம், ஏல், ஏன், ஆயினும், அல்லால், பான், பாக்கு, வான், வாக்கு என்பன வினையெச்ச ஈறாகவோ, வினையெச்சமாகவோ செயற்படும் எனக் கூறியுள்ளார்.

உரைகாரர்கள் காட்டிய வினையெச்சங்கள் பெரும்பான்மையும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. உரைகாரர்கள் குறிப்பிடாத சில வினையெச்சங்களும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

வான்

''நீக்குவான் பாய்வாள்'' (பரி. 7)

பான்

''காண்பான்யான் தங்கினேன்'' (கலி. 97)
''புது நாண் நுழைப்பான் நுதிமாண் வள்ளுகிர்'' (குறுந். 67)

வான், பான் ஈற்று வினையெச்சங்கள் காரணப் பொருட்டு வினையெச்சங்களாகச் செயற்படுகின்றன.

ஆல்

என்னுமால் (கலி. 94) தேய்மால் (கலி. 49) என்றால் (கலி. 6)

ஏல்

''திறன் உண்டேல் உரைத்ததைக் காண்'' (கலி. 38)
''வல்லை நீ துறப்பாயேல்'' (கலி. 3)
''செல்லா விடுவாயேல்'' (கலி. 93)

மல்

''நொந்து உரையாமல் பெறுகற்பின்'' (கலி. 77)
''கூறாமல் கூறித் தன்மேல் செல்லும்'' (கலி. 1)

மை

''தொன்னசைக் காவாமை நன்னன் பறம்பில்'' (அகம். 356)

'மறைபிறர் அறியாமை மாணா நோய் உழந்ததை' (கலி. 132)

உம்

''நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே'' (கலி. 39)

இவ்வடியினைச் சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் 'உம்' ஈற்று வினையெச்சத்திற்குச் சான்றாகக் காட்டியுள்ளனர். இது மேலும் ஆய்விற்குரியது.

ஆயினும்

''ஆற்றார் ஆயினும் ஆண்டுவாழ் வோரே'' (புறம். 26)
''நான்குடன் மாண்டது ஆயினும்'' (புறம். 55)
''மொழி பெயர் தேஎத்தர் ஆயினும்'' (அகம். 127)

ஆயின்

உணராராயின் (ஐங். 472)
உணரும் ஆயின் (குறுந். 111)
என்றி ஆயின் (நற். 276)
உண்ணாய் ஆயின் (புறம். 270)
கழிப்பினம் ஆயின் (நற். 152)
கண்டனிர் ஆயின் (அகம். 130)
உண்டு ஆயின் (அகம். 130)

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் 'ஆயின்' என்னும் சொல் வினை முற்றுகளைத் தொடர்ந்து நின்று வினையெச்சமாகிச் 'செயின்' அமைப்புடைய வினையெச்சம் போன்று கடப்பாட்டு வினையெச்சமாகச் செயற்படுகிறது.

ஆய்

காணாள் ஆய் (கலி. 126)
உடையை ஆய் (பதிற். 37)
காணாவாய் (கலி. 13)

ஆகி

காணாவாகி (புறம். 381)
அறியாய் ஆகி (அகம். 136)
உணரா ஆகி (நற். 326)
அறியேம் ஆகி (குறி. 166)

ஆய், ஆகி என்னும் வடிவங்களும் வினைமுற்றுகளுடன் இணைந்து நின்று வினை எச்சங்களாகச் செயற்படுகின்றன. இவைகளின் செயற்பாடு 'செய்து' அமைப்புடைய வினையெச்சங்கள் போன்று உள்ளன.

ஆக

கவையினன் ஆக (நற். 128)
யாமே யெமியம் ஆக (அகம். 33)
கொள்ளா வாக (புறம். 116)

ஆக என்னும் சொல்லும் வினைமுற்றுகளுடன் இணைந்து நின்று வினையெச்சமாகச் செயற்படுகிறது. இதன் செயற்பாடு 'செய்' அமைப்புடைய வினையெச்சம் போன்று உளது.

அல்லது

''பெருந்தோள் குறுமகள் அல்லது
மருந்துபிறிது இல்லையான் உற்ற நோய்க்கே'' (நற். 80)
''ஆவோடு அல்லது யகரம் முதலாது'' (தொ. எ. 65)
''இரங்குநர் அல்லது பெயர் தந்து யாவரும்
தருநரும் உளரோஇவ் வுலகத் தானே'' (அகம். 75)

அல்லால்

''பொருள் அல்லால் பொருளும் உண்டோ'' (கலி. 51)
''புறம் காண்டல் அல்லால்'' (கலி. 53)
''பகை அல்லால் நேராதார்'' (கலி. 67)

சங்க இலக்கியத்தில் அல்லது, அல்லால் என்னும் வடிவங்களும் வினையெச்சமாகச் செயற்படுகின்றன.

செய்யாது அமைப்பு வினையெச்சம்

''தன்னை அறியாது சென்றேன்'' (கலி. 51)
''நீ அருளாது துறத்தலின்'' (கலி. 53)
''மீப்பாய் களையாது மிசைப்பரம் தோண்டாது
புகார்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்'' (புறம். 30)

மேலை அடிகளில் அமைந்துள்ள அறியாது, அருளாது, களையாது, தோண்டாது என்னும் சொற்கள் வினையெச்சங்களாகச் செயற்படுகின்றன. இவைகளைச் 'செய்யாது' அமைப்புடைய வினையெச்சங்கள் எனக் கூறலாம். மேலும் இவ்வகை வினையெச்சங்கள் எதிர்மறை வினையெச்சங்களாகும். தொல்காப்பியர் எதிர்மறை வினையெச்சங்களைப் பற்றி விரித்துக் கூறாவிடினும் எதிர்மறை வினையெச்சங்களும் உண்டு என உணர்த்தியுள்ளார் என்பதை

''பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா.''
(தொ.சொ. 236)

என்னும் நூற்பாவினால் உணர முடிகிறது.

சங்க இலக்கியத்தில் 'செய்யாது' போன்று எதிர்மறை வினையெச்சங்களாக மை, மல் ஈற்று வினையெச்சங்களும், அல்லது, அல்லால் என்னும் (அல்லெனும் எதிர்மறையடியாகத் தோன்றும்) சொற்களும் செயற்படுகின்றன.

வினைமுற்றுகள் வினையெச்சங்களாதல் (Finite verbs as verbal participles)

சங்க இலக்கியத்தில் சில பாடல்களில் இரு முற்றுகள் ஒன்றையொன்று அடுத்து வந்துள்ளன. அவ்வாறு அமைந்து வரும்பொழுது முதலில் அமைந்துள்ள முற்றுவினையை வினை எச்சமெனக் கொள்ளலாம். இவ்வாறு அமைந்துவரும் எச்சங்களைப் பிற்கால உரைகாரர், இலக்கணக்காரர் முற்றெச்சம் என்பர். அவைகளையும் வினையெச்சமாகக் கொள்ளலாம்.

'பாடுதும் தொழுதும்'	(பரி. 17)
'தந்தனை சென்மோ'	(ஐங். 159)
'அறிந்தனை சென்மே'	(நற். 247)
'இறைஞ்சினம் வாழ்த்தினம்'	(பரி. 13)
'தொழுதனிர் சென்மின்'	(பரி. 15)

வினை அடி+செய அமைப்பு வினையெச்சம் (Verbal root + "ceya' pattern)

சங்க இலக்கியத்தில் வினை அடிகளுடன் 'செய' அமைப்புடைய வினையெச்சங்கள் தொடர்ந்து இரண்டும் ஒன்றாக இணைந்து நின்று கூட்டு வினையெச்சங்களாகச் செயற்படுகின்றன. இவ்வகை வினையெச்சங்களின் செயற்பாடு 'செய' அமைப்புடைய வினையெச்சங்களின் செயற்பாடு போலவே உள்ளது.

காண்வர	(ஐங். 418)
அசைவர	(நற். 20)
அசைவிட	(அகம். 295)
அடைதர	(குறி. 184)
அணவர	(பரி. 1)
அழிதக	(அகம். 40)
அறிவுற	(கலி. 122)

வினை யெச்சங்கள் அடுக்கி வருதல்

தொல்காப்பியர் வினையெச்சங்கள் அடுக்கியும் வரலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

''பன்முறையானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே'' (தொ. சொ. 233)

அவ்வாறு வினையெச்சங்கள் அடுக்கி வரும் பொழுது, ஈற்று வினையெச்சம் பொருள் முடிக்கப்படும் பொழுதுதான் ஈற்றின் முன்னர்

அமைந்து உரைகாரர்வந்துள்ள வினையெச்சங்களும் பொருள் முடிபைப் பெறும் என்று உரை கூறுவர்.

சங்க இலக்கியத்துள்ளும் வினையெச்சங்கள் அடுக்கி வந்துள்ளன.

''குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை.......'' (புறம். 188)

'கை தொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்' (மலை. 360)

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளிலிருந்து தொல்காப்பியர் கூறிய வினையெச்சங்கள் பெரும்பாலும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன என்பதையும் மேலும் அவர் குறிப்பிடாத வினை யெச்சங்களும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன என்பதையும் சங்க இலக்கியத்தில் அமைந்து வந்துள்ள வினையெச்சங்கள் பல்வேறு அமைப்புகளையும், ஈறுகளையும் கொண்டனவாக உள்ளன என்பதையும் உணரலாம். வினையெச்சம் இவ்வாறு பல்வேறு வகையான ஈற்றினைக் கொண்டதாக இருக்கும் எனக் கருதித்தான் தொல்காப்பியரும் எச்சவியலில்

''வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய'' (தொ.சொ. 457)

என்று கூறினார் போலும்.

இயல் மூன்று

தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இயல் மூன்று

தமிழ் எழுத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

இப்பூவுலகில் மனிதன் தான் பார்த்த உருவத்தை என்று மணற்பரப்பின் மீதோ மலைப் பாறையின் மீதோ வரையத் தொடங்கினானோ அன்றே எழுத்துத் தோற்றம் பெற்று விட்டதெனக் கூறலாம். இதற்கு அடுத்த கட்டமாகத் தான் கண்ணுற்ற ஒன்றைப் பிறருக்குப் புலப்படுத்த விரும்பியவன் உருவம் மூலம் விளக்கிக் கூற முனைந்தபோது செய்திப் பரிமாற்றத்துக்கு உருவம் துணைபுரியலா யிற்று. எழுத்தின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றி அண்மைக் காலங்களில் நடந்துள்ள ஆய்வுகள் பின்வரும் முடிவுகளைத் தெரிவித்துள்ளன.

முதன்முதலில் உருவ எழுத்துகள் (Pictograph) தோன்றியிருக்க வேண்டும். பின்னர் அதிலிருந்து கருத்தெழுத்துகள் (Ideograph) வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இறுதியாக ஒலியெழுத்துகள் (Phonograph) நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

எழுத்துத் தோற்றத்தில் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தமிழர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே கண்டறிந்துள்ளனர். தமிழிலக்கண நூலான யாப்பருங்கலத்துக்கு உரை எழுதிய ஆசிரியர் அதன் இறுதிச் சூத்திரத்துக்கு விளக்கம் கூறுகையில் கீழ்வரும் பாடலை மேற்கோள் காட்டியுள்ளதன் மூலமாக இதனை அறிய முடிகிறது.

> 'உருவே உணர்வே ஒலியே தன்மையென
> இருவகை யெழுத்தும் ஈரிரண்டாகும்'

எழுத்தானது உரு, உணர்வு, ஒலி, தன்மை என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்பதை இது சுட்டுகிறது. ஒவ்வொரு வகை எழுத்துக்கும் விளக்கமான பாடல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

> 'காணப் பட்ட உருவம் எல்லாம்
> மாணக் காட்டும் வகைமை நாடி
> வழுவில் ஓவியன் கைவினை போல
> எழுதப் படுவது உருவெழுத் தாகும்'

உருவ எழுத்து எவ்வாறு எழுதப்பட்டது என்பதை மேற்காணும் பாடல் புலப்படுத்துகிறது. உணர்வு, ஒலி, தன்மை எழுத்துக்கான விளக்கப் பாடல்களும் கீழ்வருமாறு காணப்படுகின்றன.

> 'கொண்டவோர் குறியால் கொண்ட வதனை
> உண்டென் றுணர்த்துவது உணர்வெழுத் தாகும்'

'இசைப்படு புள்ளின் எழா அல் போலச்
செவிப்புல னாவது ஒலியெழுத் தாகும்'

'முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய வுணர்வும்
அவற்றொடு புணர்ந்த வகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந்திசைப்பது தன்மை யெழுத்து'

நன்னூலுக்கு எழுதப்பெற்ற மயிலைநாதர் உரையிலும் எழுத்தின் வளர்ச்சிக்குச் சில நூற்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இந்நூற்பாக்கள் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவாமிநாத தேசிகரால் எழுதப்பெற்ற இலக்கண நூலிற்குக் கூறப் பெற்றுள்ள உரையின் பாயிரத்திலும் காணப்படுகின்றன.

அவற்றில் ஒன்று கீழ்வருமாறு:

''வடிவு பெயர் தன்மையுண் முடிவு நான்கா
நடைபெறு நாவலர் நாடிய வெழுத்தே''

வடிவு, பெயர், தன்மை, (உண்) முடிவு என நால்வகை எழுத்துகள் வழங்கின என்பதை இந்நூற்பா தெரிவிக்கிறது. மேலும் ஒவ்வொரு வகை எழுத்தையும் விளக்கும் வண்ணம் கீழ்வரும் நூற்பாக்கள் தரப்பட்டுள்ளன.

''கட்புல னில்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
உட்கொளற் கிடும்உரு பாம்வடி வெழுத்தே''

''வடிவுமுதன் மும்மையின் வழங்கும் எழுத்திற்
படுபல பகுதிக் கிடுபெயர் பெயரே''

''தான முயற்சி தரக்கொளச் செவிப்புலன்
ஆயவொலி தன்மை யெழுத்தா கும்மே''

''உருவமுடன் மும்மையோ டொன்றிய வியல்பை
மருவவுளன் துணிவ துண்முடி வெழுத்தே''

கி.பி. 8ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் தமிழ் நிகண்டான **திவாகரம்** ,

''பெயர்எழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
எழுத்தென வெழுத்தின் பெயர் இயல்பி னாரே''

என்று எழுத்துகளின் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

மற்றொரு நிகண்டான **பிங்கலந்தை** 'வடிவு, பெயர், தன்மை, முடிவு என நான்கெழுத்து' என்று கூறுகிறது. இந்நிகண்டுகள் மேற்கூறப்பட்ட எழுத்தின் நான்கு கட்ட வளர்ச்சியைத்தான் தெரிவிக்கின்றன.

கிறித்து ஆண்டுத் தொடக்கத்துக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பும், சில நூற்றாண்டுகளுக்குப் பின்பும் இந்தியாவில் வழக்கில் இருந்த எழுத்துகளைப் பற்றிக் கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **சமவயங்க சுத்த** என்ற சமண நூலும், கி.பி. 3ஆம் நூற்றாண்டினது எனக் கருதப்படும் **லலிதவிஸ்தர** என்ற பௌத்த நூலும் குறிப்பிடுகின்றன. சமண நூலில் 18 வகையான எழுத்துகளும், பௌத்த நூலில் 64 வகையான எழுத்துகளும் தரப்பட்டுள்ளன.

எழுத்தில் ஏற்பட்ட நான்கு கட்ட வளர்ச்சியைத் தெரிவிக்கும் நூற்பாக்களையடுத்து, யாப்பருங்கலவிருத்தியில் பின்வருமாறு காணப்படுகின்றது.

''(மகடூஉ, ஆ, பிடி, குமரி, கன்னி, பிணவு, முடுவன் என்றின்ன சிலவெழுத்தும்) அ, க, ச, ட, த, ப, ய முதலிய ஆய வெழுத்தும்அ, ச, ல, வ, ர, ங, ய முதலிய இராசியெழுத்தும், கார்த்திகை முதலிய நாளெழுத்தும்,தோப முதலிய நால்வகை எழுத்தும், சாதி முதலிய தன்மையெழுத்தும், உச்சாடன முதலிய உக்கிரவெழுத்தும், சித்திர காருடன் முதலிய முத்திறவெழுத்தும், பாகியல் முதலிய நால்வகையெழுத்தும், புத்தேள் முதலிய நாற்கதியெழுத்தும், தாது முதலிய வொளியெழுத்தும், மாகமடையம் முதலிய சங்கேதவெழுத்தும், கலி முதலிய சங்கேதவெழுத்தும், பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் என்று இத்தொடக்கத்தனவும் கட்டுரையெழுத்தும் வச்சிர முதலிய வடிவெழுத்தும் மற்றும் பல வகையாற் காட்டப்பட்ட எல்லா எழுத்தும் வல்லார்வாய்க் கேட்க''. இதில் பதினைந்து வகையான எழுத்துகள் குறிக்கப்பட்டுள்ளன.

மேற்காணும் எழுத்துகளுக்கு இன்னமும் முழுமையான விளக்கம் யாராலும் தரப்படவில்லை. தி.நா. சுப்பிரமணியம் 1933 ஆம் ஆண்டில், தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் சித்திர எழுத்துகள் (The pictographs in Tamil Literature) என்னும் கட்டுரையில் இவைபற்றி எழுதியுள்ளார். மேலும் தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் பாகம் -3 பகுதி 2 இல் சில சித்திர எழுத்துகளை, மேற்காணும் சமண, பௌத்த நூல்களில் தரப்பட்டுள்ள சில எழுத்துகளோடு ஒப்பிட்டுக் கீழ்க்காணுமாறு விளக்கியுள்ளார்:

ஆயவெழுத்து : ஆயம் என்ற சொல் வருமானம், இலாபம் முதலான பொருள்களைத் தரும். கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் இச்சொல் வரிகள், நுழைவு வரி மற்றும் சுங்க வரியைக் குறிப்பதற்குக் கையாளப்பட்டுள்ளது. சமண நூலில் 'ஆயஸ' அல்லது 'ஆதம்ஸ' எழுத்து என்று ஒன்று குறிக்கப்படுகிறது. 'ஆதம்ஸ' என்ற சொல் சில இடங்களில் 'பொறித்த' என்னும் பொருளில் வழங்கப்பட்டிருக்கிறது. 'அய' என்றால் இரும்பு என்று பொருள். ஆதலால் இரும்பால் பொறிக்கப்பட்ட எழுத்து

என்று பொருள் கொள்ளலாம். தமிழில் வழங்கப்பட்ட 'ஆயம்' என்ற எழுத்தும், 'ஆயஸ' எழுத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

இராசியெழுத்து . 'ராசி' என்னும் சொல் இராசி மண்டலத்தையும் குறிக்கும். இராசியையும், நட்சத்திரத்தையும் குறிக்க வான இயலும், சோதிட இயலும் சில உருவங்களைக் குறிக்கின்றன பண்டைக் காலத்திலேயே மேற்கூறப்பட்ட இரு இயல்களும் மிகுந்த முன்னேற்ற நிலையில் வளர்ச்சி பெற்றிருந்தன இத்தகைய வளர்ச்சி சில குறியீடுகளையும், படங்களையும் பயன்படுத்துவதற்குக் காரணமாக அமைந்திருக்கும் ஆதலால் இத்தகைய படங்களோ குறியீடுகளோதான் 'இராசி எழுத்து' என வழங்கப்பெற்றிருக்கும்.

நாள் எழுத்து : நாள் என்னும் சொல் ஒருபகல், ஓர் இரவு சேர்ந்த நாளைக் குறிக்கும். முற்காலத்தில் இச்சொல் நட்சத்திரத்தையோ அல்லது நாளையோ குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இராசியைக் குறித்த நாள் என்னும் சொல்லையே மக்கள் ஒரு பகல் ஓர் இரவைக் குறிக்கப் பயன்படுத்தியிருப்பர் எனத் தெரிகிறது. '' நாள் என் செயும் கோள் என் செயும்'' என்ற தொடரில் நாள் என்பது இராசியையும், கோள் என்பது கிரகத்தையும் குறிப்பதாக உணரலாம். ஆதலால் இராசி போன்ற உருவ எழுத்தைக் குறிக்கப் பயன்பட்டதையே 'நாள் எழுத்து' என்று வழங்கியிருக்கின்றனர்.

மேற்கூறப்பெற்ற எழுத்துகள் எவ்வாறு வரையப் பெற்றிருக்கலாம் என்பதற்குச் சான்றாக மொகஞ்சதாரோவிலும், அரப்பாவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ள உருவ எழுத்துகளைக் குறிப்பிடலாம். அத்தகைய உருவ எழுத்துகள் குசராத் மாநிலத்திலுள்ள லோத்தல், குவாரகா முதலிய இடங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஓவியத்தில் காணப்பெறும் உருவ எழுத்து

தமிழகத்தில் முதன் முதலாக இத்தகைய உருவ எழுத்துகள் விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கீழ்வாலை என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பண்டைய ஓவியத்தில் காணப்படுகின்றன இதில் ஐந்து எழுத்துகள் உள்ளன. முதல் எழுத்து தென்னங்கீற்று போன்றும், இரண்டாம் எழுத்து மத்தளம் போன்றும், மூன்றாம் எழுத்து சீப்பு போன்றும், நான்காம் எழுத்து மத்தளம் போன்றும், ஐந்தாம் எழுத்து நான்கு குறுக்குக் கால்களையுடைய சக்கரம் போன்றும் எழுதப்பட்டுள்ளன. இவ்வெழுத்துகள் இங்குள்ள ஓவியங்களை வரைந்தவனின் பெயராக இருக்கலாம் என்றும், கி.மு. 1000 விருந்து கி.மு. 500 ஆண்டுகட்கு உட்பட்டதாக இருக்கலாம் என்றும் பி.எல்.சாமி குறிப்பிட்டுள்ளார்.

பானை ஓடுகளில் காணப்பெறும் உருவ எழுத்துகள்

தமிழகத்தில் எந்தப் பகுதியில் அகழாய்வு நடத்தப்பெற்றாலும் அங்கெல்லாம் கருப்பு- சிவப்பு (Black and Red ware) பானைகளோடு சில உருவங்கள் வரையப்பெற்ற பானை ஓடுகள் பெரும்பாலும் பெருங்கற்காலப் பொருட்களோடே கிடைத்து வருகின்றன. ஆதலால் பெருங்கற்கால மக்கள் இவ்வுருவங்களை வரைந்திருக்கின்றனர் என்று உறுதியாகக் கூறலாம். இவ்வுருவங்களும் உருவ எழுத்தின் (Pictograph) தொடர்ச்சியே என்று கருதலாம். இக்காலக் கட்டத்தில் இவ்வெழுத்துகள் ஒலி வடிவம் (Phonograph) பெற்று வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதை நாம் அறிய முடியவில்லை. பானை ஓடுகளில் கிடைக்கும் இவ்வுருவங்களை மொகஞ்சதாரோ, அரப்பா உருவ எழுத்தோடு ஒப்பிட்டு ஓர் ஆய்வைத் தொல்லியல் வல்லுநர் பி.பி.லால் மேற்கொண்டார். அவ்வாய்வின் மூலம் பானை ஓடுகளில் காணப்பெறும் உருவங்களில் 80 சதவீத உருவங்கள் மொகஞ்சதாரோ, அரப்பா உருவ எழுத்துகள் போன்றே காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை சேகரித்து வைத்திருந்த பானை ஓடு ஒன்றின் மீது இருந்த உருவத்தைப் பார்த்துவிட்டு அஸ்கோ பர்போலோ என்னும் பின்லாந்து நாட்டு அறிஞர் அது அரப்பா கால உருவம் மாதிரியே இருப்பது அறிந்து பெரிதும் வியப்பு தெரிவித்தார்.

இலங்கை முத்திரை உருவம்

சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் வடக்குப் பகுதியான யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள அனைக்கோட்டை என்ற இடத்தில் நிகழ்த்தப் பெற்ற அகழாய்வில் பெருங்கற்காலச் சின்னத்தில் ஒரு செப்பு முத்திரை கண்டெடுக்கப்பட்டதாகவும் அதில் ஒரு வரியில் உருவ எழுத்துகளும், மற்றொரு வரியில் தமிழ் பிராமி (archaic Tamil) எழுத்துகளும் பொறிக்கப்பெற்றிருப்பதாகவும், மேற்கூறப்பட்ட இரு வரிகளுமே ஒரே பொருளைக் குறிப்பனவாக இருக்கலாம் என்றும் இலங்கையைச் சார்ந்த இந்திரபாலா என்னும் வரலாற்றறிஞர் செய்தி வெளியிட்டிருந்தார். அதில் காணப்பெற்ற உருவ எழுத்துகள் தமிழ் நாட்டில் பெருங்கற்காலப் பானை ஓடுகளில் பொறிக்கப்பெற்றிருந்த உருவங்கள் போன்றே காணப்பட்டன. ஆதலால் தமிழ்நாட்டுப் பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டிருக்கும் உருவங்களும் ஏதோ ஒரு பொருளை உணர்த்தும் உருவ எழுத்தாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதலாம். அதுமட்டுமல்லாமல் கிறித்து ஆண்டின் தொடக்கக்காலத்தில் வாழ்ந்த மக்கள் உருவ எழுத்தையும், தன்மை எழுத்தையும் (Standardized script) அறிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான்

பின்னாளிலும் உருவ எழுத்தைப் பற்றிய செய்தியை இலக்கிய ஆசிரியர்கள் எடுத்தாண்டிருக்கிறார்கள் என்று நம்பலாம்.

பண்டைத் தமிழ் எழுத்துகளோடு காணப்பெறும் உருவங்கள்

தமிழ்நாட்டில் சில இடங்களில் பண்டைத் தமிழ் எழுத்துக் (தமிழி எழுத்து) கல்வெட்டுகளோடு சில உருவங்களும் வரையப் பெற்றுக் காணப்படுகின்றன அண்மையில் 'அழகன்குளம்' அகழாய்வில் பண்டைத் தமிழ் எழுத்துகளின் நடுவில் குறியீடு ஒன்று பொறிக்கப் பட்டுள்ள பானையோடு கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இதே போன்று இலங்கையில் காணப்பெறும் பண்டைய கல்வெட்டுகள் சிலவற்றில் அவற்றின் முன்னோ பின்னோ அல்லது மேற்பகுதியிலோ, கீழ்ப்பகுதி யிலோ சில உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு காணப்பெறும் அவ்வுருவங்களையெல்லாம் பட்டியல் இட்டுத் தொகுத்துத் தந்துள்ளனர். மேலும் அவ்வுருவங்கள் எந்தக் கல்வெட்டின் அருகில் காணப்படுகின்றனவோ அந்தக் கல்வெட்டுக்கும் அங்குக் காணப்பெறும் உருவத்துக்கும் ஏதாவதொரு தொடர்பு இருத்தல் வேண்டும் என்றும் எழுதியுள்ளனர். அவற்றில் 'ஸ்வஸ்திகா' உருவம் 'திஸா' என்னும் ஒலியைக் குறிப்பதாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. அதோடு அரப்பா கால உருவ எழுத்துகளைப் புரிந்து கொள்வதற்கு இலங்கைக் கல்வெட்டுகளும் அக்கல்வெட்டுகளோடு காணப்பெறும் உருவங்களும் உதவக்கூடும் என்று எதிர்பார்க்கலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆதலால் தமிழகத்துப் பண்டைக் கல்வெட்டுகளோடு காணப்பெறும் உருவங்களுக்கும், அந்தக் கல்வெட்டு வாசகங்களுக்கும் கட்டாயம் தொடர்பு இருந்திருத்தல் வேண்டும். இதுபற்றிச் சில ஆண்டுகளுக்கு முன்பாகத் 'தமிழகக் கல்வெட்டுகளோடு காணப்படும் குறியீடுகள்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை இக்கட்டுரை ஆசிரியர் எழுதியுள்ளார். உருவங்கள் காணப்பெறும் கல்வெட்டுகள் வணிகர்கள், சமணத் துறவிகளுக்கு அளித்த கொடையைப் பற்றித் தெரிவிக்கின்றன. தமிழ் இலக்கியங்கள் பலவகைப் பொருட்களை விற்கும் வணிகர்கள் தங்களுக்கென வெவ்வேறு உருவம் பொறித்த கொடியை நாட்டிக் கொண்டு வாணிபம் செய்வர் என்று கூறுவதால், அவ்வணிகப் பொருட்களைக் குறிக்கும் உருவங்களாக அவை இருக்கலாம் என்று அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. வேறு சில கல்வெட்டுகளில் காணப்பெறும் உருவங்கள், அவை காணப்பெறும் கல்வெட்டு வாசகங்களைக் கொண்டு பார்க்கையில், அவர்கள் செய்த தொழிலைக் குறிப்பதாகவும் இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்துகளின் வடிவம் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்றும், இந்த ஒலியைத் தான் குறிக்கிறது என்றும் வரையறுக்கப்பட்ட பின்பு தான்

இலக்கியங்களும், இலக்கணங்களும் எழுதப்படலாயின. தமிழ் மொழியின் மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியம், எழுத்து குறித்து,

''எழுத்து எனப்படுப,
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃது என்ப...''

என்று தெரிவிக்கிறது. தொல்காப்பியர் காலத்தில் எழுத்துகள் மிகவும் வளர்ச்சி பெற்ற நிலையிலும், வரையறுக்கப்பட்ட நிலையிலும் இருந்ததாலேயே இவ்வாறு. இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

நன்னூலில் ''தொல்லை வடிவின எல்லா எழுத்தும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.அவ்வாறெனில் நன்னூல் காலத்துக்கு முன்பே இவ்வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து **(Standard script)** ஏற்பட்டு விட்டது என்று உணரலாம்.

வரையறுக்கப்பட்ட நிலை எழுத்து ஏற்பட்டதும் மொழி அறிஞர்கள் இவ்வெழுத்துகளை இருவகையாகப் பிரித்துள்ளனர். அவை (1) அகரவகை எழுத்துகள் (2) உயிர்மெய்வகை எழுத்துகள் என்பன வாகும். அகரவகை எழுத்து என்பது மெய் எழுத்துக்குப் பக்கத்தில் உயிர் எழுத்தைத் தனியாக எழுதுவது. இவ்வெழுத்து ஆங்கில எழுத்து வகையைச் சாரும். ஆங்கில எழுத்தில் உயிர் மெய்யான 'க' என்பதைக் காட்டுவதற்கு . கே +ஏ **(K+A)** என்று எழுதப்படுகிறது. இதில் கே என்ற மெய்யும், ஏ என்ற உயிரும் உள்ளன. உயிர்மெய் வகை எழுத்து என்பது உயிர்மெய் எழுத்தை மெய் எழுத்து, உயிர் எழுத்து என்று தனித்தனியாக எழுதாமல் உயிர் ஏறிய மெய்யாக, ஒரே எழுத்தாக எழுதுவது. தமிழ் எழுத்து உயிர்மெய் வகை எழுத்தைச் சேர்ந்தது. 'க' என்று எழுதுவதற்கு, க்+அ என்று எழுதாமல் உயிர் ஏறிய மெய்யாக 'க' என்று எழுதுவது ஆகும். தமிழ்நாட்டில் காணப்பெறும் குகைக் கல்வெட்டுகளில் மிகப் பழமையாக உள்ளவற்றில் அகர வகை எழுத்துகளைக் காண முடிகிறது நாளாக, நாளாக உயிர்மெய் வகை எழுத்துகள் இடம் பெற்றுள்ளன. இதைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் எழுத்து வளர்ச்சியில் தன்மை எழுத்துக்கு அடுத்த கட்ட வளர்ச்சியாக அகர வகை எழுத்துகளும், பின்னர் உயிர்மெய் வகை எழுத்துகளும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது.

இந்தியாவில் கி.மு.3-2 நூற்றாண்டுகளில் பதினெட்டு' வகை எழுத்துகள் வழக்கில் இருந்தன என்பதைச் 'சமவியங்கசுத்த' மற்றும் 'பண்ணாவனசுத்த' என்னும் சமண நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இந்நூல்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. புத்தமத நூல்களான 'மஹாவஸ்து' 30 வகை எழுத்துகளையும் 'லலிதவிஸ்தரம்' 64 வகையான எழுத்துகளையும் தெரிவிக்கின்றன. இவ்விரு நூல்களின்

காலத்தைச் சரியாகக் கூற முடியவில்லை. ஆயினும் லலிதவிஸ்தரம் சீனமொழியில் கி.பி.308இல் மொழிமாற்றம் செய்யப் பெற்றிருப்பதால் சீன நூலுக்கு ஓரிரு நூற்றாண்டுகள் முன்னதாக லலிதவிஸ்தரம் எழுதப் பெற்றிருக்கலாம் என்று கருதப் படுகிறது.

சமண நூல்கள் தெரிவிக்கும் 18 வகை எழுத்துகளில் 'கரோஷ்டி' 'பிராமி' 'தாமிலி'ஆகிய எழுத்துகள் குறிக்கப் பட்டுள்ளன. தமிழ் எழுத்துதான் பிராகிருத மொழியில் 'தாமிலி' என்று எழுதப்பட்டுள்ளது.

கரோஷ்டி என்பதற்குக் 'கழுதையின் காது' என்று பொருள். கழுதையின் காது போன்ற வடிவில் இவ்வெழுத்துகள் இருந்ததால் இப்பெயர் பெற்றிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ்வெழுத்து இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் மட்டும் தான் வழங்கி வந்திருக்கிறது. மத்திய, கிழக்கு ஆசிய மக்களின் தொடர்பால் இந்தியாவில் இவ்வெழுத்து உருவாகி வழங்கி வந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதினெட்டு வகை எழுத்துகளில் 'யவனாலி' அல்லது 'யவனாலிய' என்ற ஓர் எழுத்தும் குறிக்கப் படுகிறது. இது கிரேக்க எழுத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மௌரியப் பேரரசுக் காலத்தில் கிரேக்க மன்னர்கள் இந்தியாவுக்கு வந்ததும், அப்பொழுது அவர்கள் தங்கள் காசுகளில் கிரேக்க எழுத்தையும் பிராமி எழுத்தையும் பொறித்து வெளியிட்டதும் வரலாற்று உண்மை. ஆதலால் அவர்களது எழுத்தைத்தான் இலக்கியங்கள் 'யவனாலி' என்று குறிக்கிறது என்று உறுதியாகக் கூறலாம். 'தாமிலி' என்று குறிக்கப்படும் எழுத்து தமிழ்நாட்டில் வழங்கி வந்த தமிழ் எழுத்தைக் குறிக்கிறது என்று கருதப்படுகிறது. அவ்வாறெனில் மற்ற எழுத்துகளும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வழக்கத்திலிருந்த எழுத்துகள்தாம் என்று துணியலாம்.

தமிழ்நாடு உட்பட இந்தியாவின் எல்லாப் பகுதியிலுமே, ஒரே எழுத்துதான் வழங்கி வந்திருக்கிறது. அதை ஒவ்வொரு பகுதி மக்களும் தனித்தனிப் பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். மௌரியப் பேரரசு நிலவிய பகுதியில் அதற்குப் 'பிராமி' என்றும், தமிழ்நாட்டில் 'தமிழ்' என்றும் பெயர்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன. தமிழ் எழுத்தைத் தாமிலி எனப் பிராகிருத மொழியில் கூறியிருக்கிறார்கள். பிற பகுதிகளில் வேறு பெயர்களில் அழைத்துள்ளனர். இக் காலகட்டத்தைச் சார்ந்ததாகக் காணப்பெறும் இந்தியாவின் அனைத்துப் பகுதி எழுத்துகளும் ஒரே வடிவில்தான் காணப்படுகின்றன. ஒருசில எழுத்துகளில் அவ்வப் பகுதிகளில் வழங்கி வந்த மொழிகளுக்கேற்பச் சில மாறுபட்ட எழுத்து வடிவங்களைக் காண முடிகிறது.

கி.பி.1-2ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 'லலிதவிஸ்தரம்' என்ற புத்தமத நூல் அறுபத்து நான்கு வகையான எழுத்துகளைக் குறிப்பிடுகிறது இந்தியாவின் சிறுசிறு பகுதிகளில் எல்லாம் பழக்கத்திலிருந்த அனைத்து வகை எழுத்துகளையும் இந்நூல் குறிப்பிடுவதாகத் தெரிகிறது அங்க லிபி, வங்க லிபி, மகத லிபி என்று ஒவ்வொரு சிறுசிறு பகுதிகளிலும் வழங்கிய எழுத்தைத் தெரிவிக்கிறது. இதில் தேவ லிபி, நாக லிபி, யட்ச லிபி, மிருகசக்ர லிபி ஆகிய எழுத்துகளும் காணப்படுகின்றன. தேவர்கள் எழுத்து, நாகர்கள் எழுத்து, யட்ச எழுத்து, அசுரர் எழுத்து என்றும் குறிப்பிடுகிறது. இவைகளின் விளக்கம் சரியாகத் தெரியவில்லை. இவ்வெழுத்துகள் பட்டியலில் பிராமி லிபி, கரோஷ்டி லிபி, திராவிட லிபி, தட்சிண லிபி, கனாரி லிபி போன்றவைகளும் உள்ளன. திராவிட லிபி, தட்சிண லிபி என இரு எழுத்துகள் காணப்படுகின்றன. ஆனால் தமிழ் எழுத்து என்று தனியாகக் குறிக்கப்படவில்லை. ஆதலால் திராவிட எழுத்து என்பதைத் தமிழ் எழுத்து என்று கொள்ளலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டை வட நூலார் 'த்ரமிள தேசம்' என்றும் 'திராவிட தேசம்' என்றும் குறிப்பிட்டு வழங்கியிருப்பதால் தமிழ் எழுத்தைப் புத்தமத நூலும் திராவிட லிபி என்று குறிப்பிட்டுள்ளது என்று கொள்ளலாம். இந்நூல் சமற்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளதாலும் இது உறுதியாகிறது.

பண்டைத் தமிழ் எழுத்து

தமிழகத்தில் மிகப் பழைமையானது என்று கருதப்படும் எழுத்து 'தமிழ் எழுத்து' ஆகும். இதைப் 'பிராமி' எழுத்தென்றும், 'தென்னிந்தியப் பிராமி' எழுத்து என்றும் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை வழங்கி வந்தனர். இவ்வெழுத்தை வசதிக்காகப் 'பண்டைத் தமிழ் எழுத்து' **(Archaic Tamil Script)** என்று கூறலாம். இவ்வெழுத்து கி.மு.3-2ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கிறது என்று அண்மைக் காலம்வரை கருதப்பட்டது. தமிழ்நாடு அரசுத் தொல் பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூலாங்குறிச்சிக் கல்வெட்டால் தமிழ் எழுத்தின் பழைமை மேலும் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இருத்தல் வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டு சக ஆண்டு என்று எடுத்துக் கொண்டால் பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலம் (192 + 78 = 270) கி.பி. 270 என்று ஆகிறது. (இதைச் சிலர் கி.பி.4-5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கூறுகின்றனர்). அதிலுள்ள எழுத்தமைதியின் காலம் கி பி.3ஆம் நூற்றாண்டெனில் அறச்சலூர்க் கல்வெட்டின் காலத்தை இன்னும் சிறிது முன்னுக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும். அறச்சலூர்க் கல்வெட்டு கி.பி.1-2ஆம் நூற்றாண்டென்றால் புகழூர்க் கல்வெட்டை கி.மு.2 முதல் கி.மு.1ஆம் நூற்றாண்டு எனக்

கூறுதல் வேண்டும். அவ்வாறாயின் சேர அரசர்களின் மரபு வழியைத் தெரிவிக்கும் புகளூர்க் கல்வெட்டை கி.மு.2 அல்லது 1ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கொள்ளல் வேண்டும். இந்த முடிவு முற்காலக் கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்துகளின் தன்மைக்கும் ஏற்றதாகக் காணப்படுகிறது.

தமிழகத்தில் காணப்பெறும் பண்டைத்தமிழ்க்கல்வெட்டுகளை இரண்டு வகையாகப் பிரித்துள்ளார் திரு. ஐராவதம் மகாதேவன். முதல் வகையில் புள்ளியில்லா மெய் வடிவு, மெய்யை மட்டும் குறிக்கும்; அகரம் ஏறிய மெய்யைக் குறிக்காது. அகரம் ஏறிய மெய்யைக் குறிக்க ஒரு கோடு இடப்பட்டது; இக்கோடு 'ஆ' காரத்தைக் குறிக்கவும் இடப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் வகை எழுத்தில், புள்ளியில்லா மெய்யெழுத்து, அகரம் ஏறிய மெய்யெழுத்தாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கல்வெட்டுகளில் எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம், குறில், நெடில் ஆகியவற்றைப் பிரித்துக் காட்டுவதற்கு எவ்விதக் குறியும் இடப்படவில்லை என்றும் இக்கல்வெட்டுகளில் கூட்டெழுத்துகளே காணப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இக்கல்வெட்டுகளைப் பற்றி மேலும் ஆய்வு செய்த டாக்டர் இரா நாகசாமி புகளூர், அறச்சலூர்க் கல்வெட்டுகளில் மெய்யைக் குறிக்கப் புள்ளியிடப்பட்டிருக்கிறது என்றும், எகர, ஒகரங்களைக் குறிக்கவும் புள்ளி இருக்கிறது என்றும் கருத்து தெரிவித்து இருக்கிறார். இவர் குறிப்பிடும் கல்வெட்டுகள் கி.மு.இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.2ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும். இதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட்டிருப்பவைகளில் (மாங்குளம் கல்வெட்டுகள்) மெய்யைக் குறிக்கவும், எகர, ஒகரக் குறிலைக் குறிக்கவும் புள்ளி காணப் படவில்லை. அவைகளில் அகரம் ஏறிய உயிர் மெய்யைக் குறிக்கச் சில இடங்களில் மெய் எழுத்துக்குப் பக்கத்தில் 'அ'கரத்தைத் தனியாக எழுதிக் காட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் அகரம், ஆகாரம் ஏறிய உயிரைக் குறிக்கக் கோடு இடப்பட்டிருந்தாலும் மிகப் பழைய முறையான மெய்யையும், உயிரையும் தனித்தனியாக எழுதிக் காட்டும் முறையையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இம்முறை அக்கல்வெட்டுகளின் பழைமைத் தன்மையைக் காட்டா நிற்கும். அத்துடன் இக்கல்வெட்டுகளில் எதிலுமே கூட்டெழுத்துகள் காணப்பெறவில்லை என்பதை இவ்வெழுத்துகளின் பழைமைத் தன்மைக்குரிய மற்றொரு சான்றாகவும் கருதலாம்.

நன்றாக வளர்ச்சியடைந்த, நிலைப்படுத்தப்பட்ட (Standardised) எழுத்தை அசோகனது கல்வெட்டுகளில் காணலாம். அசோகனது கல்வெட்டுகளில் புள்ளியிடப்பட வேண்டிய இடங்களில் புள்ளியிட்டு எழுதப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டுப் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளில் பத்து உயிரெழுத்துகள் தான் எழுதப்பட்டுள்ளன. 'ஐ'காரமும், 'ஔ'காரமும் காணப்படவில்லை. தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் அகரமும் இகரமும் மற்றும் அகரமும் யகர ஒற்றும் 'ஐகாரம்' ஆகும் என்றும்; அகர உகரம் 'ஔகாரம்' ஆகும் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அகரத்தையும், இகரத்தையும்; அகரத்தையும், யகர ஒற்றையும் தனித்தனியாக எழுதி அதை ஐகாரம் எனக் கொண்டார்களென்றும்; அகர, உகரத்தைத் தனித்தனியாக எழுதி அதை ஔகாரம் எனக் கருதினார்கள் என்றும் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த வகையில் பார்த்தாலும் தமிழகக் கல்வெட்டுகள் மிகவும் ஆரம்பக் கட்ட நிலையிலேயே இருந்திருக்கின்றன என்று கருத வேண்டியுள்ளது.

இதுகாறும் கூறப்பெற்றவற்றிலிருந்து திரு.டி.என்.சுப்பிரமணியம் கருத்து மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது. தாம் தொகுத்து வெளியிட்ட 'தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், தொகுதி-3, பகுதி-2இல் **(South Indian Temple Inscriptions Vol.3 part 2)** பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவற்றுள் பழைமையானதான தமிழுக்காக அது தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா முழுவதும் அதுவே பழக்கத்தில் நிலவியது என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். மௌரியப் பேரரசன் அசோகன் தனது கல்வெட்டுகளைப் பிராகிருத மொழியிலும், பாலி மொழியிலும் எழுதியபோது இவ்வெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். பின்னர் வந்த குப்தப் பேரரசர்களும் இவ்வெழுத்தையே பயன்படுத்தினர்.

இகரத்திலிருந்து 'ஈ'காரத்தை வேறுபடுத்திக் காட்ட மேலும் ஒரு புள்ளியைச் சேர்த்திருக்கிறார்கள். இம்முறை தமிழ்நாட்டில் நெடிலைக் குறிலாக்கப் பயன்படுத்திய புள்ளியிடும் முறையை ஒட்டியதாகும் என்றும், ஆனால் அவர்கள் குறிலுக்குப் பதிலாக நெடிலுக்குப் புள்ளியிட்டிருக்கின்றனர் என்றும் அவர் கூறுவது சிந்திக்கத்தக்கது.

மெய்யைப் புள்ளியிட்டுக் காட்டுவதும், எகர, ஒகரத்துக்குப் புள்ளியிடுவதும் தொல்காப்பியர் காலத்தில் நிகழ்ந்திருக்கிறது. ஆதலால் தொல்காப்பியத்தின் காலம் அறச்சலூர், புகழூர்க் கல்வெட்டுகளின் காலமான கி.மு.2 முதல் கி.பி.1ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். மெய்யைக் குறிக்கப் புள்ளியிடாத எழுத்துகள் வழங்கி வந்த காலம் தொல்காப்பியர் காலத்துக்கும் முந்தையதாகும். தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'என்மனார் புலவர்' 'என்ப' என்ற சொற்கள் காணப்படுகின்றன. அவை தொல்காப்பியருக்கு முன்பிருந்த நிலைமையைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் காலத்திலேயே பழைய சில எழுத்து மரபுகள் வழக்கொழிந்து விட்டன என்பது பெறப்படுகிறது.

நன்னூல் சூத்திரம் (98) 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்று கூறுகிறது. ஆகவே தொல்காப்பியம், நன்னூல் ஆகியவற்றின் காலங்களுக்கு முன்பாகவே எழுத்துகள் ஒரு நிலையான வடிவம் பெற்று இருந்தன என்பது புலப்படுகிறது. அக் காலகட்டத்தில்தான் மாங்குளம் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே அவை காலத்தினால் முந்தையவை ஆகின்றன. ஆதலால்தான் அவை கி.மு.5 அல்லது 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது. அண்மையில் இலங்கை நாட்டில் உள்ள அநுராதபுரத்தில் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற பண்டைத் தமிழ் எழுத்துகள் பொறிக்கப் பெற்ற பானையோடுகளின் காலத்தை சி. 14 என்ற அறிவியல் காலக் கணிப்பு முறையால் கி.மு.750 எனக் கணித்துள்ளனர். இக் காலக்கணிப்பு நம் கருத்துக்கு அரண் சேர்க்கிறது. மேலும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பட்டிபுரோலுவில் கிடைத்துள்ள கல்வெட்டும் இதற்கு உறுதுணையாகிறது. அக் கல்வெட்டிலும் மெய்யைக் குறிக்கப் புள்ளி யில்லை. மேலும் அகரம் ஏறிய மெய்யைக் காட்டப் பக்கக் கோடு ஒன்று இட்டும், 'ஆகாரம்' ஏறிய மெய்யைக் குறிக்கப் பக்கக் கோட்டோடு கீழ்நோக்கிய கோடு ஒன்று இட்டும் எழுதியிருப்பது மனத்தில் கொள்ள வேண்டியதாகும். இம்முறை மாங்குளம் முதலிய இடங்களில் காணப்படும் கல்வெட்டுகளின் வளர்ச்சி பெற்ற நிலையைக் காட்டுவதாகக் கருதுதல் வேண்டும்.

தமிழகத்தில் பண்டைத் தமிழ் எழுத்து பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகள் மலைக்குகைகளில் மட்டுமல்லாமல் பானை ஓடுகள், காசுகள் ஆகியவற்றிலும் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, கொற்கை, உறையூர், காஞ்சிபுரம், கரூர், வல்லம், கொடுமணல், அழகன்குளம், பூம்புகார் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் பானை ஓடுகளில் இவ்வெழுத்துகள் பொறிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது. திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்துக்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டியில் கிடைத்த ஈயக்காசுகளில் இவ்வெழுத்து பொறிக்கப் பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் மக்களிடத்தில் இவ்வெழுத்து பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு மதத்தார்தான் இவ்வெழுத்தைப் பரப்பினர் என்ற கருத்தை உடைத்தெறிவதாக இதைக் கருதலாம். மக்கள் அனைவருமே நன்கு அறிந்த எழுத்தாக இது நிலவி வந்திருக்கிறது. அவ்வாறெனில் தொன்றுதொட்டே இவ்வெழுத்து தமிழகத்தில் வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். பானை ஓடுகளிலும் (குறிப்பாகக் கருப்பு, சிவப்புப் பானை ஓடுகளில்) இவ்வெழுத்து எழுதப் பெற்றிருப்பது, இவ்வெழுத்துகளின் பழைமை கி.மு.5 அல்லது 4ஆம் நூற்றாண்டு என்று கொள்வதற்கு மேலும் ஆதாரமாக அமைகிறது.

தமிழ் மொழிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ்வெழுத்தைப் பின்னாளில் பிராகிருத மொழி பயன்படுத்திக் கொண்டது என்னும் கருத்துக்குச் சான்றாகச் சாதவாகனர்களின் 'இருமொழிக் காசு'களைக் கூறலாம். அக்காசுகளில் ஒரு பக்கத்தில் தமிழ் மொழியிலும், மற்றொரு பக்கத்தில் பிராகிருத மொழியிலும் எந்த மன்னனால் அக்காசு வெளியிடப்பட்டது என்பது குறிக்கப் பெற்றிருக்கும். இரு மொழிகளிலுமுள்ள வாசகங்கள் பண்டைத்தமிழ் எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன. ஆகவே தமிழ் எழுத்தைப் பின்னாளில் பிராகிருதமும் இணைத்துப் பயன்படுத்தியமை தெளிவாகிறது.

கி.பி 3-4ஆம் நூற்றாண்டளவில் இப்பண்டைத் தமிழ் எழுத்தின் வடிவம் மாற்றம் பெறத் தொடங்குகிறது. கல்லில் உளியாலும், தூரிகை கொண்டு வண்ணத்திலும் எழுதி வந்த தமிழர்கள் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதத் தொடங்கிய காரணத்தால் இவ்வடிவ மாற்றம் தொடங்கி இருக்கலாம் என்று கருதலாம் எழுத்தாணியால் ஓலையில் நேர்க் கோடுகளையும், பக்கக் கோடுகளையும் எழுதினால் ஓலை கிழிந்து விடக்கூடிய நிலை ஏற்படும். அதைத் தவிர்க்கும் நோக்குடன் நேர்க் கோடுகளிலும், பக்கக் கோடுகளிலும் சிறு வளைவுகளைச் சேர்த்து எழுதத் தொடங்கியிருக்கின்றனர். இம்மாற்றத்தை அறச்சலூர், ஈரெட்டிலை, பூலாங்குறிச்சி கல்வெட்டுகளில் நன்கு காண முடிகிறது பின்னர் நாளடைவில் மேலும் மேலும் வளைவுகளைப் பெற்று 'வட்டெழுத்து' என்று அழைக்கின்ற அளவுக்கு மாற்றம் பெற்று விட்டது முழு வட்ட வடிவம் பெற்ற தமிழ் எழுத்துகளைக் கி.பி.8-9ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு காண முடிகிறது. வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமனூர்ச் செப்பேடுகளில் இவ்வெழுத்தைப் பார்க்கலாம். இவ்வெழுத்துகள் இவ்வாறு வளைவு பெற்றதால் சில எழுத்துகளை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாகப் ப,ம,ய,வ ஆகிய எழுத்துகள் மிகச் சிறு வேறுபாட்டோடு எழுதப்பட்டுக் காணப்பெறும். அதேபோன்று ண,த,ற போன்ற எழுத்துகளிலும் அதிக வேறுபாடு காண முடியாது. கி.பி.17-18ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கும் இவ்வெழுத்துகளைப் படிப்பதென்பது மிகவும் கடினம். காரணம் அனைத்து எழுத்துகளும் வடிவில் ஒன்று போன்றே தோன்றும். இவ்வெழுத்து மிகப் பிற்காலம்வரை தமிழகத்தின் தென்கோடிப் பகுதியிலும், கேரளப் பகுதியிலும் வழங்கி வந்திருந்தாலும் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்குக் கி.பி.11-12ஆம் நூற்றாண்டிலேயே இவ்வெழுத்து புரியாத எழுத்தாக ஆகிவிட்டது. அதற்குக் காரணம் அப்பகுதிகளில் மற்றொரு வகை எழுத்து உருவாகத் தொடங்கியதேயாகும்.

இந்த மற்றொரு வகை எழுத்தைத்தான் நாம் இன்று தமிழ் எழுத்து என்று அழைக்கின்றோம். இவ்வெழுத்து கி.பி.3-ஆம் நூற்றாண்டளவி

லேயே வளரத் தொடங்கினாலும், கி.பி.6-7ஆம் நூற்றாண்டில்தான் அதிக அளவில் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இந்த எழுத்து உருவாவதற்கு முதற்காரணம் சமற்கிருத மொழியும், கிரந்த எழுத்தும் ஆகும். அவற்றைக் கையாண்ட பல்லவ மன்னர்களும் உறுதுணையாவர். சிம்மவர்மனின் பள்ளங்கோயில் செப்பேட்டிலும், மகேந்திரவர்மன் காலத்திய வல்லம் குடைவரைக் கோயிற் கல்வெட்டிலும் இவ்வெழுத்தை முதன்முதலில் காணமுடிகிறது. பின்னர் பாண்டி நாட்டில் மலையடிக்குறிச்சியில் உள்ள சேந்தனின் கல்வெட்டில் இவ்வெழுத்தைக் காண முடிகிறது. பல்லவர்கள் தம் செப்புப்பட்டயங்களிலும், குடைவரை மற்றும் கட்டடக் கோயில்களிலும் சமற்கிருத மொழியை எழுதக் கிரந்த எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு எழுதுவதைப் பெருமையாகக் கருதிய பாண்டிய மன்னர்களும் தங்கள் செப்புப் பட்டயங்களிலும், சில குடைவரை மற்றும் தனிப்பட்ட கல்வெட்டுகளிலும் சமற்கிருத மொழியையும், கிரந்த எழுத்தையும் பயன்படுத்தியிருக்கின்றனர். எடுத்துக்காட்டாக வேள்விக்குடிச் செப்பேடு, ஆனைமலை, திருப்பரங்குன்றம், குடைவரைக் கோயில் கல்வெட்டுகள் மற்றும் வைகைக்கரைக் கல்வெட்டு ஆகியவற்றைக் காட்டலாம். கிரந்த எழுத்துகளில் சிலவும், புதிதாக உருப்பெற்ற தமிழ் எழுத்துகள் சிலவும் ஒன்றுபோலவே காணப்படுகின்றன. அது மட்டுமல்லாமல் பாண்டிய மன்னர்கள் தங்களுக்குச் சொந்தமான வட்டெழுத்தில் காணப்பெறும் செப்பேடுகள் சிலவற்றில், சமற்கிருதப் பகுதியில் தமிழ்ச் சொல்லை எழுதுவதற்கு வட்டெழுத்துக்குப் பதிலாகத் தமிழ் எழுத்தைப் பயன்படுத்தியிருப்பது மற்றொரு வகைத் தமிழ் எழுத்திற்கும், கிரந்த எழுத்திற்கும் இருந்த தொடர்பைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இவ்வகைத் தமிழ் எழுத்து சோழர் காலத்தில் பெரும் ஆதரவைப் பெற்றது. சோழர்கள் தாங்கள் வென்ற பகுதிகளிலெல்லாம் இவ்வெழுத்தைப் பயன்படுத்துமாறு வலியுறுத்தினர். அதன் காரணமாக மற்றொரு எழுத்தான வட்டெழுத்து மறையத் தொடங்கியது. பல்லவ மன்னர்களும், சோழ மன்னர்களும் தங்கள் செப்பேடுகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் பயன்படுத்தியிருக்கின்றனர். அதிலிருந்தே அவர்களின் ஒருமித்த பேராதரவு இப்புதிய தமிழ் எழுத்துக்குத்தான் கிடைத்திருக்கிறதென்பது வெளிப்படை. இவ்வெழுத்தைப் பிற்காலப் பாண்டியர்களும் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விட்டது. ஏனெனில் தாங்கள் வெற்றி கண்ட சோழ நாடு, தொண்டை நாட்டுப் பகுதிகளில் இப்புதிய தமிழ் எழுத்தைத்தான் அவர்கள் பயன்படுத்த வேண்டியதாயிற்று. காரணம், இப்பகுதி மக்கள் முற்றிலும் பழைய தமிழ் எழுத்தான வட்டெழுத்தை மறந்துவிட்டமையே ஆகும். 'புரியாத வட்டம் ஆகையால் அதைத் தமிழாகப்படுத்தி எழுதப்பட்டன' என்று சில கல்வெட்டுகள் தெரிவிப்பதிலிருந்தே கி.பி.11-12ஆம்

நூற்றாண்டளவில் வட்டெழுத்து அதாவது முந்தைய தமிழ் எழுத்து மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலையை எய்தி விட்டது என்பதை உணரலாம். ஆனாலும் அவர்கள் தென்பாண்டி நாட்டில் தங்கள் கல்வெட்டுகளில் வட்டெழுத்தை அதாவது முந்தைய தமிழ் எழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

பிற்காலப் பாண்டியர்களுக்குப் பிறகு வந்த விசயநகர மன்னர்களும் பல்லவர்களைப் போன்றே ஆந்திரப் பகுதியிலிருந்து வந்தவர்கள். சமற்கிருத மொழிக்கும், கிரந்த எழுத்துக்கும் முக்கியத்துவம் தருபவர்கள். ஆதலால் இவர்களும் புதிய தமிழ் எழுத்தையே தங்கள் கல்வெட்டுகளில் பயன்படுத்தினர். அது மட்டுமல்லாமல் மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் ஒரு படி மேலே சென்று, கிரந்த எழுத்தையும், புதிய தமிழ் எழுத்தையும் சேர்த்தே கல்வெட்டுகளில் எழுதலாயினர்.

அவர்களை அடுத்து வந்த நாயக்க மன்னர்களும் இப்புதிய தமிழ் எழுத்தையே பயன்படுத்தினர். ஆதலால் இப்புதிய தமிழ் எழுத்து பொலிவோடும், வலிவோடும் தொடர்ந்து தமிழகத்தில் வழங்கி வரும் நிலை ஏற்பட்டு விட்டது. அச்சு இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்ட பின்னர் இனி இவ்வெழுத்து முறையில் எந்தவித மாற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. ஆதலால் இத்தமிழ் எழுத்தே இனி என்றென்றும் செங்கோலோச்சும் என்று நம்பலாம்.



படம் 1. லும்பினியிலுள்ள அசோகனின் தூண் கல்வெட்டு (வடபிராமி)

Fig.1 Pillar Inscription of Asoka at Lumbini (Northern Brahmi)



படம் 2. நெடுஞ்செழியனின் மாங்குளக் குகைக் கல்வெட்டு (தமிழ் பிராமி 1)

Fig. 2. Cave Inscription of Netuncheliyan at Mangulam (Tamil - Brahmi-I)



படம். 3. திருவாதவூர்க் குகைக் கல்வெட்டு (உயிரெழுத்து உகரத்தின் சிறப்புப் பயன்பாட்டைக் காட்டுவது)

Fig. 3. Cave Inscription at Tiruvathavur (showing special usage of u vowel)



படம். 4. பட்டிப் புரோலுவிலுள்ள பேழைக்கல்வெட்டு

Fig. 4. Casket Inscription from Bhattiprolu.



படம். 5. புகழூரிலுள்ள ஆதன் சேரலிரும் பொறையின் குகைக கல்வெட்டு (தமிழ் பிராமி II)

Fig. 5. Cave Inscription of Atan Cerall irumporai at Pugalur (Tamil- Brahmi-II)



படம். 6. அறச்சலூரிலுள்ள குகைக் கல்வெட்டு (தமிழ் பிராமி III புள்ளி இடுவதைக் காட்டுவது)

Fig.6. Cave Inscription at Arachalur (in Tamil-Brahmi-III, using pulli)



தமிழ் எழுத்தின் அட்டவணை



வட்டெழுத்தாகவும் தமிழ் எழுத்தாகவும் மாற்றம் பெற்றதை விளக்கும் படம்

முதற் கட்ட வட்டெழுத்து அட்டவணை

இரண்டாம் கட்ட வளர்ச்சி

வட்டெழுத்தின் அட்டவணை



பண்டைத் தமிழ் எழுத்து அட்டவணை

இயல் நான்கு

தமிழ்மொழி வரலாறு

இயல் நான்கு

தமிழ்மொழி வரலாறு

தமிழின் தொல் வரலாறு

(தமிழும் பிற திராவிட மொழிகளும்)

முன்னுரை

18ஆம் நூற்றாண்டு வரை தனி மொழி இலக்கணமாக இருந்த மொழியியல் ஆய்வு 19ஆம் நூற்றாண்டில்தான் மொழிகளுக்கு இடையே இன உறவு (**Genetic relation**) இருப்பதை உணர்ந்து மொழிக்குடும்பம் (**Language Family**) என்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன்மூலம் மொழி வரலாற்று ஆய்வு தொடங்கியது. முதலில் அந்த மொழிக்குடும்பத்தில் உள்ள இனச் சொற்களைக் (**Cognates**) கண்டறிந்து ஒப்பிட்டு, பூர்வீக மொழியை (**Proto language**) மீட்டுருவாக்கம் செய்தது. பின்னரே அந்த மொழிக்குடும்பத்தில் உள்ள மொழிகள் நாளடைவில் பெரும் பிரிவுகளாகப் (**Major Sub-groups**) பிரிந்து, பிறகு சிறுசிறு பிரிவுகளாக- உட்பிரிவுகளாக மாற்றம் பெற்றுத் தனிமொழி நிலையை அடைந்த வரலாற்றை ஆராயத் தொடங்கியது. இது தொல் வரலாறு (**Pre-history**) எனப்படும். அதாவது ஒரு மொழிக்குக் கிடைக்கும் மிகப் பழைய எழுத்துச் சான்றுக்கு உரிய காலத்துக்கு முற்பட்ட மொழிநிலையை ஒப்பிலக்கண நோக்கிலிருந்து - பூர்வீக மொழி எப்படிப் பெரும் பிரிவுகளாகவும், சிறுபிரிவுகளாகவும் நாளாவட்டத்தில் பல பொதுவான மொழி மாற்றங்கள் (**Common innovations**) பெற்றுப் பிரிந்து, கடைசியில் சில தனி மாற்றங்கள் காரணமாகத் தனி மொழியாக வளர்ந்த நிலையை விளக்கும். எனவே ஒரு தனி மொழி பூர்வீக மொழியிலிருந்து பெற்ற மாற்றங்களை நேரடியாக விளக்கமுடியாது. ஏனென்றால், அது பிற மொழிகளோடு ஒன்றாக இருந்த பிறகே தனிமொழியாக உருவாகிறது. அதனால் அந்த மொழியினுடைய சிறப்புக் கூறுகளாகக் கருதப்படுவனவற்றை அதன் அண்டை மொழியிலும் காணமுடியும். எனவே உட்பிரிவு அடிப்படையில் எந்தெந்த மொழிகளோடு உறவு உடையது; அவைகளோடு என்னென்ன மொழிக்கூறுகள் ஒத்திருக்கின்றன என்று விளக்கி அதன் தனித்துவத்தைச் சுட்டிக்காட்டலாம்.

அந்த முறையிலேயே தொல் திராவிட மொழியிலிருந்து தமிழ் அடைந்த ஒலி, சொல் மாற்றங்கள் உட்பிரிவு அடிப்படையில் விளக்கப்படுகின்றன.

திராவிடமொழிகள்

திராவிட மொழிகள் ஒரு தனி மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்று நிறுவிய பெருமை டாக்டர் கால்டுவெல்லையே (1856) சாரும். அவர் தன்னுடைய திராவிட அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பத்தின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் தமிழ், மலையாளம், தோடா, கன்னடம், துளு, தெலுங்கு போன்ற மொழிகள் சமஸ்கிருதம் அல்லது வடமொழியிலிருந்து மொழி அமைப்பில் முற்றிலும் மாறுபட்டு இருப்பதால் அதிலிருந்து தோன்றாமல் - இன உறவு இல்லாமல் - தனி மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்று நிறுவினார். அதற்குப் பிறகே திராவிட மொழி ஒப்பிலக்கண ஆய்வு வளரத் தொடங்கியது.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வு இந்தியாவிலும், வெளிநாட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் புதிய திராவிட மொழிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கால்டுவெல் 11 மொழிகளையே அங்கீகரிக்க, எமனோ, பரோ என்ற இரு வெளிநாட்டு அறிஞர்கள் 1966இல் தயாரித்து வெளியிட்ட திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதியின் முதல் பதிப்பில் 19 மொழிகளையும் 1990இல் வெளியிட்ட திருந்திய பதிப்பில் 27 மொழிகளையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் கசபா, முதுகா, காட்டு நாயக்கா முதலிய பழங்குடி மக்கள் மொழிகளையும், உஸ்மானியா பல்கலைக் கழகத்தார் இந்து, ஆவெ முதலிய பழங்குடி மக்கள் மொழிகளையும் அடையாளம் கண்டு இலக்கணமும் எழுதியுள்ளார்கள். தமிழ், மலையாளம், கோத்தா, தோடா, இருளா, குடகு, கன்னடம், குறும்பா, பெட்டகுறுபா, பெலாரி, கொரகா, துளு, தெலுங்கு, கொலாமி, நைக்கடி பர்ஜி கோயா, கதபா, பெங்கோ, மண்டா, கோண்டி, கொண்டா, கூமி, கூவி, குறுஹ், மால்ட்டோ, பிராஹுமி ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை.

உட்பிரிவுகள்

இன்று பெரும்பாலான ஒப்பிலக்கண அறிஞர்கள் தென் திராவிடம், நடுத்திராவிடம், வடதிராவிடம் என்ற மூன்று பெரும் பிரிவுகளாக மொழி அமைப்பு வேறுபாட்டின் அடிப்படையில் பிரித்துள்ளார்கள். அவைகளில் தமிழ், மலையாளம், இருளா, தோடா, குடகு, குறும்பா, கன்னடம் முதலியவை தென் திராவிடத்தைச் சேர்ந்த மொழிகள்; குறுஹ், மால்ட்டோ, பிராஹுமி ஆகிய மூன்றும் வடதிராவிட மொழிகள்; ஏனையவை நடுத்திராவிட மொழிகள். தென்திராவிடத்தைச் சேர்ந்த மொழிகளில் மட்டுமே பெயர்ச் சொற்களிலும், சுட்டுப் பெயர்களிலும், வினைமுற்றுகளிலும் உயர்திணையில் ஆண் (அவன்), பெண் (அவள்), பலர் (அவர்) என்றும், அஃறிணை ஒருமை (ஒன்றன்பால்-அது), பன்மை (பலவின்பால் - அவை) என்றும் ஐந்து

வகை திணை-பால் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நடுத்திராவிட மொழியாகிய தெலுங்கில் ஆண் (வாடு), பலர் (வாரு), ஒன்று / ஒருத்தி (அதி /அது) என்பது உயர்திணைப் பெண்பாலுக்கும், அஃறிணை ஒன்றன் பாலுக்கும் பொதுவானது. பல (அவி) என்று நாலு வகை பால் வேறுபாடும், வேறு சில நடுத்திராவிட மொழிகளில் ஆண் ஒருமை, ஆணல்லாத ஒருமை (தெலுங்கில் உள்ளது போன்றது), ஆண் பன்மை, ஆணல்லாத பன்மை என்ற நான்கே திணை - பால் வேறுபாடும், பெற்றுள்ளன. எனவே தென்திராவிட மொழிகளில் உயர்திணையில் பெண்பால் என்ற தனி வகை ஏற்பட்டது ஒரு வரலாற்றுப் பொது மாற்றமாகக் கருதப்படுகிறது. இது இலக்கண நிலையில் நடைபெற்ற மாற்றம் ஆகும். ஒலி நிலையில் சொல்லுக்கு முதலில் வருகிற சகரம் கெடும் போக்கு (அதாவது எல்லாச் சொற்களிலும் ஏற்படாதது) தென்திராவிட மொழிகளுக்கே உரியது. ஐந்து என்ற எண்ணுப் பெயர் நடுத்திராவிடமொழிகளில் சகரம் பெற்றே காணப்படுகிறது: கோண்டி 'சைது', கூயி, சிங்கி, பர்ஜி, 'சேவிர்' (ஐவர்) போன்றவை. அப்படியே ஆறு என்ற எண்ணுப் பெயரிலும் நடுத்திராவிட மொழிகள் சகரத்தை முதலில் பெற்றிருப்பதால் தொல் திராவிடத்தில் ஐந்து, ஆறு என்ற எண்ணுப் பெயர்கள் முறையே 'சைந்து' 'சாறு' என்று இருக்கவேண்டும் என்று மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. தமிழில் காணப்படும் உப்பு, உலை, அளை (மோர்) போன்ற சொற்களும் தொல் திராவிடத்தில் சகரத்தில் துவங்கும் சொற்களாகவே கருதப்பட்டுத், தமிழிலும் பிற தென் திராவிட மொழிகளிலும் சகரம் கெட்டுவிட்டதாகவே எண்ணப்படுகிறது. தன்மை மூவிடப் பெயர்களிலும், யாகாரத்தை முதலில் பெற்ற வேறு சில பெயர்களிலும் யாகாரம் எகரமாக (யான் என்பது வேற்றுமை உருபு ஏற்கும்போது என்- என்று மாறுவது: யாம் - எம்-) மாறுவதும் தென் திராவிட மொழிகளுக்கே உரிய பொது மாற்றம் ஆகும். பெயர்ச் சொல்லில் பால் விகுதி சேர்த்து ஆண், பெண் பால் சொற்கள் உண்டாக்கலாம். அவைகளில் சிலவே தொல்திராவிடத்திலேயே பால் விகுதி ஏற்று வந்துள்ளன. எ-டு. ஒருவன், ஒருத்தி, தோழன், தோழி போன்றவை. வேறு பல பெயர்களில் பால் விகுதிகள் பிற்காலத்திலேயே சேர்க்கப்பட்டன. குட்டன், கூனன், கெவிடன் (இதிலிருந்து தான் தமிழ் செவிடன் வந்தது), மூக்கன், செல்வன் ஆகிய சொற்களில் ஆண்பால் விகுதியும், குருடி, கெவிடி (தமிழ் செவிடி) ஆகிய சொற்களில் பெண்பால் விகுதியும் தொல்தென்திராவிடக் காலத்தில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இருநூறுக்கும் மேற்பட்ட சொற்கள் தென்திராவிட மொழிகளில் மட்டுமே காணப்படுவதும் குறிப்பிடத்தகுந்தது. எனவே தொல்தென்திராவிடம் என்ற பொது நிலையிலிருந்தே தமிழ், மலையாளம், குடகு, கன்னடம், துளு போன்ற தென் திராவிட மொழிகள் நாளடைவில் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிந்தே தனித்தனி மொழிகளாக உருப்பெற்றிருக்க வேண்டும்.

தென் திராவிட மொழிகள்

தொல்தென்திராவிடத்திலிருந்து முதலில் துளுவும், அடுத்து கன்னடமும், பின்னர் குடகும், அதன் பிறகு கோட்டா, தோடா ஒரு பக்கமும், தமிழ் மலையாளம் மற்றொரு பக்கமும் பிரிந்து, மலையாளம் முதலில் தமிழின் கிளைமொழியாக ஆதி காலத்திலிருந்தே அமைந்து 9ஆம் நூற்றாண்டை ஒட்டித் தனிமொழியாகப் பிரிந்து வளர்ந்திருக்கவேண்டும்.

துளு

தென்திராவிட மொழிகளுக்குள், துளு மொழியே அதிக மாற்றங்கள் பெற்றிருப்பதால் இதுவே தொல்தென் திராவிடத்திலிருந்து முதலில் பிரிந்திருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. தென் திராவிட மொழிகளில் அஃறிணைப் பன்மை (பலவின்பால்) விகுதியாக -கள், -ள் என்ற இரண்டு விகுதிகள் துளுவில் மட்டுமே காணப்படுகின்றன. இது பழைமைக் கூறினைத் தக்கவைத்துக்கொண்டதாகக் கூட இருக்கலாம். துளு தொல்தென் திராவிடத்திலிருந்து பிரிந்த பிறகே ஏனைய தென் திராவிட மொழிகளில் ஐந்து (துளுவில் ஐனு), எட்டு (துளுவில் எண்ம எட்டு பொருள்) என்ற இரண்டு எண்ணுப் பெயர்களில் அடிப்படை வடிவத்தில் (அதாவது பெயரடையாக வராத போது) -து சேர்க்கப் பட்டிருக்க வேண்டும். அதனாலேயே தமிழிலும் பெயர்ச்சொற்களில் துகரம் சேர்ந்த வடிவங்கள் உள்ளன. இலக்கண நிலையில் மகர ஈற்று அஃறிணைப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது -(அத்துச் சாரியை ஏற்று வரும். ஆனால் அந்தச் சாரியை எல்லா வேற்றுமை உருபுக்கு முன்னாலும் வருவதில்லை. துளு மொழியில் ஆறாம் வேற்றுமை உருபான - அகரத்துக்கு (மரத 'மரத்து') முன்னர் மட்டுமே வரும்; ஏனைய வேற்றுமை உருபுக்கு முன்னால் வருவதில்லை. அப்படி வருவது பிற தென்திராவிட மொழிகளில் ஏற்பட்ட பிற்கால வளர்ச்சியாகக் கருதப்படுகிறது.

கன்னடம்

மேலே குறிப்பிட்ட சாரியை கன்னட மொழியில் ஆறாம் வேற்றுமைக்கு முன்னர் மட்டும் அல்லாமல் (மரத), மூன்றாம் வேற்றுமை (மரதிந்த 'மரத்தால்'), ஏழாம் வேற்றுமை (மரதல்லி 'மரத்தில்') என்ற இரண்டு வேற்றுமைக்கு முன்னாலும் வருவது துளு நீங்கிய தென் திராவிட மொழிகளுக்கு உரிய பொதுவான மாற்றம் ஆகும். காதலன், கிழவன், பார்ப்பான், புலையன் ஆகிய சொற்களில் ஆண்பால் விகுதியும், புலைத்தி, கள்ளி, அரசி, கூனி ஆகிய சொற்களில் பெண்பால் விகுதியும் சேர்த்தது கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் ஏற்பட்ட பொது மாற்றம் ஆகும். எனவேதான் இவைகளுக்கு இணையான இனச் சொற்கள் கன்னடம் முதலான மொழிகளில் மட்டுமே உள்ளன.

குடகு

குடகு கன்னடத்தோடு நெருங்கிய தொடர்பு உடையது. அதற்கு ஒரு காரணம் கருநாடக மாநிலத்துக்குள் அது பேசப்படுவது. அதாவது குடகு மொழி பேசுவோரைச் சுற்றிக் கன்னடமொழி பேசுவோர் சூழ்ந்துள்ளார்கள். குடகு பேசுவோர் எல்லோரும் கன்னடத்தை இரண்டாம் மொழியாக அறிவார்கள். ஆனாலும் கன்னடத்தில் - (அ)த்து சாரியை இரண்டாம் வேற்றுமைக்கு முன்னால் வராமல் இருக்கும்போது (மரவன்னு 'மரத்தை') தமிழில் இருப்பது போன்றே குடகிலும் இரண்டாம் வேற்றுமைக்கு முன்னர் சாரியை பெறுகிறது.சில வினைச்சொற்கள் இறந்த காலத்தை ஈற்றெழுத்து இரட்டித்தும் (நடு- நட்டு; விடு- விட்டு), சில விகுதி சேர்த்தும் (எடு- எடுத்து) உணர்த்துகின்றன. ஆனால் சில சொற்களில் விகுதி சேர்த்தும் இறந்த காலத்தை உணர்த்துகின்றன.

கன்னடம்	குடகு	மலையாளம்	தமிழ்	
கொடு	கொட்டு	கொடுத்து	கொடுத்து	கொடுத்து'
உடு	உட்டு	உடுத்து	உடுத்து	உடுத்து

போன்றவை.

இங்கு குடகு, மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் கன்னடம் பிரிந்த பிறகு ஏற்பட்ட பொது மாற்றமாகவே கருதப்படுகிறது. அதாவது குடகு மொழி இலக்கண நிலையில் கன்னடத்தோடு ஒத்துப் போகாமல், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளோடு ஒத்துப் போவதால் பின்னவையோடு இன நெருக்கம் இருப்பதாகக் கருதப்படுகிறது. சில வினைச்சொற்களில் தன்வினை, பிறவினை வேறுபாடு கால விகுதியால் (முறிந்தது- தன்வினை; முறித்தது - பிறவினை, அழிந்தான் - தன்வினை, அழித்தான்- பிறவினை) - விகுதி மாறுபாட்டால் உணர்த்தப்படுகிறது. இந்த முறை கன்னடத்தில் காணப்படாமல், குடகு, மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் காணப்படுவதும் குடகு தமிழோடு நெருங்கிய தொடர்பு உடையது என்பதை வலியுறுத்துகிறது.

கோத்தாவும் தோடாவும்

குடகு மொழியிலிருந்து மாறுபட்ட சில பண்புகளைத் தமிழ், மலையாளம், கோத்தா, தோடா ஆகிய நான்கு மொழிகளும் பெற்றுள்ளன. அதனால் குடகு பிரிந்த பிறகு, இவை நான்கும் சில பொது மாற்றங்களைப் பெற்றிருக்கவேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது. மகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் நான்காம் வேற்றுமை உருபுக்கு முன்னால் -(அ)த்து சாரியையைக் குடகு மொழி பெறாமல் இருக்க (மரக்கெ 'மரத்துக்கு') இந்த நான்கு மொழிகளிலும் சாரியை சேர்ப்பது கட்டாயமாக உள்ளது (மரத்துக்கு இணையான சாரியை சேர்ந்த நான்காம் வேற்றுமை வடிவம் ஏனைய மூன்று மொழிகளிலும் காணப்படுகிறது).

சங்கத் தமிழில் மிகச் சிறுபான்மையான நான்காம் வேற்றுமைச் சொற்கள் மகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் சாரியை இல்லாமல் (வேழம் - வேழக்கு; குற்றியலுகரம் - குற்றியலுகரக்கு) காணப்படுவதும் வரலாற்றுப் பழைமையைப் புலப்படுத்துவதோடு தொன்மை வடிவங்களாகத் தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருப்பதையும் உணர்த்துகிறது.

தொல்திராவிடத்தில் நான்கு என்ற எண்ணைக் குறிக்கும் வடிவம் நால்கு என்றே மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த வடிவமே சங்க இலக்கியங்களான பெரும்பாணாற்றுப்படையிலும் அகநானூற்றிலும் காணப்பட, பெரும்பான்மை வடிவமாக நான்கு சங்க இலக்கியம் முழுமையும் காணப்படுகிறது. கன்னடம் (நாலு, நாலுக்கு), குடகு (நாலு) ஆகிய மொழிகளில் மெல்லெழுத்து இல்லை. ஆனால் தமிழ், மலையாளம் (நான்கு, நாலு) கோத்தா (நாங்க்), தோடா (நொங்க்) ஆகிய மொழிகளில் மெல்லெழுத்து வருவது அடுக்கு முறை ஓரினமாதல் (**Paradigmatic assimilation** - முன்னும் (மூன்று என்ற சொல்) பின்னும் (ஐந்து என்ற சொல்) வரும் சொற்களின் செல்வாக்கால் மாறுவது) என்ற மாற்றம் நடைபெற்றிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது.

மேலே குறிப்பிட்டபடி, கோத்தாவும் தோடாவும் ஒன்றாகப் பிரிந்து, பின்னரே தனிமொழிகளாக உருவாகியிருக்கவேண்டும். அப்படியே தமிழும் மலையாளமும் கொஞ்ச காலம் ஒன்றாக இருந்து, பின்னரே தனித்தனி மொழிகளாக உருப்பெற்றிருக்கவேண்டும். இப்படிச் சொல்வதற்கு முக்கியக் காரணம் பிற எந்தத் திராவிட மொழிகளிலும் காணப்படாத சில மொழிக் கூறுகள் இந்த இரண்டு மொழியில் மட்டுமே காணப்படுவதுதான்.

தமிழும் மலையாளமும்

இந்த இரண்டு மொழிகளில் மட்டுமே இகர, எகரத்துக்கு முன்னால் வரும் ககரம் சகரமாக மாறப் பிற திராவிட மொழிகளில் ககரமாக உள்ளது (உதாரணத்துக்குக் கன்னடம் காட்டப்படுகிறது)

கன்னடம்	மலையாளம்	தமிழ்	
கெவி/கிவி	செவி	செவி	
கிறு/கிறி	சிற்று/செற்று	சிறு	போன்றவை.

தமிழிலும் மலையாளத்திலும் சொல்லின் நடுவில் வரும் யகரம் (உயிர், பெயர் போன்ற சொற்களில் வருவது) தொல் திராவிடத்தில் சகரமாக இருக்கவேண்டும் (கன்னடம் உசிர், பெசரு / ஹெசரு) என்றே ஒப்பிலக்கண அறிஞர்கள் கருதுகிறார்கள். இந்த இரண்டு ஒலி மாற்றங்களும் (ககரம் சகரமாதல்; சகரம் யகரமாதல்) தமிழ், மலையாளம் ஆகிய இரண்டு மொழிகளுக்கே உரிய மாற்றங்கள். அப்படியே

சொல்லின் வடிவங்கள். இந்த இரண்டு மொழிகளில் மட்டுமே சில மாற்றங்கள் காணப்படுகின்றன. எண்ணுப் பெயர்களில் ஓர் இடத்தில் மட்டுமே பத்து என்ற எண்ணைக் குறிக்க நூறும், நூறைக் குறிக்க ஆயிரமும் தமிழிலும் மலையாளத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ, மலையாளம்	தொண்ணூறு	தொள்ளாயிரம்
குடகு	தொம்பதி	ஓம்பய்நூறு
தோடா	என்ப	வின்பொனூர்
கன்னடம்	தொம்பத்து	ஒம்பய்னூறு

இலக்கண நிலையில் பெயர்ச்சொற்களில் பால் விகுதி சேர்த்து ஆயன், ஆய்த்தி (ஆய்ச்சி), சிறுமி போன்ற சொற்களில் பயன்படுத்துவது, இந்த இரண்டு மொழிகளில் மட்டுமே காணப்படுகிறது. எனவேதான் தமிழும் மலையாளமும் ஒரு சிறு உட்பிரிவாக அமைந்து, பின்னரே தனித்தனி மொழியாக உருப்பெற்றிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. அந்த ஒற்றுமை நாட்டு வரலாறு, இலக்கிய வரலாறு ஆகியவைகளாலும் உறுதிப்படுகிறது. மலையாள மொழி தனிமொழியாக உருப்பெற்ற வரலாறு ஏனைய திராவிட மொழிகளின் வரலாற்றிலிருந்து மாறுபட்டது. அதற்கு முக்கியக் காரணம், சங்க காலத்தில் பழந்தமிழகத்தின் ஒரு பகுதி சேரநாடாக (அன்றைய கேரளநாடு) அமைந்திருந்தது. அங்கு வாழ்ந்த புலவர்கள் கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டு வரை செந்தமிழில் இலக்கியம் இயற்றியுள்ளார்கள். அதனால், மொழி அமைப்பு நோக்கில் தமிழில் சங்க காலத்திலும் இடைக்காலத்திலும் ஏற்பட்ட மொழி மாற்றங்கள் மலையாளத்திலும் காணப்படுகின்றன. ஒலிநிலையில் சொல்லுக்கு முதலில் வரும் யகரம் கெடுவது

பழந்தமிழ்	இடை(க்காலத்)தமிழ்	மலையாளம்
யாறு	ஆறு	ஆறு
யாமை	ஆமை	ஆமை/ஆம
யானை	ஆனை	ஆனை/ஆன முதலியன.

பால்காட்டும் விகுதியாக வரும் -த்த்-, இறந்த கால விகுதியாக வரும் த்த் / ந்த் என்பவை இகரத்துக்கு அல்லது ஐகாரத்துக்கு முன்னால் வந்தால் ச்ச் / ஞ்ச் என்று மாறுபடுவது இடைத்தமிழிலும் மலையாளத்திலும் மட்டுமே காணப்படுகிறது.

ப.த.	இ.த.	மலை.
வைத்த	வைச்ச/வச்ச	வச்ச
விளைந்து	விளைஞ்சு	விளஞ்ஞு
ஆய்த்தி	ஆய்ச்சி	ஆச்சி

இடைத்தி	இடைச்சி	இடச்சி
ஐந்து	ஐஞ்சு/அஞ்சு	அஞ்சு முதலியன.

இலக்கண நிலையில் -மார் என்ற விகுதி பலர்பால் உணர்த்த, தமிழிலும் மலையாளத்திலும் மட்டுமே (தாய்மார்) கையாளப் படுகிறது. அப்படியே - கின்று - என்பது நிகழ்கால விகுதியாகப் பயன்படுத்தப் படுவதும், எண்ணுப்பெயர்களிலும், சுட்டுப்பெயர்களிலும் சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட -அன்- சாரியைக்குப் (இரண்டனை, அதனை) பதிலாக -இன்- சாரியை கையாளப்படுவதும் (இரண்டினை, அதினை) அந்த இரண்டு மொழிகளுக்கு மட்டுமே உள்ள பொதுப் பண்பு, சொற்கோவை நிலையிலும் இரண்டு மொழியிலும் மட்டுமே காணப்படும் சொற்கள் (த.அணாப்பு, ம. அணப்பு; த. அத்தாளம் / அத்தாழம், ம.அத்தாழம் 'இரவு உணவு'; த.அழுவம், ம. அழுகு, த. சலி, ம. சலிக்க போன்றவை) பல உள்ளன. இப்படிப்பட்ட பல மொழிஅமைப்பு ஒற்றுமை காரணத்தால்தான் எல்.வி.இராமஸ்வாமி அய்யர் முதலியவர்கள் முன் இடைத்தமிழ்க் காலத்தில் அதாவது பல்லவர் - பாண்டியர் (கி.பி.8 அல்லது 9-ஆம் நூற்றாண்டு) காலத்தில் மலையாளம் தனிமொழியாகப் பிரிந்திருக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளார்கள். அதே சமயத்தில் சில மலையாள மொழி வழக்குகள் தொல் திராவிடத்தின் வழக்குகளின் நேரடி பிரதிபலிப்பாக - சில தமிழ் மொழி வழக்குகளை விடப் பழமையானதாகக் காணப்படுகின்றன. உதாரணங்கள் : மூவிடப்பெயர்களில் முன்னிலைப் பன்மையின் வேற்றுமை ஏற்கும் வடிவம் தமிழில் நும் - என்பதே. மலையாளத்தில் இணையான வடிவம் நிங்ஙள் (நிம் + கள்) என்பதே. பிராஹுயி தவிர எல்லாத் திராவிட மொழிகளிலும் நிம் என்ற வடிவமே காணப்படுகிறது. அதனால் மகரத்துக்கு முன் வரும் இகரம் உகரமாகத் தமிழில் மட்டும் மாறியுள்ளது. அதாவது மலையாளம் பழைமைக் கூறினைத் தக்கவைத்துக் கொள்ளத் தமிழில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அந்த வடிவம் கேரளப்பகுதியில் மிகப் பழங்காலத்திலிருந்தே பேச்சு வழக்கில் இருந்திருக்கவேண்டும். இதைப் போலவே, தமிழில் கருமை, அருமை என்று வழங்கும் வடிவங்களுக்கு இணையாக மலையாளத்தில் கரிம, அரிம என்ற வடிவங்களே உள்ளன. புறநிலை மீட்டுருவாக்கம் - ஒப்பிலக்கண மீட்டுருவாக்கம் (Comparative reconstruction) அகநிலை மீட்டுருவாக்கம் (Internal reconstruction) என்ற இரண்டு நிலையிலும் (தமிழில் கரிது, கரியன் போன்ற வடிவங்கள் இருப்பது) கரிமை , அரிமை என்ற வடிவங்களே தொல்திராவிடத்துக்கு மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றன. எனவே, இங்கும் மலையாளம் பழைமையைப் பாதுகாத்து வைத்திருக்கத் தமிழ் மாற்றம் பெற்றுள்ளது. சா என்ற வினையின் இறந்த கால வடிவம் தமிழில் மட்டுமே செத்து, செத்தான் என்று ஆகாரம் எகரமாக மாற மலையாளம் முதலான பிற திராவிட

மொழிகளில் சத்து என்று ஆகாரம் அகரமாக மாறியுள்ளது. இதுவும் தமிழுக்கு உரிய தனிச்சிறப்பான மாற்றமே. இப்படிப்பட்ட இன்னும் சில மிகப் பழைமையான வடிவங்கள் மலையாளத்தில் இருப்பதால் சங்க காலத்திலேயே கூட மலையாளம் ஒரு கிளைமொழியாய், பேச்சு வழக்கில் வழங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. வையாபுரிப்பிள்ளையும், மு. இராகவய்யங்காரும் இன்றும் மலையாள மொழியில் மட்டும் வழங்கும் சில வழக்குகள் தொல்காப்பியத்தில் காணப்படுவதைச் சுட்டிக்காட்டித் தொல்காப்பியம் அன்றைய சேரநாட்டுப் பகுதியில் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். எனவே சங்ககாலச் சேரநாட்டில் செந்தமிழ் இலக்கிய மொழியாகப் பயன்படுத்தப்பட்டுப் புலவர்கள் தமிழ்க் கவிதைகளைப் புனைந்திருந்தாலும், பேச்சு மொழி மாறுபட்டு மலையாள மொழியின் சில கூறுகளைக் கொண்டிருந்ததாகக் கருதவேண்டும்.



என்ற முறையில் தமிழ் தொல் திராவிடத்திலிருந்து பிரிந்த முறையை விளக்கலாம்.

மலையாள மொழி மெல்லினமாக்கம் (ங்க் ⇨ ங்ங்; ஞ்ச் ⇨ ஞ்ஞ்) போன்ற சிறப்பு மாற்றங்களையும் பழைமைக்கூறுகளையும் (சொல்லுக்கு முதலில் ஞகரத்தைத் தக்கவைத்துக்கொள்ளல் தமிழ்: நரம்பு. மலை: ஞரம்பு. த: நளி. மலை, ஞளுங்ஙுக) பெற்றும், 9ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளையும், 12ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்களையும், 14ஆம் நூற்றாண்டு முதல் தனி எழுத்து வடிவத்தையும் பெற்றும் தனி மொழி என்ற முழுத் தகுதியைப் பெற்றது. தமிழோ இலக்கிய

மொழியாகக் கிறித்துவ சகாப்தம் தொடங்குவதற்கு முன்னரே பயன்படுத்தப்பட்டுச் சங்க இலக்கியம் என்னும் உலகப் புகழ் பெற்ற இலக்கியத்தையும், மொழியின் கட்டமைப்போடு (எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்) மொழி இலக்கியப் பாடுபொருள், இலக்கிய வகை, யாப்பு, அணி ஆகியவைகளுக்கான இலக்கணத்தையும் (பொருளதிகாரம்) உள்ளடக்கிய தொல்காப்பியம் என்ற இலக்கணத்தையும் சங்க காலத்திற்கு முன்பே பெற்று அன்றுமுதல் இன்று வரை இலக்கியம், இலக்கணம், அறிவியல் நூல்கள், சமூகவியல் நூல்கள், நாளிதழ், வார இதழ், மாத இதழ் போன்று பல வகையிலும் மொழி பயன்படுத்தப்பட்டுப் பெருமைப்படும்படி வளர்ந்துள்ளது; வளர்ந்தும் வருகிறது.

தமிழ் மொழி வரலாறு

முன்னுரை

மொழியின் ஒரு சிறப்புப் பண்பு காலந்தோறும் மொழி அமைப்பு மாறுவதுதான். அந்த மாற்றம் நுண்நிலையில் ஏற்பட்டாலும், இரண்டு வேறு காலக்கட்ட மொழியை ஒப்பிடும்போது மாற்றம் தெளிவாகப் புலப்படும். அந்த மாற்றம் பரிணாம வளர்ச்சி (Evolution), விரவுகை (Diffusion) என்ற இரண்டு நிலையிலேயே ஏற்படுகிறது.

மொழி வரலாறு என்பது ஒரு மொழிக்குக் கிடைக்கும் மிகப் பழைய எழுத்துச் சான்றுக்கு உரிய காலத்திலிருந்து இன்று வரையுள்ள எழுத்துச் சான்றுகளின் அடிப்படையில் மொழியின் கட்டமைப்பில் ஒலி, ஒலியன், புணர்ச்சி, இலக்கணக்கூறு, சொற்களஞ்சியம், சொற்பொருள் ஆகியவைகளில் நடைபெற்ற மாற்றங்களை விளக்குவது. எழுத்துச் சான்றுகள் கிடைக்கும் காலக்கட்டத்தைப் பெரும்பான்மையும் பழங் காலம், இடைக்காலம், தற்காலம் என்று மூன்று பெரும் பிரிவாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மொழி அமைப்பில் நடந்த மாற்றங்களை விளக்குவதே மொழியியல் மரபு. ஒவ்வொரு காலக் கட்டமும் நீண்ட இடைவெளி கொண்டிருந்தால், அவை சிறுசிறு காலக்கட்டமாகப் பிரித்து விளக்கப்படும். மொழியின் வரலாற்றுக் காலத்தைப் பல காலக்கட்டமாகப் பிரிப்பதற்கு முக்கியக் காரணம் எல்லா மாற்றங்களையும் பரிணாம வளர்ச்சி மாற்றங்களாக விளக்கமுடியாது என்பதுதான். அரசியல், சமூகப் பண்பாட்டு மாற்றங்களால் தகுமொழி (இலக்கணப்படி இயற்சொல்) - (Standard dialect) மாற்றமும், அதை ஒட்டி மொழி அமைப்பில் ஏற்படும் பல மாற்றங்களும் விரவுகை மாற்றம் மூலமே விளக்கமுடியும். உதாரணமாகச் சங்கத்தமிழில் - பழந்தமிழில் - முன்னிலைப் பன்மைப் பெயராக நீயிர் அல்லது நீர் என்ற வடிவமே காணப்பட, இடைக்காலத்தமிழில் நீங்கள் (நீம் + கள்) என்ற வடிவமே பெருவழக்காகக் காணப்படுகிறது. அதில் பன்மை வடிவத்தில் (நீம்)

இன்னொரு பன்மை விகுதி (-கள்) சேர்ப்பது பரிணாம வளர்ச்சியால் ஏற்பட்டது. ஏனென்றால், பன்மை வடிவத்தை உயர்சொற்கிளவியாகப் (Honorific Singular) பயன்படுத்த ஆரம்பித்த பிறகு, உண்மையான பன்மையை உணர்த்த இன்னொரு பன்மை விகுதி சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், நீர் என்பது நீம் என்று மாறியதைப் பரிணாம வளர்ச்சியாகக் கொள்ள முடியாது. அது ஒரு விரவுகை வளர்ச்சி. ஏனென்றால் நீம் என்பது சங்ககாலத்தில் பேச்சுக் கிளை மொழியில் இருந்து அரசியல் சமூகப் பண்பாட்டு மாற்றத்தால் தகுமொழியாக - பாண்டிநாட்டுக் கிளைமொழி (சங்ககாலம்) அடிப்படை யிலிருந்து சோழநாட்டுக் கிளைமொழிக்கு (இடைக்காலம்) மாறியதால் ஏற்பட்ட விளைவு. எனவே மொழி வரலாற்று ஆய்வில் காலக்கட்ட வரையறை அவசியம் தேவை.

தமிழ் மொழி வரலாற்றுக் காலக் கட்டங்கள்

இது வரை தமிழ் மொழிக்குக் கிடைக்கும் மிகப் பழைமையான எழுத்துச் சான்றுகளாக மொழியியல் அறிஞர்களால் கருதப்படுவது அசோகனின் பிராமி எழுத்துகளைத் தழுவிப் பெரும்பான்மையும் மதுரை, இராமநாதபுரம் மலைப் பகுதியில் கிடைக்கும் சிறுசிறு கல்வெட்டுகள்தாம் என்பர். அவை கி.மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டவை. அதற்குப் பிறகே சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் தோன்றியிருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது. எப்படியானாலும் மொழியியல் நோக்கில் பழந்தமிழ்க் (Old Tamil) காலம் என்பது பொதுவாகச் சங்க காலம் என்பதுதான். அது கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலக்கட்டம் ஆகும். மொழியியல் அறிஞர்கள் தொல்காப்பியம், எட்டுத் தொகையில் கலித்தொகை, பரிபாடல் நீங்கலாக உள்ள நூல்கள், பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப் படை நீங்கலாக உள்ள நூல்கள் ஆகியவை முன் பழந்தமிழ்க் (Early Old Tamil) காலத்தைச் சேர்ந்தவை என்றும், கலித் தொகை, பரிபாடல், முருகாற்றுப்படை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை பின் (Late) பழந்தமிழ்க் காலத்தைச் சேர்ந்தவை என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக் காலக் கட்டத்தில் தமிழ் மன்னர்களே தமிழகத்தைப் பல்வேறு பகுதிகளாகப் பகுத்து ஆண்டு வந்தார்கள்.

இடைத் தமிழ்க் காலம் என்பது கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலக்கட்டம் ஆகும். இதை முன் இடைத் தமிழ்க்காலம் 5ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் (401-900), நடு இடைத்தமிழ்க் காலம் (Middle Middle Tamil)- 10ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் (901-1400), பின் இடைத்தமிழ்க் காலம்- 15ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் (1401-1700) என்று மூன்று சிறு

பிரிவாகப் பிரித்தே விளக்குவார்கள். அரசியல் நோக்கில் முன் இடைத் தமிழ்க் காலம் என்பது பல்லவர் பாண்டியர் காலம் என்றும், நடு இடைத் தமிழ்க் காலம் என்பது பிற்காலச் சோழர் காலம் என்றும், பின் இடைத் தமிழ்க் காலம் என்பது நாயக்கர் காலம் என்றும் குறிப்பிடலாம். எழுத்துச் சான்றுகளைப் பொறுத்த வரையில் முற்பகுதியில் தேவாரம், திருவாசகம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் ஆகிய இலக்கியங்களும், நடுப்பகுதியில் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகிய காப்பியங்களும் சில சிற்றிலக்கியங்களும், பின்பகுதியில் பிள்ளைத் தமிழ், உலா, குறவஞ்சி போன்ற பல சிற்றிலக்கியங்களும் தோன்றின. மூன்று காலக் கட்டங்களிலும் கல்வெட்டுகள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

தற்காலம் என்பது 1701-லிருந்து துவங்கி இன்று வரை தொடர்கிறது. இது ஐரோப்பியர் இந்தியாவுக்கு வந்து ஆட்சி அமைத்த காலம் தொடங்கி இன்று வரையுள்ள காலம் ஆகும் இலக்கிய நிலையில் உரைநடை செல்வாக்கு பெற்ற காலம் இது.

பழந்தமிழ்க் காலம்

1. ஒலி நிலையில் அ. அளபெடை (ஆஅ, ஈஇ முதலியவை) மிகுதி; ஆ. நகரமும் னகரமும் வேற்றுநிலை வழக்கில் (contrast)-வரின் (வந்தால்) - வெரிந் (முதுகு); ஆநியம் (நட்சத்திரம்) -வானி (மழை) வருவது. 2. இலக்கண நிலையில் அ. முன்னிலைப் பன்மை வடிவமாக நீயிர் அல்லது நீர் என்ற வடிவமும், ஆ. மகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் மூன்றாம் வேற்றுமை உருபான -ஒடுவுக்கு முன்னர் (அ)த்துச் சாரியை ஏற்காத வடிவங்களும் (நெஞ்சமொடு, காலமொடு முதலியவை), இ. குறிப்புவினையும் (அரியன், ஈண்டையேன், காதலள், மன்றத்தது போன்றவை), ஈ. உறழ்ச்சியும் (இறந்த கால விகுதி இகரமும், (ந்)தும் உறழ்ந்து வருதல், (முயலி - முயன்று, உடீஇ - உடுத்து போன்றவை); (சொல்லின் வடிவத்தில் - அம் சேர்ந்தும் சேராமலும் வருவது; (உலகு - உலகம், இன்பு - இன்பம், நறவு -நறவம் முதலியவை) மிகுதியாகப் பயின்று வருகின்றன. 3. சொற்களஞ்சிய நிலையில் அ. கிழக்கு, மேற்கு ஆகிய திசையைக் குறிக்க முறையே குணக்கு, குடக்கு என்ற சொற்கள் மிகுதியாகக் கையாளப்பட்ட காலம். ஆ. வடமொழிச் சொற்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலமும் இதுவே இந்தப் பொதுப் பண்புகளுக்கு இடையே மொழி அமைப்பில் பல வேற்றுமை இருப்பதால் மொழியியலார் முன் பழந்தமிழ்க் காலம், பின் பழந்தமிழ்க் காலம் என்று இரண்டாகப் பிரித்துள்ளார்கள்.

முன் பழந்தமிழ்க்காலம்

ஒலிநிலை : சொல்லுக்கு முதலில் சகரமெய் ஐகார உயிர் தவிர்த்து ஏனைய உயிரோடு சேர்ந்து வரும். ஞகரமெய் அ, ஆ, இ, எ, ஒ ஆகிய

உயிர்களோடு மட்டுமே சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும் (ஞரல், ஞாயிறு , ஞிமிறு, ஞெகிழ், ஞொள்கு). யகரமெய் அ (யவனர்), ஆ (யாண்டு), ஊ (யூபம்) ஆகிய மூன்று உயிர்களோடு மட்டுமே சேர்ந்து வரும்.

இலக்கண நிலை : 1. செய்யாய் என்ற வாய்பாட்டு வினை முற்றுகள் ஏவல் வினையாக (செல்வாய் - செல்வாயாக) முன் பழந் தமிழிலும், பின் பழந்தமிழிலும் வரும். ஆனால் செய்வாய் என்ற வாய் பாட்டு வினைமுற்றுகள் ஏவல் வினையாக முன் பழந்தமிழில் வராது; பின் பழந்தமிழில் மட்டுமே வரும். 2. செய்யாஅல் என்னும் வாய்பாடு எதிர் மறை ஏவலாக (செய்யாதே) முன் பழந்தமிழில் மட்டுமே வரும். 3. - இசின் ஈற்றுச் சொற்கள் (கண்டிசின் - காண்பாய்) ஏவல் ஒருமையில் முன் பழந்தமிழில் மட்டுமே வரும். 4. வினைமுற்றுகளில் இடம் (தன்மை, முன் னிலை) - பால் (ஆண், பெண் முதலியவை) விகுதிகள் முன் பழந்தமிழில் குற்றெழுத்துகள் (-என், -எம், -இர், -அன், அள், அர் போன்றவை) பெற் றதே மிகுதி. 5.பலர்பால் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போ து -தம்- சாரியை (நம்பியர் தம்மொடு, காதலர் தமக்கு) பெற்று வரும். 6.வினைச் சொற்களில் இறந்த காலம் (செய்தேன்), இறப்பல் காலம் (எதிர் காலமும், நிகழ்காலமும் சேர்ந்தது (செய்வேன் என்பது எதிர்காலத்தை யும், நிகழ்காலத்தையும் உணர்த்தும்) என்ற இரண்டு விகுதிகளே முன் பழந்தமிழில் உண்டு.

சொற்களஞ்சியம் : சங்க இலக்கியம் மக்களின் காதல் உணர்வு, குடும்ப வாழ்க்கை, வீர உணர்வு, அரசியல், கலை உணர்வு முதலியவைகளை வருணிப்பதால் அன்றாடம் மக்கள் பயன்படுத்தக் கூடிய பல சொற்கள் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. முறைப் பெயர்கள் (யாய், தந்தை, ஐயன் (அண்ணன்)) இயற்பெயர்கள் (சிறப்புப் பெயர் - (proper names) (எ-டு. சாத்தன், அண்டிரன் , கபிலன், வெள்ளி வீதி,), இயற்கைப் பொருள்களான மரம் (யாஅம், வேம்பு, பலா, மா, கடப்பம், தேக்கு முதலியவை), பூப் பெயர்கள் (முல்லை, ஆம்பல், தாமரை, நெய்தல், குறிஞ்சி முதலியவை), விலங்கு (புலி, மான், அணில், நாய், குரங்கு முதலியவை), நேரப்பெயர்கள் பெரும்பொழுது (கார், கூதிர், இளவேனில், முன்பனி), சிறுபொழுது (பகல், இரவு, மாலை, வைகறை, யாமம் முதலியவை), திங்கள் (மாதம் - ஆடி, தை முதலியவை) குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பதிற்றுப்பத்தில் நாள், திங்கள், யாண்டு, ஊழி, வெள்ளம் என்று காலப் பெயர்கள் ஏறு வரிசையில் விளக்கப்பட்டுள்ளன. பல வடமொழிச் சொற்கள் கடனாக்கமாகவும் (Loan Creations), (இமயம் - தொன்றுமுதிர்வடவரை, யூபம் - வேள்வித்தூண், அங்குசம் - கவைமுட்கருவி; சுக்கிரன் - வெண்மீன், சனி (கோள்) மைம்மீன்) சங்கத்தமிழில் கையாளப்பட்டுள்ளன.

பின் பழந்தமிழ்

இந்தக் காலக் கட்டத்தில் ஓரளவு (கடவுள்) பக்தியும், அற உணர்வும் மிகுந்து காணப்படுகின்றன. அதனால் விரவுகை வளர்ச்சியாக வடமொழிச் செல்வாக்கு மொழி அமைப்பில் (ஒலி நிலை, சொற்களஞ்சியம்) ஓரளவு உள்ளது. பரிணாம வளர்ச்சியும் காணப்படுகிறது.

ஒலிநிலை · 1. சைகாரம் (சையம் - மலை, சைவம், சைமினி (ஆட் பெயர்) யோகாரம்) யோகம் (மருந்து), யோசனை (தூர அளவு) ஆகியவைகளை முதலாக உடைய சொற்கள் முதன்முதலாகப் பின்பழந் தமிழில் வழங்கியுள்ளன. 2. யாகாரச் சொற்கள் (யாடு போன்றவை) சொல்லுக்கு முன்னுற்ற யகர மெய் கெடும் (யாறு,- ஆறு, யாண்டு - ஆண்டு) ஒலி மாற்றமும் ஏற்பட்டுவிட்டது.

இலக்கண நிலை: 1. உயர்திணைச் சொற்கள் இரட்டைப் பன்மையாகக் -கள் விகுதி ஏற்று வருதல்: அரசர்கள், ஐவர்கள், சிறுமியர்கள், யாங்கள். 2. பலர்பால் விகுதியாகக் -கள், மார் விகுதிகள் வருதல் : வாளிகள்- வாளை உடையவர்கள்; தாய்மார், பாவைமார். 3. பெயர்ச் சொற்களில் -ஆர் விகுதி உயர்வுச் சிறப்பு ஒருமை (Honorific singular) விகுதியாக (சாமனார்) முதன்முதலில் கலித்தொகையிலேயே வருகிறது. 4. பொருட்டு வினையெச்சமாக வான் /பான் என்ற விகுதி முன் பழந்தமிழில் நற்றிணையில் மட்டும் ஒரு தடவை (குழைவான்) வரப், பின் பழந்தமிழில் பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலியவைகளில் (நீக்குவான், காண்பான்) வந்துள்ளன. 5. செய்யாயேல் என்னும் வாய் பாட்டு நிபந்தனை எச்சம் (துறப்பாயேல் - துறந்தால், வருமேல்- வந்தால் பின்பழந்தமிழில் மட்டுமே உள்ளது. 6. -ஓம் என்பது தன்மைப் பன்மை விகுதியாகச் சிலம்பிலும் மேகலையிலும் (ஆடினோம், இலோம்) வந்துள்ளது. சொற்களஞ்சிய நிலை: திருக்குறளில் பாக்கியம் என்ற வட சொல்லும், சிலப்பதிகாரத்தில் முதன்முதலில் புயம் (தோள்), கருணை(அருள்), தெக்கணம் (தெற்கு), சேடி(தோழி) மாருதம் (காற்று), விரதம் (நோன்பு) போன்ற பல சொற்களும் கையாளப்பட்டுள்ளன. கீழ், மேல் என்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் முறையே பள்ளம், மேடு என்று பொருளைக் குறித்துவர, மேற்கு என்று திசையைக் குறிக்க முதன்முதலில் சிலம்பில் கையாளப்பட்டுள்ளன.

இடைத்தமிழ்

பல்லவர்- பாண்டியர் காலத்தில் அரசியல்-சமூகம் - பண்பாடு, இலக்கியம் ஆகிய எல்லாவற்றிலும் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. முன்னரே குறிப்பிட்டபடி பாண்டிநாட்டுத் தமிழ், தகுமொழியாகச் சங்க காலத்தில் இருந்தது. முன் சொன்ன பலவகை மாற்றங்களால் சோழநாட்டுத் தமிழைத் தகுமொழியாகக் கருதும் நிலை ஏற்பட்டது.

சொன்னபடி, 1. முன்னிலைப் பன்மை வடிவம் நீங்கள் என்பது பெரு வழக்காகி விட்டது. சரக்கு, சங்கு, சக்கை போன்ற வடிவங்களும், உயிர் என்பதன் பழைய வடிவம் உசிர் என்பதும், நிலவு என்பதன் பழைய வடிவம் நிலாசு என்பதும் இந்தக் காலக் கட்டத்தில் இலக்கியத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே சமயத்தில் பரிணாம வளர்ச்சியால் சங்கத் தமிழ் பல மாற்றங்களைப் பெற்றே இடைத்தமிழாக உருவாகியது. 2. சொல்லுக்கு இறுதியில் வந்த ஞ, வ ஆகிய மெய்கள் மறைந்தன. அதாவது அப்படிப்பட்ட சொற்கள் (உரிஞ், அவ், இவ் போன்றவை) வழக்கிலிருந்து மறைந்தன. 3. சகர மெய் எல்லா உயிர் எழுத்துகளோடும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வர ஆரம்பித்தது. 4. ஒலி மாற்றமாக, ழகரம் ளகரமாகவும் -த்த்- என்பது -ச்ச்- ஆகவும் சில சொற்களில் மாறியுள்ளன. 5. சங்கத்தமிழ் துழவம் என்பது துளசி என்றும் பவழம் என்பது பவளம் என்றும் மாறியுள்ளன. 6. வைத்த என்பது தேவாரத்தில் வச்ச என்றே வந்துள்ளது. ஐந்து என்பது ஒரு தடவை அஞ்சு என்றும் காணப்படுகிறது. இந்த மாற்றங்கள் (த்த்-> ச்ச்-> ந்த்-> ஞ்ச்) கல்வெட்டுகளில் நிறைய காணப்படுவதால் பேச்சு மொழியாக அதிகம் வழங்கி இலக்கியத்தில் குறைவான உதாரணங்களே வந்துள்ளதாகக் கருதப்படுகிறது.

இலக்கண நிலை : 1. சங்க காலத்தில் வல் வினைகள் (நடப்பின் என்ற வினைகள் செய, செயின் என்ற வாய்பாடுகள்) பகர மெய்யைப் பெற்று வர, இடைக்காலத்தில் ககர மெய்யை (நடக்க, நடக்கின்) பெற்றன. செயின் என்ற வாய்பாட்டு நிபந்தனை வினையெச்சம் இந்தக் காலக் கட்டத்தில் பழக்கம் குறைந்து செய்தால் என்பதே பெரு வழக்காகி விட்டது. 3. இறந்த காலம், எதிர்காலம் (செய்வான், செய்யும்), நிகழ் காலம் (செய்கின்றான், செய்கிற) என்று மூன்று காலம் இலக்கணத் துறையில் நிலை பெற்றுவிட்டது. 4. எண்ணுப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள் ஆகியவைகளில் -அன்- சாரியைக்குப் (ஒன்றனை, அதனை) பதிலாக -இன்- சாரியை (ஒன்றினை, அதினை) வரத் தொடங்கிவிட்டது.

சொற்களஞ்சியம் : சமயத் தொடர்பான வடமொழிச் சொற்கள் இலக்கிய வழக்கில் நிறைய வந்துள்ளன : பாதம், ஈஸ்வரன், தீர்த்தம், உதரம், பூசை, நாதன், அச்சுதன், லோகம் போன்ற நூற்றுக்கணக்கான சொற்கள் வழங்க ஆரம்பித்துவிட்டன. சங்க காலத்தில் சமயச் சார்பற்ற பொருளில் கையாளப்பட்ட சொற்களும் சமயப் பொருள் பெற்று விட்டன:

சொல்	சங்க காலப் பொருள்	இடைக்காலப் பொருள்
இறைவன்	அரசன்	கடவுள்
கோயில்	அரண்மனை	கடவுள் உறைவிடம்
பணிதல்	பணிவாக இருத்தல்	கடவுளை வணங்குதல்
தாழ்தல்	தாழ்வாக இருத்தல்	கடவுளை வணங்குதல்

முதலியன, அரசர்களின் பெயர்கள் வடமொழிப் பெயர்களாக மாறிவிட்டன.

நடு இடைத்தமிழ்

விசயாலயன் பரம்பரையைச் சார்ந்த பிற்காலச் சோழர்களின் காலம் இது. வடமொழிச் செல்வாக்கு மிகுதியால் மணிப்பிரவாளம் என்ற (தமிழ்ச் சொல்லும் வடமொழிச் சொல்லும் சரிசமமாய்க் கலந்த) நடை உருவாயிற்று. கம்பர், சேக்கிழார் போன்ற பெரும் புலவர்கள் வடமொழிச் செல்வாக்குக்கு அதிகம் ஆட்படாவிட்டாலும் சொற்களஞ் சியத்தில் வடமொழியின் செல்வாக்கை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை; அதற்கு முக்கியக் காரணம் அரசியலும் சமயமுமே. அரசர்களால் வடமொழி அதிகமாக ஆதரிக்கப்பட்டது.

ஒலிநிலை : 1. றகரம் சங்க காலத்தில் நுனிநா அண்ண **(Alveolar)** வல்லொலியாக - வல்லின எழுத்தாக இருந்தது ஆடொலியாக **(Trill)** மாறிவிட்டது. அதனால்தான் தொல்காப்பியர் 'அணரி நுனிநா ஒற்ற' என்று கூறியதற்கு மாறாக, நன்னூலார் 'அண்ணம் நுனிநா நனி உறில்' என்று வருணித்துள்ளார். 2. ஆய்தம் இலக்கியத்தில் அதிகம் பயிலவில்லை. ககரஒலி சில சொற்களில் யகர ஒலியாக மாறிவிட்டது. **(வைகாசி , வையாசி).**

இலக்கண நிலை : 1. நிபந்தனைவினையெச்சமாக வினைமுற்று + ஆகில் என்ற வடிவம் அப்போது பழக்கத்தில் வந்துவிட்டது. பழைய வடிவமான செயின் அல்லது செய்தால் என்பதில் எச்ச வடிவத்தில் கருத்தா நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை. வினைமுற்றோடு 'ஆகில்' சேர்த்துக் கையாளும்போது கருத்தா யார் என்று உணர்த்தப்படுகிறது. அதனால் நிபந்தனை அதிக அழுத்தம் பெறுகிறது. 2. வேற்றுமைகளைச் சொல் உருபாலும் உணர்த்தும் நிலை ஏற்பட்டுவிட்டது. உதாரணமாக நான்காம் வேற்றுமை, பொருட்டு என்ற சொல் உருபாலும் ஐந்தாம் வேற்றுமை, நின்று அல்லது (இல்) இருந்து என்ற சொல் உருபாலும் உணர்த்தப்பட்டன. 3. படி (சொன்னபடி, எழுதியபடி), இடத்து (வந்த விடத்து - வந்தபோது, கேட்ட விடத்து - கேட்டபோது) ஆகியவை இடைச் சொற்களாகவும் பயன்படுத்தப்பட்டன.

சொற்களஞ்சியம் : வீரசோழியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களின் ஆசிரியர்கள் வடமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்யும் முறையை விளக்கியுள்ளதிலிருந்து வடமொழிச் சொற்கள் நிறைய கையாளப்பட்டமை தெளிவாகிறது. அத்தோடு சிங்களம் (பில்லி சூனியம், முருங்கை) மலாய் (கிட்டங்கி) முதலிய பிற மொழிச் சொற்களும் அரசியல் உறவால் தமிழில் புகுந்தன.

பின் இடைத் தமிழ்

இந்தக் கட்டத்தில் அரசியலில் பிற மொழியாளர் செல்வாக்கு மிகுந்தது. முதலில் முகம்மதியர் படையெடுப்பும் பின்னர் தெலுங்கு மொழி பேசும் நாயக்கர் ஆட்சியும், மராத்தியர் ஆட்சியும் மொழி அமைப்பில் பல மாற்றங்களை உண்டுபண்ணின.

ஒலிநிலை: இலக்கண ஆசிரியர்கள் வடமொழி எழுத்துகளை நீக்கி எழுதவேண்டும் என்று கூறிவந்தாலும், கல்வெட்டுகளில் ஆதிகாலத்திலிருந்தே வடமொழி எழுத்துகள் - கிரந்த எழுத்துகள் - பயன்படுத்தப் பட்டுவந்தன. இலக்கியத்தில் முதன்முதலில் அருணகிரியாரின் (15ஆம் நூற்றாண்டு) திருப்புகழிலிருந்தே ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ ஆகிய எழுத்துகள் இலக்கியத்தமிழில் கலந்தன. ரகரமும் (ரீங்காரம்,ருது போன்ற சொற்கள்) லகரமும் (லீலை, லோகம் போன்றவை) சொல்லுக்கு முதலில் வர ஆரம்பித்துவிட்டன.

இலக்கண நிலை: நிகழ்கால விகுதியான -கிறு- அஃறிணை வினைமுற்றுச் சொற்களில் கெட்டுவிட்டது: தோன்றுகிறது - தோன்றுது, பாயுகிறது - பாயுது முதலியவை சிற்றிலக்கியங்களில் வந்துள்ளன. செய்யேன் என்ற வாய்பாட்டு எதிர்மறை வினைமுற்று மறைந்து செய்யமாட்டேன், செய்யவில்லை என்ற வாய்பாட்டு எதிர்மறை வினைகள் அதிகம் வரத் தொடங்கிவிட்டன.

சொற்களஞ்சியம்: அரபி மொழியிலிருந்தும் (உ.ம். இலாக்கா, இமாம், கசர், கொசுறு போன்றவை), பெர்ஷியன் மொழியிலிருந்தும் (திவான்- முதலமைச்சர், ஜாமின், தர்க்கா, சர்தார் போன்றவை), உருது மொழியிலிருந்தும் (கைதி, கெடுபிடி, சாமான், சீட்டு போன்றவை) தெலுங்கு மொழியிலிருந்தும் (பாளயம், உப்புசம், கோமுட்டி, பத்தர் போன்றவை) கன்னட மொழியிலிருந்தும் (கெலி (வெல்) அட்டிகை, தண்டால் போன்றவை) சொற்கள் கடனாளப்பட்டன.

தற்காலத் தமிழ்

தற்காலத் தமிழ் ஐரோப்பியர் வருகையோடு தொடங்குகிறது. அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதும் சமூகத்தில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்கள் வருகையால் பல தொழில் நுட்பங்கள் தமிழகத்திலும் இந்தியாவிலும் புகுந்தன. அச்சு இயந்திர அறிமுகம் உரைநடைக்கு வழிவகுத்தது. மொழி அமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தற்காலத் தமிழையும் வரலாற்று நோக்கிலும் மொழி அமைப்பு நோக்கிலும் முற்பகுதி, நடப்புப் பகுதி என்று இரண்டாகப் பிரிக்கலாம் போலத் தோன்றுகிறது. நடப்புப் பகுதி: நாடு விடுதலை அடைந்து மாநில அளவிலாவது ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும், தகவல் தொடர்பு மொழியாகவும் தமிழ் வழங்கிவருவதால் மொழி அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

முற்பகுதி : ஒலிநிலை: அச்சு இயந்திரம் ஏற்பட்டதும், மொழி பற்றிய பொது அறிவும் எழுத்துச் சீர்திருத்தத்துக்கு வழி கோலியது. வீரமாமுனிவர் என்ற கிறித்துவப் பாதிரியார் இன்று நாம் எழுதுகிற உயிர் எழுத்துகளில் எகர, ஏகார, ஒகர, ஓகார வடிவங்களையும், உயிர்மெய்யெழுத்தில் கெ, கே, கொ, கோ போன்ற வடிவங்களையும் அறிமுகப்படுத்தினார். இதற்கு முன்பு, எகர வடிவமே எகரத்தையும், ஏகாரத்தையும்; கெ கர வடிவமே, கெகரத்தையும் கேகாரத்தையும்; கொகர வடிவமே, கொகரத்தையும், கோகாரத்தையும் உணர்த்தி வந்தன. ஒலிநிலையில் சொல்லுக்கு இடையில் வரும் க, ச, த, ப ஆகிய வல்லெழுத்துகள் (அகம், மடம், மோதல், கோபம் போன்றவை) உரசொலியாக உச்சரிக்கப்படுகின்றன. றகரம் ஆடொலி உச்சரிப்பையும் இழந்து தட்டொலி (ரகரமாக) உச்சரிப்பைப் பெற்றுவிட்டது.

இலக்கண நிலை: சிறப்புப் பெயருக்குப் பின்னால் -அவர்கள் என்பது சிறப்பொருமை விகுதிபோல (மீனாட்சிசுந்தரம் அவர்கள்) பயன்படுத்தப்படுகிறது. துணைவினைகள் மிக அதிகமாக இப்போதுதான் கையாளப்படுகின்றன. எண்ணுப் பெயர்கள் எந்தவிதச் சாரியையும் (ஒன்று: ஒன்றை, ஒன்றில், ஒன்றுக்கு போன்றவை) ஏற்று வருவதில்லை.

சொற்களஞ்சியம்: ஐரோப்பிய மொழிச் சொற்கள் தமிழில் புகுந்தன. போர்த்துகீசு மொழியிலிருந்து பரங்கி, வாத்து, அலமாரி, ஆயா போன்ற சொற்களும்; டச்சு மொழியிலிருந்து கக்கூசு, துட்டு போன்ற சொற்களும், பிரெஞ்சு மொழியிலிருந்து போத்தில் (பாட்டில்), லாந்தர், ரோந்து போன்ற சொற்களும், ஆங்கிலத்திலிருந்து போலீசு, பட்டாளம், பீரங்கி, சிமென்ட், காங்கீரீட், ரயில் போன்ற நூற்றுக்கணக்கான சொற்களும் கடனாளப்பட்டுள்ளன. கலைச்சொற்களாக ஐரோப்பிய மொழிச் சொற்கள் எழுத்திலும், பேச்சிலும் நிறைய வழங்கிவருகின்றன.

நடப்புப் பகுதி: பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் முயற்சியால் ஆகார, ஐகார, ஒகர, ஓகார உயிர்மெய்யெழுத்துகளில் அரசாங்கமே சீர்மை ஏற்படுத்தி அரசாணை பிறப்பித்துள்ளது. ஒலிநிலையில் உலகத்தொடர்பால் வல்லெழுத்துகளும் (ஈராக், பஞ்சாப் போன்றவை), ஙகரமும் (சிங் போன்றவை) சொல்லுக்கு இறுதியில் வருகின்றன. கிலோ, லிட்டர், மீட்டர் போன்ற சொற்கள் கடனாளப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான புதுச்சொற்கள் (பல்கலைக்கழகம், நகராட்சி, நீர்மம், ஒலியன்) இப்பொழுது படைக்கப்பட்டுள்ளன. பெருகிவரும் தேவைக்கு ஏற்ப, தினமும் புதுச் சொற்கள் உருவாக்கப்பட்டுவருகின்றன. மொழி பல நிலையில் கையாளப்படுவதும், எழுத்தறிவு வேகமாகப் பரவி வருவதும், விஞ்ஞான வளர்ச்சியும் முன் எப்பொழுதும் இல்லாத வேகத்தில் மொழியின் வளர்ச்சி நடைபெறத் துண்டுகோலாய் இருந்து வருகின்றன.

இயல் ஐந்து

தஞ்காலத்தில் தமிழின் வளர்ச்சி

இயல் ஐந்து

தற்காலத்தில் தமிழின் வளர்ச்சி

தமிழ் வளர்ச்சி - ஒரு பார்வை

தமிழைக் ''கன்னித் தமிழ்'', ''என்றுமுள தென்தமிழ்'' என்றெல்லாம் புலவர் போற்றினர். இப்புகழ்ச்சி பழைமை பாராட்டுவதாக உள்ளது; வளர்ச்சி பற்றிச் சிந்தனை செய்யவில்லையா? வளர்ச்சியே இல்லையா? என்ற வினா தோன்றக் கூடும். நானூறு ஆண்டுகட்கு முன் கூட வளர்ச்சி வரையறுக்கப்பட்டதாகத்தான் இருந்தது. வெளியீட்டுச் சாதனங்கள் குறைவாக இருந்தமையால் வளர்ச்சி சிறிதே இருந்தது என்பாரும் உளர்.

முன்பெல்லாம் தமிழ் ஓலையிலும் கல்வெட்டிலும் இருந்தது. ஓதுவார் நாவிலும் தவழ்ந்து வந்தது. எழுத்தாக இருக்கும் தமிழுக்கு அடிப்படை பேச்சுத் தமிழாகும். தமிழ் பேசும்மொழியாக உள்ள வரையிலும் வாழ்கிறது; வளர்கிறது என்றே கூறவேண்டும்.

தமிழ்நாட்டின் எல்லை வடவேங்கடம் - தென்குமரி என்றிருந்தது இன்று குறுகி இருக்கிறது. அதனால் தமிழ் வளர்ச்சி இல்லையா? தமிழர் எண்ணிக்கை இப்போது பெருகியிருக்கிறது. ஆகவே தமிழ் வளர்ந்திருக்கிறது எனலாமா? தமிழர் எண்ணிக்கைக்கு ஏற்பக் கல்வியறிவு பெருகவில்லையானாலும்கூடத் தமிழ் வளர்ச்சி அடைந் துள்ளது. பத்திரிகை உலகில் தமிழ் முன்னேறி வருகிறது. தமிழ் நூல்களும் அழகான நிலையில் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

தமிழ் நாட்டின் அரசியல் மொழியாகத் தமிழ் உயர்ந்துள்ளது; உயர்நிலைப் பள்ளிகளின் கல்வி மொழியாகவும் வாழ்கிறது; தமிழ் மேடையின் முழக்கமாகவும் உள்ளது; ஆனால், கல்லூரி மொழியாக முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

கம்பனைப் போற்றியவர்கள், குடியரசு வந்ததும் பாரதியையும் போற்றத் தொடங்கினர். பாரதி வாழும்போதே உலகம் அவன் பாடலைப் பாடத்தொடங்கி விட்டது. பாரதியால் தமிழ்வளர்ந்தது. தமிழால் பாரதியும் வளர்ந்தார். அவர் நாட்டுப் பாடல் மட்டுமா பாடினார்? அவர் பாடிய கண்ணன் பாட்டு புதிய திருவாய்மொழி; பாஞ்சாலி சபதம் புதிய இதிகாசம்; குயில்பாட்டு-குழந்தைகள் முதல் ஞானிகள் வரை பலரும் தத்தமக்கு ஏற்ற வகையில் ஈடுபடும் காப்பியம். பாரதியால் வளர்ந்த தமிழ் பாரதிதாசன், கவிமணி முதலியோரால் மேலும் வளர்ந்தது.

தமிழிசைப் பாடல்களை இடையில் மறந்த காலம் போய் இன்று அவை புதுவாழ்வு பெற்று வருகின்றன. நாட்டுப்புறப்பாடல்களை

நாட்டின் செல்வமாய்க் கொள்ளும் குடியரசுக் காலத்தில் அந்த நடையிலும் நூல்கள் வெளிவருவது இயல்பேயாகும், வளர்ச்சியுமாகும்.

அச்சுப் பொறியே குடியரசின் கல்விப் பொறி. அதனால் எதனையும் எளிதில் அச்சிடலாம். அச்சுப்பணி பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்து வருகிறது. குப்பையும் நுரையும் சேறும் கலக்கமும் ஆரவாரமும் இருந்தாலும் ஆறு கரை மீறாமல் இருக்கிறது. கரையைக் காக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது.

மேடைத் தமிழிலும் வளர்ச்சி ஏற்பட்டது. ஆட்சி மாறும் அளவுக்கு மேடைத் தமிழ் வளர்ந்தது. உரைநடையை ஓர் இலக்கியம் என அறியாத காலமும் இருந்தது. பேசுவதே உரைநடையில் தானே! பத்திரிகைகளின் வளர்ச்சியால் பல கருத்துகளையும் விளக்கும் ஆற்றலையும், நுட்பத்தினையும் உரைநடைத் தமிழ் பெற்று வளர்ந்திருக்கின்றது. மொழி பெயர்ப்பு முறையும் தேவைக்கும் விரைவினுக்கும் ஏற்ப வளர்ந்து வருகின்றது. வானொலிவழி வெளிப்படும் உரைநடை, செறிவும் திட்பமும் உடையதாக வளர்வதோடு, பரந்த கருத்துகளைப் பலரும் அறியுமாறு சுருங்க விளக்கும் திறமும் பெறுகிறது.

சிறுவர் இலக்கியம் ஒரு புத்தம்புது முயற்சி. முதியோர் இலக்கியத்தையே வழங்கி வந்த நிலை மாறி, குழந்தைகளுக்கெனத் தனிப் பாட நூல், பாடல், கதை என வளர்ந்து வருகிறது. இளைஞர்களுக்கென்று பாடல்களும், கதைகளும் விளக்கங்களும் படங்களோடும் சுவையோடும் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வெளிவருகின்றன. அவர்கள் மனநிலையையும் மொழிப்பாங்கினையும் ஆராய்ந்தறிந்து எழுதப்பட்டு வருகின்றன.

புதினங்கள் முதலில் மொழிபெயர்ப்புகளாகவும் தழுவல் களாகவும் இருந்தன, பின்னர் புதிய தமிழ்ப் படைப்புகளாக வெளிவரலாயின. சிறந்த மொழிபெயர்ப்புகளும் பலப்பல திறத்தில் வருகின்றன. சிறுகதை வளர்ச்சியும் தமிழின் வளர்ச்சியைக் காட்டுகிறது. நாடகத்துறை, அதன் சிக்கல்களை அறிந்து திகைப்பின்றி இயங்குவதே பெரிய வளர்ச்சி. புதிய அறிவியல் போக்கினைப் பயன்படுத்தி உலகை மயக்கும் வெள்ளித் திரையில் வளருவது நாடகமேயாகும் வானொலி நாடகம் ஒரு புதுமை. கற்பனையில் அனைத்தையும் காணும் புதுமைக்கு ஏற்ற நுண்ணிய ஒலி வேறுபாட்டினையும் இனிமையினையும் ஆற்றலினையும் இடத்திற்கு ஏற்பத் தமிழ் பெற்று வளர்கிறது. கலைகளை வளர்க்கும் தமிழ் தானும் வளர்கிறது. வரலாறு, உளவியல், இலக்கிய ஆராய்ச்சி என்று பல துறைகளிலும் தமிழ் வளர்ச்சி உள்ளது என்று தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் நிறுவியுள்ளார்.

பேசும் மொழியை ஆங்கிலத்துடன் ஈடுபடுத்தி, ஆங்கிலம் பெற்றுள்ள மொழித் திறனை, செல்வாக்கினைப் பெற்று வளர்ச்சி பெறும்

வரை ஆங்கிலத்தைப் பயன்பாட்டு மொழியாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினால் தமிழின் வளர்ச்சியை அடையாளப்படுத்தத் தவறிவிட்டனர் எனலாம்.

மொழிப் பயன்பாட்டில் ஆங்கிலம், இந்திய மொழிகளைக் காட்டிலும் ஆற்றல் பெற்றது என்ற மனப்பாங்கு இருந்தது. தமிழரும் விதிவிலக்கல்லர். இம் மனப்பாங்கு, சிறுகச் சிறுக மாறத் தொடங்கியது. மொழியின் வளர்ச்சியிலும் முன்னேற்றம் தொடங்கியது; பார்வையிலும் படத் தொடங்கியது. இன்றைய நிலையில் மிக வேகமாக வளர்ந்து வரும் சமுதாய அறிவியல் வளர்ச்சியைத் தமிழ்வழி அறிந்து கொள்வதும் கற்பிப்பதும் ஓரளவு எளிதாக உள்ளது. அதற்குத் தமிழின் பல பிரிவுகளில் புதுமையாக்கம், நிலைபேறாக்கம் முதலியன நிகழ்ந்திருக்கின்றன. தமிழின் வளர்ச்சியாக இவற்றை உறுதியாகக் கூறலாம்.

இந்திய நாட்டுச் சூழலில் நான்கு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன. இவற்றில் பல பேச்சு வழக்கினை மட்டுமே கொண்டு செயற்பட்டு வருகின்றன. பதினைந்து அல்லது பதினாறு மொழிகளே எழுத்து வழக்கினைப் பெற்று, இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த மொழிகளாக உள்ளன. இம்மொழிகள் தேசிய மொழிகளாகவும் உள்ளன. இவற்றுள் ஒன்று ஆட்சிமொழியாகவும் அதற்குத் துணையாக ஆங்கிலமும் பயன்பட்டு வருவதை அறிவோம். மொழி அடிப்படையில் இந்தியா பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநிலத்தில் வழங்கும் பெரும்பான்மை மொழி ஆட்சி மொழியாக இருந்து வருகிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் சில வழக்கில் இருந்து வருகின்றன இந்தியா முழுவதும் பலமொழி வழக்குநிலை பரவலாக இருந்து வருகிறது. இச்சூழலில் ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் பல தடைகள் உள்ளமையை அறியலாம். பிறமொழிகளைப்போலவே மெல்ல வளர்ந்தாலும் தமிழின் வளர்ச்சி குறைவானதன்று. தமிழ் இன்றைய மொழிப் பயன்பாட்டில் கல்வித் துறை, பரவல் செய்தித் தொடர்பு, நீதித்துறை போன்ற பல துறைகளிலும் பயன்படுத்தப் பட்டும் வருகிறது. இவற்றால் மொழி வளர்ச்சி நிகழ்வு தொடர்வதாயிற்று.

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அம்மொழியினுடைய மொழிப் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டே பெரும்பாலும் அளவிடப்படுகிறது. ஒரு மொழி எந்த அளவுக்குச் சமுதாயத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் பங்கு பெறுகிறது என்பதைப் பொறுத்தே அதன் உண்மையான வளர்ச்சி வெளிப்படுகிறது ஒரு மொழியின் சொல்வளம், சொற்றொடர் வளம், பொருள் வளம், எளிமை போன்றவை விரைவாக வளர்ந்து வரும் சமுதாய, அறிவியல் முன்னேற்றங்களை எளிதிலும் விரைவிலும் பெருமளவிலும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் வளர வேண்டும்.

தமிழ் மொழியில் குறிப்பாக மொழிப் பயன்பாட்டில் சமுதாயத்தின் தேவைக்கேற்ப ஓரளவு பல புதிய சொற்களையும், பழைய சொற்களில் சில மாற்றங்களைச் செய்து அவற்றையும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளோம். ஆட்சித்துறைக்கெனக் கலைச்சொல் அகராதிகள் சில வெளியிடப்பட்டுள்ளன. பிறமொழிக் கருத்துகளை மற்றும் சொற்களை எடுத்தாளும்போது அவற்றை அப்போது நடைமுறையிலிருக்கும் சமுதாய மொழியியல் சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட வழக்கு முறையில், நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை மொழிப் பயன்பாட்டில் எளிமையும் ஆற்றலும் பெற்று விளங்க வேண்டும். காரணங்களை ஆராய்ந்து அவற்றிற்கேற்ப மீண்டும் அச்சொற்களை மொழிப் பயன்பாட்டின் தன்மைக் கேற்பமாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும். வேறொரு முறையும் கைக்கொள்ளப் படுகின்றது. ஒரு முறை மொழிப் பயனில் புகுத்தப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை மொழிப் பயன்பாட்டில் ஒரு குறிப்பிட்ட துறைக்கு ஏற்றவையாக அமையாவிட்டால் அவற்றை அப்படியே நிலை நிறுத்திக் கொண்டு, அக்குறிப்பிட்ட மொழிப் பயன்பாட்டிற்கென மீண்டும் மொழிக் கூறுகளைப் புதுமையாக்கம், நிலைபேறாக்கம் ஆகிய முறைகளின் மூலம் உருவாக்கி அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். புதுமையாக்கத்தின் ஒரு பகுதியாக எளிமையாக்கம் செயற்படுகிறது.

இவற்றை உணர்ந்தோர் தமிழிலும் தக்கவாறு உதவுகின்றனர். தமிழ் எழுத்துகள், சந்தி, சொற்றொடர் அமைப்பு முதலியனவற்றை எளிமைப் படுத்தும் முயற்சி பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. தமிழ் மொழிப் பயன்பாட்டில் ஒப்புமையாக்கத்தின் மூலம் சில புதுச் சொற்கள் ஆக்கப்பட்டு வருகின்றன இன்று வழக்கிலுள்ள மொழிநடை (Style) பல துறைகளிலும் பயன்படும் வகையிலும் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

கல்வி கற்பித்தலுக்கென ஒரு மொழி நடை, ஆட்சித் துறைக்கென ஒரு மொழி நடை, அறிவியல் துறைக்கென ஒரு மொழிநடை, செய்தித் தொடர்புக்கேற்ற ஒரு மொழி நடை என்று பல சமுதாயப் பணிகளுக் கேற்ப மொழி நடையில் வளர்ச்சி நிகழ்ந்து வருகிறது.

கலைச் சொல்லாக்கம்

தமிழ் மொழியின் வளர்ச்சியில் கலைச் சொல்லாக்கம் சிறப்பான தொரு இடத்தைப் பெற்றுள்ளது. கலைச் சொல்லாக்கம் எம்முறையில் உருவாக்கப்படுகிறது என்பதைப் பலரும் அறிவதால் பல புதிய சொற்கள் பெருகும் கலைச் சொற்கள், பேசும் மொழிக்கு எந்த அளவில் பயன்படுகிறது என்ற ஆய்வும் தமிழின் வளர்ச்சிக்கு உதவும். இவற்றை உணர்ந்தே, கலைச் சொல்லாக்கம் தமிழில் பெருமளவில் மேற்கொள்ளப்

பட்டு வருகிறது. கலைச் சொற்களின் வளர்ச்சியால், தமிழ் மொழியின் சொற்களஞ்சியம் பெருகி வருகிறது. இச்சொற்களைப் பயன்படுத்துவதற் கெனச் சில புது அமைப்புகளும் மொழி நடையும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

சொல்லாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, எல்லாத்துறை களுக்குமுரிய கலைச் சொற்களைத் தமிழில் ஆக்க, தமிழக அரசு பல அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளது. தமிழ் வளர்ச்சித் துறையில் மட்டும் இதுவரை 78 துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணை அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. பழைமையைப் போற்றுவோரும் புதுமையை விரும்புவோரும் தொடர்ந்து தத்தம் வழிகளில் சொல்லாக்க ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர். இருவரும் இணையும்போது விரைவும் கூடுதலாகும்.

உலக அரங்கில் தமிழ்

இந்திய மொழிகளாலும் ஆங்கிலத்தாலும் இந்திய நாட்டின் பலதுறைகள் ஆளப்பட்டு வரும் சூழலிலும் தமிழின் வளர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலக அரங்கிலும் தமிழின் வளர்ச்சி குறிப்பிடத் தக்க அளவில் உள்ளது. பல நாடுகளில் தமிழ் வாழும் மொழியாக இருப்பதால் வளரும் மொழியாகவும் விளங்குகிறது. தமிழின் வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு ஆகியவற்றால் பல நாடுகள், தமிழ்மொழிக் கல்வியில் ஆர்வம் காட்டுகின்றன. இந்த ஆர்வம் உலக அரங்கில் தமிழ் மொழி வளர்ச்சியும் பயிற்சியும் பெற்றுள்ளதை உறுதி செய்கிறது.

தமிழ் தமிழ்நாட்டில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜி, மொரிசியஸ், பர்மா, தென் ஆப்பிரிக்கா, வியட்நாம் முதலிய நாடுகளிலும் பேசப்படுகின்றது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தாய்மொழியாக, கல்வி மொழியாக, துணை ஆட்சி மொழியாக, செய்திப்பரவல் தொடர்பு மொழியாக, இலக்கிய மொழியாகப் பயன்பட்டு வருகிறது. இந்நாடுகளிலும் புதிய இலக்கியம் நாளும் தோன்றி வருகின்றது. இந்தோனேசியா, மொரிசியஸ், டிரினிடாட் போன்ற நாடுகளில் தமிழ் தாய்மொழியாகப் பேசப்பட்டு வருகிறது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்சு, செர்மனி, போலந்து , செக்கோஸ்லோவாக்கியா முதலிய நாடுகளில் தமிழ் மொழி பல்கலைக் கழகங்களில் அறிஞர்கள் விரும்பிப் பயிலும் மொழியாக அமைந்துள்ளது.

பல நாடுகளில் பேசப்படுகிற நிலையில் உள்ள உலக மொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழி திகழ்கின்றது என்று செக் நாட்டு மொழியியல் பேரறிஞர் கமில் சுவலபில் **(Kamil Svelebil)** கூறியுள்ளார். யுனெசுகோ நிறுவனம் தமிழ் மொழியில் கூரியர் இதழ் வெளியிடுவது தமிழுக்குக் கிடைத்த சிறப்பாகும்.

இலங்கை, கண்ணகி வழிபாட்டிற்கு முக்கிய இடமாகத் திகழ்கின்றது. அங்குள்ள சைவக் கோயில்கள் வளர்க்கும் தெய்வத் தமிழ் சிந்தையை உருக வைக்கும். இரகுவமிச காவியம் இலங்கைத் தமிழரசர் மொழிபெயர்த்ததாகும். சிங்களச் செய்யுள் அமைப்பும் தமிழ் யாப்பை யொட்டி வளர்ந்த நிலையைக் காணலாம். கொழும்பு, பேரதேனியா, கெவானியா, நுகேதா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் தமிழைக் கற்பிக்கின்றன; தமிழுக்குத் தொண்டாற்றுகின்றன. தேவாரம் திருவாசகம் முதலிய பக்தி இலக்கியங்கள், இலக்கணம், நாட்டுப்புற வழக்காறுகள், தற்காலக் கவிதைகள் முதலிய பல துறைகளிலும் ஆய்வுகள் நிகழ்ந்து வருகின்றன. படைப்பிலக்கியத் துறையும் வளர்கின்றது திறனாய்வுக்கலை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அரசியல், பொருளாதாரச் சிக்கல்களுக் கிடையேயும் தமிழை வளர்க்கின்ற இவர்தம் பங்களிப்பு போற்றுதலுக்குரியது. தம் நாட்டில் மட்டுமல்லாமல் இப்பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மேலை நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் சிறப்புப் பேராசிரியர்களாகப் பணியேற்றுத் தமிழ் வளர்த்தவர்களாவர்.

இலங்கையை அடுத்து, தமிழர் அதிகமாக வாழும் நாடு மலேசியாவாகும். மலேசியப் பல்கலைக் கழகத்திலுள்ள இந்தியத்துறை தமிழ் மொழிப் பயிற்சியில் மிகச்சிறந்த பங்கு வகிக்கின்றது. இத்துறை உலகப்பெருமை பெற்ற துறையாகும். கோலாலம்பூரில் உள்ள இப்பல்கலைக்கழகந்தான் முதன் முதலில் உலகத் தமிழ் மாநாட்டினைக் கூட்டியது. தமிழ் இலக்கியம், இலக்கணம், தத்துவம் போன்ற துறைகளில் இப்பல்கலைக் கழகம் பாடுபட்டு வருகின்றது. மொழியியல் துறையிலும் ஈடுபாடு கொண்டுள்ளது. மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகள் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றன. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத் தக்க ஒன்று மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகும். மலேசியத் தமிழ் இலக்கியத்தில் மரபுக் கவிதையோடு புதுக்கவிதை முயற்சியும் பெருகி வருகின்றது. புதினம், சிறுகதை ஆகியன சிறந்த வளர்ச்சி பெற்றுள்ளன. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தமிழுக்குச் சிறந்த இடம் உள்ளது. பத்திரிகைகள் இலக்கியக் கட்டுரை, அறிவியல், திறனாய்வு, பயணக்கட்டுரைகளை வெளியிட்டு உரைநடைத் தமிழை வளர்த்து வருகின்றன.

சிங்கப்பூரில் மூன்று தேசிய மொழிகளுள் ஒன்று தமிழாகும். தொலைக்காட்சி முதலியவற்றில் தமிழ் மொழி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கணினிக்கு ஏற்பத் தமிழை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடும் தமிழர் அங்குள்ளனர்.

கீழை நாடுகளில் மட்டுமல்லாமல் மேலை நாடுகளிலும் தமிழ் வளர்ந்திருக்கிறது. அமெரிக்காவில் தமிழ்மொழிக்கு வடமொழி போலவே சிறப்பிடம் தருகின்றனர். சிகாகோ பல்கலைக்கழகத்திலும்

இதாகாவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்திலும், பெர்க்கிலியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும், சியாட்டியிலுள்ள வாஷிங்டன் பல்கலைக் கழகத்திலும், ஹோனாலுவிலுள்ள ஹவாய்ப் பல்கலைக் கழகத்திலும் ஆஸ்டினிலுள்ள டெக்சாஸ் பல்கலைக் கழகத்திலும் தமிழ்க் கல்விக்கும் தமிழாய்வுக்கும் வழி செய்துள்ளனர். கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் டாக்டர் எம்.பி.எமனோ **(M.B.Emeneau)** வடமொழிப் பேராசிரியராக இருந்தவர். வடமொழி மூலம் தமிழ் மொழியின் சிறப்பை அறிந்து திராவிட மொழிகளின் ஆய்வில் ஈடுபட்டார். திராவிட மொழியியலுக்கு மிகச்சிறந்த தொண்டாற்றி உள்ளார். இன்றும் இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி ஆய்வும் பயிற்சியும் சிறந்து விளங்குகின்றன ஜியார்ஜ் ஹார்ட் **(George Hart)** என்னும் பேராசிரியர் சங்கப் பாடல்களில் இலக்கியக் கோட்பாடுகள், நாகரிகம், கலை ஆகியவற்றை ஆய்ந்து போற்றுதலுக்குரியவராகி யிருக்கிறார். கம்பனில் சில பகுதிகளை மொழி பெயர்த்துள்ளார். புறநானூற்றுப் பாடல்களில் சிலவற்றையும் மொழி பெயர்த்துள்ளார். தமிழைத் தாய்மொழியாகப் பெறாதோர் தமிழ் கற்றறிய உதவும் வகையில் ‘தமிழ் பிரைமர்’, என்ற நூலைச் சிறப்பாக உருவாக்கியுள்ளார். தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழிசை, தமிழ் நாடகம் முதலியவற்றிலும் கலிபோர்னியா பல்கலைக்கழகம் ஈடுபாடு காட்டி வருகின்றது.

சிகாகோ பல்கலைக்கழகம் அமெரிக்க நாட்டில் இன்று தமிழ்ப் படிப்புக்குச் சிறந்த இடமாக உள்ளது. டாக்டர் இராமானுஜம் போன்றோர் தமிழை நன்கு வளர்த்தனர். தமிழ்க் கவிதைகள் உலக அரங்கில் வெளிப்பட இராமானுஜம் மிகச் சிறந்த தொண்டாற்றினார். தமிழ்த்தொடரியல் பற்றிய பல ஆய்வுகள் இப்பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்தன.

முதன்முதலாகத் தமிழைக் கற்பித்த பெருமை பென்சில்வேனியா பல்கலைக் கழகத்திற்கு உண்டு. 1950 இலேயே தமிழ் மொழி ஆய்வைத் தொடங்கிய பல்கலைக்கழகம் இது. அமெரிக்காவின் வடகோடிப் பகுதியிலும் தமிழ் வாழ்கிறது என உணர்த்தும் பல்கலைக்கழகம் வாஷிங்டன் பல்கலைக்கழகம். ஷிப்மென் சிறந்த தமிழ் மாணவர்களை உருவாக்கியுள்ளார். வடமொழி மட்டுமே உலக அரங்கில் தெரிந்திருந்த போது தமிழை அறிமுகப்படுத்தி அதனை வளர்த்த இப்பல்கலைக் கழகங்களின் பணி சிறப்பானது. எமனோவும் பரோவும் இணைந்து 1961இல் உருவாக்கிய திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி ஒப்பியல் ஆய்வில் திருப்பு முனையைத் தந்தது.

இங்கிலாந்து நாட்டிலும் தமிழ் ஆய்வும் தமிழ்ப்படிப்பும் வேரூன்றியுள்ளது. தமிழில் பட்டப்படிப்பும் ஆய்வுப் படிப்பும் படிக்க வாய்ப்புள்ள இடம் பிரிட்டன். டாக்டர் ஜி.யு.போப்பின் கை வண்ணத்தில் தமிழ் வளர்ந்தது. அவர் தம்மைத் தமிழ் மகன் என்றே அறிவித்துக்

கொண்டார். தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ் வளர்த்தவர் போப். பிரிட்டனில் இருந்தே தமிழ் வளர்ப்போர் பலர். தமிழ்க் கல்விக்கும் ஆய்வுக்கும் சிறப்பான இடம் தந்திருக்கும் மற்றொரு பல்கலைக்கழகம் இலண்டன் பல்கலைக்கழகமாகும். இதிலுள்ள கீழை நாட்டு ஆப்பிரிக்கக் கலைக்கழகம் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றி வருகிறது. அடுத்துக் குறிப்பிடத் தக்கவர் டாக்டர் ஆஷர். இவர் தமிழ் மொழி ஆய்வில் தலைசிறந்தவர். பல்துறை ஈடுபாடு கொண்டவர். தமிழுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவ்ர். எடின்பரோ பல்கலைக் கழகத்தில் மொழியியல் பேராசிரியராக இருந்து இலக்கிய, இலக்கண ஆய்வுகளைச் செய்தவர்; இன்றும் அவரது ஆய்வுப்பணி தொடர்கிறது. இவர் போன்றே ஆக்சுபோர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் பரோ குறிப்பிடத்தக்கவர். திராவிட மொழியியல் ஆய்வில் இவர் பங்கு சிறப்பானது. பிரிட்டிஷ் நூலகத்தில் 20,000 தமிழ் நூல்களும் முந்நூறுக்கும் மேற்பட்ட கையெழுத்துப் படிகளும் உள்ளன. இந்திய அலுவலக நூலகம் **(India Office Library)** ஒன்றும் உள்ளது அங்கும் 16000 நூல்களும், 34 கையெழுத்துப் படிகளும் உள்ளன. கீழை நாட்டு ஆப்பிரிக்கக் கலைக் கழகத்தில் 2500 தமிழ் நூல்கள் உள்ளன. பி.பி.சி. வானொலி நிலையம் தமிழ்ச் செய்தியை ஒலிபரப்புகின்றது. 'லண்டன் முரசு' தமிழில் மாத இதழாக வெளிவருகிறது. உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் பணியும் நடைபெறுகின்றது.

மாஸ்கோவில் ஆந்திரனோவ், தமிழியலில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர். உருசிய மொழியில் தமிழ் இலக்கியம் பல மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. புதினம் , சிறுகதைகள் சிறப்பாக மொழி பெயர்க்கப்பெற்றுள்ளன. திருக்குறள் ஈரடிச் செய்யுளாகவே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பல புதின ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. ரூதின் என்னும் பேராசிரியர் செம்பியன் எனப் பெயரைப் புனைந்து கொண்டு தமிழைப் பரப்பினார். மாஸ்கோ வானொலியில் தமிழ் ஒலிபரப்பப்படுகின்றது.

செக்கோஸ்லோவாக்கியா நாட்டில் டாக்டர் கமில் சுவலபில் (Kamil Zvelebil) பணி மறக்க முடியாதது. தமிழ் மொழியுடன் பெரிதும் ஒன்றியவர் இவர். செர்மானியப் பல்கலைக் கழகங்கள் ஆற்றிய பணிகளும் போற்றுதலுக்குரியன. பிரான்சில் ஜூல்ஸ் பிளாக் (Jules Bloch) திராவிட மொழிகளின் மொழியமைப்பை ஆய்ந்து நூலாக்கி யுள்ளார். பாரிசில் பிப்லியோதெக் நாகியனேன் நூலகம் உள்ளது. மிகப்பெரிய அந்நூலகத்தில் தமிழ்ச் சுவடிகளும் சேமித்து வைக்கப்பட் டுள்ளன தொடக்கத்தில் அச்சேறிய நூல்களும் அங்குள்ளன. இலத்தீன் மொழியில் எழுதப்பட்டுள்ள தமிழ் இலக்கண நூலும், இலத்தீன் மொழியில் உள்ள தமிழ் நூல்களின் பட்டியலைக் கொண்ட நூலும், 1845இல் வெளியான தமிழ்-இலத்தீன் அகராதியும், 1815இல் அச்சான இராமாயண உத்தரகாண்டம் நூலும் அங்கு உள்ளன.

போலந்து நாட்டிலும், பின்லாந்திலும், ஹங்கேரியிலும், சுவீடனிலும் தமிழ் வாழ்கிறது. தொடர்ந்து வாழ்வதே வளர்வது தானே! உரோம் நாடு எனில் வீரமாமுனிவரே நினைவில் நிற்பார். செந்தமிழ், கொடுந்தமிழ் இலக்கணம் சிறப்பானது. மொரிசியஸ், பிஜி தீவு ஆகிய இடங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர். தமிழை வாழ வைக்கும் முயற்சி தொடங்கப் பட்டிருக்கிறது. தென் ஆப்பிரிக்காவில் உள்ள தமிழர் தமிழை வளர்த்து வருகின்றனர். ஜப்பான் நாட்டில் தமிழோடு ஜப்பான் மொழிக்கு உள்ள உறவு பற்றிய ஆய்வு வளர்ந்து வருகிறது. தமிழோடும், தமிழரோடும், தமிழ்ப் பண்பாட்டோடும் தொடர்புடைய நாடு தாய்லாந்து. தமிழ்க் கல்வி அங்கில்லை. மன்னர் முடிசூட்டு விழாவில் தமிழ்ப் பாடல்களைப் பாடுவது வழக்கம். தேசிய ஊஞ்சல் திருவிழா திருப்பாவை- திருவெம்பாவை பாடலுடன் கொண்டாடப் பெற்றது. மணிமேகலைத் தெய்வ வழிபாடு இருந்துள்ளது. தமிழ் மந்திரங்கள் ஓதப்படுகின்றன. சோஸ்க்ரான் என்ற அறுவடைத் திருவிழா நடைபெறுகின்றது.

இந்தோனேசியாவிற்கும் தமிழகத்திற்கும் நீண்டகாலத் தொடர்பு உண்டு. சாவகத் தீவு இந்தோனேசியாவில் உள்ளது. அங்கு வாழும் காரோபட்டக் இனத்தவரின் உட்பிரிவுகள் சேர சோழ பாண்டியர், கலிங்கர், மலையாளி என உள்ளன. சுமத்திரா தீவிலுள்ள லாராஂயொஸ்ராஸ் என்ற இடத்திலுள்ள கோயிலில் அகத்தியர், சிவன், நந்தி சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்தோனேசிய மொழியில் காவலர், தோழன் முதலிய சொற்கள் உள்ளன. கல்வெட்டுக்களில் காணப்படும் பழைய எழுத்துக்கள் தமிழிலிருந்தே சென்றவை என்பர். இம்மொழியில் காணும் தமிழ்ச்சொற்கள் பற்றிய ஆய்வு வெளிவந்துள்ளது. ஒப்பாய்வின் மூலம் தமிழ் வளரத் தொடங்கியுள்ளது.

தமிழ் வளர்ச்சியை அறியவும், தொடரவும், தமிழியல் பற்றிப் பிற மொழிகளிலுள்ள நூல்களெல்லாம் தொகுக்கப்பட வேண்டும். பிறநாட்டு நூலகங்களில் உள்ள அரிய நூல்களை மீண்டும் வெளியிட வேண்டும். இருமொழி அகராதிகளை மேலும் உருவாக்க வேண்டும். பிற நாட்டார்க்குத் தமிழைக் கற்பிக்கப் பல பாட நூல்களை உருவாக்க வேண்டும். இவற்றால் தமிழ் மேலும் வளரும். டாக்டர். ச. அகத்தியலிங்கமும், டாக்டர் சு. சக்திவேலும் இணைந்து எழுதிய 'உலக அரங்கில் தமிழ் வளர்ச்சியும் பயிற்சியும்' என்ற கட்டுரை மேலும் பல செய்திகளைத் தரும்.

தமிழ் உரைநடை வளர்ந்துள்ளதை விரிவாகக் கண்டோம். தமிழைக் கற்பிப்பதிலும் வளர்ச்சி காணப்படுகின்றது. தமிழைத் தாய் மொழியாகப் பெறாதோருக்காகப் பல புதிய முறைகளை உருவாக்கி, நூலாக்கியுள்ளனர். முறைசாராக் கல்வி, அறிவொளி இயக்கம், வயதுவந்தோர் கல்விக்குரிய கற்பித்தல் முறைகள் வளர்ந்துள்ளன.

தமிழைப் பரப்பும் முயற்சியும் வளர்ந்துள்ளது. உலக நாடுகளில் தமிழை மறந்தோருக்காகவும், தமிழை உணர்ந்தோருக்காகவும் தமிழ் பரப்பும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

தமிழ் வளர்ச்சி அமைப்புகள்

இந்தியாவின் பிற இடங்களிலும், உலக அரங்கிலும் தமிழ் வளர்ந்திருப்பதைக் கண்டோம். தமிழ் வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டில் பல அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பத்திரிகைகள், பதிப்பகங்கள் முதலியன தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. தென்காசித் திருவள்ளுவர் கழகம் திருக்குறளைப் பற்றியே சொற்பொழிவுகள் பலவற்றை ஏற்பாடு செய்து வருகிறது. அரிய மலர்களை வெளியிட்டு அரும்பணியாற்றி வருகின்றது. புதுக்கோட்டை வள்ளுவர் கழகம் திங்கள்தோறும் அறிஞரை அழைத்துச் சொற்பொழி வாற்ற வைத்துத் தொண்டாற்றியது. தமிழகப் புலவர் குழுவின் தமிழ்ப்பணி போற்றற்குரியதாக உள்ளது. சென்னைத் தமிழ்ச் சங்கம் கலைச் சொல்லாக்கக்குழு ஒன்றை அமைத்துக் கலைச் சொல்லாக்கப் பணியிலும் ஈடுபட்டது.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தலைமையில் இயங்கிய தனித்தமிழ் ஆர்வலரின் இயக்கம் உலகத்தமிழ்க் கழகமாகும். அவருக்குப் பின்னும் பல ஆக்கப்பணிகள் இதன் உறுப்பினர்களால் நடைபெற்று வருகின்றன. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தமிழ் மாநாடுகளை நடத்தி வருகிறது. தமிழ்நாட்டுத் தமிழர் பேரவை, சேரன் கொற்றம், தமிழியக்கம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் முதலியனவும் பல பணிகளை ஆற்றி வருகின்றன.

கலைக்களஞ்சியத்தை வெளியிட்ட தமிழ் வளர்ச்சிக்கழகம், உலகத் தமிழ்ச் சங்கம் முதலியன அரசின் ஆதரவில் உருவாக்கப் பட்டவை. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தனிநாயக அடிகள் காலத்தில் 1964இல் நிறுவப்பட்டது. உலகத் தமிழ் மாநாடுகளை இவ்வமைப்பு நடத்தியது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இவ்வமைப்பின் முயற்சியால் விளைந்தது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், கலை - பண்பாட்டு இயக்ககம், திருக்குறள் ஆய்வு மையங்கள், குறள் நெறி பரப்பும் மையம், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், இயல் இசை நாடக மன்றம், தொல்பொருள் ஆய்வுத்துறை முதலிய பல நிறுவனங்களும் அரசால் அமைக்கப்பட்டவையே. அரசின் சார்பால் இவை தம்மாலான பணிகளைச் செய்து வருகின்றன. தில்லியில் கீழ்க்கலையியலாளர் மாநாட்டினை நடத்தியபோது உருவானது ‘இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்’ என்ற அமைப்பாகும்.

இந்தியத் தமிழ் மொழியியல் கழகம், நாட்டுப்புறவியல் கழகம், இலக்கிய ஆய்வுக்கழகம் முதலியன அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் உருவாயின. இவை மாநாடு களையும் கருத்தரங்குகளையும் நடத்திக் கட்டுரைகளை நூல்களாக்கி யுள்ளன. நாட்டுப்புறவியல், மொழியியல் முதலிய இதழ்கள் காலாண்டு இதழ்களாக வெளிவந்தன.

ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம் தமிழ்ப்புலவரின் 'காலக்குறிப்பு அகராதி'யை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு வழங்கும் திருவள்ளுவர் விருதினை (ஒரு இலட்சம் உருபாயும் தங்கப்பதக்கமும்) 1999ஆம் ஆண்டில் பெற்ற முனைவர் வா.செ குழந்தைசாமியின் தலைமையில் எழுத்துச் சீர்திருத்த இயக்கம் இயங்கி வருகின்றது. மாணவர் மன்றம், குழந்தை எழுத்தாளர் சங்கம், வாசகர் வட்டம், இலக்கிய வட்டம், தமிழ் வட்டம், நண்பர் வட்டம், வட்டதொட்டி, அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், இலக்கிய வீதி, இலக்கியச் சிந்தனை, வளர்தமிழ் மன்றம், கம்பன் கழகம் முதலிய பல அமைப்புகளும் தமிழ்ப்பணியாற்றி வருகின்றன.

சமயஞ்சார்ந்த ஜைன இளைஞர் மன்றம், இசுலாமிய இலக்கியக் கழகம், கிறித்துவ இலக்கியக்கழகம், சைவ இலக்கியப் பேரவை, ஆழ்வார் ஆய்வு மையம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், திருமடங்கள் முதலியனவும் நல்ல பணிகளை ஆற்றி வருகின்றன.

மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், திருநெல்வேலித் தமிழ்ச்சங்கம், தென்காசித் திருவள்ளுவர் கழகம், நக்கீரர் கழகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தமிழ் இசைச் சங்கம் ஆகியன ஆற்றிய, ஆற்றி வருகிற தமிழ்ப்பணிகள் அளவிறந்தன.

'பழந்தமிழ் நூற் சொல்லடைவு' என்ற சொல்லடைவினைப் புதுச்சேரியில் இயங்கி வரும் பிரஞ்சு இந்தியக் கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. நுண்ணிய பல ஆய்வுகளுக்கு இச்சொல்லடைவுகள் அடிப்படையாய் இருந்து உதவும். 'திராவிட மொழிச் சொற்பிறப்பகராதி' திராவிட மொழியியலுக்குப் பெரிதும் உதவும் நூலாகும். யாழ்ப் பாணத்தில் 'தமிழும் அதன் தோற்றமும்' என்ற நூல் வெளியிடப் பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரும்பணியால் வெளிவந்த தமிழ்ப் பேரகராதியும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக்களஞ்சியமும் மிகச் சிறந்த ஆய்வுகளாகும்.

தனிநாயக அடிகளாரின் 'தமிழ்ப்பண்பாடு', வானமாமலை அவர்களின் 'ஆராய்ச்சி', வரலாறு, புலமை முதலிய தனியாரின் ஆய்விதழ்களும், தமிழியல், யாணர் தமிழாய்வு, உயராய்வு, களஞ்சியம் முதலிய (நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் நடத்தும்) ஆய்விதழ்களும் சிறந்த பணியாற்றின; பணியாற்றி வருகின்றன.

இவையும் இவை போன்றனவும் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தனவே என்பதில் ஐயமில்லை. இவற்றின் பணி அல்லது தொண்டு சமுதாயத்திலுள்ள எல்லா வாழ்க்கைத்துறைகளிலும் எல்லா அறிவுத்துறைகளிலும் தமிழை வலிமையும் வளமையுமுள்ளதாக மாற்றியுள்ளதா என்று எண்ணிப் பார்த்தால் பலரும் கூறுவது போன்றே வளர்ச்சி மிகக்குறைவாக உள்ளதாகவே கூறவேண்டி வரும். சமுதாய வாழ்க்கை வளர்ச்சிக்கேற்ப மொழியும் வளர்ந்திருக்க வேண்டும். அதனையே மொழி வளர்ச்சி என்று கொள்ள வேண்டும்.

அறிவியல் தொழில் நுட்பத்துடன் மிக விரைவாக முன்னேறி வரும் உலகில் நாம் பின் தங்கி இருக்கிறோம். இந்த நிலையை மாற்றிட வேண்டும் கலைச்சொல்லாக்கம், எழுத்துச் சீர்திருத்தம் முதலிய பணிகளில் ஈடுபட வேண்டும். மொழிபெயர்ப்புக் கலையில் ஆர்வங்காட்ட வேண்டும். தமிழைப் பயன்பாட்டு மொழியாகக் கொள்வதில் வெற்றி பெற்றுவிட்டால் தமிழ் வளர்ச்சி விரைவாக இருக்கும்.

தமிழைப் பயன்படுத்தாமலா இருக்கிறோம் என்ற வினா தோன்றக்கூடும். தமிழைச் சமுதாயத்தில், வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் பயன்படுத்துகிறோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்; முறையாகப் பயன்படுத்துகிறோமா என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். குடும்பத்தில் உறவினரோடு உரையாடும் போது மொழியைப் பயன்படுத்துகிறோம். இலக்கிய, இலக்கணம் பற்றிப் பேசும் போதும் மொழியைப் பயன்படுத்துகிறோம். தத்துவம், வரலாறு போன்றவற்றையும் தமிழில் கூற முடியும். இவற்றில் மொழியைப் பயன்படுத்துவதில் சிக்கல் இல்லை. தத்துவத்தில் இந்தியத் தத்துவத்தினையோ, வரலாற்றில் உலக வரலாற்றையோ தமிழில் கூறும்போது சிக்கல்கள் தோன்றுகின்றன.

சைக்கிள் என்ற சொல்லுக்கு மிதிவண்டி என்ற தமிழ்ச்சொல்லைப் பயன்பாட்டில் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் அதன் உறுப்புகளுக்கு (பெடல், ஸ்போக்ஸ், பிரேக், டயர், டியூப்) பயன்பாட்டில் தமிழில் சொற்கள் உள்ளனவா? கடிகாரம் கட்டிக் கொண்டு மணி பார்க்கிறோம். அதற்கோ அதன் உறுப்புகளுக்கோ தமிழ்ச் சொற்களை உருவாக்கிப் பயன்பாட்டில் கொண்டு வந்தோமா? சோப்புப் போட்டுக் குளிப்போம். தமிழில் கூறுகிறோமா? சமுதாய வாழ்க்கையில் முன்னேறி இருக்கிறோம். மொழியில் அதற்கேற்ற முழு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என எண்ணிப் பார்க்க வேண்டும்.

உணர்வும் செயற்பாடும் தேவை

அரசு தன்னாலான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. உரையாடலிலோ, மேடைப்பேச்சிலோ, குடும்பச் சூழலிலோ மொழியின்

பயன்பாட்டில் தடை இல்லை. ஆனால் ஆட்சித்துறை, நீதித்துறை, கல்வித்துறை, சமயத்துறை, வழிபாட்டுத்துறை இவற்றில் தமிழ் மொழி முழுஅளவில் மேம்பட்டிருக்கிறதா? பயன்பாடு எந்த அளவு உள்ளது?

தமிழக அரசு 1956 இலேயே தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை உருவாக்கியது. 1957இல் ஆட்சிமொழிக்குழு அமைக்கப்பட்டது. அந்த ஆட்சிமொழிக்குழுவிற்குத் துணை செய்ய 1959இல் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் அமைக்கப்பட்டது. பின்பு தமிழ் வளர்ச்சி இயக்ககம் உருவாக்கப்பட்டது. இன்று தமிழ் வளர்ச்சிக்கென ஒரு தனி அமைச்சகமே உருவாக்கப்பட்டுள்ளது. தனி அமைச்சர் அமையப் பெற்றது போற்றுதலுக்குரியது என்றாலும் தமிழ் வளர்ச்சி நோக்கில் பார்க்கும்போது நாற்பதாண்டுகளுக்குப் பின்பல்லவா இவ்வெண்ணம் தோன்றியது. தமிழுக்குச் செய்ய வேண்டும் என்ற உணர்வுள்ள தமிழ் முதலமைச்சரால் தான் இது முடிந்தது.

தமிழ் வளர்ச்சிக்காக முடிவெடுக்கும்போது எங்கெங்கே தமிழ் நாட்டிலேயே எதிர்ப்புத் தோன்றுகிறது என எண்ணிப்பார்க்க வேண்டும். எப்படியெல்லாம் தோன்றுகின்றது எனக்கூர்ந்தறிய வேண்டும். தடைகளைக் களைய முழுமூச்சோடு செயற்பட வேண்டும். நீதி மன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று 1982இன் தொடக்கத்திலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டது. தமிழில் கையொப்பம் இட வேண்டும் என்பதற்கே கூட ஆணை 1978இல் பிறப்பிக்கப்பட்டது. மடல், குறிப்பு முதலியன தமிழில் அமைதல் வேண்டும் என்ற ஆணையும், பெயர்ப்பலகை முதலியவற்றில் தமிழில் எழுதவேண்டும் என்ற ஆணையும் இப்போது முனைப்புடன் செயற்படுத்தப்படுகின்றன. தாமாகச் செய்யாத தமிழ்நாட்டுக்காரர்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறதே!

கல்வித்துறையிலும் மொழிவளர்ச்சிக்காக அரசு திட்டம் கொண்டு வந்தது. 1963க்கு முன்பாகவே அந்தந்த மாநில மொழியில் கல்வி தரவேண்டுமென்று இந்திய மையக்குழு முடிவு செய்தது. இன்னமும் முழுமையாகத் தமிழ்நாட்டில் நிறைவேறவில்லை. ஆனால் தமிழில் மருத்துவம், பொறியியல், சட்டம் படிக்க வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதை மக்களே நடைமுறைப்படுத்த விழிப்புணர்வை ஊட்டியாக வேண்டும். ஆட்சித்துறையில் தமிழ் முழுமையாக வருவதற்குரிய சூழல்களை ஆராய வேண்டும். அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் தமிழின் மீது ஈடுபாடு காட்டுமாறு செய்திட வேண்டும். இந்தியாவில் உள்ள மாநில மொழிகள் சிக்கலுக்குரியன என்ற எண்ணத்தை மாற்றியாக வேண்டும்.

மொழி மேம்பாட்டுத்திட்டத்தினை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவையை உணர

வேண்டும். எழுத்தமைப்பை ஒழுங்காக்குவதும், அதனை எதிர்ப்போரைத் தக்க முறையில் உணர வைப்பதும் தேவையானதாகும். மொழியையும் இலக்கியத்தையும் வேறுபடுத்தி அறியாதவர் பலர் உள்ளனர். அதனால் மொழி வளர்ச்சி என்பதை இலக்கிய வளர்ச்சியாகவே நினைத்துக்கொள்கின்றனர். மொழியறிவை இலக்கிய அறிவாகவும் மொழிப்புலமையை இலக்கியப் புலமையாகவும் எண்ணுகின்றனர். பாடத்திட்டங்களும் பெரும்பான்மை இலக்கியத்தையே சொல்லித் தருமாறு அமைந்துள்ளன. மொழி எல்லாவற்றையும் விடப் பெரியது; வலியது; பரந்தது.

அதனால் இருபதாம் நூற்றாண்டுக்குப் புதிய, பொருத்தமான இலக்கணம் எழுதப்பட வேண்டும். தொல்காப்பியத்திற்குப் பின் நன்னூல் இலக்கணம் எழுதப்பட்டது போன்று அதற்கு மேல் வளர்ந்த தமிழுக்குப் புதிய இலக்கணம் எழுதப்பட வேண்டும். அதற்காக இலக்கணக்குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட கல்வியைப் பெற்றோர் விரும்புமாறு செய்தல் வேண்டும். மொழியைச் சரியாக ஆளுவதற்குப் பயிற்சி தர வேண்டும். மொழிக்கல்வி முறை மாற வேண்டும். ஆங்கில மோகம் நீக்கப்பட வேண்டும். அம்மொழிக்கு அவ்வளவு பெரிய இடம் தர வேண்டுவதில்லை. உலகப் பெருமொழியைப் பயிலலாம். வேற்றுமொழியைத் தெரிந்து கொள்ள அதை ஊடகமாகக் கொள்ள வேண்டுவதில்லை. இவற்றில் வெற்றி கண்டால் விரைவாகத் தமிழ் வளரும்.

வாழ்க்கைக்குப் பயன்படுகிற தமிழை - நடைமுறைத் தமிழைச் சரியாகப் புரிந்து கொண்டு மேம்படுத்திடப் பாடுபட வேண்டும். கலைச் சொற்களை உருவாக்க வேண்டும். மக்கள் அவற்றை எளிதில் பயன்படுத்துமாறு உருவாக்க வேண்டும். நம்மால் வளர்வது மொழி; நம்மை வளர்ப்பதும் மொழி என்ற உண்மையை அனைவரும் உணரும் வண்ணம் பரப்பிட வேண்டும். மக்களைச் சென்றடைய வேண்டிய கல்வியறிவு முழுதும் மக்கள் மொழியில் இருக்க வேண்டும். அறிவுத்துறைகள் பலவற்றுக்கும் பயன்படும் மொழியாகத் தமிழை மேம்படுத்த வேண்டும். இதுவரை நடந்துள்ள வளர்ச்சிப் பணிகளை நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டும். ஆட்சித்துறை, கல்வித்துறை, நீதித்துறை, வழிபாட்டுத்துறை முதலிய பலதுறைகளிலும் முழுஅளவில் தமிழைப் பயன்படுத்தும் எண்ணம் வலுப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமேற்பத் தமிழும் வளரும்.

இயல் ஆறு

தொல்காப்பியம் - எழுத்து, சொல், பொருள் அமைப்பு முறை

இயல் ஆறு

தொல்காப்பியம் - எழுத்து, சொல், பொருள் அமைப்பு முறை

உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாகிய செந்தமிழ் மொழிக்கு இரு கண்களாக விளங்குவன தொல்காப்பியமும் திருக்குறளுமாகும். இன்றுள்ள இலக்கிய, சமய, நீதி நூல்களுக்குத் திருக்குறள் தாய்மை நூலாக இருத்தல் போல, தொல்காப்பியமும் இன்றுள்ள இலக்கண நூல்களுக்குத் தாய்மை நூலாக விளங்குகிறது. திருக்குறளுக்குப் பல உரைகள் இருப்பினும் இன்றும் பல உரைகள் தோன்றுகின்றன. தொல்காப்பியத்திற்கும் இன்றுவரை பல்வேறு உரைகள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.

தமிழ் மொழியின் சிறப்பையும், தொன்மையையும் பறைசாற்றும் தொல்காப்பியம், தொல்காப்பியரால் எழுதப்பெற்றது. தொல்காப்பியத் திற்கு வழிநூல்கள் பல தோன்றினாலும் தொல்காப்பியத்தின் சிறப்பும் பயிற்சியும் சிறிதும் குறையவில்லை. நன்னூலாரை மிகவும் பாராட்டும் 'இலக்கணக்கொத்து' ஆசிரியரும் தொல்காப்பியத்தோடு நன்னூலை ஒப்பிட்டுக் கூற இயலாதவராகி 'முன்னூல் ஒழிய' என இதனை விலக்கி ஏனைய நூலாசிரியர்களில் 'நன்னூலார் தமக்கு எந்நூலாரும் இணையோ என்னும் துணிவே மன்னுக' எனக் கூறியுள்ளார்.

இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுப்புடையது. (எழுத்து - 483; சொல் 464; பொருள் 665, என 1612 நூற்பாக்களைக் கொண்டது) ஒவ்வொரு அதிகாரமும் 9 இயல்களை உடையது. தொல்காப்பியர் இந்நூலைச் செய்திருக்கும் விதம் வியத்தற்குரியது.

1. ஒரே நூற்பாவைப் பல இடங்களில் கூறினும் அவ்வவ்விடத்திற்கேற்ப அந்நூற்பாவின் பொருள் அமையச் செய்தல்.
2. அத்தொடர் தனித்த ஒரு நூற்பாவாகவே வருமாறு செய்தல்
3. மாட்டேறு பெற நூற்பாக்களைச் செய்தல்.
4. வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டிற்கும் பொதுவான விதி கூறுதலன்றிச் செய்யுட்குரிய விதியை விதந்து கூறுதல்.

எனப் பல நிலைகளில் நூல் செய்திருக்கும் திறன் சிறப்பாக அமைந்துள்ளது.

செந்தமிழ் மொழியின் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு, தனக்கு முன்பிருந்த தமிழ் முன்னூல்

களையும் நோக்கி, எழுத்து, சொல், பொருள் என்னும் மூவகை இலக்கணங்களையும் முறைப்படி ஆராய்ந்து, தொல்காப்பியர் தொல்காப்பியத்தை இயற்றியுள்ளார்.

''எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' என்று தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பகர்ந்த பனம்பாரனார் கூறியுள்ளார். ''எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் பெற்றிலேன் எனில் யாவும் பெற்றிலேன்'' என்று களவியல் உரை, நான்கு வகையாகக் கூறுகிறது. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய புத்தமித்திரனார் தமிழ் இலக்கணத்தை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகையாகப் பகுத்துள்ளார்.

தொல்காப்பியத்தின் வழிநூல்களாகப் பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன.

நன்னூல், நேமிநாதம் - எழுத்து

இலக்கணக் கொத்து (சுவாமிநாத தேசிகர்), பிரயோக விவேகம் (சுப்பிரமணிய தீட்சிதர்) - சொல்

அகம், நம்பியகப் பொருள், மாறனகப் பொருள் - பொருள்

புறப்பொருள் வெண்பாமாலை - புறம்

யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி - யாப்பு

தண்டியலங்காரம் - அணி

எழுத்தும் சொல்லும் மொழி இலக்கணத்தையும் மொழி ஆய்வையும் பற்றிக் கூறுவன. பொருள், இலக்கிய அமைப்பைப் பற்றிக் கூறுவது.

எழுத்து

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு (குறள் 392)

என்று வள்ளுவர் எழுத்தைக் கண்ணாகச் சிறப்பித்துள்ளார். 'மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து' என்பார் நன்னூலார்.

''எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுத்தான் ஆகும் - மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்''
- பெருந்தொகை

இதில் எழுத்தில் முழுமை பெற்றவன் வீடுபெறுவான் என்று கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தை ஒன்பது இயல்களாகப் பிரித்துள்ளார்.

1. நூன்மரபு
2. மொழி மரபு
3. பிறப்பியல்
4. புணரியல்
5. தொகைமரபு
6. உருபியல்
7. உயிர் மயங்கியல்
8. புள்ளி மயங்கியல்
9. குற்றியலுகரப் புணரியல்

1. நூன்மரபு (33 நூற்பாக்கள்)

தொல்காப்பியர் இவ்வியலில் எழுத்துகளின் இலக்கணத்தை விளக்கியுள்ளார்.

''எழுத்தெனப் படுப
அகரமுத னகர விறுவாய்
முப்பஃ தென்ப;
சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே'' (தொல் : எழு. இளம். 1)

என்ற தொல்காப்பிய முதற் நூற்பாவிலேயே, எழுத்துகளின் பெயர், முறை, தொகையை உணர்த்திவிடுகிறார். இவ்வியலில் கூறப்படும் செய்திகளை ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவை: 1.எண், 2. பெயர், 3. முறை. 4. வடிவம். 5. அளவு. 6. மயக்கம் என்பன.



2. மொழிமரபு (49 நூற்பாக்கள்)

இவ்வியலில் கூறப்படுபவை வருமாறு:

1. நூன் மரபின் ஒழிபு.
   (நூல் மரபில் விடுபட்ட குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் அளபெடை ஆகியவற்றின் விளக்கம் தரப்படுகிறது.
2. **மொழியாக்கம்** : எழுத்துகள் தனித்தோ தொடர்ந்தோ பொருள் தருமாயின் அது மொழி எனப்படும். ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொருமொழி, இரண்டுக்கு மேற்பட்ட தொடர்மொழி ஆகியவற்றின் விளக்கம் இதில் தரப்படுகிறது.
3. **மெய்களின் இயக்கம்** : இன்னின்ன எழுத்துகள் இன்னின்ன எழுத்துகளோடு கூடி வரும் என விளக்கப்படுகிறது

4. **போலி** : ஒரு எழுத்திற்குப் பதில் இன்னொரு எழுத்து வருதல் பற்றிக் கூறப்படுகிறது.
5. **மொழிக்கு முதலாகும் எழுத்துகள்** : எந்தெந்த எழுத்துகள் மொழி முதலாகும், எவை முதலாகா என்று விளக்கப்படுகிறது.
6. **மொழிக்கு ஈறாகும் எழுத்துகள்** : எந்தெந்த எழுத்துகள் மொழியின் இறுதியில் வரும் என அறிவிக்கப்படுகிறது.

3. பிறப்பியல் : (21 நூற்பாக்கள்)

ஒலியே எழுத்தாகும் முறையை இவ்வியல் இயம்புகிறது. உள்ளிருந்து எழும் காற்று ஒலியாக மாறி மொழிக்குக் காரணம் ஆகிறது. உந்தியை இடமாகக் கொண்டு எழுப்பப்படும் காற்று, தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைத்துப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் பொருந்திப் பல்வேறு வடிவமாக எழுத்தின் ஒலிவடிவம் அமையும். தொல்காப்பியம்,

''உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கும்
அண்ணமு முளப்பட வெண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான'' (தொல்,. எழு. இளம் : 83)

என்று கூறும்.

பிறப்பியல், பொதுவாக எழுத்துகளின் பிறப்பையும் சிறப்பாக உயிர், மெய், சார்பெழுத்துகளின் பிறப்பையும் கூறுகிறது. இன்றைய மொழியியலறிஞர்கள் வியக்கும் ஒலியியல் கூறுகளைக் கொண்டுள்ளது.

உயிர் ஒலிகள் மிடற்றை இடமாகக் கொண்டு பிறக்கும். அ,ஆ வாய் அங்காத்தலால் தோன்றும்.

இ,ஈ,எ,ஏ,ஐ - அங்காப்போடு அண்பல்லை நாமுதல் விளிம்பு உறப்பிறக்கும்.

உ,ஊ,ஒ,ஓ,ஔ - இதழ் குவித்தலால் பிறக்கும்.

மெய்யொலிகள் :

க,ங - முதல் நா அண்ணத்தை உற

ச,ஞ - இடை நா அண்ணத்தை உற

ட,ண - நுனி நா அண்ணத்தை உற

த,ந - அண்பல் அடியை நாநுனி பரந்து மெய்யுற ஒற்ற

ற,ன	-	அண்ணத்தை நாநுனி நன்றாக உற
ப,ம	-	மேலிதழும் கீழிதழும் பொருந்த
வ	-	பல்லும் இதழும் பொருந்த
ய	-	மிடற்று எழும் ஓசை அண்ணத்தை உரச
ர,ழ	-	நுனிநா அண்ணத்தை நோக்கிச் சென்று வருட
ல	-	நா விளிம்பு வீங்கி அண்பல்லை ஒற்ற
ள	-	நா விளிம்பு வீங்கி அண்ணத்தை வருடப் பிறக்கும்.

சார்பெழுத்துகள்

தத்தம் முதலெழுத்துகளின் பிறப்பிடத்தையே தாமும் பெற்று வரும். ஆய்தம் தலைவளியாற் பிறத்தலின் உயிரோடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும்.

4. புணரியல் (40 நூற்பாக்கள்)

இது எழுத்துகளால் ஆகிய சொற்கள் சேர்தலைக் (புணர்தலைக்) குறிக்கும். நிலைமொழியை 'நிறுத்த சொல்' லென்றும் வருமொழியைக் 'குறித்துவருகிளவி' யென்றும் கூறுவார். இச்சொற்கள் புணருங்கால் இடையில் எழுத்துகள் தோன்றலும் திரிதலும் கெடுதலும் ஆகிய விகாரங்களைப் பெறும். இதை விகாரப் புணர்ச்சி என்பார்.

மெய்பிறிதாதல் - பொன் + குடம் = பொற்குடம்.

மிகுதல் - யானை + கோடு = யானைக்கோடு.

குன்றல் - மரம் + வேர் = மரவேர்.

இதைத் தொல்காப்பியர்,

> *''மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்*
> *றிவ்வென மொழிப திரியு மாறே''* (தொல். எழு. இளம் : 110)

என்று குறிப்பார்.

இயல்பாகப் புணர்வனவற்றை இயல்புப் புணர்ச்சி என்பார். (குவளை + மலர் = குவளைமலர்; ஐ முதலிய ஆறு உருபுகளும் தொக்கும் விரிந்தும் நிற்ப அவற்றோடு வருமொழிகள் புணரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி ஆகும். வேறாகி நின்ற இருமொழிகளும் தம்மில் சார்தற் பொருட்டு இயைந்து நிற்கும் எழுத்துகளைச் சாரியை என்பார். சாரியைகள் பெறும் மாற்று வடிவங்களையும் இவை மாறும் சூழ்நிலைகளையும் இவ்வியல் கூறுகின்றது.

5. தொகை மரபு : (30 நூற்பாக்கள்)

உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய சொற்களைப் பின்வரும் இயல்களில் ஈறுகள் தோறும் தனித்தனியே விரித்தோதிய

தொல்காப்பியர், பல ஈறுகளுக்கும் பொதுவான விதிகளை இவ்வியலில் தொகுத்து மரபு கூறுகிறார். அதனால் இவ்வியல் தொகைமரபு எனப் பெயர் பெற்றது. நிலைமொழி, வருமொழி புணர்ச்சிக்குட்படும் இலக்கணங்களாய்த் தொன்றுதொட்டு வரும் இலக்கண மரபுகளைத் தொகுத்துணர்த்துதலின் தொகைமரபு எனப்பட்டது எனினும் அமையும்.

உயிரீறு 12, மெய்யீறு 11, குற்றியலுகர ஈறு 1 ஆக 24 மெய்களும் ஒரே விதமான புணர்ச்சி விதிகளைப் பெறுவதை இவ்வியல் தொகுத்துக் கூறுகிறது. வேற்றுமைகள் புணருவதையும் எடுத்து இயம்புகிறது.

''கசதப முதலிய மொழிமேற் றோன்று
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னு மொற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான'' (தொல், எழு. இளம் : 144)

என்று புணர்ச்சி நிலையை விவரிப்பார்.

6. உருபியல் (30 நூற்பாக்கள்)

வேற்றுமை உருபுகள் பெயர்களோடு பொருந்தும் முறைமை யினை உணர்த்துவது உருபியலாகும். பெயரும் அதனால் ஏற்கப்படும் வேற்றுமையுருபும் ஆகிய இவ்விரண்டிற்கும் இடையே வரும் சாரியைகள் இவையென, இவ்வியலில் விளக்கப்படுகின்றன. வேற்றுமையுருபினை ஏற்குங்கால் பெயர்கள் பெறும் இயல்பும் திரிபும் ஆவன இவை என்பன விளக்கப்படுகின்றன.

''அஆ உஊ ஏஔ வென்னும்
அப்பா லாற னிலைமொழி முன்னர்
வேற்றுமை உருபிற் கின்னே சாரியை'' (தொல், எழு. இளம் : 174)

என்று உயிரீற்றுப் பெயர்கள் முன் உருபுகள் புணரும் முறை கூறப்படுகிறது.

அஆஉஊஏஔ என்னும் ஆறினை ஈறாக உடைய பெயர்கள், ஞகர ஈற்றுப் பெயர், தெவ் என்னும் வகரவீற்றுப் பெயர், மகர ஈற்றுப் பெயர்களில் சில, குற்றியலுகர வீற்றுப் பெயர்கள் ஆகியன உருபு ஏற்குங்கால் 'இன்' சாரியை பெறும்.

பன்மைப் பொருளைக் கருதின அகர வீற்றுப் பெயர், யா என்னும் ஆகார வீற்று வினாப் பெயர், அவை, இவை, உவை, யாவை, அவ், இவ், உவ் என்பன 'வற்றுச் சாரியை பெறும்'.

எல்லாம் என்னும் பெயர் அஃறிணைக்கண் வற்றுச்சாரியையும், உயர்திணைக்கண் தம், நம், நும் சாரியைகளையும் பெறும்.

இவ்வாறு, அன், இன், அத்து போன்ற சாரியைகள் இடம் பெறுதல், புணரும் நிலையில் நிகழும் மாற்றங்கள் முதலியன இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

7. உயிர் மயங்கியல் (93 நூற்பாக்கள்)

உயிரீறு நின்று வல்லெழுத்தோடும் சிறுபான்மை ஏனை எழுத்துகளோடும் புணருமாறு கூறுவது உயிர் மயங்கியலாகும். உயிரும் புள்ளியும் இறுதியாகிய உயர்திணைப்பெயர்கள் அல்வழி, வேற்றுமை யாகிய இரு வழியிலும் இயல்பாமெனவும் ஒரு சில இடங்களில் அஃறிணை விரவுப்பெயர் இயல்பாதல் உண்டெனவும் தொகை மரபில் கூறினார் தொல்காப்பியர். இவ்வியலில் உயிரீற்று அஃறிணைப் பெயர்களையும் ஏனை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங் களையும் அகரவீறு முதல் ஔகார வீறு முடிய நெடுங்கணக்கு முறையில் வைத்து உணர்த்துகின்றார். இவ்வியலில் கூறப்பட்ட விதிகள் யாவும் வல்லெழுத்து மிகுவன, இயல்பாவன, மெல்லெழுத்து மிகுவன, உயிர்மிக்கு வருவன, நீண்டு வருவன, குறுகி வருவன, சாரியை பெறுவன, பிறவாறு திரிவன என்னும் வகையுள் அடங்குவனவாகும்

''அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே'' (தொல், எழு. இளம் : 204)

என அகர வீற்றுச் சொற்கள் அல்வழிக்கண் வன்கணத்தோடு புணரும் இலக்கணம் கூறுகிறார். இவ்வாறே மற்ற உயிரீற்றுச் சொற்களுக்கும் கூறிச் செல்கிறார்.

8. புள்ளி மயங்கியல் : (110 நூற்பாக்கள்)

மெய்யீறு வன்கணத்தோடும் பிறகணத்தோடும் புணருமாறு கூறுவது புள்ளி மயங்கியலாகும். மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிற்குமாதலின் புள்ளியென்றார் ஆசிரியர். மெய்யீற்றுள் உகரம் பெறுவன, இறுதி கெட்டு வல்லெழுத்து மிகுவன, மெல்லெழுத்து மிகுவன, இறுதி கெடாது வல்லெழுத்து மிகுவன, மெல்லெழுத்து மிகுவன, வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் உறழ்ந்து முடிவன, இயல்பாய் வருவன, சாரியை பெறுவன, திரிந்து முடிவன என்னும் இவ்வகையினுள் கூறப்பட்ட விதிகள் யாவும் அடங்கும்.

''ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயி னான'' (தொல், எழு. இளம் : 297)

என்று ஞகார ஈறு இருவழியும் வன்கணத்தோடு புணருமாறு கூறியுள்ளார். இவ்வாறே மற்ற மெய்யீற்றுச் சொற்களுக்கும் ஏற்ற விதிமுறைகளைக் கூறியுள்ளார்.

9. குற்றியலுகரப் புணரியல் (78 நூற்பாக்கள்)

குற்றியலுகர ஈறு நின்று வருமொழியோடு புணரும் இயல்பினை உணர்த்துவது குற்றியலுகரப் புணரியலாகும். நெட்டெழுத்தின் பின்னும் தொடர் மொழியீற்றிலும் குற்றியலுகரம் வரும் என மொழி மரபில் கூறினார். குற்றியலுகரத்தை அயலில் உள்ள எழுத்து வகையால் உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத் தொடர், வன்றொடர், மென்றொடர், நெடிற்றொடர் என ஆறுவகையாகப் பிரித்துக் கூறுகிறார்.

''ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன் (தொல், எழு. இளம் : 407)

என்று குற்றியலுகரங்களை வகைப்படுத்தும் தொல்காப்பியர், ''அவற்றுள், ஈரொற்றுத் தொடர் மொழி இடைத்தொடராகா'' (தொல் : 407) எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

குற்றியலுகர ஈற்றுத் திசைப்பெயர்கள், எண்ணுப் பெயர்கள், நிறைப்பெயர்கள், அளவுப்பெயர்கள், மரப்பெயர்கள் ஆகிய பெயர்களுக்கு அவர் புணர்ச்சி விதி கூறியுள்ளார்.

சொல்

''எழுத்தான் இயன்று பொருள் அறிவிப்பது சொல்'' எனத் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய தெய்வச் சிலையார் உரைப்பார். 'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்'' என்று நன்னூலார் உரைப்பார். ஓரெழுத்து முதலாக ஒன்பது எழுத்து ஈறாகச் சொற்கள் உருவாகும்.

ஒலியனியலைப் பற்றி எழுத்ததிகாரத்தில் விளக்கமாகக் கூறிய தொல்காப்பியர், சொல்லியலையும், தொடரியலையும் இணைத்துச் சொல்லதிகாரத்தில் கூறியுள்ளார். இது

1. கிளவியாக்கம்
2. வேற்றுமையியல்
3. வேற்றுமை மயங்கியல்
4. விளிமரபு
5. பெயரியல்
6. வினையியல்
7. இடையியல்
8. உரியியல்
9. எச்சவியல்

என ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் எல்லா இயல்களும் தொடரியலையும் சொல்லியலையும் பற்றிக் கூறுகின்றன. தொல்காப்பியர் சொல்லியல் வேறு தொடரியல் வேறு என்று அறிந்திருந்தார்.

1. கிளவியாக்கம் : (61 நூற்பாக்கள்)

கிளவி - சொல், ஆக்கம் - ஆகி வருதல் எனப் பொருள் கொண்டு இன்னின்ன சொற்கள் இன்ன பொருள் மேல் ஆகி வருவனவாம் என்பதைக் கிளவியாக்கம் கூறுகிறது. தொல்காப்பியம் சொல்லைக் கிளவி, சொல், மொழி என்ற மூன்று சொற்களால் குறிக்கின்றது. தொல்காப்பியத்தில் மிகுதியாகக் கிளவி 368 இடங்களிலும், சொல் 167 இடங்களிலும், மொழி 135 இடங்களிலும் ஆளப்பட்டுள்ளன.

பொதுநிலையில் சொல்லுக்கு இலக்கணம் கூறும்போது மரபின் வழி நின்று,

''உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே'' .

(தொல், சொல். சேனா. 1)

எனத் திணையைப் பகுத்து அத்திணைக்கண் தோன்றுவது சொல் எனக் குறித்தார். புறநிலை அடிப்படையை வைத்து இலக்கணம் கூறும்போது

''பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்'' (தொல், சொல். 156)

என இரு தன்மையைக் கொண்டது.'' எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' (155) என்று குறித்ததால் பொருள் குறிக்காததை அவர் சொல்லாகக் கருதவில்லை என்பது பெறப்படுகிறது. இன்றைய மொழியியலாரின் 'தொடரியல்' **(Syntax)** அமைப்பினை ஆயும் மொழியியலார் இவ்வியலில் வரும் நூற்பாக்களைக் கண்டு வியப்புறுவர். சொற்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று இதில் தெளிவாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.

இவ்வியலில் எழுவாய், பயனிலை, பெயர், பெயரடை போன்றவற்றில் காணப்படும் இயைபு விளக்கம் பெற்றுள்ளது. வாக்கியங்களில் காணப்படும் பல்வேறு சொற்களின் முறைவைப்பு, இருவாக்கியங்கள் இணையும் பொழுது ஏற்படும் மாற்றங்கள் போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன. திணை, பால், இடம், காலம், வினா, மரபு பற்றி வரும் வழுவமைதிகளை விளக்கிச் செல்கிறார் ஆசிரியர்.

2. வேற்றுமையியல்: (61 நூற்பாக்கள்)

''வேற்றுமைதாமே ஏழெனமொழிப'' எனத் தமக்கு முன் இருந்த முறைமையைக் கூறி ''விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே'' எனத் தன் கருத்தைக் கூறிச் செல்கிறார், தொல்காப்பியர். (தொல். சொல் சேனா. 63) உருபுகளின் பெயர்களை

''அவைதாம்
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி யென்னும் ஈற்ற'' (தொல், சொல். சேனா 64)

என்று கூறியுள்ளார்.

இவ்வியலில் வேற்றுமை என்பதன் விளக்கம், வேற்றுமையின் வகை, பெயர்க்காரணம், அவை இன்னின்ன முறையில் வரும் என ஒவ்வொரு வேற்றுமையையும் தனித்தனியாகப் பிரித்துக் கூறுகிறார். ஒவ்வொரு வேற்றுமையையும் பற்றிக் குறிப்பிடும்போதும் அவற்றின் உருபை முதலில் கூறிப் பின்னர் அவை கொண்டு முடியும் வினைகளையும் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் எழுவாயும், பயனிலையும் வேற்றுமை உருபுகள் ஏலா என்கிறார். எழுவாய் வேற்றுமை திரிபு இல்லாத பெயராகும். (வடநூல் முறை இதற்கு மாறுபட்டதாகும். எழுவாய் வேற்றுமையும் விளி வேற்றுமையும் உருபு ஏற்பதாக வடநூல் இலக்கணங்கள் கூறுகின்றன.)

வேற்றுமைகள் எத்தகைய வினைச் சொற்களை ஏற்றுவரும் என்பதைக் கூறுவது தொடரியல் விளக்கத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. வேற்றுமையியல் வேற்றுமைகளின் புதைநிலை வடிவம் அல்லது அடிப்படை வடிவம் **(Deep Structure)** பற்றிப் பேசுகின்றது என்று மொழியியலார் கூறுவர்.

3. வேற்றுமை மயங்கியல் : (34 நூற்பாக்கள்)

பொருள் மயக்கம், உருபு மயக்கம் என்னும் இருவகை மயக்கமும் இவ்வியலில் கூறப்படுவதால் 'வேற்றுமை மயங்கியல்' என இவ்வியல் பெயர் பெற்றது. ஒரு வேற்றுமை தன் பொருளை விடாது பிறிதொரு வேற்றுமைப் பொருளிலும் சென்று இயைந்த பொருள் தருமேல் அது பொருள் மயக்கம் எனப்படும். இதனைத் 'தன்பொருளில் தீராது பிறிதொன்றன் பொருட்கண் சேறல்' என்பார் சேனாவரையர். இங்ஙனமன்றி ஒரு பொருளில் ஈருருபு சென்று இயையினும் அதுவும் பொருள் மயக்கம் எனப்படும். ஓர் உருபு நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் உருபு இயைபின்றி நிற்குமாயின் அது உருபு மயக்கமாகும்.

''கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்கு
உரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை''

(தொல். சொல். சேனா. 84)

என்று இரண்டாவது வேற்றுமை மயங்கும் நிலையைக் கூறியுள்ளார் ஆசிரியர்.

தொல்காப்பியர் இக்காலத் தொடரியலை அடிப்படையாகக் கொண்டு, அக்காலத்திலேயே வேற்றுமை மயங்கியலை அமைத்துள்ளார். வேற்றுமைகள் புறநிலையில் திரிந்தும் மாறியும் வருகிற புறநிலை வடிவம்

(Surface Structure) பற்றிப் பேசுகிறது என்பர். தொல்காப்பியர், எந்தெந்த வினைகள் எந்தெந்த வேற்றுமைகளுடன் வருகின்றன என்பதை வேற்றுமை இயலிலும், சில வேற்றுமை உருபுகளோடு ஒரு சில வினைகள் வரும்போது தத்தம் பொருளை இழந்து நிற்கின்றன என்பதை வேற்றுமை மயங்கியலிலும் கூறியுள்ளார்.

4. விளிமரபு : (37 நூற்பாக்கள்)

ஒன்றன் பெயரை விளித்தற்கண் வேற்றுமை தோன்றுவதால் விளி வேற்றுமை என்றாயிற்று. படர்க்கைப் பெயரைத் தனக்கு முன்னிலைப் பெயராக ஆக்குவதே இதன் பயனாகும். இதனை 'எதிர்முக வேற்றுமை' என்றும் குறிப்பர். 'படர்க்கையோரைத் தன் முகமாகத் தானழைப்பதுவே' என நன்னூலாரும் விளக்குவார்.

''விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய வென்ப''

(தொல், சொல். சேனா. 118)

என்று விளிவேற்றுமையின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். விளிவேற்றுமை என்பது தன்னையேற்கும் பெயரினிடமாக விளங்கத் தோன்றும் இயல்பினது. அது இயல்பாகியும் ஈறு திரிந்தும் ஈற்றயல் நீண்டும், பிறிது வந்தடைந்தும் விளியேற்கும். அங்ஙனம் விளியேற்கும் பெயர்கள் இவை என இவ்வியலில் விளக்கப்படுகின்றன. உயர்திணைப்பெயர், உயர்திணை விரவுப் பெயர், அஃறிணைப் பெயர், அஃறிணை விரவுப் பெயர் ஆகியவை விளியேற்றல், உயிரீறு, மெய்யீறு விளியேற்கும் முறை, விளியேலாப் பெயர்கள் ஆகியவை விளக்கப்படுகின்றன. விளி மரபில் விளிப்பெயரின் தொடரியல் பண்பு குறித்து ஒரு செய்தியும் காணப்படவில்லை.

5. பெயரியல் : (43 நூற்பாக்கள்)

சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். தொல்காப்பியர் இவற்றை முறையே பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்ற இயல்களில் விளக்கிச் சென்றுள்ளார். உயர்திணைப்பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் ஆகியவற்றின் தன்மைகளையும், அவை பாலுணர்த்தும் முறையையும் விளக்கியுள்ளார். விரவுப் பெயரின் பாகுபாடுகளாக அமையும் இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர், பெண்மை சுட்டிய பெயர், ஆண்மை சுட்டிய பெயர், பன்மை சுட்டிய பெயர், ஒருமை சுட்டிய பெயர் ஆகியவற்றை விளக்கியுள்ளார். மூவிடப்பெயர், தொழிற்பெயர், இயல்பு, தகுதி என்னும் இருவகை வழக்குகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் பல நூற்பாக்களில் பெயரெச்சம் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வெச்சத்தை அவர் 'பெயரெஞ்சு கிளவி'

என்றழைக்கிறார். இவ்விலக்கணக் குறியீடே தொடரியல் அடிப்படையில் அமைந்துள்ளது. பெயரைக் கொண்டு முடியும் கிளவியையே 'பெயரெஞ்சு கிளவி' என்றார்.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே''

(தொல், சொல். சேனா. 155)

என்றும், ''பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லி னாகும் என்மனார் புலவர்'' (156) என்றும் பெயரின் பொருளிலக்கணம் கூறியுள்ளார்

6. வினையியல் (51 நூற்பாக்கள்)

சொற்கள் இரண்டு பெரும் பிரிவாகப் பகுக்கப்படுகின்றன.

''சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்தி சினோரே'' (தொல், சொல். சேனா. 158)

என்பார் தொல்காப்பியர். பெயர்ச்சொல் வேற்றுமை காட்டும். காலம் காட்டுவதில்லை. வினைச்சொல் காலம் காட்டும். உருபு ஏற்காது. இச்சிறப்பினை,

''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''

(தொல், சொல். சேனா. 198)

என்றும்,

''பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே''

(தொல், சொல். சேனா. 70)

என்றும் குறித்துள்ளார்.

வினைச் சொற்கள் செயல்வினை (தெரிநிலை) பண்புவினை (குறிப்பு) என மேலும் பகுக்கப்படுகின்றன. செயல் அடிப்படையினின்று பிறக்கும் வினைகளை வினை என்றும் ஏனைய பண்பு, அண்மை, பெயர் முதலியவற்றினின்று பிறப்பதைக் குறிப்பு என்றும் கூறுவார். வினை, குறிப்பு என்று குறிக்கப்படுபவை காலக்கிளவி என்று சொ'ல்கிறார்.

''செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி''

(தொல், சொல். சேனா.228)

என்னும் நூற்பாவில் உள்ள வாய்பாடுகளின் அமைப்பு உடைய எல்லாக் கிளவிகளும் 'வினையெஞ்சு கிளவிகளே' என்பது தொல்காப்பியக் கோட்பாடு. இக்கால மொழியியலார் வினையெஞ்சு கிளவிகளை **Verb, Participle, Infinite, Conditional** என்றெல்லாம் பிரிப்பது போலத் தொல்காப்பியர் பிரிக்கவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களுடைய உள்ளத்தில் இப்படிப்பட்ட பிரிப்பு முறைகள் தோன்றவில்லை.

7. இடையியல் : (48 நூற்பாக்கள்)

இடைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறவரும்போதே அவ்விடைச் சொல், பெயரையும் வினையையும் சார்ந்து தோன்றும் என்று அதன் முதன்மையான பொதுவிலக்கணத்தைத் தெளிவுபடுத்துகிறார் 'அவற்றுவழி மருங்கில் தோன்றும்' என்ற தொடரால் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்ச்சொல், வினைச்சொல் போல அத்துணைச் சிறப்புடையன அல்ல என்பதையும் உணரமுடிகிறது.

இடையியலின் முதல் நூற்பாவில் இடைச்சொல்லின் பொது இலக்கணம் உணர்த்தும் பொழுதும் இக்கருத்தினையே,

> *''இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்*
> *நடைபெற்றியலுந் தமக்கியல் பிலவே''*
>
> (தொல், சொல். சேனா. 249)

என மேலும் விளக்கம் செய்கிறார். இதன்மூலம் இடைச்சொற்கள் தமக்கென்று தனிப்பொருண்மையினை உடையன அல்ல என்பதை உணர முடிகிறது.

'இடைச்சொல்' என்ற பெயர்க்காரணத்தில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

1. இடைச்சொற்கள் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் இடமாகக் கொண்டு பொருள் உணர்த்துதலின் இடைச் சொல்லாயிற்று என்பது தெய்வச் சிலையார் கருத்து. (தொல் - சொல் - தெய்வச்சிலையார் உரை ப : 138)
2. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய மொழிகளின் முன்னும் பின்னுமாக இச்சொற்கள் வருமாயினும் பெரும்பாலும் இடையில் வருதலால் இடைச்சொல் எனக் குறியீடு பெற்றது என்பது சேனா வரையர் கருத்து (தொல் - சேனாவரையர் உரை - ப.163)
3. பெயர்ச் சொல்லுமாகாது வினைச்சொல்லுமாகாது அவற்றின் வேறுமாகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் என்று பெயர் பெற்றது என்பது சிவஞான முனிவர் கருத்து.

   பிந்திய இரு கருத்துகளைவிட, தெய்வச்சிலையார் கருத்தே பொருத்தமுடையதாகவும் பொருண்மையுடையதாகவும் அமைந்துள்ளது.

பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையும் சார்ந்து அச்சொற்களின் உறுப்பாய் வருதல் என இருவகையில் இடைச்சொற்களின் அமைப்பு முறை விளக்கப்பட்டுள்ளது.

இடைச்சொற்கள் ஏழு வகையாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் இயல்புகளும் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவும் சாரியைகள்.
2. வினைச் சொல்லைச் சார்ந்து வரும் காலம் காட்டும் இடைநிலைகள்.
3. பெயரையும் வினையையும் சார்ந்து வேற்றுமையில் உருபுகளாக வருபவை.
4. அசை நிலைகள்.
5. இசைநிறைக் கிளவிகள்
6. தத்தம் குறிப்பால் பொருள் செய்யும் இடைச்சொற்கள்
7. ஒப்பில் மொழியால் பொருள் தரும் உவம உருபுகள்.

இடையியலைத் தொல்காப்பியர் சொல்லதிகாரத்தே வைத்து இலக்கணம் கூறியிருப்பினும் இடைச் சொல்லின் இலக்கணம் தொல்காப்பியத்தின் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய அதிகாரங்களிலும் பரவலாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

8. உரியியல் : (100 நூற்பாக்கள்)

இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்குத் தாமே யுரியவாகலின் உரிச்சொல் எனப் பெயர் பெற்றது என்பர் சேனாவரையர். பெரும்பான்மையும் செய்யுட்குரித்தாக வருதலின் உரிச்சொல்லாயிற்று என்பார் நன்னூலார்.

உரிச்சொல் செவியால் உணரப்படும் இசை பற்றியும், மனத்தால் குறித்து உணரப்படும் குறிப்பு பற்றியும் ஐம்பொறிகளால் உணரப்படும் பண்பு பற்றியும் வரும். இவை பெயரையும் வினையையும் சார்ந்து வரும். அங்ஙனம் வருங்கால் பெயர்ச்சொல் போன்றும், வினைச்சொல் போன்றும் வரும். அவற்றிற்கு முதனிலையாகவும் வரும். அவை ஒரு சொல் பல பொருளுக்கு உரியதாயும், பலசொல் ஒரு பொருளுக்கு உரியதாயும் ஒரு சொல் ஒரு பொருளுக்கு உரியதாயும் வரும். வழக்கில் பயின்ற உரிச்சொற்களைக் கொண்டே பொருள் உணர்த்தப்படும்.

> ''உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
> இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
> பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
> ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
> பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
> பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
> தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
> எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்''
>
> (தொல், சொல். சேனா. 297)

என்பார் தொல்காப்பியர்.

உரிச்சொற்களின் பொருண்மை நிலையே விளக்கமாகப் பேசப்படுகிறது. பொருண்மை வெளிப்படையாக உணர முடியாத சொற்களுக்கே அவர் விளக்கம் தருகிறார் பொருண்மை நிலையை மூன்று வகையாகப் பிரித்து விளக்குகிறார்.

1. ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்

மல்லல்	-	வளன்	யாணர்	-	புதிது
மாதர்	-	காதல்	ஐ	-	வியப்பு
உசா	-	சூழ்ச்சி	புனிறு	-	ஈன்றணிமை

2. ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள்

கடி என்ற சொல் வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், ஐயம் முதலிய பல பொருட்கள் தரும்.

3. பல சொற்களுக்கு ஒரு பொருள்

சால, உறு, தவ, நனி, கழி முதலிய சொற்கள் மிகுதி என்ற ஒரு பொருளைத் தரும்.

9. எச்சவியல் (67 நூற்பாக்கள்)

கிளவியாக்கம் முதலாக உரியியல் ஈறாக உள்ள எட்டு இயல்களிலும் சொல்லுதற்கு இடனில்லாது எஞ்சி நின்ற இலக்கணங்களையெல்லாம் இவ்வியல் உணர்த்துதலின் எச்சவியல் எனப் பெயர் பெற்றது. செய்யுளுக்கு உரிய இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கு சொற்கள் இதில் விளக்கப்படுகின்றன. வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் ஆகிய அறுவகைச் செய்யுள் விகாரங்கள் இவ்வியலில் தெளிவுறுத்தப்படுகின்றன. சொற்கள் ஒன்றோடொன்று இயைந்து பொருள்படும் இயல்பை விளக்குவஃதே பொருள்கோளாகும். இதனை 'மொழிபுணர் இயல்பு' என்பார்.

செய்யுளில் பொருள்கோளுக்கு ஏற்ப முடிக்கும் சொற்கள் அமையும். அவை நிரல்நிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று என்பர். அடுக்குத் தொடர், குறிப்பு மொழித் தொடர்கள், வினையெச்சங்கள், அவையல் கிளவிகள், வேற்றுமைத் தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை போன்ற தொகைகள் ஆகியனவும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

பொருள்

எழுத்து, சொல் ஆகிய இலக்கணங்களை உணர்த்திய ஆசிரியர் அவ்விருவகை இலக்கணங்களையும் கருவியாகக் கொண்டு, மக்கள் உணர்ந்து கொள்ளுதற்குரிய பொருள் நெறி மரபினைப் பொருளதி காரத்தில் வகுத்து விளக்குகிறார். இவ்வுலகில் உள்ள காட்சிப் பொருள், கருத்துப் பொருள் ஆகிய எல்லாவற்றையும் நன்காராய்ந்து அவற்றை முதல், கரு, உரி என மூவகைப்படுத்துணர்த்தி, இவ்வுலகில் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை முறையினை வகுத்துரைப்பது பொருளிலக்கணம். இப்பகுதி தமிழுக்கே உரியது நிலமும், காலமும் முதற்பொருள் எனப்படும். இதன் சார்பினால் உண்டாகும் புல் முதல் மக்கள் ஈறாக உள்ள உயிர்ப்பொருள்களும் ஏனைய உயிரல் பொருள்களும் கருப்பொருள்களாம். அறஞ் செய்தலும் பொருளீட்டலும் இன்பம் நுகர்தலுமாகிய ஒழுகலாறுகள் உரிப் பொருள்களாம். இவை மக்களுக்கே உரிய பொருள்களாதலின் உரிப்பொருளாம்.

பொருளதிகாரம் ஒன்பது இயல்களைக் கொண்டது. 1. அகத்திணையியல், 2. புறத்திணையியல், 3. களவியல், 4. கற்பியல், 5. பொருளியல் 6.மெய்ப்பாட்டியல், 7.செய்யுளியல், 8. உவமவியல், 9. மரபியல் (இவை அகம், புறம் இரண்டையும் உரைப்பன).

அகம்,புறம் எனப் பொருள் இருவகைப்படும். அகம் என்பதை ''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்'' என நச்சினார்க்கினியர் விளக்குவார். (தொல். பொருள். ப.3)

1. அகத்திணையியல் (58 நூற்பாக்கள்)

திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு தலைவனும் தலைவியும் சந்தித்து வாழ்வதற்குக் 'களவு' வாழ்க்கை என்றும், திருமணம் புரிந்து கொண்ட பின்பு வாழும் வாழ்க்கைக்குக் 'கற்பு' வாழ்க்கை என்றும் பெயர். இவ்வகப் பொருளைக் ''கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப'' (அகத். 1) என்று (கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை) எழுதிணையாக்குவர். ஐந்திணையை முதல், கரு, உரி என மூன்றாகப் பிரித்து விளக்கியுள்ளார்.

''முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே''

(தொல், பொரு.இளம் 4)

என்று முதற்பொருளையும்

"மாயோன் மேய காடுறை உலகமுஞ்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (தொல், பொரு. இளம். 5)

என்று கருப்பொருளில் தெய்வத்தைப் பற்றியும்

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப" (தொல், பொரு. இளம். 18)

என்று மற்றவற்றையும் குறித்தார்.

உரிப்பொருளைப் பற்றி,

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"

(தொல், பொரு. இளம். 16)

என்று குறித்துள்ளார். தலைமக்கள் அல்லாதார் அன்பின் ஐந்திணைக்கு உரியவரல்லர் என்றும் அவர்கள் கைக்கிளைக்கு உரியவர் என்றும் குறிக்கப்படுகிறது.

ஓதல், பகை, தூது என்பன பிரிவுக்குரிய நிமித்தங்களாகக் கூறப்படுகின்றன. அன்பின் ஐந்திணையேயன்றிக் கைக்கிளை, பெருந் திணையாகிய எத்திணைக் கண்ணும் பெண்ணொருத்தி மடலேறினாள் என்னும் குறிப்பு இல்லை.

2. புறத்திணையியல் : (30 நூற்பாக்கள்)

ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லோராலும் அனுபவித்து, உணரப்பட்டு, இஃது இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுவதாய் அறம், பொருள் என்னும் இயல்பினை உடையதாய்ப் புறத்தே நிகழும் ஒழுக்கம் புறம் எனப்படும். இவ்வொழுக்கம் புறத்தே நிகழும் பொருளாதலின் இதைப் புறப்பொருள் என்றார்.

அகப்பொருளில் ஏழு திணைகள் உள்ளன. புறப்பொருளில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப் பன்னிரண்டு திணைகள் உள்ளன.

இவற்றுள் வெட்சி முதலாகத் தும்பை ஈறான திணைகள் போரைப் பற்றிய செய்திகளையும், வாகை, போரில் வெற்றி பெற்ற செய்திகளையும் கூறும். பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பன கொடை, கீர்த்தி ஆகியவற்றைப் பற்றி விளக்கும்.

குறிஞ்சி	-	வெட்சி, கரந்தை
முல்லை	-	வஞ்சி
மருதம்	-	உழிஞை, நொச்சி
நெய்தல்	-	தும்பை
பாலை	-	வாகை
பெருந்திணை	-	காஞ்சி
கைக்கிளை	-	பாடாண்

என அகத்திணைகள் புறத்திணைகளோடு பொருத்தப்பட்டுள்ளன.

3. களவியல் (51 நூற்பாக்கள்)

களவினை மறைந்தவொழுக்கம், மறை, அருமறை என்ற சொற்களால் வழங்குவார் ஆசிரியர். களவாவது பிறர்க்குரிய பொருளை மறைவிற் கோடல். கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது கன்னியர் தம் இச்சையால் தமரை மறைத்துப் புணர்ந்து, பின்னும் அறநெறி பிறழாது நிற்றலால் இஃது அறமெனப்படும்.

''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே''

(தொல். பொரு. இளம். 89)

மறையோர் தேயத்து மன்றல் எட்டாவன:

பிரமம்	:	கன்னியை அணிகலன் அணிவித்துப் பிரமசாரியாய் இருப்பானுக்குத் தானமாகக் கொடுப்பது.
பிரசாபத்தியம்	:	மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேண்டியவழி இருமுது குரவரும் இயைந்து கொடுப்பது.
ஆரிடம்	:	ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொடுப்பது.
தெய்வம்	:	வேள்வி ஆசிரியரில் ஒருவருக்கு வேள்வித்தீ முன் கொடுத்தல்.
காந்தருவம்	:	இருவர் தாமே கூடும் கூட்டம்.
அசுரம்	:	வில்லேற்றினாலாதல், திரிபன்றி எய்தானாதல் கோடற்குரியவன் என்றவழி அது செய்தாற்குக் கொடுத்தல்.
இராக்கதம்	:	தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது

பைசாசம் : களித்தார் மாட்டும் துயின்றார் மாட்டும் கூடுதல்.

இவற்றில் காந்தருவர் மணமுறையோடு களவியல் ஒப்புமையுடையது.

''பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
டுருவ நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே''

(தொல், பொரு. இளம். 269)

என்று இவ்வகையில் பொருத்தமுடையவர் சேர்வது களவியலாயிற்று.

4. கற்பியல் : (53 நூற்பாக்கள்)

''கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே''

(தொல், பொரு. இளம். 140)

என்று தொல்காப்பியம் கற்பிற்கு இலக்கணம் வகுக்கிறது. அன்புடைய தலைவன், த்ன்பால் அன்புடைய தலைவியைப் பெற்றோர் கொடுப்பப் பலரறிய மணந்து வாழும் வாழ்க்கை கற்பெனப்படும்.

''பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப''

(தொல், பொரு. கற்பியல் : இளம். 143)

என்று திருமணத்திற்கான (கரணம்) சடங்கு முறை கூறப்படுகிறது.

போர் செய்து பகைவரை வெல்லுதற்குரிய வழி முறைகளை ஆராய்தற்கு இடமாகிய பாசறையின்கண் மகளிரொடு உடனுறைதல் கூடாது. போர்த் தொழிலுதவியிற் பழகிப் புண்பட்ட வீரரை உபசரித்தலும் இசைபாடி மகிழ்வித்தலும் முதலிய புறத் தொழில் புரியும் புறப் பெண்டிராயின் பாசறையில் இருத்தல் பொருந்துவதாகும்.

தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகியோர் தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்க்கும் வாயிலோர் ஆவர்.

5. பொருளியல் (52 நூற்பாக்கள்)

இவ்வியல் அக, புறப் பொருள்களில் எஞ்சி நிற்பனவற்றைக் கூறுகிறது. அகப்பொருள் ஒழுகலாற்றில் தலைவன், தலைவி, தோழி முதலியோர் உரையாடுதற்குரிய சொல்லமைதியினையும், அவர்தம் கூற்றில் அமைத்தற்குரிய பொருள் வகையினையும் சிறப்பு முறையில் கூறுவது இப்பொருளியலாகும். இவ்வியலில் 'அறத்தொடு நிற்றல்' துறை விரித்துரைக்கப்பட்டுள்ளது.

''எளித்தல் ஏத்தல் வேட்கை யுறைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்'' (தொல், பொரு. இளம் 204)

என்று எழுவகை நிலையில் அறத்தொடு நிற்றல் கூறப்படும்.

''செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான'' (தொல், பொரு. 206)

என்று பெண்மையின் சிறப்பியல்புகள் கூறப்பட்டுள்ளன.

மனத்தினால் உய்த்துணரின் அல்லது ஐம்பொறிகளால் உணர்ந்து கொள்ள முடியாத பொருள்கள் சிலவற்றைப் பொருளியலின் இறுதியில் ஆசிரியர் கூறியுள்ளார்.

6. மெய்ப்பாட்டியல் : (27 நூற்பாக்கள்)

உலகத்தாரது உள்ள நிகழ்ச்சி, அவரது உடம்பின்கண் தோன்றும் கண்ணீரரும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல், வியர்த்தல், நடுக்கம் முதலிய புறக்குறிகளால் காண்போர்க்குப் புலனாகும் தன்மை மெய்ப்பாடெனப்படும்.

மக்களது அகவாழ்வும் புறவாழ்வும் ஆகிய உலகியல் வழக்கில் புலப்பட்டுத் தோன்றும் இம்மெய்ப்பாடுகளைப் புனைந்துரை வழக்கமாகிய நாடக வழக்கிற்கும் புலனெறி வழக்கமாகிய செய்யுள் வழக்கிற்கும் அங்கமாகக் கொள்ளுதல் தொன்று தொட்டு வரும் தமிழிலக்கண மரபாகும். அதனால் தொல்காப்பியர் செய்யுளுக்குரிய உறுப்புகளுள் ஒன்றாகக் கொண்டு இவற்றை இவ்வியலில் விளக்குகின்றார்.

''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப'' (தொல், பொரு. இளம். 247)

என்று தொல்காப்பியர் சுவையை எட்டாகக் கூறுவார். இவற்றுடன் 'சமநிலை' சேர்த்து நவரசமாகக் குறிப்பார் வடநூலார்.

களவில் தலைவனும் தலைவியும் சந்திக்கும் முதற்காட்சியில் தலைவியிடம் தோன்றும் மெய்ப்பாடுகளையும் இவ்வியல் விரித்துக் கூறுகிறது.

7. உவமவியல்: (38 நூற்பாக்கள்)

உவமம் என்பது ஒரு பொருளோடு ஒப்புமை கூறுமுகமாக, அப்பொருளினுடைய வண்ணம், வடிவு, தொழில் முதலிய இயல்புகளை நன்கு புலப்படும்படிச் செய்வதாகிய பொருள் புலப்பாட்டு நெறியாகும்

அகத்திணையியலில் உள்ளுறை உவமம், ஏனைவுவமம் என இரண்டாகக் கூறினார். அவ்விரண்டனுள் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் மிகுதியாக வழங்கும் ஏனைவுவமத்தின் இயல்பினை இவ்வியலின் முதற்கண்ணும் செய்யுளுக்குரிய உள்ளுறை உவமத்தினை இவ்வியலின் இறுதியிலும் கூறியுள்ளார்.

சொல்ல எடுத்துக் கொண்ட பொருளைப் பொருள் என்றும், அதனது இயல்பினை விளக்கவேண்டி ஒப்புமையாக எடுத்துக் காட்டப்படும் பிறபொருளை உவமை என்றும் கூறுவர் தொல்காப்பியர். இவ்விரண்டையும் முறையே உபமேயம் என்றும் உபமானம் என்றும் வழங்குவர் வடநூலார். உவமையும் பொருளும் ஆகிய இவ்விரண்டின் கண்ணும் ஒத்தமைந்த வண்ணம், வடிவு, தொழில், பயன் என்பன பற்றியமைந்த தன்மை பொதுத் தன்மை எனப்படும். அத்தன்மையினை விளக்குதற்பொருட்டு அன்ன, ஆங்கு, போல, புரைய என்பன முதலாக அவற்றைச் சார்ந்து வரும் இடைச்சொற்கள் உவமவுருபெனப்படும்

8. செய்யுளியல் (235 நூற்பாக்கள்)

இவ்வியலில் செய்யுளின் இலக்கணம் உணர்த்தப்படுகிறது. தொல்காப்பியர் யாப்பிலக்கணப் பகுதிகளையும் 8 வனப்புகளையும் இதில் விளக்கியுள்ளார்.

மாத்திரை, எழுத்தியல், அசைவகை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடைவகை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்றுவகை, கேட்போர், களன், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்சவகை, முன்னம், பொருள், துறைவகை, மாட்டு, வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இழைபு, இயைபு, புலன் ஆகியவை விரித்துக் கூறப்படுகின்றன. இதன்மூலம் செய்யுளுக்குரிய இலக்கணத்திற்கு முதன்மை கொடுத்த நிலை தெரிய வருகிறது.

9. மரபியல் (112 நூற்பாக்கள்)

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் நெடுங்காலமாக வழங்கி வரும் சொற்பொருள் மரபு உணர்த்தினமையின் மரபியல் என்று வழங்கப்பட்டது. இளமைப்பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் ஆகியவை இதில் பிரித்துரைக்கப்பட்டுள்ளன

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.''

(தொல், பொரு. இளம். 571)

என்று படிநிலை வளர்ச்சியைத் தொல்காப்பியர் இதில் விளக்குவார்.

ஓரறிவு	-	புல், மரம்
ஈரறிவு	-	நந்து, முரள் (சிப்பி)
மூவறிவு	-	சிதல், எறும்பு
நான்கறிவு	-	நண்டு, தும்பி
ஐயறிவு	-	மா, மாக்கள்
ஆறறிவு	-	மக்கள்

(தொல். மரபியல். 28 - 33)

முதல் நூல், வழி நூல், நூலின் நன்மைகள், நூலின் குற்றங்கள், நூலின் உத்திகள் ஆகியவற்றையும் இதில் கூறியுள்ளார்.

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்'' (தொல், பொரு. இளம் 640)

என்று முதல் நூலுக்கு இலக்கணம் வகுத்துள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களின் வழக்குச் சொற்களை உணர்த்துவது மரபியல்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியம் இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்து வரும் மொழியியலாரின் கருத்துகளோடு, கோட்பாடுகளோடு பொருந்தி வருதல் வியப்புக்குரியது.

தொல்காப்பியமும் ஒலியியலும்

ஒரு காலத்தில் ஓங்கியிருந்த அறிவியற்கலை காலவெள்ளத்தால் தொடர்பற்றுப் போகவே, தொல்காப்பிய நூற்பாக்களை அறிவியல் கண்ணோட்டத்தில் அறிய முடியாமல் போயிற்று. இன்று வளர்ந்து வரும் மொழியியற் கொள்கையின் வழி தொல்காப்பியத்தை அணுகும்போது, மிகுந்த வியப்பேற்படுகிறது.

தற்கால ஒலியியல் வல்லுநர்கள் வியக்கும் வண்ணம் தொல்காப்பியர், மொழிகள் அனைத்திற்கும் பொதுவான ஒலியியல் கோட்பாட்டினைத் தம் நூலில் பொதிந்து வைத்துள்ளார். தமிழ் மொழியின் ஒலிகளை விளக்கமாகக் கூறியுள்ளார். எழுத்துகளைப் பற்றிக் கூறவந்த அவர், 'பிறப்பியல்' என்ற இயல் ஒன்றை உருவாக்கி அதில் எழுத்துகளின் பிறப்பை 21 நூற்பாக்களில் விளக்கியுள்ளார்.

ஒரு மொழியின்கண் காணப்படும் ஒலிகளை எழுப்பப் பல்வேறு மனித உறுப்புகள் துணை செய்கின்றன. ஒலிகள் பிறப்பதற்குக் காரணமான உறுப்புகளாக நெஞ்சு (Lungs) மிடறு (Lerynx) தலை (Buccal cavity) மூக்கு (Nasal Cavity) என்ற நான்கு உறுப்புகளையும்

தலைப்பகுதியில் நாக்கு, அண்ணம், 'பல், இதழ் போன்றவற்றையும் தொல்காப்பியர் கூறிச் சென்றுள்ளார். இதை,

''உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லும் இதழு நாவு மூக்கும்
அண்ணமு முளப்பட வெண்முறை நிலையான்''

(தொல், எழுத்து. இளம். 83:1-4)

என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக மொழியியலார், ஒலிகளை இரண்டாகப் பிரிப்பர். ஒரு மொழியில் காணப்படும் ஒலியன்களும் உயிர், மெய் என இரண்டாகப் பிரிக்கப்படும். இப்பிரிவினைத் தொல்காப்பியரும் கூறியுள்ளார். மொழியியலார் ஆபர்கிராம்பி, உயிர் எழுத்துகளின் தன்மையைக் குறிப்பிடும்போது இவை உள்ளேயிருந்து வரும் காற்று, எவ்விதத் தடையுமின்றி வாயின் வழி வருகின்ற தன்மையுடையவை என்பார். (1. Abercrombie, Elements of General phonetic P. 39) இதனை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த தொல்காப்பியர்,

''பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்'' (தொல், எழு. இளம். 84)

என்று கூறியுள்ளார்.

உயிர் எழுத்துகளைத் தொல்காப்பியர் மூன்று வகையாகப் பிரிக்கிறார். அகர ஆகாரங்கள் ஒருவகையாகவும் இ, ஈ, எ, ஏ, ஐ என்பன இன்னொரு வகையாகவும், உ, ஊ, ஒ, ஓ, ஔ என்பன மற்றொரு வகையாகவும் பிரிக்கப்படுகின்றன. (தொல் 85-87) இவற்றுள் உ, ஊ போன்றவை பின்னுயிர் (Back Vowels) என்றும், இ, எ போன்றவை முன்னுயிர் (Front Vowels) என்றும், அ, ஆ போன்றவை நடு உயிர் (Central Vowels) என்றும் அழைக்கப் பெறுகின்றன.

உயிர் எழுத்துகளைப் போன்றே மெய்யெழுத்துகளையும் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாகப் பிரிப்பர். இவற்றை முறையே வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து எனத் தொல்காப்பியர் அழைப்பார். வல்லெழுத்துக்கும் மெல்லெழுத்துக்கும் இடையேயுள்ள வேற்றுமை மிகக் குறைவு. ககரம் பிறக்கின்ற இடத்தில்தான் ஙகரம் பிறக்கிறது. சகரம் பிறக்கின்ற இடத்தில்தான் ஞகரம் பிறக்கிறது. ஆனால் மெல்லெழுத்துகள் மூக்குக் குழாயின் மூலம் வெளி வருகின்றன. இதனை 'ஓரிடமெல்லினம்' (Homorgenic Nasal) என்றழைப்பார். இவ்வுண்மையை நன்கு அறிந்திருந்த காரணத்தால் தொல்காப்பியர், ககார, சகார, டகாரங்களின் பிறப்பினைக் கூறிப் பின்னர் மெல்லெழுத்துகளின் தனித்தன்மையை விளக்கு முகத்தான்,

''மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்'' (தொல், எழு. இளம். 100)

என்ற நூற்பாவை அமைத்தார்.

ஒலிகளை உண்டாக்கும்போது ஒலியெழுப்பிகள் ஏற்கும் அணர்தல் (Apical), பரத்தல் (Laminal), விளிம்பு வீங்கல் போன்ற வடிவமைப்பு அவை தம்முள் இயையும்போது உண்டாகும் ஒற்றல் (Lax), மெய்யுற ஒற்றல் (Tense), வருடல் (Flapped or rolled) ,அடைதல் (Frictional release) போன்ற முயற்சி அளபெடை (Lengthening) இசை (Pitch) போன்றவற்றின் அளவு, மாத்திரை (Measurement) ஆகியவை பற்றிய அவரது நுண்ணிய கருத்துகளைப் பார்க்கும்போது அவருடைய **நுண்மாண் நுழைபுலத்தை உணர முடிகிறது**.

தொல்காப்பியமும் சொல்லியலும்

பொதுவாக மொழியியலாளர்கள் சொல்லியல் (Morphology) தொடரியல் (Syntax) என இரண்டாகப் பகுத்துக் கூறினும் சொல்லியலும் தொடரியலும் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கக் காணலாம். சொல்லியல், ஒரு சொல்லில் அகத்தே காணப்படுகின்ற அக உறுப்புகளைப் பற்றியும் அவை இணைந்திருக்கின்ற முறை பற்றியும் அவற்றின் வரிசை முறை பற்றியும் கூறுகின்றது. இந்நிலையினை ஒட்டு மொழியாக (Agglutinative Language) உள்ளவற்றில் சிறப்பாகக் காணலாம்.

மொழியியலார்கள் சொல்லியலும் தொடரியலும் இணைய முடியாத அளவிற்குத் தனித்தனியானவை அல்ல என்று கூறுவர். இது கருதியே இன்றைய இடமாற்று இலக்கணவியலார் Transformational Grammarian இவ்விரண்டையும் பிரிக்காது ஒரே தலைப்பில் அடக்கிச் செல்வர்.

இத்தகைய நிலையினையே தொல்காப்பியத்திலும் காண முடிகிறது. ஒலியனியலைப் பற்றி எழுத்ததிகாரத்தில் விளக்கமாகக் கூறிய தொல்காப்பியர், சொல்லியலையும் தொடரியலையும் இணைத்துச் சொல்லதிகாரத்தில் உள்ள எல்லா இயல்களிலும் கூறியுள்ளார் எனினும் தொல்காப்பியர் சொல்லியல் வேறு, தொடரியல் வேறு என்பதை நன்கு உணர்ந்திருந்தார்.

பெயரியல், வேற்றுமையியல் போன்ற பல இயல்களில் சொல்லியல் கருத்துகள் பலவற்றைச் சிறந்த சிந்தனைத் தெளிவோடு கூறிச் சென்றிருக்கக் காணலாம். சொற்களை நான்காகப் பிரிக்கும் இவர் இன்றைய மொழியியல் கருத்துகளுக்கேற்பப் பெயர், வினை போன்ற சொற்களுக்கு விளக்கம் தருகிறார்.

பெயர் வேற்றுமையுருபை ஏற்று வரும் என்றும், காலம் காட்டாது நிற்கும் என்றும் அவர் கூறியிருப்பது சொல்லியல் விளக்கமாக அமைகிறது.

தொல்காப்பியமும் தொடரியலும்

பொதுவாகத் தொல்காப்பியச் சொல்லதிகாரம் சொல்லியல் **(Morphology)** பற்றி மட்டுமே பேசுகிறது என எண்ணுவர் பலர். ஆனால் தொடரியல் **(Syntax)** கருத்துகளை உள்ளத்தில் நிறுத்தி, இவ்விலக்கண நூலை ஆராய்ந்து நோக்கின் பல்வேறு தொடரியல் கருத்துகளும் நுட்பங்களும் இதன்கண் உள்ளமை தெரியவரும். கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் போன்ற இயல்களில் காணப்படும் பல நூற்பாக்கள் இவ்வுண்மையை அறிவுறுத்துவனவாக அமைந்துள்ளன. கிளவியாக்கத்தில் அமைந்துள்ள 61 நூற்பாக்களில் 50-க்கும் மேற்பட்டவை தொடரியல் விளக்கங்களையே அளிக்கின்றன.

'கிளவியாக்கம்' என்ற தொடரே பல கிளவிகளால், பல சொற்களால் ஆக்கப்படும் தொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பேசுவது எனப் பொருள்படும். ''இவ்வதிகாரத்தில் கூறப்பட்ட வொன்பதோத்தினுள்ளும் முதற்கண்ணது கிளவியாக்கம். இது கிளவியதாக்கமென விரியும். அதற்குப் பொருள், சொல்லினது தொடர்ச்சியென்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாகு நிலையைக் கிளவியாக்கமென்றார்'' எனக் கூறினார் தெய்வச் சிலையார். இது கருதியே சுப்பிரமணிய சாத்திரியார், இவ்வியல் 'தொடர் ஒற்றுமை இயைபு' **(Concord)** பற்றிப் பேசும் என்றார்.

இவ்வியலின்கண் எழுவாய், பயனிலை, பெயரடை, பெயர் (506, 509) போன்றவற்றில் காணப்படும் இயைபு (504, 541, 521) வாக்கியங்களில் காணப்படும் பல்வேறு சொற்களின் முறைவைப்பு, இரு வாக்கியங்கள் இணையும்பொழுது **(Co-ordinate Construction)** ஏற்படும் மாற்றங்கள் போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன.

தமிழ் மொழியில் காணப்படுகின்ற வேற்றுமைகளைப் பற்றிக் கூறுகின்றபோது இக்கருத்தினைக் காணலாம். பொதுவாக வேற்றுமையியல் இந்நிலையிலேயே உள்ளது. வேற்றுமைகள் எத்தனை என்றும் அவற்றின் உருபுகள் இன்னின்ன என்றும் அவற்றின் பொருள்கள் இன்னின்ன என்றும் கூறிச் செல்வார் இவர்.

பொதுவாகத் தொல்காப்பியர், சொல்லியல் கண்ணோட்டத்தோடு தமிழ்மொழியின் அமைப்பினை விவரித்துக் கூறியுள்ளார். ஒரு சொல்லில் காணப்படும் பல்வேறு இலக்கணக் கூறுகளைக் குறிக்கின்ற நிலையில் தான் வினைச் சொல்லைப் பற்றிக் கூறும்போது பொதுவாகக் காலத்தைப் பற்றி முதலிலும், காலஇடைநிலைகளை அடுத்து வரும் விகுதியைப் பற்றிப் பின்னரும் தொல்காப்பியர் அறிவிக்கின்றார்.

ஒவ்வொரு வேற்றுமை பற்றியும் குறிப்பிடும்போது அவற்றின் உருபை முதன் முதலில் சுட்டி, பின்னர் அவை கொண்டு முடியும் வினைகளையும் சொல்லிச் செல்வார் தொல்காப்பியர். பொதுவாகத் தனியாக நிற்கும் சொற்களையே தன்னுடைய ஆராய்ச்சியின் இலக்காக எடுத்துக் கொள்கிறார். மரம், ஆடு போன்ற சொற்கள் எவ்வித ஒட்டையும் ஏற்காத நிலையில் தனிச்சொற்களாக நிற்கின்றன. ஆனால் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது மரத்து என்றும், ஆட்டு என்றும் மாறி நிற்பதைக் காணலாம். சில மொழி நூல் அறிஞர்கள், இவை இரண்டனையும் தனித்தனியாகக் கொண்டு ஒன்றை மாற்றடியாகக் (Stem alternant) கொள்வர். ஆனால் வேறு சில மொழியியல் அறிஞர்கள் மரம் என்பதை அடிப்படைச் சொல்லாகக் கொண்டு வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது அச்சொல் அத்துச்சாரியைப் பெறுவதாகக் குறிப்பிடுவர். இதே நிலையினைத் தொல்காப்பியத்திலும் காண முடிகிறது.

எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே காணப்படும் தொடர்பினை எழுவாய், பயனிலை இயைபு என்று மொழியியலில் குறிப்பிடுவர்.

''னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்'' (தொல், சொல். சேனா. 5)

''ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்'' (தொல், சொல். சேனா. 6)

''ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே'' (தொல், சொல். சேனா. 7)

''ஒன்றறி கிளவி, தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்'' (தொல், சொல். சேனா. 8)

''அஆ வ என வருஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே'' (தொல், சொல். சேனா. 9)

போன்ற நூற்பாக்களில் எழுவாய் - பயனிலை இயைபு கூறப்படுகிறது. இத்தகைய இயைபு தமிழ் மொழியில் உள்ளமையால்தான் தொல் காப்பியம்,

''உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே''
(தொல், சொல். சேனா. 1)

''ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல்
பல்லோ ரறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே'' (தொல், சொல். சேனா. 2)

என்ற நூற்பாக்களின் வாயிலாகப் பெயர்களை ஆண்பாற்சொல், பெண்பாற்சொல், பலர்பாற் சொல், ஒன்றன்பாற் சொல், பலவின்பாற்

சொல் எனப் பிரித்துள்ளது. இத்தகைய தொடரியல் கருத்துகளை நூல் முழுவதிலும் காணமுடிகிறது.

வேற்றுமையியலில் வேற்றுமைகளை எட்டாகப் பிரித்து, அவற்றின் உருபுகளையெல்லாம் கூறிச்செல்லும் ஆசிரியர் அவ்வேற்றுமைகள் எத்தகைய வினைச் சொற்களை ஏற்று நிற்கும் என்பதையும் கூறுவது தொடரியல் விளக்கத்தைக் காட்டுவதாக உள்ளது.

தொல்காப்பியர் பல நூற்பாக்களில் பெயரெச்சம் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வெச்சத்தை அவர் 'பெயரெஞ்சு கிளவி' என்று அழைக்கிறார். இவ்விலக்கணக் குறியீடே தொடரியல் அடிப்படையில் அமைந்துள்ளது.

பிரிநிலையில்லாப் பெயரெச்சத் தொடர் (non-restricted relative clause) பற்றிக் குறிப்பிடும் மொழியியலார் 'இது பெயரெச்சத் தொடர்களைப் போலக் காணப்படினும் நடுநிலைப் பெயரெச்சம் குறிப்பிட்ட ஒரு பெயரினைப் பிறவற்றினின்று பிரிப்பது போலப் பிரிப்பதில்லை' என்று குறிப்பிடுவர். இதைப் புரிந்து கொள்வதற்கு மொழியியல் அறிவு துணை புரிகிறது.

''இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே'' (தொல், சொல். சேனா. 18)

என்ற நூற்பாவில் இக்கருத்தினுடைய விதை அமைந்து கிடக்கக் காணலாம்.

இத்தகைய தொடரியல் எண்ணங்கள் தொல்காப்பியம் முழுவதிலும் பரந்து கிடக்கின்றன. இன்றைய மொழியியல் ஆராய்ச்சியில் காணப்படுகிற பல்வேறு நுட்பமான தொடரியல் கருத்துகள் இந்நூலின்கண் சிந்திச் சிதறி மறைந்து கிடக்கின்றன. தமிழ் மொழியின் தொடரியல் அமைப்பினை நன்கு அறிந்து, ஆராய்ந்து எழுதிச் சென்ற பெருமை தொல்காப்பியரைச் சாரும். பல கருத்துகள் இவ்விலக்கண நூலில் இலைமறை காயாக உள்ளன. எனினும் தற்கால மொழியியல் அடிப்படையில், இந்நூற்பாக்களில் அறிந்து கிடக்கும் அரிய கருத்துகளை வெளிக்கொணர்தல் தமிழர்களின் தலையாய கடமையாகும்.

பண்டைத் தமிழரின் மொழியறிவை, இலக்கிய வளத்தை, வாழ்வியல் சிறப்பை அறிவதற்குத் தொல்காப்பியம் நல்ல சான்றாக அமைந்துள்ளது. அறிவியல் நோக்கில் எழுத்து, சொல், பொருள் எனப் பாகுபடுத்தி ஆய்ந்திருப்பது வியத்தற்குரியது. தொல்காப்பியரின் நுண்மாண் நுழைபுலனைக் கண்டு மகிழ்வதோடு மட்டும் நம் அறிவு நின்றுவிடக் கூடாது இன்றைய அறிவியலாரின், மொழியியலாரின் பார்வையில் அந்நூலை அணுகுவதும் ஆராய்வதும், வெளிப்படுத்துவதும் தமிழரின் கடமையாகும்.

ஒலியியல் (PHONETICS)

தமிழ் முத்தமிழ்ப் பாகுபாட்டினை உடையது (இன்று சிலர் நான்காவது தமிழாக அறிவியல் தமிழையும் சேர்த்துக் கூறும் நிலை அமைந்துள்ளது) இலக்கிய, இலக்கணங்களை அறிவியல் நுட்பத்துடன் நோக்கும் பார்வை விரிவாகிக் கொண்டு வருகிறது. இம்முறையில் மொழியியலையும் பிறதுறை அறிவியலோடு இணைத்துப் பார்ப்பின் மேலும் விளக்கம் கிடைக்கும்.

மொழியில் உள்ள ஒலிகளின் பிறப்பைப் பற்றிப் படிக்கும் போது உடலியக்கவியலைப் பற்றிய அறிவு வேண்டியிருக்கிறது. ஒலியலைகளின் அழுத்தத்தைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள இயற்பியலின் துணையை நாட வேண்டியிருக்கிறது. குழந்தை மொழியைக் கற்கும் திறனைப் புரிந்து கொள்ள உளவியலின் தேவை ஏற்படுகிறது. மொழி, சமுதாயத்தில் வழங்கும் பல்வேறு நிலைகளைத் தெரிந்து கொள்ள சமுதாயவியலின் அறிவும் தேவைப்படுகிறது.

ஒலியியலும், ஒலியெழுது முறையும் வெவ்வேறானவை. 'ஒலியியல்', ஒலிகளின் பிறப்பைப் பற்றிப் படிக்கும் ஓர் அறிவியல் பாடம். 'ஒலியெழுதும் முறை', ஒலிகளை வரிவடிவத்தில் எழுதப் பயன்படும் ஓர் எழுத்து முறை. ஒலிகளை வரிவடிவத்தில் காட்டுவதற்கு இவ்வெழுத்து முறை முக்கியமாக வேண்டப்படுகிறது. ஒலியெழுது முறை ஒலியியலறிஞர்க்கும் மொழியாசிரியருக்கும் ஒலிகளை வரிவடிவத்தில் காட்டப் பயன்படும் ஓர் உத்தியாக அமைகிறது. ஆகவே இவ்விரு முறையையும் சரியாகப் பயின்று, கடைப்பிடிப்பதே மக்களின் கடமையாகும். அதனால் 'ஒலியியல் பற்றிய ஆராய்ச்சி சிறப்பாகத் தமிழ் மொழியில் உள்ள ஒலியியல் பற்றிய ஆய்வு - இன்றியமையாததாகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய எழுத்ததிகாரத்தின் மூன்றாவது இயலான பிறப்பியல், தமிழ் எழுத்துகள் தோன்றும் முறை பற்றிக் கூறுகிறது. மொழியியலார், இவ்வியலைப் படித்து வியப்புறும் வண்ணம் இப்பகுதி அமைந்துள்ளது.

ஒலி ஆய்வு முறைகள்

ஒலியியலை ஆராயும் அணுகுமுறையின் அடிப்படையில் ஒலியியலை மூன்றாகப் பகுக்கலாம். அவை

(1) ஒலிப்பியல் அல்லது ஒலிப்பு ஒலியியல் (**Articulatory Phonetics**)

(2) ஒலியியக்கவியல் அல்லது அலை ஒலியியல் (**Acoustic Phonetics**)

(3) ஒலியுணர்வியல் அல்லது கேட்பொலியியல் (**Auditory Phonetics**)

1. ஒலிப்பியல் அல்லது ஒலிப்பு ஒலியியல்

இவ்வாய்வு முறை மிகத் தொன்மையானது என்பர். பெரும்பாலும் எல்லா மொழிகளிலுள்ள மரபிலக்கணங்களிலும் ஒலிகள், இவ்வாய்வு முறையில்தாம் ஆராயப்படுகின்றன. இந்திய மொழிகளில் மிகப் பழைய மொழிகளாகக் கருதப்படுகின்ற வடமொழியிலும் தமிழிலும் ஒலிப்பியல் முறையில் ஒலிகள் ஆராயப்படுகின்றன. 19, 20ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாய்வு முறை அறிவியல் நோக்கில் வளரத் தொடங்கியது.

ஒலியியல் அறிஞர்கள் ஒலிகளை ஆராயவும் வகைப்படுத்தவும் இவ்வாய்வு முறையைக் கையாண்டனர். மரபிலக்கணங்களில் எழுத்து களுக்கும் ஒலிகளுக்கும் இடையேயிருந்த மயக்க நிலையும், எழுத்து களின் எண்ணிக்கைக்கும் ஒலிகளின் எண்ணிக்கைகளுக்கு மிடையே நிலவிவந்த மயக்க நிலையும் இவ்வாய்வு முறையால் தெளிய வாய்ப்பேற் பட்டது. பேச்சுறுப்புகளின் அமைப்பையும் அவற்றின் தொழிலையும் அளவு நிலைகளாகக் கொண்டு, ஒலிகளின் பிறப்பும், அவை பிறக்கும் முறையின் அடிப்படையில் வகைமைப்பாடும் ஆராயப்பட்டு வந்தன.

ஒலியுறுப்புகளிலிருந்து ஒலிகள் பிறப்பதை அடிப்படையாகக் கொண்டு ஒலிகளின் இயல்புகளை விளக்குவதே 'ஒலிப்பியலாகும். ஒலியுறுப்புகளின் அளவு முதலிய சில தன்மைகள், ஒருவருக்கொருவர் வேறுபட்டாலும் அவை பிறப்பிக்கும் ஒலிகளில் அடிப்படை மாற்றம் எதுவும் இல்லை.

இவ்வாய்வு முறையில் சில குறைகள் இருந்தன : (1) சில ஒலிகள் ஒன்றோடொன்று குழப்பமாக இருந்தன. இக்குழப்பம் ஏன் என்பதற்கு இவ்வாய்வு முறையில் சரியான விளக்கம் கிடைக்கவில்லை.

(2) சில ஒலிகள் இன்ன இடத்தில்தான் பிறக்கின்றன என்று சரியாக வரையறுக்க முடியவில்லை அதனால் மொழியியல் அறிஞர்கள் இவ்வணுகுமுறையைக் கைவிட்டனர்.

2. ஒலியியக்கவியல் அல்லது அலை ஒலியியல்

நாம் அன்றாடம் பல ஒலிகளைக் கேட்கின்றோம். இவற்றுள் ஓர் ஒலியை மற்றொரு ஒலியைப் போல் கேட்பதில்லை. ஓர் ஒலியை மற்றொரு ஒலியிலிருந்து வேறாக நாம் கேட்டுணர்வதற்கு முதன்மைக் காரணமாக அமைவது அதன் ஒலியியக்க அமைப்பாகும். ஒலிகளின் இவ்வொலியியக்க அமைப்பை ஒலியியக்கவியல் ஆராய்கிறது. ஆசிலோகிராப் **(Oscillo Graph)** ஸ்பெக்ட்ரோகிராப் **(Spectrograph)** முதலிய பலவகை மின்னணுக் கருவிகளைப் பயன்படுத்திப் பேச்சாகிய ஒலி, அலைத் தொடரில் அடங்கியுள்ள பல்வேறு அதிர்வெண்களையும் **(frequencies)** அவற்றின் வீச்சுகளையும் **(Amptitudes)** பிரித்தறிந்து ஆராய்வது அலை ஒலியியலாகும். இதன்படி குறிப்பிட்ட சில

அதிர்வெண்களில் ஒலியலைகளைத் தோற்றுவித்து, அவற்றைத் தகுந்த முறையில் இணைத்துச் செயற்கைப் பேச்சை உருவாக்க முடிகிறது.

ஒலியியக்கவியலின் வளர்ச்சி, ஒலிப்பியல் ஆய்வு முறையில் தெளிவு பெறாத சில சிக்கல்களுக்குத் தீர்வு கண்டதோடு நின்று விட்டது, இவ்வாய்வினால் சில உண்மைகள் தெளிவாகியுள்ளன.

(1) பேச்சு என்பது ஒன்றன்பின் ஒன்றாக வரும் தனி ஒலிகளின் வரிசை அன்று என்னும் உண்மை உறுதிப்பட்டது.

(2) உயிரொலிகளைப் பொறுத்தவரை முன்னுயிர், பின்னுயிர், இதழ்குவி உயிர், இதழ்விரி உயிர் போன்ற பாகுபாடுகளுக்கு அடிப்படை உண்டு என்பது கண்டறியப்பட்டது.

(3) மெய்யொலிகளின் வேறுபாடுகளுக்கு அடிப்படை பிறப்பிட வேறுபாடுகள் அல்ல. ஒலியலையின் சூழ்நிலை வேறுபாடும் மாறுபடும் இயல்புமே அவ்வேறுபாடு களுக்குக் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாராய்ச்சி இயற்பியலையும் **(Physics)** கணிதத்தையும் சார்ந்துள்ளது. மொழியியலாரில் சிலர், இது மொழியியலின் ஒரு துறையாகாது என்றும் அறிவியலைச் சார்ந்தது என்றும் கூறுவர்.

3. ஒலியுணர்வியல் அல்லது கேட்பொலியியல்

இவ்வாய்வு முறையில், ஒலிகளை ஒலியாராய்ச்சியாளன் கேட்கும் நிலையையும் அறிந்துணரும் வகையையும் ஆதாரமாகக் கொண்டு ஆராயப்படுகின்றன. ஒலியாராய்ச்சியில் ஒலிப்பியலும், ஒலியியக்க வியலும் வரவேற்கப்பட்ட அளவிற்கு ஒலியுணர்வியல் வரவேற்கப்பட வில்லை. கேட்பவன் ஓர் இயந்திரம் போல் ஒலியலைகளைப் பெற்று அவற்றைக் கொண்டே பேச்சினைப் புரிந்து கொள்கிறான் என்று ஒரு காலத்தில் சிலர் நம்பினர். அந்நம்பிக்கை தவறானது என்று இக்கால ஆய்வாளர்கள் நிலைநாட்டியுள்ளனர். ஒலிகளின் பௌதிகத் தன்மை களை மட்டுமே வைத்துக் கொண்டு ஒருவன் மற்றொருவனுடைய பேச்சினைக் கேட்டுப் புரிந்து கொள்வது இல்லை என்றும் தானும் அம்மொழியைப் பேசுபவன் என்ற நிலையில் ஒலிகளின் வரன்முறை போன்ற சில ஒழுங்கு முறைகளைத் தெரிந்து வைத்திருப்பதனாலேயே அவன் மற்றவனுடைய பேச்சினைக் கேட்டுப் புரிந்து கொள்கிறான் என்றும் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.



ஒலிகளை ஆராயும் ஒலிப்பியல் முறையில், மனிதப் பேச்சுறுப்புகள், ஒலிகளைத் தோற்றுவிக்கும் நுட்பத்தின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன. மனிதப் பேச்சுறுப்புகள் அனைத்தும் அமைப்பிலும் ஓரளவு அசைவிலும் ஒன்றாக இருப்பதால் ஒலிகளை ஆராய்வதும் வகைப்படுத்துவதும் இம்முறையில் உடற்கூற்றியல் நோக்கில் அமைகின்றது என்பர். இதனால் ஒலிப்பியலை உடற்கூற்று ஒலிப்பியல் **(Physiological Phonetics)** என உரைப்பர்.

மொழியியல் பேச்சின் அடிப்படையாக இருப்பது பேச்சொலிகளேநுரையீரல் முதல் உதடுவரை உள்ள உறுப்புகளின் இயக்கங்களே பேச்சொலிகளைத் தோற்றுவிக்கின்றன. ஒலியுறுப்புகள் என்னும் பெயர் நுரையீரல் முதல் உதடு வரை உள்ள உறுப்புகளையும் அவற்றை இயக்கும் தசைகளையும் குறிக்கிறது இவ்வுடற் பகுதியைப் பேச்சுப் பாதை (Speech Track) என்று அழைப்பதும் உண்டு.

மூச்சுக் காற்றைத் தடுத்து நிறுத்துவதனாலோ வேறு வகையில் மாற்றுவதனாலோ பேச்சொலிகள் பிறக்கின்றன. வெளியிடுவது

(Egressive) உள்ளிழுப்பது (Ingressive) என இரண்டு வகையாக மூச்சுக் காற்றைப் பிரிக்கலாம். பெரும்பாலும் வெளிவிடும் காற்றே பேச்சொலிகள் பிறக்கக் காரணமாகின்றன.

ஒலியுறுப்புகளைக் காற்றறைகள், ஒலியெழுப்பிகள், என்று இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். நெஞ்சு, தொண்டை, வாய், மூக்கு என்பவை காற்றறைகள். பல், இதழ், நா, அண்ணம் என்பவை ஒலியெழுப்பிகள் (Articulator) ஆகும்.

பேச்சொலியின் உடலியக்கவியல்

பேச்சொலியை எழுப்பும் பணியில், வயிற்றிலிருந்து தலைவரை உள்ள பெரும்பாலான உறுப்புகள் ஈடுபடுகின்றன. இவ்வுறுப்புகளின் இயக்கத்தைப் 'பேச்சொலியின் உடலியக்கவியல்' (Physiology of Speech) என்று கூறுவர் இவ்வுறுப்புகளை உடம்பில் உள்ள உறுப்பு, தொண்டையில் உள்ள உறுப்பு, தலையில் உள்ள உறுப்பு என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இவையனைத்தும் தம்முள் ஒன்று சேர்ந்து இயங்கு ஒலிகளை உருவாக்குகின்றன. இவ்வுறுப்புகளைப் 'பேச்சொலிப்பொறி' என்றும் அழைப்பர். இவை முறையே உயிர்த்தல், (Respiration) குரல் எழுப்புதல் (Voicing) ஒலித்தல் (Articulation) ஆகிய தொழில்கள் நடைபெற உதவுகின்றன.

''உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கும்
அண்ணமு முளப்பட வெண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னாக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான'' (தொல், எழுத்து. இளம். 83)

எனத் தொல்காப்பியர் ஒலியுறுப்புகளின் நிலையையும் அவை செயற்படுமாற்றையும் விவரிக்கிறார். நெஞ்சறை, உந்தியின் அடிப்படைத் தொழிலால் இயங்கி உயிர்க்கின்றது. உயிர்த்தல் தொழிலால் நுரையீரலில் உள்ள காற்று, மேலெழுந்து மிடற்றில் நிலைத்துக் குரல் எழுப்புகின்றது. குரல்வளை வழியே வெளிப்படும் அக்காற்று மாற்றம் எய்திப் பேச்சொலிகளை உண்டாக்குகிறது என்று தொல்காப்பியர் விளக்கியுள்ளார். இந்நூற்பாவில் நெஞ்சு, மிடறு ஆகியவற்றைத் தொல்காப்பியர் ஒலியுறுப்பாகக் கொண்டதில் எவருக்கும் ஐயம் எழவில்லை. ஆனால் அவற்றுடன் தலையையும் ஓர் ஒலியுறுப்பாகக் கொண்டுள்ளமை பலருக்கும் ஒரு புதிராகவே இருந்து வருகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் இதைப்பற்றி விளக்காமலே சென்றனர். பிற்கால இலக்கண ஆசிரியர்கள் வடமொழி மதம் பற்றித்

தலையை உச்சி என்று தவறாக முடிவு செய்துள்ளார்கள். (நன் 74) நெஞ்சு, மிடறு என்பவை முறையே ஒலிகளை உண்டாக்கும் மூச்சுக் காற்றின் பிறப்பிடமாகிய நுரையீரல்களையும் (Lungs) அக்காற்று செல்லும் வழியில் அமைந்துள்ள குரல்வளை, குரல்வளை மடல்கள் ஆகிய ஒலியுறுப்புகளையும் குறித்து நிற்கின்றன. அவ்வாறே தலை என்பது மூச்சுக்காற்று செல்லும் மேற்றொண்டை, வாயறை, மூக்கறை ஆகியவற்றைக் குறித்து நிற்கின்றது. எனவே தொல்காப்பியர் தொண்டைக்கு மேலே உள்ள காற்றறைகளைத் தலை என்று கூறியுள்ளார். பேச்சொலிகள் உண்டாக்கும் உறுப்புகளை நெஞ்சு, மிடறு, தலை என்று முறையே உயிர்த்தல், குரல் எழுப்புதல், ஒலித்தல் ஆகிய தொழிலுக்கு ஏற்ப மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார் என்பதை நினைத்து மொழியியலார் வியப்புறுகின்றனர். தலையில் உள்ள காற்றறை போன்றவற்றைத் தலை என்று குறிப்பதையும் பேச்சொலி உறுப்புகளை அவற்றின் தொழிலுக்கு ஏற்ப, மூன்றாகப் பிரிப்பதையும் ஆபர்கிராம்பி போன்ற ஒலியியல் அறிஞர்கள் சிறப்பாகக் கருதுகின்றனர். (Elements of General Phonetics P. 21) இக்கூற்றின்படித் தொல்காப்பியரின் நூற்பா அமைந்துள்ளமை வியத்தற்குரியது.

பேச்சொலியின் ஒலியியக்கவியல்

பொருள்கள் அதிரும்போதும், காற்றறைகள் தூண்டப் பெற்று அவற்றில் உள்ள காற்றுத் துளைகள் அதிரும்போதும் உண்டாகும் சக்தி, நம்மைச் சூழ்ந்துள்ள காற்றில், விளைவிக்கும் மாற்றத்தை ஒலியலைகள் என்று கூறுவர். இவ்வலைகள் காற்றில் பரவி, செவிப்பறையைத் தாக்கும் போது அவற்றை ஒலிகளாக உணரமுடிகிறது.

பேச்சுக் குழலில் உள்ள ஒலி எழுப்பிகள், தம்முள் இயைந்து பேச்சுக் குழலின் வடிவத்தைப் பல விதத்தில் மாற்றி அமைப்பதோடு காற்றறைகளையும் பலவிதமாக அமையச் செய்கின்றன. பேச்சுக் குழலின் வடிவமைப்பு (Shape) கொள்ளளவு (Size) ஒலி உறுப்புகளின் அமைப்பு (Structure) ஆகியவற்றைப் பொறுத்தே அவற்றில் பிறக்கும் ஒலியலைகள் அமைகின்றன. இவ்வொலிகள் காற்றில் மிதந்து, செவிப்புலன்களை அடையும்போது அவை பலவிதமான ஒலிகளாக உணரப்படுகின்றன.

நுரையீரல்களினின்றும் முந்துற்றெழும் காற்று, பல், இதழ், நா, அண்ணம், குரல்வளை, மடல் ஆகிய ஒலியெழுப்பிகளால் வெவ்வேறு வடிவு, கொள்ளளவு, இயைபு என்ற அடிப்படையில் பலவிதமாக மாற்றி அமைக்கப்பட்ட அறைகளையுடைய மேற்றொண்டை, வாய், மூக்கு ஆகியவற்றின் இணைப்பால் ஆகிய பேச்சுக் குழலின் வழியே செல்லும் போது, அவ்வவ்வறையின் நிலைக்கு ஏற்ப, பேச்சொலியலைகள் பிறக்கின்றன என்று தொல்காப்பியர் கூறுகிறார். (தொல் : எழுத்து : 83)

தமிழொலிகளின் பிறப்பு விளக்கம்

மனிதனின் பேச்சுப் பொறி (Vocal apparatus) எண்ணிறந்த ஒலிகளை உண்டாக்க வல்லது. அவ்வொலிகள் ஒலியலைகளாகக் காற்றில் பரவி, மனிதனுடைய செவிப்பறையைத் தாக்கும்போது அவை செவிப்புலன்களால் ஒலிகளாக உணரப்படுகின்றன. மனிதன் தன் உடலுறுப்புகளைக் கொண்டு உருவாக்கும் பேச்சொலிகளின் பிறப்பைப் பற்றி ஒலிப்பியலிலும் (Articulatory Phonetics) அவை காற்றில் பரவும் போது உண்டாகும் ஒலியலைகளைப் பற்றி ஒலியியக்கவியலிலும் (Acoustic Phonetics) அவற்றைக் கேட்டறியும் விதம் பற்றி ஒலியுணர்வியலிலும் (Auditory Phonetics) ஆராய்வர். இம்மூன்றனுள் ஏதேனும் ஒன்றை மட்டுமே பயன்படுத்தி மொழியொலிகளை முழுமையாக ஆராயலாம்.

தொல்காப்பியர் ஒலிப்பியல், ஒலியியக்கவியல் ஆகிய இரண்டையுமே அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழியின் ஒலியியலை விளக்கியுள்ளார். அங்காப்பு, அண்பல் முதல், நாவிளிம்பு, இதழ்குவிவு போன்ற முயற்சிகளை ஒலிப்பியல் அடிப்படையிலும், உயிர், குரல் (voice) உயிர்ப்பொலி (approximant) போன்ற ஒலிகளை ஒலியியக்கவியல் அடிப்படையிலும் விளக்குகின்றார்.

தொல்காப்பியர் ஒலியன்களைப் பற்றியே பொதுவாகக் கூறியுள்ள போதிலும் ஒலிகளைப் பற்றிய முழு விளக்கத்தை உய்த்துணரும் நிலையில் நூற்பாக்களை அமைத்துள்ளார். தமிழொலிகளைப் பற்றிப் பேசும் வகையான் ஒலியியற் பொதுக் கொள்கையையும் (general phonetic theory) விளக்கியுள்ளார். அவர் ஒலிக்கூறுகளைப்பற்றிய (phonetic feature) உண்மைகளை இருகூற்றுத்தன்மை வாயிலாக அமைப்பதன் மூலம் தமிழொலிகளின் முழுப்பிறப்பு முறையையும் தெளிவு படுத்தியுள்ளமை போற்றத்தக்கது.

உயிரொலி

நுரையீரலிலிருந்து காற்று வெளிப்படும் போது ஒலியுறுப்புகளால் எவ்வகைத் தடையும் இன்றி வெளி வருமாயின் அது உயிரொலி என்று கருதப்படும். தொல்காப்பியர் உயிரொலிகளைப் பற்றி (54-56; 84-88) ஆகிய நூற்பாக்களில் விளக்கியுள்ளார்.

உயிரொலிகள், 'தந்நிலை திரியா மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும்' என்றதனால் எல்லா உயிர்களும் குரலொலி உடையன. அவை வாயறையில் பலம் பெற்றுத் திரிபடைகின்றன. திரிபுஇல் உயிர்கள் இசை வேறுபாடற்றவை என்பதை அறியமுடிகிறது.

உயிர்களை அங்காப்புயிர்கள், முன்னுயிர், குவியுயிர் என மூன்றாகப் பகுத்தனர்.

அங்காப்புயிர்கள்: (அ,ஆ)

அங்காந்த நிலையிலும், நா முன்னும் பின்னும் தாழ்ந்து நடுவில் உயர்ந்த நிலையிலும், இதழ் குவியாது பரந்த நிலையிலும் இவ்வுயிர்கள் பிறக்கின்றன. 'அவற்றுள், அ,ஆ வாயிரண் டங்காந் தியலும் '(தொல். எழுத்து . இளம். 85) என்பார் தொல்காப்பியர்.

முன்னுயிர் : (இ,ஈ,எ,ஏ,)

''அண்பல் முதனா விளிம்புற லுடைய'' (தொல்: எழுத்து. 86) என்பார் தொல்காப்பியர் இவ்வுயிர்கள் அங்காப்புடன் கீழ்த்தாடை, மேல்தாடையுடன் நெருங்கி இருக்கும்போது நாவினது முன்விளிம்பு (நாவின் முன்பக்க ஓரம்) கீழ்முன்பல்லின் ஈற்றைத் தொட்ட நிலையில் (அண்பல் முதனா விளிம்புற) அமைந்தும், இதழ் விரிந்த நிலையில் அமைந்தும் இருக்கும்போது பிறக்கின்றன.

குவியுயிர் : (உ,ஊ,ஒ,ஓ.)

உ,ஊ,ஒ,ஓ ஆகிய உயிர்கள் இதழ் குவிந்தியலும் என்பர் தொல்காப்பியர். (தொல் 87) இந்நான்கு எழுத்துகளும் வாய் பெரிதும் மூடி, சிறிதே திறந்த நிலையில் அமைந்தும் நாவின் பின்பகுதி உயர்ந்தும் இதழ்கள் குவிந்தும் உள்ள நிலையில் பிறக்கின்றன.

ஐ,ஔ ஆகிய ஈருயிர்இரண்டும் முறையே இதழ் குவியாமலும் இதழ் குவிந்தும் பிறக்கின்றன. இவற்றுள் முதலுயிராகிய 'அ' வின் பிறப்பிடம் இரண்டாவது உயிராகிய இ,உ ஆகியவற்றிற்கு ஏற்பத் தன் இயல்பான பிறப்பிடத்திநின்றும் முன்னும் பின்னுமாகச் சற்றுத்தள்ளி அமைகின்றது. எனவேதான் தொல்காப்பியர் 'ஐ' யையும் 'ஔ'வையும் முறையே முன்னுயிர், பின்னுயிர் ஆகிய வரிசைகளுடன் சேர்த்தார்.

வெவ்வேறு உயிரொலிகளை உண்டாக்க, வாயறையில் நா மூச்சுக்காற்று செல்லும் வழியின் உயரத்தைக் குறைக்குமாறு உயர்வதை எழுச்சி (Height) என்று கூறுவர் இ,உ என்ற இரண்டும் மேல்உயிர் (High) எ,ஒ ஆகியவை நடுஉயிர் (Mid) அ. கீழ் உயிர் (Low). ஐ,ஔ ஆகிய இரண்டு ஈருயிர்களும் நா கீழ்நிலையில் இருக்கும்போது தொடங்கி மேலெழுந்து நிற்கும் வரை ஒலிக்கின்றன. தொல்காப்பியர் இவ்வுயிர்கள் ஒலிக்கும் போது நிகழும் நாவெழுச்சி பற்றி வெளிப்படையாகக் கூறவில்லை யென்றாலும் 'தத்தம் திரிபே' சிறிய என்றதனால் நாவின் எழுச்சி, முந்துறுநிலை ஆகிய அடிப்படையில் அனைத்து உயிர்களும் வேறுபடுதல் போல இவையும் நாவின் ஒரு நிலையில் தொடங்கி வேறொரு நிலையில் முடிகின்றன.

ஒலியியல் வல்லுநரும் உலக ஒலியியற் கழகத்தின் அலுவலராய்ப் பணியாற்றியவரும் ஆகிய டேனியல் ஜோன்ஸ் (Daniel Jones) என்பவர்

அடிப்படை உயிர்கள் (Credinel vowels) என்னும் கோட்பாட்டினை வைத்துக் கொண்டு உயிரொலிகளின் பிறப்பினை விளக்கியுள்ளார். அவரது பாகுபாட்டினைக் காட்டும் படம் உயிர் முக்கோணம் எனப்படும்.





மெய்யொலி

ஒலி உறுப்புகளில் உரசுதல், தடுத்து வெளியிடுதல் போன்றவை நிகழ்ந்தால் அது மெய்யொலி எனப்படும். மெய்யொலிகளின் பிறப்பினை ஒலிப்பிடமும், ஒலிப்பு முறையும் கொண்டு விளக்கலாம்.

1. ஈரிதழ் (Bilabial) (2) பல்லிதழ் (Labio dental) 3. பல் (Dental) 4. நுனியண்ணம் (Alveolar) 5 நுனியண்ணப் பின்புறம். (Post Alveolar) 6. இடையண்ணம் (Palatal) 7. கடையண்ணம் (Velar) 8.உள்நாக்கு (Uvula) 9.முன்தொண்டை (Pharyngeel) 10. ஒலித்தசை வாயில் (Gloltal) என்ற பத்து இடங்களில் மெய்யொலிகள் பிறப்பதாக மொழிநூலார் கூறுவர். மெய்யொலிகளைத் தடையொலி, மூக்கொலி, வருடொலி, மருங்கொலி, உரசொலி எனப்பிரித்துள்ளனர்.

தடையொலி அல்லது அடைப்பொலி அல்லது வெடிப்பொலி (க்,ச்,ட்,த்,ப்,ற்)

காற்று, வாய் வழியாகச் செல்லும்போது எங்கேயாவது ஓரிடத்தில், ஏதாவது ஓர் ஒலிப்பானால் சிறிது நேரம் அடைபட்டு வெளிவரலாம். அப்படிப் பிறக்கும் ஒலிகளே அடைப்பொலிகள் ஆகும்.

சிறிது நேரம் தங்குவதால் காற்றில் அழுத்தம் கூடி, வெளிப்படும் போது வெடிபோன்ற ஒலி எழுகிறது.

சில அடைப்பொலிகள் தோன்றும்போது, ஒரே இடத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் அடைப்புகள் நிகழ்வது உண்டு இதனடிப்படையில் அடைப்பொலிகளை இருவகையாகப் பிரிப்பார்கள் ஓரிடத்தில் அடைப்பு ஏற்படுவது 'தனி அடைப்பொலி' என்றும் ஈரிடத்தில் அடைப்பு ஏற்படுவதைக் 'கூட்டு அடைப்பொலி' என்றும் கூறுவார்கள்.

தொல்காப்பியர், மெய்யொலிகளை வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்று மூவகையாகப் பகுத்துள்ளார் வல்லினமும் மெல்லினமும் ஒரே இடத்தில் பிறப்பதாக அவர் குறித்துள்ளார் ''அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின '' என்று அவர் கூறுகிறார் (தொல், எழுத்து. 92)

''ககார ஙகார முதனா வண்ணம்'' (தொல், எழு. இளம். 89)

''சகார ஞகார மிடைநா வண்ணம்'' (தொல், எழு. இளம். 90)

''டகார ணகார நுனிநா வண்ணம்'' (தொல், எழு. இளம். 91)

''அணரி நுனிநா வண்ண மொற்ற
றஃகான் னஃகா னாயிரண்டும் பிறக்கும்'' (தொல், எழு. இளம். 94)

'' இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்'' (தொல், எழு. இளம். 97)

என்று தடையொலிகளையும் (க்,ச்,ட்,த்,ப்,ற்) மூக்கொலிகளையும் (ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்) இணைத்தே கூறுகிறார்

முதல்நா (dorsum) இடைநா (centre) நுனிநா (Blade or tip) ஆகிய இயங்குறுப்புகள் எழுச்சி பெற்று முதலண்ணம் (Soft palate) இடையண்ணம் (Hard Palate) அண்ணம் (dome) ஆகியவற்றோடு இணைவதன் மூலம் ஏற்படும் காற்றறைகளைக் கொண்டு க்,ங்,ச்,ஞ்,ட்,ண் என்பவை பிறக்கின்றன.

நுனிநா பரந்த நிலையில் நாநுனி பரந்து, அண்ணத்தோடு ஒட்டிய மேல்வரிசை முன்பற்களின் உட்புற அடிப்பகுதியை நன்கு அழுத்தி உறுவதால் (மெய்யுற ஒற்ற) த்,ந் என்பவை பிறக்கின்றன. (தொல் 98) இதைத் தொல்காப்பியர்,

''அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்குந் தகார நகாரம்'' (தொல், எழு. இளம். 93)

என்று குறிப்பிடுகிறார்.

நுனிநா குவிந்து கூரிய முனையோடு (அணரி நுனிநா) அமைநது, நுனி அண்ணத்தை மென்மையாய்த் தொட (ஒற்ற) ற்,ன் என்ற இரு ஒலிகளும் பிறக்கின்றன. (94) இதழ்கள் ஒன்றோடொன்று மென்மையாய் இயையும்போது ப்,ம் ஆகிய இரு ஒலிகளும் பிறக்கின்றன. (97)

மூக்கொலிகள் (Nasals) (ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்): மூக்கொலியும் ஒருவகையில் தடையொலி போன்றதே. இவை மூன்று நிலைகளில் பிறக்கின்றன.

1. மூச்சு மூக்கறையினுள் செல்வதற்கு முன்னால் வாயறையில் அடைபடுகிறது.
2. அடைபட்ட மூச்சு, மூக்கறையினுள் செல்லும்படியாகக் கடையண்ணம் கீழ் நோக்கித் தாழ்ந்து மூக்கறை வாயிலைத் திறக்கும். அங்கே மூச்சு, மூக்கொலியாக ஒலியியக்கம் பெறுகிறது.
3. மூக்கறையினுள் ஒலியூக்கம் பெறுகிற மூச்சு, மூக்குத துளைகள் வழியாக வெளியேறுகிறது.

தடையொலிகளை உண்டாக்க உதவும் ஒலியுறுப்புகளும் வாயறையில் உண்டாகும் முயற்சியுமே தடையொலிகளோடொத்த மூக்கொலிகளை உண்டாக்கப் பயன்படுகின்றன. அதனால்தான் வல்லெழுத்துக்கும் அதனோடொத்த மெல்லெழுத்துக்கும் தொல்காப்பியர் ஒரே வகைப் பிறப்பாக்கம் கூறியுள்ளார். (89-91, 93, 94, 97) தொல்காப்பியரும்,

''மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்'' (தொல், எழு. இளம் 100)

என்று கூறுகிறார். மூக்கொலி, பிறப்பாக்க நிலையில் தடையொலி போன்றே அமையினும் வாயறையில் ஒலியுறுப்புகளின் அடைப்பால் உண்டாகும் ஒலியலை, மூக்கறையில் வலிமை பெற்று, (யாப்புறத்) தடையொலியினின்றும் வேறுபட்டு மூக்கொலியாக உணரப்படுகின்றது என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

வருடொலி : (FLAP) (ர்,ழ்)

இயங்குறுப்பாகிய நாநுனி குறுகி மேலெழும்பி உள்நோக்கி வளைந்து பின் விரைந்து விழும்போது இயங்கா உறுப்பில் வேகமாக மோதுவதால் எழும் ஒலியே வருடொலியாகும்.

''நுனிநாஅணரி அண்ணம் வருட
ரகார ழகார மாயிரண்டும் பிறக்கும் '' (தொல், எழு. இளம். 95)

ர்,ழ் ஆகியவற்றைத் தொல்காப்பியர் வருடொலி என்று கூறினும் இவை தற்போது அவ்வாறு உச்சரிக்கப்படுவதில்லை.

மருங்கொலிகள் : (LATERAL) (ல்,ள்)

மூச்சுக்காற்று நடுவே தடுக்கப் பெற்று, ஓர் ஒலிப்பானின் ஒரு பக்கமாகவோ இரு பக்கமாகவோ வெளிப்படும்போது பிறக்கும்

ஒலிகளே மருங்கொலிகள் ஆகும். (மருங்கு-பக்கம்) இவ்வொலிகள் பல், நுனியண்ணம், வளைநா, இடையண்ணம் ஆகிய நான்கு இடங்களிலேயே பிறக்கின்றன. மருங்கொலியின் இயல்பைத் தொல்காப்பியர் நாவிளிம்பு வீங்கி என்கின்றார்.

''நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற
வாவயின் னண்ண மொற்றவும் வருடவும்
லகார ளகார மாயிரண்டும் பிறக்கும் '' (தொல், எழு. இளம். 96)

என்கிறார்.

உரசொலி : [FRICATIVE) (ய்,வ்)

ஒலியெழுப்பிகள் தம்முள் இயைந்து உயரப் போக்கிலோ (Vertical) படுக்கைப் போக்கிலோ(Horizontal) மிகவும் குறுகிய இடைவெளியை உண்டாக்கும்போது அதன் வழியே அடைப்பட்ட மூச்சுக் காற்று உரசிக் கொண்டு செல்லும்போது உரசொலிகள் உண்டாகின்றன. தமிழில் உள்ள ய்,வ் என்ற இவ்விரு ஒலிகளும் ஒலியெழுப்பிகளின் படுக்கைப் போக்கில் **அமைந்து** இடைவெளியின் மூலம் பிறப்பவை. இவை ஒலிநூல்களில் கூறப்படும் **உர**சொலிகளை விட உராய்வு குறைந்தவை. இவ்வகை உரசொலி**களைப்** பிறப்பாக்கத்தால் சிறிதளவு உராய்வுடைய உயிரொலிகள் **என்னும்** பொருள்பட உயிர்ப் பொலிகள் என்று ஒலிநூலார் கூறுவர்.

ய் என்னும் ஒலி மிடற்றெழு வளியிசையால் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

''அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்'' (தொல், எழு. இளம். 99)

என்பர் தொல்காப்பியர். இந்த அசையியல் உயிர் மொழியில் பயின்று வரும்போது மெய்யொலிகளைப் போன்று செயற்படுவதால் தொல்காப்பியர் இதனை மெய்யெழுத்துகளுடன் சேர்த்துள்ளார்.

மிடற்றில் குரல்வளை மடல்களின் அதிர்வால் பிறக்கும் குரலொலியோடு கூடிய மூச்சுக் காற்று, நாநுனி, அண்ணம் நண்ணிய முன்பல்லை உற்றிருக்க, நுனிநா உயர்ந்து மேல்நுனி அண்ணத்தோடு நெருங்குவதால் உண்டாகும். வாயறையில் தடைப்பட்ட காற்றில் அழுத்தம் மிகுந்து இயங்கு உறுப்பிற்கும் இயங்கா உறுப்பிற்கும் இடைப்பட்ட குறுகிய வழியில் செறிந்து அடைத்து உரசிக் கொண்டு வெளிப்படுகின்றது. இவ்வகை முயற்சியால் பிறக்கும் ஒலியே யகரமெய்யாகும்.

'வ்' வின் பிறப்பாக்கத்தைப் பற்றிய முழு விவரத்தையும் தொல்: 42,54,55,56,99 ஆகிய நூற்பாக்கள் விளக்கும். அகர உயிரும் வகர மெய்யும் சேர்ந்த 'அவ்' என்னும் தொகுப்பு ஔ காரத்திற்கான மாற்றுரு என்று 56வது நூற்பா கூறுகிறது.

கீழிதழ் மேற்பல்லோடு நெருங்கிச் சிறு இடைவெளி விட்டமையும் போது இவ்வமைப்பிற்குப் பின்னால் வாயறையில் வந்து சேரும் மூச்சுக் காற்று இச்சிறு வழியின் மூலம் அடைத்துக் கொண்டு உராய்வுடன் செல்லும்போது 'வ்' பிறக்கிறது. இதனைப் 'பல்லிதழியைய வகாரம் பிறக்கும்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார. (தொல் எழுத்து.98)

தற்கால ஒலியியல் அறிஞர் யாவரும் கண்டு வியக்கும் வண்ணம் தொல்காப்பியர் மொழிகள் அனைத்திற்கும் பொதுவான ஒலியியல் கோட்பாடுகளைத் தமிழின் ஒலிகளை விளக்கும் நிலையில் தெளிவாகக் கூறியுள்ளார். ஒலியியலோடு தொடர்புடைய உடற்கூற்றியல், ஒலியியக்கவியல் ஆகியவை பற்றியும் அவர் நன்கு அறிந்திருக்கிறார் எனலாம்.

சந்தி

ஓர் உருபனில் உள்ள ஒலியன் உருபொலியன் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. ஓர் உருபனும் இன்னொரு உருபனும் சேரும்போது அந்த உருபன்களில் உள்ள ஒலியன்களில் மாற்றம் நிகழ்வது உண்டு. உருபொலியனில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்வது உருபொலியனியல். உருபொலியனைத் தமிழ் இலக்கணிகள் 'புணரியல்', 'சந்தி' எனக் குறிப்பர்.

புணர்ச்சி என்பது சேர்க்கையாகும். எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியர் நான்காவது இயலாகப் புணரியலைப் படைத்துள்ளார். அதற்குப் பின்வரும் இயல்களில் புணர்ச்சி மாற்றங்களைத் தெளிவாகக் கூறுகிறார். எனவே புணரியலைப் பிற இயல்களை விளக்கப் பின்னணியாகக் கொள்கிறார்.

நூன்மரபு, மொழிமரபு ஆகிய இயல்களில் உயிர்,மெய், உயிர்மெய், சார்பு பற்றிப் பேசும் தொல்காப்பியர் புணரியல் மொழிகளின் இறுதியும் முதலுமாக வருவன மெய்யும் உயிரும் என்ற இரண்டே (103,106) என்கிறார். இங்கு மொழி என்று தொல்காப்பியர் குறிப்பது சொல்லையே. இது போன்றே நிலை மொழியை 'நிறுத்த சொல்' என்றும் வருமொழியைக் ''குறித்து வரு கிளவி'' என்றும் கூறுவர்.

ஒரு வாக்கியத்திலோ தொடரிலோ சொற்களும் இலக்கண உறுப்புகளும் எத்துணை வரினும் புணர்ச்சி நிலைமொழி, வருமொழிக் கிடையே மட்டுமே நிகழும் என்ற அடிப்படையையும் முறையாகக் கூறுகிறார் தொல்காப்பியர் (107). இந்த இருமொழிப் புணர்ச்சியை எழுத்து வகையால் நான்காகப் பிரிக்கிறார். சொல், பெயர், வினை, இடை, உரி என்று நான்காகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் இடையும் உரியும் பெயர், வினைகளின் பகுதிகளாகவே வருகின்றன. எனவே புணர்ச்சி, பெயர், வினை இரண்டினிடையே தான் நிகழ்கிறது.

(அ) அதனால் தொல்காப்பியர் புணர்ச்சி, பெயரோடு பெயர், பெயரோடு வினை, வினையோடு பெயர், வினையொடு வினை என நான்கு வகையாய் இடம் பெறும் என்பார்.

(ஆ) இம்மொழிகள் தம்முள் புணரும்போது (1) இயல்புப் புணர்ச்சி. (2) மெய் பிறிதாதல் (அ) மிகுதல் (அ) குன்றல் என்று திரியும் (108,109) என்பார்.

(இ) பெயர் + வினை ஆகிய இரண்டு சொற்களின் இடையே நிகழும் புணர்ச்சியைத் தொடரியல் வழியும் விளக்குகிறார். (1.)வேற்றுமை குறித்த புணர்மொழி நிலை (2) அல்வழி புணர்மொழி நிலை எனப் பகுப்பார் தொல்காப்பியர். இந்த இரண்டின் அடிப்படையில் நிகழும் ஒலி மாற்றங்களை (148,149,311,315) நூற்பாக்கள் மூலம் விளக்குகின்றார். இது மாற்றிலக்கணக்காரரின் கோட்பாடுகளை ஒட்டியே அமைந்துள்ளது

வேற்றுமைப் புணர்ச்சியின் பகுதியாக, வேற்றுமையுருபுகள் (113) அவ்வுருபுகள் அடையும் சில புணர்ச்சி மாற்றங்கள் (114,115) அவ்வுருபுகள் வருமிடம் (116) அவ்வுருபுகளை ஏற்கும் பெயர்களின் வகைகள் (117) இப்புணர்ச்சியால் பெயர்களின் பின்னால் பொருந்தும் சாரியைகள் (118,119) ஆகியவற்றைப் பேசுகிறார் தொல்காப்பியர்.

சாரியைகளைப் புணரியலும் உருபியலும விரிவாக ஆராய்கின்றன. எனவே புணரியல் என்பது புணர்ச்சி மாற்றங்களுக்குரிய கருவிகளைக் கூறப் பயன்படுகின்றது என அறியலாம். இலக்கண உறுப்புகளின் ஒலி அமைப்பு இங்குதான் பேசப்படும். மாற்றிலக்கணக்காரர் இதனை முழுமையாக ஒப்புகின்றனர். அதனால் புணரியலில் வேற்றுமை உருபுகளாகிய இலக்கண உறுப்புகளும் சாரியைகளும் கூறப்பட்டன.

விதிமுறைகள்

புணரியல் முறைகளைச் சந்தி விதிகள் என மொழியியலார் கூறுவர். தொடரியல் செய்கைகளைக் கொண்டு இவ்விதிகள் அமைக்கப்படுகின்றன. சந்தி விதிகளை முறையாகப் பயன்படுத்தினால் ஒலி மாற்றங்கள் படிப்படியே நிகழ்வதைத் துல்லியமாக அறியமுடியும். உரிய வரிசையில், உரிய இடத்தில், குறிப்பிட்ட விதிகளை அமைப்பதன் மூலம் விதிகளின் எண்ணிக்கை குறைவதுடன் மாறுகொளக் கூறுதலும் நீங்குகின்றது.

தொல்காப்பியர் புணர்ச்சியைப் பற்றிப் பேசும் எல்லா இடங்களிலும் (இயல்களிலும்) புணர்ச்சி மாற்றங்களைக் கூற வரிசைப்படுத்தப்பட்ட விதிகளையே பயன்படுத்துகிறார். இதனால் விதிகளின் எண்ணிக்கை குறைகிறது.

குற்றியலுகரம், புணர்ச்சியில் உகரத்தினின்றும் வேறுபடும். அதனால் நெடிற்றொடர் உயிர்த்தொடர், வன்,மென்,இடை,ஆய்தத் தொடா உகரங்களை மீண்டும் மீண்டும் கூற வேண்டியிருக்கும் அதனால் குற்றியலுகரம் என ஓர் அடையாளம் கொடுத்தார். இதன் விளைவாக விதிகளின் எண்ணிக்கை குறைந்தது ஈற்றுக் குற்றியலுகரத்தை மெய்யீறுகளுடன் ஒப்பிடுவார் தொல்காப்பியர்.

''குற்றிய லுகரமு மற்றென மொழிப'' (தொல், எழு. இளம். 106)

என்று குறிப்பிடுவர். இதனால் மெய்யீறு, குற்றியலுகர ஈறு வந்தாலும் ஒரே புணர்ச்சி விதி போதுமானதாகிறது. இதனால் விதியின் எண்ணிக்கை மேலும் குறைகிறது

இவ்வாறே வேற்றுமை குறித்த புணர்மொழி நிலை, அல்வழிப் புணர்மொழி நிலை போன்ற தொடரியற் செய்திகளை அமைக்கவும் இவ்விதிகளைப் பயன்படுத்துவார். கோல், கல் என்ற நிலைமொழி களுடன் தீது, நன்று என்ற வருமொழிகள் புணரும்போது நிகழும் மாற்றங்களை விளக்க வரிசையாகத் தொல்காப்பியர் விதிகள் அமைத்திருக்கிறார்.

1. *''லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்*
தநவென வரிற் றனவா கும்மே'' (தொல், எழு. இளம். 150)

எனவரும். (கோல்+தீது-கோறீது)

இவ்வாறே, கோனன்று, பொன்றீது பொன்னன்று என வரும்.

2. நெடியதன் முன் ஒற்றுமெய் கெடும் என்ற முறையில்

''நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்
அறியத் தோன்றிய நெறியிய லென்ப'' (தொல், எழு. இளம். 161)

கோல்+தீது-கோறீது, கோனன்று

மண்+அகல் - மண்ணகல், பொன்னகல்

இந்த இரண்டாவது விதியை முதலிலேயே சுட்டியிருந்தால் ல்,ன் காரணமாக வருமொழி 'த்ந்' க்கு நிகழும் மாற்றங்களைக் கூற முடிந்திருக்காது. இதை மனத்தில் கொண்டே வருமொழித் திரிபை முதலில் கூறி நிலைமொழி கெடுதலை அடுத்துக் கூறினார் தொல் காப்பியர்.

3. கல்+தீது-கற்றீது போன்ற தொடருக்கு விதி கூறுவர்.

''லகார விறுதி னகார வியற்றே'' (தொல், எழு. இளம். 367)
கல்+குறை - கற்குறை

என்றும்

"மெல்லெழுத் தியையி னகார மாகும்" (தொல். எழு. இளம். 368)
கல்+நுனி- கன்னுனி

என்றும்

"அல்வழி யெல்லா முறழென மொழிப" (தொல். எழு. இளம். 369)
கல்+குறிது: கற்குறிது

என்றும் கூறியுள்ளார். இதன்மூலம் லகரம், னகரம் மெல்லெழுத்து வரும்போது னகரமாகும் என்றும் அல்வழியில் வல்லினம் வர நகரமாகவும், மெல்லினம் வர னகரமாகவும் மாறும் என்ற பொருளைத் தருவர். இதன்மூலம் புணர்ச்சி விதிகள் சிறந்த முறையில் வரிசைப்படுத்தப் பட்டிருப்பதை அறிய முடிகிறது.

புணர்ச்சி வகை

மொழியியலார் பார்வையில் அகச்சந்தி, புறச் சந்தி என்று பிரிக்கப்படுகிறது. எந்த மொழியிலும் அகச் சந்திகள் அந்த மொழியினரால் குழந்தைப் பருவத்திலிருந்தே மனப்பதிவால் கற்றுக் கொள்ளப்பட்டு விடுகின்றன. புறச் சந்திகள் மட்டும் தெளிவான விதி உணர்ச்சியோடுதான் விளங்கிக் கொள்ளப்படுகின்றன புறச் சந்தியைக் கற்பிக்கும்போது, விதிகளைத் தந்து விளக்கும்போது கற்பவர்க்கு இலக்கணக் கூறுகள், இலக்கண உறவுகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு தேவைப்படுகிறது.

அகச் சந்தி

அடிச் சொல்லும் விகுதியும் சேரும்போதும் சந்தி மாற்றங்கள் ஏற்படலாம். அல்லது ஒரு முழுச் சொல்லும் இன்னொரு முழுச் சொல்லும் சேரும்போதும் சந்தி மாற்றங்கள் ஏற்படலாம். ஓர் அடிச் சொல்லும் விகுதியும் சேரும்போது அந்தச் சொல்லுக்கு அகத்தே அமையும் சந்தி அகச் சந்தி.

ஊர்	+	இல்	-	ஊரில்
கல்	+	இல்	-	கல்லில்
தெரு	+	இல்	-	தெருவில்
நிலம்	+	இல்	-	நிலத்தில்

இந்தச் சந்தி ஒரு சொல்லின் அகத்தில் அமைந்திருப்பதால் அகச் சந்தியாயிற்று.

புறச்சந்தி

ஒரு முழுச் சொல்லும், இன்னொரு முழுச் சொல்லும் சேரும்போது அங்கே அமையும் சந்தி ஒரு சொல்லின் புறத்தே அமைவதனால் புறச்சந்தி என்று பெயர் பெறுகிறது.

இராமனை+ பார்- இராமனைப் பார்.

கண்ணனை+ கண்டான்- கண்ணனைக் கண்டான்

சொன்னதை+ சொல்- சொன்னதைச் சொல்

நீந்த+தெரியும- நீந்தத் தெரியும்

இங்கு க்,ச்,த்,ப் ஆகிய ஒற்றுகள் ஒரு சொல்லுக்குப் புறத்தே மிக்கு வந்தன.

தமிழ்ச் சந்தி விளக்கம்

தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கணத்தை மூவகையாகப் பகுத்து விளக்கினார்

புணர்ச்சி

எழுத்து வகையால் உருவாவது	சொல்வகையால் உருவாவது	தொடர் வகையால் உருவாவது
1.உயிர் + உயிர் தினை+அளவு	1 பெயர்+பெயர்	1.வேற்றுமைப் புணர்ச்சி
2.உயிர்+மெய் பனை+மரம்	2.பெயர்+வினை	2.அல்வழிப் புணர்ச்சி
3.மெய்+உயிர் ஆடல்+அழகு	3.வினை+பெயர்	
4. மெய்+மெய் தேன்+மொழி	4.வினை+வினை	

வேற்றுமைப் புணர்ச்சி : 1. உருபு புணர்ச்சி 2. பொருட்புணர்ச்சி என அமையும்.

அல்வழிப் புணர்ச்சி : 1. எழுவாய் 2. விளி 3. உம்மைத் தொகை 4. இருபெயரொட்டுப் பண்புத்தொகை 5.வினைமுற்று 6. பெயரெச்சம் 7.வினையெச்சம் 8. இடைச்சொல் 9. உரிச் சொல் 10.அடுக்கு 11.மரூஉ. என அமையும்.

சில சந்திகள்

தமிழ் மொழியில் அகச் சந்தியில் உயிரோடு உயிர் சேர்ந்து வருவதில்லை உயிரும் உயிரும் சேரும்போது அவற்றிடையே 'ய்' அல்லது ''வ்'' உடம்படு மெய்யாக அங்கு வந்து சேர்ந்து விடும்.

ய் கிளி+அழகு- கிளியழகு

புலி+ஐ-புலியை

தீ+அழகு-தீயழகு

பனை+அழகு-பனையழகு

வ் தெரு+இல்-தெருவில்
பூ+இல்- பூவில்

''இஈ ஐவழி யவ்வு மேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்'' (நன் . 162)

2. விகாரப் புணர்ச்சியைப் பற்றிக் கூறவந்த நன்னூலார்,

*''தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்று மொழிமூ விடத்து மாகும்''* (நன் .154)

தோன்றல்

1. நிலைமொழி இறுதியில் உயிர் நிற்க வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் அத்தகைய சூழலில் வல்லொற்று மிகும்.

   புலி+குட்டி-புலிக்குட்டி, தெரு+கூத்து-தெருக்கூத்து

2. நிலைமொழி இறுதியில் உயிரேயன்றி ய்,ர்,ழ் ஆகியவற்றுள் ஒன்று இறுதியில் நிற்கும் போதும் ஒற்று மிகும்.

   நாய்+குட்டி- நாய்க்குட்டி, தமிழ்+பணி- தமிழ்ப்பணி

   தேர்+கால்-தேர்க்கால்

3. வருமொழியில் வல்லினம் வரும்போது மட்டுமன்றி மெல்லினம் வரும் போதும் அந்த மெல்லின ஒற்று மிகுவது உண்டு.

   செய்+நன்றி- செய்ந்நன்றி
   மெய்+மொழி- மெய்ம்மொழி

திரிதல்

இரண்டு சொற்கள் அல்லது சொற்கூறுகள் சேரும் போது அவற்றில் உள்ள எழுத்து திரிந்து வேறொன்றாக மாறி விடுவதும் உண்டு. இது திரிபு (அல்) திரிதல் எனப்படும்.

எ.டு: கல்+தூண்- கற்றூண்
பொன்+குடம்-பொற்குடம்
மண்+குடம்- மட்குடம்.

கெடுதல்

நிலைமொழியும் வருமொழியும் சேரும் போது அவற்றில் உள்ள எழுத்துகளில் ஒன்றோ பலவோ மறைந்து விடுவது உண்டு. இது மறைதல் அல்லது கெடுதல் என்று கூறப்படுகிறது.

மரம்+வேர்- மரவேர்

அகம்+கை- அங்கை

சாரியை

வேற்றுமை, அல்வழி என்ற இருவகைப் புணர்ச்சிக்கும் எழுத்துப் பேறும் சாரியையும் உதவுகின்றன.

''வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை யாயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை'' (தொல், எழு. இளம். 113)

எழுத்துப் பேறு (எழுத்து மிகுதல்) யாப்புடையது. எழுத்தினால் சாரியை ஆனது. ஆகவே சாரியைக்கு முன்னர் எழுத்துப் பேற்றினைக் கூறினார் தொல்காப்பியர். நன்னூலார் எழுத்துப் பேறு என்று தனியே கூறவில்லை.

சாரியை, பொருள் பொதிந்த பழைய வேற்றுமை உருபுகளே என விரிவாக விளக்கியுள்ளார் கால்டுவெல். உரையாசிரியர்களும்'கெழு' வினை வேராகவும் கொள்ளத் தக்கது என்றும் வேற்றுமைப் பொருள் பயப்பன சாரியை என்றும் கூறினர்.

சாரியை தோன்றும் இடம்

சாரியை வேற்றுமைப் பொருளைப் பெற்றிருத்தலால் பெயரினைச் சார்ந்தே வரும் என்பார் தொல்காப்பியர்.

''அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே'' (தொல், எழு. இளம். 119)

என்றார். வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சிகட்குச் சாரியை உரியதென்றாலும் வேற்றுமைப் புணர்ச்சிக்கே சிறப்புரிமை உடையது எனக் கருதுவார். சாரியையும் உருபும் மயங்கும் மயக்கத்தை இருமொழிப் புணர்ச்சியாகவே கருதி, அவற்றின் இலக்கணத்தை உருபு புணரியலிலும் தொகை மரபியலிலும் கூறியுள்ளார்.

புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவும் சாரியைகளைப் புணரியலில் தொகுத்துக் கூறியுள்ளார்.

''இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி யுளப்படப் பிறவும்
அன்ன வென்ப சாரியை மொழியே'' (தொல், எழு. இளம். 119)

என்றார்.

இத்துடன் தம், நம், நும், உம், கெழு,ஏ,ஐ, ஞான்று என்பன சாரியைகளாம் என்று குறிப்பிடுவார் இளம்பூரணர். எல்லாச் சொற்களும் சாரியை பெற்றுத்தான் புணர்தல் வேண்டும் என்ற நியதியில்லை (உருபு203). சில சொற்கள் இரண்டு சாரியைகள் பெறுதலும் உண்டு.(மரத்தின் கண்)(அத்து, இன்) பவணந்தியார் ஒரு மொழியில் கூட சாரியை வரும் என்று எண்ணினார். சிறந்தன்று, பெறுகுவை

முதலியவற்றில் உள்ள அ.கு முதலியன விகுதிப் புணர்ச்சிக்கு உதவிய சாரியை என எண்ணினர். இதனால் பகுபதம் வினையாயின் புணர்ச்சிக்கண் வருவன சாரியை என்றும் பெயராயின் பெயரிடை நிலை என்றும் பெயரளவில் வேறுபாடு குறித்தார் பவணந்தியார்.

தொல்காப்பியர் தாம் கூறிய சாரியைகள் எல்லாம் இன்ன ஈற்றின் முன் வழங்கும் என விதி வகுத்து விளக்கினார். நூற்றுக் கணக்கிற் சொற்களை ஓதி சாரியைப் புணர்ச்சியை அமைத்துக் காட்டினார்.

தமிழ் இலக்கண நூல்களுக்கும் மொழியியலுக்கும் இடையில் புணரியல் பற்றிய நோக்கில் இரு வேறுபாடுகள் உள்ளன.

1. சொற்களின் சேர்க்கையால் மாற்றம் ஏற்படுகின்றது என்று இலக்கண நூல்கள் கூறும். மொழியியலோ தனிச் சொல்லின் எழுத்து மாற்றமே உருபொலியன் அல்லது சந்தி என்று கூறும்.
2. சொல்லின் மாற்று வடிவத்தை விளக்க உண்டாக்கும் வேறுபாடு என இலக்கணம் கூறும். மொழியியலோ ஒலிக்கட்டுப்பாடுடைய மாற்றம், சொல் கட்டுப்பாடு உடைய மாற்றம் என இருவகையாக்கிக் கொண்டு புணரியல், ஒலிக் கட்டுப்பாடு உடைய மாற்றத்தைக் குறிப்பது என உரைக்கும். மேற்கண்ட இரு மாற்றங்களைக் காண உதவும் உருபுகளையும் ஒலியன் அடிப்படை மாற்றுருபுகள், உருபின் அடிப்படை மாற்றுருபுகள் என இருவகையாகப் பிரிப்பர்.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் சொல்லின் மாற்று வடிவங்களை எழுத்து மாற்றமாகப் புணர்ச்சி விதி மூலமும் சொல்லதிகாரத்தில் மாற்றுருபுகளை அப்படியே தொகுத்தும் கூறுகிறார். வேற்றுமையுருபுகளும் சாரியைகளும் எழுத்தியலிலும் வினை விகுதிகளை சொல்லியலிலும் விளக்கியுள்ள மரபை இன்றும் தமிழ் நூல்கள் அவ்வாறே பின்பற்றுகின்றன. அதனால் அக நிலைச் சந்தி வளரவில்லை.

புணரியல் எழுத்தியலின் கூறாக இருந்தாலும் அது சொல், தொடரியல்களின் உறவுகளை அறிந்த பின்பே விளக்க முடியும். தமிழிலக்கணமும் புணர்ச்சியைச் சொல்லியல், தொடரியல் ஆகியவற்றின் அடிப்படையில் விளக்கியிருக்கும் சிறப்பு பாராட்டக் கூடியது. புணரியலை விளக்க மொழியமைப்பின் முழு அறிவும் தேவை என்ற மொழியியலார் கருத்தையே தமிழ் இலக்கண நூல்கள் கொண்டிருந்தன.

இச்சந்தி மாற்றங்கள் எல்லாம் செம்மையான முறையாக நிகழ்ந்தால்தான் தமிழில் ஏற்கத் தக்க செம்மையான முற்றுத் தொடர்

உருவாக முடியும். செந்தமிழில் பிழையின்றி எழுதவும் படிக்கவும் பேசவும் புரிந்து கொள்ளவும் தெளிவான சந்தி இலக்கண அறிவும் இன்றியமையாதது.

துணை நூற் பட்டியல்

இராசாராம் சு., ஒலியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1980.

இன்னாசி சூ., எழுத்தியல், அபிராமி பப்ளிகேஷன்ஸ், 1983.

இன்னாசி சூ , சொல்லியல், அபிராமி பப்ளிகேஷன்ஸ் 1985.

கோவிந்தசாமி மு., தொல்காப்பியப் பிறப்பியல் (கட்) தொல்காப்பியச் சிந்தனைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1978 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை சை. சி நூ. கழகம், 1969.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனா வரையர் உரை, சை. சி. நூ. கழகம், 1974.

தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சை.சி.நூ. கழகம், 1956.

பொற்கோ. பொது மொழியியல்.

முருகையன் க. தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை (கட்) தொல்காப்பியக் கட்டுரைகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், வளவன் சா பொது மொழியியல்.

இயல் ஏழு

தமிழ் உருபனியலும் தொடரியலும்

இயல் ஏழு

தமிழ் உருபனியலும் தொடரியலும்

I

தமிழில் உள்ள இலக்கணக் கூறுகளைப் பற்றிய அறிவு உருபனியல் ஆய்வுக்கு இன்றியமையாதது. இலக்கணக் கூறுகளைப் பெரும்பான்மை இலக்கணக் கூறு, சிறுபான்மை இலக்கணக் கூறு என இரண்டு வகையாகப் பிரிப்பர். பெயர், வினை முதலான வகைகளில் மிகுதியான சொற்கள் இருக்கக் காண்கிறோம். விகுதி, ஒட்டு முதலான வகைகளில் மிகக் குறைந்த அளவு சொற்களே இருக்கக் காண்கிறோம். மிகுதியான சொற்களைக் கொண்ட இலக்கணக் கூறுகள் பெரும்பான்மை இலக்கணக் கூறுகள் என்றும், குறைந்த அளவு எண்ணிக்கையில் சொற்களைக் கொண்ட இலக்கணக் கூறுகள் சிறுபான்மை இலக்கணக் கூறுகள் என்றும் பெயர் பெறுகின்றன. எளிமையும் தெளிவும் கருதிப் பெரும்பான்மை இலக்கணக் கூறுகளைத் தலைமை இலக்கணக் கூறுகள் என்றும், சிறு பான்மை இலக்கணக் கூறுகளைத் துணைமை இலக்கணக் கூறுகள் என்றும் இங்கே நாம் குறிக்க இருக்கின்றோம்.

தலைமை இலக்கணக் கூறுகள்

தமிழில் உள்ள தலைமை இலக்கணக் கூறுகளைச் சொல் வகைப்பாடு என்றும் குறிக்கலாம். பின்வருவனவற்றைத் தமிழில் உள்ள தலைமை இலக்கணக் கூறுகளாகக் காண்கிறோம்.

1.	பெயர்	2.	வினை
3.	பெயரடை	4.	வினையடை
5.	வல்லடை	6.	இடை

தமிழில் உள்ள சொற்களை மேற்கண்டவாறு ஆறாக வகைப்படுத்துகிறோம். இந்த ஆறும் தலைமை இலக்கணக் கூறுகளாகக் கொள்ளத் தக்கன. இவற்றை நாம் முறையே மேலும் சற்று விரிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

பெயர்

வேற்றுமை உருபுகளை ஏற்க வல்லதாகவும் ஆக, ஆன முதலான அடை விகுதிகளை ஏற்க வல்லதாகவும் எழுவாயாகவோ பயனிலையாகவோ செயற்பட வல்லதாகவும் பெயரடைகளால் தழுவப்படுவதாகவும் அமைவது பெயர்.

எ.டு. : கல், நெல், மரம், குளம், வளவன், பாவை.

கல் என்ற பெயர் கல்லை, கல்லால் என வேற்றுமை உருபுகளை ஏற்றது. கல் உடைந்தது என எழுவாயாகவும், அது கல் எனப் பயனிலை

யாகவும் வந்தது. பெரியகல், அழகானகல் எனப் பெயரடைகளால் தழுவப்பட்டது.

வினை

கால இடைநிலைகளை ஏற்க வல்லதாகவும் முற்றாகவும் எச்சமாகவும் செயற்பட வல்லதாகவும் வினை அடைகளால் தழுவப்படுவதாகவும் அமைவது வினை.

எ.டு. : ஆடு, பாடு, படி, போ, வா.

இந்தச் சொற்கள் ஆடினான், பாடினான், படித்தான், போனான், வந்தான் எனக் கால இடைநிலைகளை ஏற்றன. இவையே ஆடினான், பாடினான் என முற்றாகவும் ஆடிய, பாடிய எனப் பெயரெச்சமாகவும் ஆட, பாட என வினையெச்சமாகவும் வந்தன. வேகமாக ஆடினான். அழகாகப் பாடினான் என ஆடு, பாடு ஆகிய வினைகள் வினை அடைகளால் தழுவப்பட்டன.

பெயரடை

பெயருக்கு அடையாக வருவன பெயரடைகள்.

எ.டு. : உயரமான, ஆழமான.

உயரமான மரம், ஆழமான கிணறு ஆகிய தொடர்களில் உயரமான, ஆழமான என்பவை மரம், கிணறு ஆகிய பெயர்களுக்கு அடைகளாக வந்தன. அதாவது பெயரடைகள் பெயரைத் தழுவி நின்றன.

வினையடை

வினைக்கு அடையாக வருவன வினையடைகள்.

எ.டு. : அழகாக, வேகமாக.

அழகாகப் பாடினான், வேகமாக ஓடினான் ஆகிய தொடர்களில் அழகாக என்பதும் வேகமாக என்பதும் வினைகளுக்கு அடையாக நின்றன.

வல்லடை

பெயருக்கும் வினைக்கும் பெயரடைக்கும் வினையடைக்கும் அடையாக வரவல்ல கிளவிகள் வல்லடை என்று பெயர் பெறுகின்றன. எ.டு. : மிகவும், நிரம்ப, இருமடங்கு, மும்மடங்கு, பன்மடங்கு.

மிகவும் நீளம், மிகவும் அகலம், மிகவும் சுடுகிறது, மிகவும் வியர்க்கிறது, மிகவும் அழகான பாட்டு, மிகவும் வேகமாக ஓடினான். மிகவும் என்பது மேற்குறித்தவாறு பல்வேறு நிலைகளில் அடையாக வந்தது.

மேற்கண்ட காட்டுகளில் மிகவும் என்பது பெயருக்கும் வினைக்கும் பெயரடைக்கும் வினையடைக்கும் அடையாக வந்தமை காண்க.

இடை

தனக்கென்று அகராதிப் பொருள் இல்லாததாகவும் இலக்கணச் செயற்பாடு மட்டுமே கொண்டதாகவும் பெயர், வினை முதலான சொற்களைச் சார்ந்தே இயங்குவதாகவும் அமைந்தது இடைச் சொல் எனப்படும்.

ஐ, ஆல் முதலான வேற்றுமை உருபுகளையும் த், வ் முதலான கால இடைநிலைகளையும் ஆ, ஏ, ஓ, தான் முதலான கிளவிகளையும் இடைச் சொற்களுக்குக் காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

பெயர் : வரையறை

வேற்றுமை உருபுகளை ஏற்க வல்லதாகவும், எழுவாயாகச் செயற்பட வல்லதாகவும் உள்ள கிளவி பெயர் என்று சுட்டப் பெறும். பெயர்கள் ஆக, ஆன முதலான விகுதிக் கிளவிகளை ஏற்பதும் உண்டு: பயனிலையாக வருவதும் உண்டு.

எ.டு., நிலம், மரம், யானை.

இந்தச் சொற்கள் நிலத்தை, மரத்தை, யானையை என வேற்றுமை உருபுகளை ஏற்கும். நிலம் வலியது, மரம் வீழ்ந்தது, யானை வந்தது என அந்தச் சொற்கள் எழுவாயாகவும் வந்தன. கருப்பாக, கருப்பான என்பவற்றில் கருப்பு என்ற பெயர் ஆக, ஆன என்ற விகுதிகளை ஏற்றன. 'அது கருப்பு' என்பதில் கருப்பு என்பது பயனிலையாக வந்தது.

பெயர் வகை

இக்கால இலக்கியத் தமிழில் பெயர்கள் பின்வருமாறு ஆறு வகைப் பட்டனவாக அமைகின்றன.

1. ஆண்பாற் பெயர்
2. பெண்பாற் பெயர்
3. உயர்பாற் பெயர்
4. பலர்பாற் பெயர்
5. ஒன்றன்பாற் பெயர்
6. பலவின்பாற் பெயர்

இலக்கணச் செயற்பாட்டின் அடிப்படையில் பெயர்கள் இப்படி ஆறாக வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. முறையே இவற்றுக்கு எடுத்துக் காட்டுகள் வருமாறு:

கண்ணன், முருகன் முதலானவை ஆண்பாற்பெயர்கள்.

பாவை, கோதை முதலானவை பெண்பாற் பெயர்கள்.

ஆசிரியர், அமைச்சர் முதலானவை உயர்பாற் பெயர்கள்.

பெண்கள், மக்கள் முதலானவை பலர்பாற் பெயர்கள்.

மாடு, மரம் முதலானவை ஒன்றன்பாற் பெயர்கள்.

மாடுகள், மரங்கள் முதலானவை பலவின்பாற் பெயர்கள்.

இவை முழுத் தொடர்களில் செயற்படும் முறையைக் கவனியுங்கள். முற்று வினையின் வடிவங்கள் எழுவாய்க்கு ஏற்ப வேறுபடுகின்றன.

கண்ணன் வந்தான்

பாவை வந்தாள்

ஆசிரியர் வந்தார்

பெண்கள் வந்தார்கள்

மாடு வந்தது

மாடுகள் வந்தன

பெயர்கள் எண் விகுதி, வேற்றுமை உருபு, பின்னுருபு முதலானவற்றை ஏற்று வரும். எண் விகுதி முதலானவை பெயரோடு வரும்போது மேலே குறிப்பிட்ட அதே வரிசை முறையில் தோன்றும்.

எண் விகுதி

கள் விகுதி பன்மை குறித்து வரும். மார் விகுதி சில குறிப்பிட்ட உயர்திணைப் பெயர்களோடு மட்டுமே வரும்.

எ.டு. :	கிளி	-	கிளிகள்
	மரம்	-	மரங்கள்
	ஆண்	-	ஆண்கள்
	பெண்	-	பெண்கள்
	மாமன்	-	மாமன்மார்
	அண்ணன்	-	அண்ணன்மார்

வேற்றுமை உருபு

ஒரு தொடரில் உள்ள வினைக்கும் பெயருக்கும் உள்ள உறவைக் காட்டுவதாக அமைவது வேற்றுமை உருபு. இதையே வேறு விதமாகச் சொன்னால் ஒரு தொடரின் அடிப்படைப் பொருளையே மாற்றக் கூடிய ஆற்றல் பெற்றதாகவும், பெயரோடு சேர்வதாகவும் விளங்கும் விகுதி எதுவோ அது வேற்றுமை விகுதி எனலாம். அதாவது, வேற்றுமை விகுதி ஒரு தொடரில் உள்ள பெயரின் செயற்பாடுகளுக்கு அடையாளமாக விளங்குகிறது.

இக்காலத் தமிழில் நாம் பின்வரும் வேற்றுமைகளைக் காண்கிறோம்.

வேற்றுமையின் பெயர்	உருபு	எடுத்துக்காட்டு
எழுவாய் வேற்றுமை	0	கண்ணன்
செயப்படு பொருள் வேற்றுமை	ஐ-0	கண்ணனை
கருவி வேற்றுமை	ஆல்	கத்தியால்
உடனிகழ்ச்சி வேற்றுமை	ஓடு-உடன்	கண்ணனோடு கண்ணனுடன்
நேர்ச்சி வேற்றுமை	கு	கண்ணனுக்கு
உடைமை வேற்றுமை	அது-0	கண்ணனது
இட வேற்றுமை	இல்	காலில்
விளி வேற்றுமை	ஆ, ஏ..	கண்ணா

முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை என எண்ணு முறையால் பெயர் தந்த நிலை இங்கே மாறியிருப்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

எழுவாய் வேற்றுமை

எழுவாய் வேற்றுமைக்குத் தனியே ஓர் உருபு இல்லை.திரிபு இல்லாத நிலையில் வரும் பெயர் எழுவாயாகச் செயற்படுகிறது. கண்ணன் வந்தான் என்பதில் கண்ணன் என்பது எழுவாய்.

செயப்படுபொருள் வேற்றுமை

ஒரு தொடரில் உள்ள வினையும் பெயரும் செயப்படுபொருள் உறவில் அமையும்போது அந்தப் பெயர் செயப்படுபொருள் உருபை ஏற்று நிற்கிறது. 'ஐ' என்பது செயப்படுபொருள் வேற்றுமைக்கு உரிய உருபு. அருவ உருபும் இந்தப் பொருளில் வரும். உயர்திணைப் பெயர்களும் ஏனைய உயிர்ப் பெயர்களும் ஐகார உருபைப் பெற்று வரும். ஏனைய பெயர்களில் அந்த, இந்த முதலான அடைகளைப் பெற்ற பெயர்கள் ஐகாரஉருபைப் பெறும்; அந்த அடைகளைப் பெறாத பெயர்கள் அருவ உருபோடு செயப்படுபொருளாக வரும். பின்வரும் காட்டுகள் இந்தச் செய்திகளைத் தெளிவு படுத்தும்.

நான் கண்ணனைப் பார்த்தேன்

நான் குதிரையைப் பார்த்தேன்

நான் உங்கள் பெயரை மறந்து விட்டேன்

நான் படம் பார்த்தேன்

கண்ணன் என்ற உயர்திணைப் பெயர் 'ஐ' உருபைப் பெற்று வந்தது. குதிரை என்ற அஃறிணை உயிர்ப் பெயரும் 'ஐ' உருபைப் பெற்று வந்தது. உங்கள் என்ற அடையைப் பெற்ற பெயர் என்ற பெயரும் ஐ உருபைப் பெற்றே வந்தது. படம் என்ற உயிரிலா அஃறிணைப் பெயர்மட்டும் அருவ உருபைப் பெற்று வந்தது.

கருவி வேற்றுமை

ஒரு தொடரில் உள்ள வினையும் பெயரும் கருவிப் பொருள் உறவில் அமையும்போது அந்தப் பெயர் கருவி உருபை ஏற்று வரும். இக்காலத் தமிழில் ஆல் என்பது கருவி உருபாக அமைந்துள்ளது.

எ.டு.: அவன் கம்பால் தாக்கினான்.

அவன் கத்தியால் குத்தினான்.

கம்பு, கத்தி ஆகிய பெயர்கள் ஆல் என்ற கருவி உருபை ஏற்று வந்தன.

உடனிகழ்ச்சி வேற்றுமை

ஒரு தொடரில் உள்ள வினையும் பெயரும் உடனிகழ்ச்சி உறவில் அமையும் போது அந்தப் பெயர் ஓடு அல்லது உடன் என்ற உடனிகழ்ச்சி உருபை ஏற்று வரும். ஓடு என்பதும் உடன் என்பதும் ஒன்றற்கொன்று சரிநிகர் சமமான மாற்றாக வரும்.

எ.டு.: அவன் கண்ணனோடு வந்தான்.

நான் உங்களைக் கண்ணனோடு பார்த்தேன்.

இரண்டு தொடர்களிலும் ஓடு என்பது உடனிகழ்ச்சிப் பொருண்மையைக் குறிக்கும் முறைமைகளைக் கூர்ந்து நோக்குக. ஓடு என்ற உருபுக்குப் பதிலாக மேற்கண்ட தொடர்களில் உடன் என்ற உருபும் வரலாம்.

நேர்ச்சி வேற்றுமை

ஒரு தொடரில் உள்ள வினையும் பெயரும் நேர்ச்சி உறவில் அமையும்போது அந்தப் பெயர் 'கு' என்ற நேர்ச்சி உருபை ஏற்று வரும். கு என்பது எல்லா இடங்களிலும் சந்தி முடிவுகளுக்கு ஏற்ப 'க்கு' என்றே வரும்.

எ.டு. : இந்த மோதிரம் இந்த விரலுக்குப் பொருந்தும்.

அரசர் புலவருக்குப் பரிசு கொடுத்தார்.

மேற்குறித்த வேற்றுமைகள் யாவும் உருபின் பேராலும் சுட்டப் பெறுவது உண்டு. அதாவது மேற்கண்ட வேற்றுமைகள் ஐ வேற்றுமை, ஆல் வேற்றுமை, ஓடு வேற்றுமை, கு வேற்றுமை எனவும் சுட்டப் பெறும். இங்கே கண்ட கு வேற்றுமைக்குப் பல்வேறு பொருள்கள் உண்டு.

தலைமையாகக் கருதத் தக்க பொருள் மட்டும் இங்கே குறிக்கப் பட்டுள்ளது.

உடைமை வேற்றுமை

ஒரு தொடரில் உள்ள பெயர்கள் ஒன்றற்கொன்று உடைமை உறவில் அமைந்திருந்தால் இடப்புறம் உள்ள பெயர் 'அது' உருபை ஏற்றுவரும். அது உருபு நிற்குமிடத்தின்அருகில் மாற்றுருபு நிற்பதும் உண்டு. இவற்றுக்குப் பதிலாக உடைய என்ற சொல்லுருபு வருவதும் உண்டு.

எ.டு. : கண்ணன் வளவனது கையைப் பற்றினான்.
கண்ணன் வளவன் கையைப் பற்றினான்.
கண்ணன் வளவனுடைய கையைப் பற்றினான்.

மேலே குறிப்பிட்டபடி உடைமை வேற்றுமைக்கு அது வேற்றுமை என்ற பெயரும் உண்டு. உடைய என்பது சொல்லுருபு. ஆதலால் இதை 'உடைய வேற்றுமை' என்று கூறுவது மரபல்ல.

இட வேற்றுமை

ஒரு தொடரில் உள்ள வினைக்கும் பெயருக்கும் இடையே இட உறவு அமையுமாயின் அந்தப் பெயர் 'இல்' உருபை ஏற்று வரும். இக்காலத் தமிழில் உயர்திணைப் பெயரும் அஃறிணையில் உயிர்ப் பொருட்பெயரும் இல் உருபுக்குப் பதிலாக இடம், இடத்தில் ஆகிய கிளவிகளைப் பெற்று வரும்.

எ.டு. : கண்ணன் வீட்டில் இருக்கிறான்.
உங்கள் பை கண்ணனிடம் இல்லை.
அந்தப் பசுவிடம் பால் இல்லை.

இட வேற்றுமைப் பொருளில் உள்ளே, வெளியே, முன்னே, பின்னே முதலான பல்வேறு சொல்லுருபுகள் பயின்று வரும். இத்தகைய சொல்லுருபுகள் யாவும் பின்னுருபு என்ற தலைப்பில் தனியே விளக்கப் பெறும்.

விளி வேற்றுமை

ஒரு தொடரின் புற உறுப்பாக நிற்கும் பெயர் விளிப் பொருளில் அமையுமாயின் அது ஆ, ஏ முதலான விளி உருபுகளை ஏற்று வரும். விளியின் அடையாளமாகப் பெயரின் ஈறு மறைதல், ஈறு மறைந்து ஈற்றயல் நீளல் முதலான வேறு பல திரிபுகளையும் பெயர்களில் நாம் காணலாம்.

ஐயன் என்பது ஐய என ஈறு மறைந்தது. அதுவே ஐயா என்று ஈறு மறைந்து ஈற்றயல் நீண்டது.

பின்னுருபு

பற்றி, குறித்து, தவிர முதலான கிளவிகள் பின்னுருபு என்று சுட்டப் பெறுகின்றன. வேற்றுமை உருபுகள் செய்யும் பணிகளையே பின்னுருபுகளும் செய்கின்றன. பின் வரும் தொடர்கள் இந்த உண்மையைத் தெளிவுபடுத்தும்,

வாளால் வெட்டினான்.

வாள் கொண்டு வெட்டினான்.

மேற்கண்ட தொடர்களில் ஆல் என்பதும் கொண்டு என்பதும் ஒரே பொருளில் வந்தன. இரண்டு கிளவிகளும் கருவிப் பொருள் குறித்து நிற்கின்றன. ஆல் என்பது கருவி வேற்றுமை உருபு; கொண்டு என்பது கருவிப் பொருளில் வந்த சொல்லுருபு.

சொல்லுருபு அல்லது பின்னுருபுகள் யாவும் வரலாற்று நோக்கில் பார்த்தால் பெயரிலிருந்து அல்லது வினையிலிருந்து பிறந்தனவாக இருக்கும். அவை அப்படிப் பிறந்திருந்தாலும் பெயரோடும் வினையோடும் தமக்கிருந்த தொடர்பை இழந்து இலக்கண ஆக்கம் பெற்று இலக்கணக் கிளவிகளாகவே மாறிவிட்டன. அப்படி மாறிய நிலையில்தான் அவை சொல்லுருபு அல்லது பின்னுருபு என்ற குறியீட்டைப் பெறுகின்றன. இந்தப் பின்னுருபுகள் பெயர்களோடு சேரும்போது பெயருக்கும் பின்னுருபுக்கும் இடையே ஐ, கு முதலான வேற்றுமை உருபுகள் முறைப்படி வந்து சேரும். எந்தச் சொல்லுருபு எந்த வேற்றுமை உருபை வேண்டி நிற்கும் என்பதை நாம் முன்னறிந்து கூறமுடியும்.

சில காட்டுகளின் துணைகொண்டு இதை மேலும் தெளிவு படுத்துவது நல்லது. அவர் உங்களைப் பற்றிப் பேசினார் என்பதில் பற்றி என்பது ஒரு பின்னுருபு அல்லது சொல்லுருபு.இங்கே உள்ள பற்றி என்பதற்கும் பற்று என்ற வினைக்கும் இங்கே எந்தத் தொடர்பும் இல்லை, பற்றி என்பது சொல்லுருபாக வரும் இடங்களில் அதன் இடப் பக்கம் உள்ள பெயரோடு 'ஐ' என்ற வேற்றுமை உருபு வரும். வேறு எந்த வேற்றுமை உருபும் வருவதில்லை. இப்படிப்பட்ட கட்டுப்பாடு பெரும்பாலும் எல்லாச் சொல்லுருபுகளுக்கும் உண்டு. இப்படிச் சொல்லுருபுகள் பெறும் வேற்றுமை உருபுகளின் அடிப்படையில் சொல்லுருபுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கலாம்.

1. ஐ வழிச் சொல்லுருபு
2. கு வழிச் சொல்லுருபு
3. அது வழிச் சொல்லுருபு
4. இல் வழிச் சொல்லுருபு
5. **தன்னிலைச் சொல்லுருபு**

ஐ வழிச் சொல்லுருபு

பற்றி, குறித்து, தவிர, போல, விட, கொண்டு, நோக்கி, பொறுத்து முதலான சொல்லுருபுகள் ஐ உருபை வேண்டி நிற்பன. பின்வரும் காட்டுகளால் இதை விளங்கிக் கொள்ளலாம்.

கண்ணன் முருகனைப் பற்றிப் பேசினான்.

கண்ணன் முருகனைக் குறித்துப் பேசினான்.

அவர் உங்களைத் தவிர எல்லோரையும் பார்த்தார்.

வள்ளி நளினியைப் போலப் பேசினாள்.

அவன் உன்னை விட வேகமாக எழுதுவான்.

வீமன் மரத்தைக் கொண்டு எதிரியைத் தாக்கினான்.

கண்ணன் முருகனை நோக்கி நடந்தான்.

வேலன் உங்களைப் பொறுத்து இந்த வேலையைச் செய்தான்.

மேற்கண்ட தொடர்களில் காணும் சொல்லுருபுகள் அல்லது பின்னுருபுகள் யாவும் தமக்கு இடப்புறம் ஐகார உருபைப் பெற்று வந்தன. ஐகார உருபுக்கு மாற்றாக அருவ உருபு வருவதும் உண்டு. அருவ உருபு எந்தச் சூழலில் வரும் என்பது முன்னே விளக்கப்பட்டது.

'கு' வழிச் சொல்லுருபு

ஆக, என்று, பதில், உரிய முதலான சொல்லுருபுகள் 'கு' உருபை வேண்டி நிற்பன. பின்வரும் காட்டுகள் இதை விளக்கும்.

கண்ணன் உங்களுக்காக இதை வாங்கினான்.

கண்ணன் உங்களுக்கென்று இதை வாங்கினான்.

வளவன் மாலைக்குப் பதில் புத்தகம் வழங்கினான்.

கண்ணன் முருகனுக்கு உரிய பங்கைக் கொடுத்தான்.

மேற்கண்ட தொடர்களில் காணும் ஆக, என்று, பதில், உரிய முதலான பின்னுருபுகள் தமக்கு இடப்புறம் கு உருபைப் பெற்று வந்தன. முன், பின் முதலான வேறு சில சொல்லுருபுகள் தமக்கு இடப்புறம் 'கு' உருபை விருப்ப உறுப்பாகக் கொண்டு வரும். அதாவது 'கு' உருபைப் பெற்றும் வரும்; பெறாதும் வரும். கீழ்க்காணும் காட்டுகள் இதைத் தெளிவுபடுத்தும்.

முருகன் என் முன் வந்தான்.

முருகன் எனக்கு முன் வந்தான்

வேலன் என் பின் வந்தான்.

வேலன் எனக்குப் பின் வந்தான்.

அது வழிச் சொல்லுருபு

மீது, பேரில், பொருட்டு முதலான சொல்லுருபுகள் தமக்கு இடப்புறம் அதுவென் உருபுக்கு மாற்றாக அமைந்த அருவ உருபைப் பெற்று வரும். எடுத்துக்காட்டுகள் வருமாறு :

அவர் என்மீது அன்பு கொண்டார்.

அவர் என்பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்.

கண்ணன் என்பொருட்டு இந்தப் பணியைச் செய்தான்.

இல் வழிச் சொல்லுருபு

இருந்து என்ற சொல்லுருபு இல் என்ற வேற்றுமை உருபை வேண்டிப் பெறுகிறது. இல் என்பதற்குப் பதிலாக வரும் வேறு கிளவிகளும் இருந்து என்ற சொல்லுருபுக்கு இடப்புறம் வரும். பின்வரும் எடுத்துக்காட்டுகள் இந்தச் செய்தியைத் தெளிவுபடுத்தும்.

அவர் வீட்டிலிருந்து வருகிறார்.

புத்தகம் மேசை மேலிருந்து விழுந்தது.

தன்னிலைச் சொல்லுருபு

எந்த வேற்றுமை உருபையும் வேண்டாது தன்னியல்பாக வரும் சொல்லுருபுகளும் உண்டு. வரை, தோறும், ஆர முதலான சொல்லுருபுகள் இயல்பாக அமைந்த பெயர்களின் பின் வருகின்றன. காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன.

முருகன் உங்கள் வீடுவரை வந்தான்.

முருகன் வீடு தோறும் சென்றான்.

வேலன் வயிறார உண்டான்.

மேற்கண்ட காட்டுகளில் வரை, தோறும், ஆர ஆகிய கிளவிகள் வீடு, வயிறு முதலான பெயர்களின் பின் இயல்பாக வந்தன.

வினை : வரையறை

கால இடைநிலையை ஏற்க வல்லதாகவும் பால், இடவிகுதியை ஏற்க வல்லதாகவும் திகழ்வது வினை. இந்த வினைகள் வினையெச்சங் களையும் வினை அடைகளையும் அடைகளாகப் பெற்று வருவதும் உண்டு. வினைகள் வினை எச்சங்களையும் பெயரெச்சங்களையும் உருவாக்க வல்லன. வினைகள் மொழியில் முற்றாகவும், எச்சமாகவும், தொழிற் பெயராகவும், வினையாலணையும் பெயராகவும் வருவன.

வினை வகை

தமிழில் உள்ள வினைகளைப் பின்வருமாறு மூன்றாக வகைப் படுத்துவது வினைச் சொல்லின் அமைப்பைத் தெளிவாக விளக்க உதவியாக இருக்கும்.

1. தெரிநிலை வினை
2. குறிப்பு வினை
3. குறை வினை

தெரிநிலை வினை

முன்பே குறிப்பிட்டபடி தெரிநிலை வினையும் முற்றாக அல்லது எச்சமாக வரும். தெரிநிலை வினைமுற்று வழக்கமாக வினையடி, கால இடைநிலை, பாலிடவிகுதி ஆகிய மூன்றையும் உரிமை உறுப்புகளாகப் பெற்றுவரும். 'செய்தான்' என்ற முற்று வினையில் 'செய்' என்பது வினை அடி; 'த்' என்பது இறந்த கால இடைநிலை; ஆன் என்பது படர்க்கை ஆண் பால் ஒருமை விகுதி. இதனை நாம் படர்க்கை ஆண்பால் ஒருமையில் வந்த இறந்த கால வினை முற்று என்று குறிப்பிடுவோம். 'செய்து' என்பது வினையெச்சம். 'செய்த' என்பது பெயரெச்சம். செய்து, செய்த என்பனவும் செய் என்ற வினையடியிலிருந்து பிறந்தவையே.

குறிப்பு வினை

வினையடியையும் பாலிட விகுதியையும் மட்டுமே பெற்றுக் கால இடைநிலை பெறாமல் வருவது குறிப்பு வினை. குறிப்பு வினையிலும் முற்றும் உண்டு; எச்சமும் உண்டு . நல்லன் என்ற குறிப்பு வினைமுற்றில் 'நல்' என்பது வினையடி; 'அன்' என்பது பால் இட விகுதி. நல்ல என்பது பெயரெச்சம். 'உள்ளார்' என்பதில் 'உள்' என்பது வினையடி, 'ஆர்' என்பது பாலிட விகுதி. 'உள்ள' என்பது 'உள்' என்ற வினையடியிலிருந்து பிறந்த பெயரெச்சம்.

குறைவினை

இல்லை, உண்டு போன்ற சொற்கள் முற்றுவினையாக வருவன. ஏனைய வினைகள் எழுவாய்க்கேற்பத் திரிவது போலக் குறைவினைகள் திரிந்து வருவதில்லை. இவை கால இடை நிலைகளையும் ஏற்பதில்லை; பால் இட விகுதிகளையும் ஏற்பதில்லை. இவற்றிற்கு உள்ள இந்தக் குறைப்பண்பைக் கருதியே இவற்றைக் குறைவினை என்று சுட்டியுள்ளோம். இல்லை, உண்டு போன்ற வினைகள் கால இடைநிலைகளையும் பால், இட விகுதிகளையும் ஏற்பதில்லை; ஆனால் இவை எச்சங்களை உருவாக்க வல்லன. 'இல்' என்ற வினை அடி 'இன்றி', 'இல்லாது', 'இல்லா' ஆகிய பெயரெச்சங்களையும் உருவாக்கக் காண்கிறோம். இவ்வாறே 'உள்' என்ற வினையடி 'உள்ள' என்ற

பெயரெச்சத்தை உருவாக்குகிறது. 'அல்' என்ற வினையடி அன்றி, அல்லாமல் ஆகிய வினையெச்சங்களையும் அல்லாத, அல்லா ஆகிய பெயரெச்சங்களையும் உருவாக்குகிறது.

மேலே குறிப்பிட்ட யாவும் தனித்தனியே விரிவாக ஆராயத்தக்கன. தெரிநிலை வினையெச்சங்கள் செய்ய, செய்து, செய்தால் முதலான வாய்பாடுகளில் வரும். தெரிநிலைப் பெயரெச்சங்கள் செய்த, செய்கின்ற, செய்யும் முதலான வாய்பாடுகளில் வரும்.

பெயரடை

பெயருக்கு அடையாக வருவன பெயரடைகள் என்று முன்பே குறிப்பிட்டோம். பெயரடைகள் பண்புப் பெயர் + ஆன / உள்ள / உடைய என்ற அமைப்பில் அமைந்துள்ளன. எ.டு. அழகு + ஆன / உள்ள/ உடைய, அன்பு + ஆன / உள்ள / உடைய. பொதுவாகப் பெரும்பாலான பண்புப் பெயர்கள் 'ஆன' என்ற விகுதியை ஏற்று வரும். உள்ள என்பதும் உடைய என்பதும் சில பெயர்களோடு சேரும்; வேறு சில பெயர்களோடு சேருவதில்லை. உயரமான, நீளமான, அகலமான முதலானவை இயல்பான வழக்குகள். உயரமுள்ள, உயரமுடைய என வருவன இயல்பான வழக்குகளாக ஏற்கப்படுவதில்லை. உள்ள, உடைய என்ற கிளவிகளைப் போல வேறு சில கிளவிகளும் உண்டு. இவைபற்றியெல்லாம் உருபனியல் விரிவாக ஆராயும்.

வினையடை

வினைக்கு அடையாக வரும் கிளவிகள் 'வினையடை' என்று பெயர் பெறுகின்றன என்பதும் முன்பே கூறப்பட்டது. வினையடைகள் பண்புப் பெயர்கள் + ஆக என்ற அமைப்பில் வரும். எ.டு. : வேகமாக, மெதுவாக, அழகாக. ஆக என்பது எல்லாப் பண்புப் பெயர்களோடும் வருவதில்லை. அன்பாக, அமைதியாக, அழகாக என்பன ஏற்புடைய வழக்குகள். ஆனால் அருளாக, அறிவாக என்பன ஏற்புடைய வழக்குகளாகக் கொள்ளப்படுவதில்லை. இவைபற்றியெல்லாம் உருபனியல் விரிவாக ஆராயும்.

வல்லடை

வல்லடைகள் பெயர், வினை, பெயரடை, வினையடை ஆகிய நால்வகைக் கிளவிகளுக்கும் அடையாக வரத்தக்க ஆற்றல் பெற்றவை. இப்படிப்பட்ட கிளவிகள் எந்த மொழியிலும் மிகச் சிலவாகவே இருக்கும். மிக, மிகவும், நிரம்ப முதலான கிளவிகள் வல்லடைகள்.

எ.டு: மிகவும் கருப்பு, மிகவும் கலங்கினார், மிகவும் நல்ல மாணவர், மிகவும் அழகாகப் பாடுகிறார்.

இடை

தமக்கென அகராதிப் பொருள் இல்லாதனவாய், இலக்கணப் பொருள் மட்டுமே உடையனவாய் மொழியில் பயன்படும் கிளவிகளை நமது பழைய மரபிலக்கணங்கள் 'இடைச்சொல்' என்று குறிப்பிடுகின்றன. கால இடை நிலைகளும், வேற்றுமை விகுதிகளும், பாலிட விகுதிகளும், இவைபோல்வனவும் இடைச்சொற்களாகக் கொள்ளப்படும். இடைச்சொற்கள் எல்லாவற்றையும் கண்டறிந்து வகைப்படுத்தி ஆராய்வதும் உருபனியலின் பணிகளில் ஒன்று.

இங்கே நாம் கண்டது தமிழ் உருபனியலைப் பற்றிய ஒரு சுருக்க உரை. தமிழ் உருபனியலைப் பற்றிய முழு ஆய்வு ஒரு தனி நூலாகவே விரியும்.

விரிவான செய்திகளுக்கு மேலும் படிக்கலாம்.

1. Dr. Pon Kothandaraman (1983)
Tamil Morphemics. Pulamai Publications, Madras.

2. டாக்டர் முத்துச்சண்முகன் (1979)
இக்கால மொழியியல், மதுரை, இந்தியா.

3. கு.பரமசிவம் (1983)
இக்காலத் தமிழ் மரபு, சிவகங்கை, இந்தியா.

4. Professor T.P. Meenakshisundaran, (1961)
Sixty-First Birthday Commemoration Volume, Annamalainagar, India.

5. Dr. Pon Kothandaraman, (1979)
The verb in Modern Tamil, Pulamai Publications, Madras.

II

மரபிலக்கணவழித் தொடரியல்

தொடர் என்பது யாது? சொற்கள் தம்முள் ஒன்றோடொன்று பொருள் தரும் முறையில் தொடர்வது தொடர்.

(1) உங்கள் தம்பி என்னோடு வந்தான்

மேற்கண்ட தொடரில் உங்கள் என்பதும் தம்பி என்பதும் ஒன்று சேர்ந்து ஒரு தொடராயிற்று. என்னோடு என்பதும் வந்தான் என்பதும் சேர்ந்து இன்னொரு தொடராயிற்று. இந்த இரண்டு தொடர்களும் சேர்ந்து ஒரு முற்றுத் தொடராயிற்று. தம்பி என்பதும் என்னோடு என்பதும் அருகருகே இருந்தாலும் அவை ஒரு தொடர் ஆவதில்லை. கீழ்க்காணும் படத்தைப் பாருங்கள்.



தம்பி என்பதும், என்னோடு என்பதும் அருகருகே இருந்தாலும் அவை சேர்ந்து ஒரு தொடராக ஆக முடியாது. தம்பி, என்னோடு, வந்தான் ஆகிய மூன்று சொற்களும் ஒரு தொடராக ஆன பிறகு உங்கள் என்பது தம்பி என்னோடு வந்தான் என்ற தொடரோடு சேரலாமா? சேர இயலாது. உங்கள் என்ற பெயரடை ஒரு பெயரோடு சேரவேண்டும். வினைமுற்றுத் தொடரோடு சேர இயலாது.

மேற்கண்டவாறு சொற்கள் ஒன்றோடொன்று சேருவதில் சில திட்டவட்டமான நெறிமுறைகள் உள்ளன. இதை உணர்ந்ததனால்தான் மரபிலக்கணப் புலவர்கள் ஆங்காங்கே மிக நுட்பமான தொடரியல் விதிகளை வகுத்து வழங்கி நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள்.

சொற்களின் இருவகைச் சேர்க்கை முறைகள்

இன்னசொல் இன்னசொல்லோடுதான் சேரலாம் என்ற நெறிமுறை மேலே குறிப்பிடப்பட்டது. ஒரு தொடரில் உள்ள சொற்களின் சேர்க்கை பார்ப்பதற்கு ஒரே மாதிரியாகத் தோன்றினாலும் உண்மை நிலை அப்படி இல்லை. சொற்கள் சேரும்போது நேர் வரிசையிலும் சேரலாம்; படிநிலை வரிசையிலும் சேரலாம். பின்வரும் தொடர்களின் அமைப்பு முறையை ஆராய்ந்து இந்தக் கருத்தை விளங்கிக் கொள்ளலாம்.

(2) கண்ணன் வந்தான்.

(3) கண்ணன் இங்கு வந்தான்.

தொடர் 2-இல் கண்ணன் என்பதும் வந்தான் என்பதும் இயல்பாக நேர் வரிசை முறையில் சேர்ந்தன. தொடர் 3-ஐப் பாருங்கள். இங்கு என்பதும் வந்தான் என்பதும் சேர்ந்து முதலில் ஒரு தொடராக ஆகவேண்டும். அதன் பிறகுதான் கண்ணன் என்பது ''இங்கு வந்தான்'' என்ற தொடரோடு சேர முடியும். பின்வரும் படங்கள் இதை மேலும் தெளிவுபடுத்தும்.





மேற்கண்ட படத்தில் இங்கு என்பதும் வந்தான் என்பதும் சேர்ந்து ஒரு தொடராக ஆக வேண்டும். அதன்பிறகுதான் கண்ணன் என்பது சேர்ந்து கண்ணன் இங்கு வந்தான் என்ற தொடர் அமைகிறது. இங்கே சொற்சேர்க்கையில் ஒரு படிநிலை வரிசையைப் பார்க்கிறோம். தொடர் 1-இல் ''உங்கள் தம்பி'' என்று ஒரு தொடர் அமைய வேண்டும். ''என்னோடு வந்தான்'' என்று இன்னொரு தொடர் அமைய வேண்டும். இந்த இரண்டில் எது முதலில் அமைய வேண்டும் என்பதில் ஒன்றும் கட்டுப்பாடு இல்லை. இந்த இரண்டு தொடர்களும் சேர்ந்து முழுத்தொடர் அமையும்போது கண்ணன் வந்தான் என்ற தொடரைப் போலவே தொடர் 1 உம் நேர்நிலைச் சேர்க்கை அமைப்பு கொண்டதாக அமைகிறது. தொடர் 3 மட்டும் படிநிலைச் சேர்க்கை அமைப்பு கொண்டதாக விளங்குகிறது.

பல்வேறு படிநிலைச் சேர்க்கை அமைப்பு ஒரு தொடரிலேயே அமைந்து விட்டால் தொடர் அமைப்பு சிக்கலானதாக ஆகிவிடும். அப்படிப்பட்ட சூழலில் அந்தத் தொடரமைப்பை விளக்கத் தொடரமைப்பு பற்றி விரிவான அறிவு வேண்டும்.

பல்பொருள் ஒரு தொடர்

தொடரில் சிக்கலான அமைப்புகள் இடம் பெறுவதனை நாம் அன்றாட வாழ்வில் பெரும்பாலும் கவனிப்பதில்லை. ஆய்வு நோக்கில் இதை நாம் விளக்கும் போது உண்மை எளிதில் புலப்படுகிறது. இப்படிப்பட்ட அறிவு பல்வேறு இன்றியமையாத சூழல்களில் தேவை என்பதும் அப்போது தெளிவாகிறது.

(4) பழைய மாணவர் விடுதி

தொடர் 4-ஐப் பாருங்கள். இந்தத் தொடர் இரண்டு வழியில் பொருள் உணர இடந்தருகிறது. பழைய மாணவர்களுக்காக உள்ள ஒரு விடுதியைப் பழைய மாணவர் விடுதி என்று சொல்லலாம். அல்லது புதியதாக இல்லாமல் பழையதாக இருக்கிற மாணவர் விடுதியையும் பழைய மாணவர் விடுதி என்று சொல்லலாம். முதலாவது பொருளில் மாணவர்கள் பழையவர்கள்; இரண்டாவது பொருளில் விடுதி பழையது. பின்வரும் படம் இந்தச் செய்திகளை எளிதாக விளக்கும்.

முதற்பொருளுக்கு உரிய தொடரமைப்பு



இரண்டாவது பொருளுக்குரிய தொடரமைப்பு

தொடர் 4 இரு பொருள்களை எவ்வாறு வழங்கியது? இந்தத் தொடரில் உள்ள எந்தச் சொல்லும் இங்கே இரு பொருளில் அமையவில்லை. இந்தப் பொருள் மயக்கத்துக்குக் காரணம் சொற்கள் அல்ல; தொடரமைப்பு தான் இந்தப் பொருள் மயக்கத்துக்குக் காரணமாக அமைகிறது. இரண்டு விதமான அமைப்புகள் ஒரு தொடருக்குள் கரந்து நிற்கின்றன. இரண்டு விதமான அமைப்புகளுக்கு ஏற்றபடி இரண்டு பொருள்களைப் பார்க்கிறோம்

தொடர்களிலிருந்து பொருள் பிறப்பதற்குச் சொற்கள் மட்டுமே காரணமல்ல, தொடரமைப்பும் காரணம் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

சொல் நிலையில் ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருப்பதையும், ஒரு பொருளுக்குப் பல சொல் இருப்பதையும் காண்கிறோம். அவ்வாறே தொடர்நிலையிலும் ஒரு பொருளுக்குப் பல தொடர்கள் அமைவது உண்டு. பல பொருளுக்கு ஒரு தொடர் அமைவதும் உண்டு. அதாவது ஒரு பொருட் பல்தொடரும் உண்டு. பல்பொருள் ஒரு தொடரும் உண்டு.

தொடரியல் நோக்கில் எழும் இலக்கணம் பல்வகைத் தொடரமைப்புகளை விளக்குவதோடு பல்பொருள் ஒரு தொடர்களையும், ஒரு பொருட் பல்தொடர்களையும் முறைப்படி விளக்க வல்லதாக இருக்க வேண்டும்.

தொடரியல் நோக்கில் அமைந்த இலக்கணங்கள் பல்வேறு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. மரபு வழியில் அமைந்த தொடரியல் இலக்கணம் தவிரப் புதிதாக மொழியியல் உலகில் பன்னிரண்டிற்கு மேற்பட்ட தொடரியல் கொள்கைகள் உருவாகியிருக்கக் காண்கிறோம். இந்தக் கோட்பாடுகள் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள யாரும் விரும்பினால் அவர் பல்வேறு நூல்களைத் தேடிப் படிப்பதுதான் பயனளிப்பதாக இருக்கும். மரபிலக்கணவழித் தொடரியல் பற்றியும் மொழியியல் உலகில் காணும் இன்றியமையாத சில தொடரியல் கொள்கைகள் பற்றியும் இங்கே நாம் தெரிந்து கொள்ள இருக்கிறோம்.

மரபிலக்கண நெறியில் தொடரியல்

மரபிலக்கணவழித் தொடரியல் பொதுவாக எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றையும் தெளிவாகவும் விரிவாகவும் ஆராயும்.

எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் ஆகிய இந்த மூன்றில் செயப்படுபொருளே இல்லாத தொடர்களும் உண்டு. எல்லாத் தொடர்களிலும் எழுவாயும் பயனிலையும் இருக்கும் என்று பொதுவாக நம்புகிறோம்.

(5) முருகன் வந்தான்

(6) முருகன் வள்ளியை மணந்தான்

மேற்கண்டவற்றுள் தொடர் 5-இல் முருகன் என்பது எழுவாய்; வந்தான் என்பது பயனிலை. தொடர் 6-இல் முருகன் என்பது எழுவாய்; வள்ளியை என்பது செயப்படு பொருள்; மணந்தான் என்பது பயனிலை. முருகன் வந்தான் என்ற தொடரில் செயப்படுபொருளே இல்லை.

முருகன் வந்தான் என்பதில் முருகன் என்ற பெயர் எழுவாயாக நிற்கிறது: வந்தான் என்ற வினை பயனிலையாக நிற்கிறது. எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் ஆகிய கருத்துகள் தொடரியல் நிலையில் பயில்வன. பெயர், வினை முதலான கருத்துகள் சொல்லியல் நிலையில் தோன்றியன.

எழுவாய், பயனிலை முதலானவை இலக்கணச் செயற்பாடுகள். பெயர், வினை முதலானவை இலக்கணக் கூறுகள். பெயர் வினை முதலான இலக்கணக் கூறுகள்தான் எழுவாய், பயனிலை முதலான செயற்பாடுகளை நடத்துகின்றன. அவை அந்தச் செயற்பாடுகளை நடத்தும்போது பெயருக்கும் வினைக்கும் அந்தந்த மொழியின் இயல்புக்கு ஏற்ப முன்னோ பின்னோ அடைகளும் தோன்றுவது உண்டு. இப்படி அடைகள் தோன்றும் முறையினையும் மரபிலக்கண வழித் தொடரியல் தெளிவாக ஆராய்கிறது.

மரபிலக்கண வழியில் தொடர்வகை

மரபிலக்கண வழியில் தொடர்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

தொடர்

முற்றுத்தொடர் எச்சத்தொடர்

பெயரெச்சத்தொடர் வினையெச்சத்தொடர்

மேற்கண்ட மூன்றையும் மரபிலக்கணங்கள் மேலும் விரிவாக வகைப்படுத்தி இலக்கணம் கூறும். குறிப்பாகச் சொன்னால் முற்றுத் தொடர்கள் வினா, எதிர்மறை, ஏவல், செய்தி என்று பலவாக வகைப்படுத்தப்படும். பெயரெச்சத் தொடர்கள் 1. இறந்தகாலம், 2. நிகழ்காலம், 3. எதிர்காலம், 4. எதிர்மறை என நான்காக **வகைப்படுத்தப்படும். வினையெச்சத் தொடர்கள் வினையெச்ச**

வாய்பாட்டுக்கு ஏற்ப அந்தந்த மொழியின் இயல்புக்குப் பொருந்துமாறு வகைப்படுத்தப்படும். தமிழில் செய்து என்னும் வினையெச்சத் தொடர், செய்தால் என்னும் வினையெச்சத் தொடர், செய என்னும் வினையெச்சத் தொடர் என்று பல தொடர்களை வகைப்படுத்திக் காட்ட வேண்டி வரும்.

தொடர்நிலையில் பகுப்பாய்வு

மரபிலக்கணங்கள் தொடர்களைச் செம்மையாகப் பகுப்பாய்வு செய்து இலக்கண ஆய்வை வளர்த்திருக்கின்றன. ஒரு முற்றுத் தொடரை எடுத்துக் கொண்டு மரபிலக்கணவழிப் பகுப்பாய்வு முறையை விளங்கிக் கொள்வது நல்லது.

(7) வளவன் உங்களை நேற்றுச் சந்தித்தான்

தொடர் 7 ஒரு முற்றுத் தொடர். இதில் வளவன் எழுவாய்; நேற்றுச் சந்தித்தான் என்பது பயனிலை; உங்களை என்பது செயப்படுபொருள், நேற்றுச் சந்தித்தான் என்பதில் சந்தித்தான் என்பது இறந்தகாலத்தில் வந்த படர்க்கை ஆண்பால் வினைமுற்று, நேற்று என்பது வினைமுற்றுக்கு அடையாக வந்தது.

வளவன்	உங்களை	நேற்றுச்சந்தித்தான்
எழுவாய்	செயப்படு பொருள் (உங்கள் - ஐ)	பயனிலை (நேற்று - சந்தித்தான்)
	உங்கள் : முன்னிலைப் பெயர் ஐ : இரண்டாம் வேற்றுமை உருபு	நேற்று : வினையடை சந்தித்தான் : இறந்தகாலப் ப, ஆ, வி, மு (சந்தி-த்-த்-ஆன்) சந்தி : வினைப்பகுதி த் : சந்தி த் : இறந்தகாலம் ஆன் : ப, ஆ, ஒ, விகுதி

மேற்காட்டிய பகுப்பாய்வு மரபிலக்கண வழியில் நிகழ்த்தப் பெற்றது. தமிழில் உள்ள எந்தத் தொடரையும் இத்தகைய மரபிலக்கண நெறியில் பகுப்பாய்வு செய்து காட்ட இயலும்.

இப்படிப்பட்ட பகுப்பாய்வு செய்ய மரபிலக்கண நெறியில் தெளிவாக நெறிமுறைகள் இருந்தாலும் விரிவான அளவில் மரபிலக்கண நெறியில் தொடரிலக்கணம் உருவாகவில்லை.

விரிவான செய்திகளுக்கு மேலும் படிக்கலாம் :

1. C.F. Hockett (1963)
A course in modern Linguistics, New York.

2. Postal P.M. (1964)
Constituent Structure. A Study of Contemporary Models of Syntactic Description, Indiana University Publications in Anthropology & Linguistics, Memoir 30.

3. John Lyons (1969)
Introduction to Theoretical Linguistics, Cambridge University Press, Great Britain.

4. P. Kothandaraman (1972)
Studies in Tamil Linguistics, Tamil Nuulagam, Chennai.

5. Bloomfield L. (1933)
Language, New York.

6. Edith A. Moravcsik e tal (1980)
Syntax and Semantics, vol 13, Academic Press, New York.

III

அண்மை உறுப்புப் பகுப்பாய்வும் தொடரமைப்பிலக்கணமும்

மொழியியல் ஆய்வு

மொழியியல் ஆய்வு அறிவியல் பாங்கு பெற்றதாக வளர வளரத் தொடரியல் பற்றிய ஆய்வு எதிர்பாராத அளவுக்கு முறையாகவும் விரிவாகவும் ஆழமாகவும் வளரத் தொடங்கியது. மரபிலக்கணத் தொடரியல் ஆய்வோடு மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ள ஆய்வுகளில் ஒன்று அண்மை உறுப்புப் பகுப்பாய்வு. இதைப் பற்றி முதலில் நாம் விளங்கிக் கொள்வோம்.

அண்மை உறுப்புப் பகுப்பாய்வு

ஒரு தொடர் உருவாக வேண்டுமானால் குறைந்தது இரண்டு உறுப்புகள் வேண்டும். இரண்டு உறுப்புகளும் அண்மை உறவு பெற்றுத் தொடரும்போது ஒரு தொடர் உருவாகிறது. பின்வரும் தொடரைப் பாருங்கள்.

(8) சானகி இராமனோடு காட்டுக்குப் போனாள்.

இந்தத் தொடரில் சானகி என்பது எழுவாய்; இராமனோடு காட்டுக்குப் போனாள் என்பது பயனிலை. இந்தத் தொடரின் அமைப்பைப் பின்வரும் படத்தின் மூலம் விளக்கலாம்.



காட்டுக்கு என்பதும் போனாள் என்பதும் ஒன்றற்கொன்று அண்மை உறுப்புகள். இவை இரண்டும் ஒன்று சேர்ந்து ஒரு தொடராகி மீண்டும் இன்னொரு தொடருக்கு இது அண்மை உறுப்பாகிறது. காட்டுக்குப் போனாள் என்ற தொடர் ஓர் உறுப்பாகவும், இராமனோடு என்பது இன்னொரு உறுப்பாகவும் ஒன்று சேர்ந்து இன்னொரு பெருந்தொடரை உருவாக்குகிறது. அடுத்த நிலையில் இராமனோடு காட்டுக்குப் போனாள் என்ற தொடர் ஓர் உறுப்பாகவும் சானகி என்பது இன்னொரு உறுப்பாகவும் நின்று ஒன்றற்கு ஒன்று அண்மை உறுப்பாகி முழுத் தொடரை உருவாக்கியுள்ளது.

தமிழிலக்கணங்களில் காணும் முதல் சினை உறவு போல இங்கே உறுப்புக்கும் தொடருக்கும் ஒரு வகை உறவைக் காணுகிறோம். ஒருகால் உறுப்பாக இருந்தது இன்னொருகால் தொடராகவும், ஒருகால் தொடராக இருந்தது இன்னொருகால் உறுப்பாகவும் வரும். உறுப்பினை உள்ளடக்கிய தொடரை உறுப்பி என்றும் கூறலாம்.



அ, ஆ ஆகிய இரண்டும் ஒன்றற்கொன்று அண்மை உறுப்புகள். இவை இரண்டும் இ என்ற தொடரை உருவாக்கியுள்ளன. இ என்ற தொடர் அ, ஆ ஆகிய உறுப்புகளை உடையதாக இருப்பதால் 'உறுப்பி' என்றும் சுட்டப்படும்.

காட்டுக்குப் போனாள் என்ற தொடர் ஓர் உறுப்பாகவும் இராமனோடு என்பது இன்னொரு உறுப்பாகவும் நிற்க, இராமனோடு காட்டுக்குப் போனாள் என்ற நெடுந்தொடர் உருவாகியுள்ளது. மீண்டும் இந்த நெடுந்தொடர் ஓர் உறுப்பாக மாறிச் சானகி என்ற பெயரோடு அண்மை உறுப்பு உறவில் நின்று முழுத் தொடரை உருவாக்குகிறது. இவையாவும் மேற்காட்டிய படத்தின் மூலம் எளிதாக விளங்கும்.

அண்மை உறுப்புப் பகுப்பாய்வு முறையில் இயற்கை மொழியில் உள்ள எல்லாத் தொடர்களையும் பகுத்து ஆராயலாம். இந்தப் பகுப்பாய்வில் பெரும்பாலும் அண்மை உறுப்புகள் இரண்டிரண்டாகச் சேர்ந்து உறுப்பிகளை அல்லது தொடர்களை அமைக்கின்றன. சில வேளைகளில் இரண்டுக்கும் மேற்பட்ட உறுப்புகள் சேர்ந்து உறுப்பிகளை அல்லது தொடர்களை அமைப்பதும் உண்டு. அப்படிப்பட்ட அண்மை உறுப்புகள் பன்மை அண்மை உறுப்பு என்று பெயர் பெறும். சில சூழல்களில் அண்மை உறுப்புகள் இருவேறு வகையில் சேர்ந்து இருவேறு பொருள்களுக்கு இடமளிப்பதும் உண்டு. அப்படிப்பட்ட அண்மை உறுப்புகளைப் பொருள் மயக்க அண்மை உறுப்பு என்று சுட்டுவர். இவை பற்றியும் நாம் சற்று விரிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பன்மை அண்மை உறுப்பு

ஒரு தொடரின் அண்மை உறுப்புகள் பெரும்பாலும் இரண்டாக இருக்கும் என்றும், சில வேளைகளில் இரண்டுக்கு மேலும் ஒரு தொடரில் அண்மை உறுப்புகள் அமையலாம் என்றும் முன்பே குறிப்பிட்டோம்.

9. சேர சோழ பாண்டியர்

10. மா பலா வாழை

சேர சோழ பாண்டியர் என்ற தொடரில் மூன்று உறுப்புகள் உள்ளன. இவற்றை இரண்டாகப் பிரிப்பது பொருந்தாது. பின்வரும் படத்தைப் பாருங்கள்.

தொடர்

சேர சோழ பாண்டியர்

சேர சோழ பாண்டியர் ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்து ஒரு தொடராகி ஒரே அலகாக மாறிவிடுகிறது. இவ்வாறே மா, பலா, வாழை என்ற தொடரும் பகுத்தறியப்பட வேண்டும்.

தொடர்

மா பலா வாழை

மேலே குறிப்பிட்ட முறையிலேயே மா, பலா, வாழை ஆகிய மூன்று உறுப்புகளும் ஒன்று சேர்ந்து ஒரு தொடராகி ஒரே அலகாக மாறிவிடுகிறது. இரண்டுக்கு மேற்பட்ட உறுப்புகள் இங்கே ஒரு தொடரின் அண்மை உறுப்புகளாக அமைந்திருப்பதால் இவை பன்மை அண்மை உறுப்புகள் என்று அழைக்கப் பெறுகின்றன.

பொருள் மயக்க அண்மை உறுப்பு

சில தொடர்களில் அண்மை உறுப்புகள் சேருகிற முறைகளுக்கு ஏற்பப் பொருள் வேறுபாடு தோன்றக் காண்கிறோம். முன்பே நாம் கண்ட தொடர் 4ஐப் பாருங்கள்.

பழைய மாணவர் விடுதி

இந்தத் தொடர் இரண்டு வகையான பகுப்பாய்வுக்கு இடமளிக்கிறது.

(அ)

மாணவர் பழைய மாணவர், விடுதி பழையதா புதியதா என்பதைப் பற்றி இங்கே பேச்சு இல்லை.

(ஆ)



விடுதி மாணவர்க்கு உரியது. அது பழைய விடுதி. மாணவர் பழையவரா புதியவரா என்பதைப் பற்றி இங்கே பேச்சு இல்லை.

மேற்கண்ட பகுப்பாய்வுகளுக்கு இடையே உள்ள வேறுபாடு என்ன? பழைய மாணவர் விடுதி என்ற தொடரில் மூன்று சொற்கள் உள்ளன. முதல்வகைப் பகுப்பாய்வில் முதல் இரண்டு சொற்களும் ஒரு தொடராகியபின் விடுதி என்பதோடு சேர்ந்து பழைய மாணவர் விடுதி என்ற தொடர் அமைகிறது. இரண்டாவது வகைப் பகுப்பாய்வில் இறுதியில் உள்ள இரண்டு சொற்களும் சேர்ந்து ஒரு தொடராகியபின், பழைய என்பதனோடு சேர்ந்து பழைய மாணவர் விடுதி என்ற தொடர் அமைகிறது.

தொடரமைப்பு வழிமுறைகள் வேறு வேறாக இருக்கும் நிலையில் தொடர்களும் வேறு வேறாகவே இருக்க வேண்டும். வேறு வேறான தொடர்கள் சில சூழல்களில் வடிவால் ஒன்றுபோலத் தோன்றும். பழைய மாணவர் விடுதி என்பது இந்த முறையில் உணரப்பட வேண்டும்.

முதல்வகைப் பகுப்பாய்வின்படி உருவான தொடரும், இரண்டாவது வகைப் பகுப்பாய்வின்படி உருவான தொடரும் உள்ளபடியே வேறு வேறு தொடர்கள். அவை வடிவால் ஒன்றுபோலத் தோன்றுகின்றன. எண்ணைக் குறிக்கின்ற ஆறு என்ற சொல்லும், நதியைக் குறிக்கின்ற ஆறு என்ற சொல்லும் வடிவால் ஒன்றாயினும் உள்ளபடியே வேறு வேறு சொற்கள். ஆறு என்பது பலபொருள் ஒரு சொல் அல்ல ;

பலபொருள் ஒரு சொல் போலி அவ்வாறே பழைய மாணவர் விடுதி என்பது பல்பொருள் ஒரு தொடர்ப்போலி என்று கொள்ளப்பட வேண்டும்.

இருவகை வழிமுறைகளில் வந்து இறுதியில் உருவால் ஒத்திருக்கும் இரு தொடர்களுக்கு இரண்டு பொருள்கள் இருப்பதில் வியப்பில்லை. இந்த உண்மைகளை விளக்க அண்மை உறுப்புப் பகுப்பாய்வு பெரிதும் உதவியிருக்கிறது. பொருள் மயக்கம் விளையத் தக்க சூழலில் அமைந்த அண்மை உறுப்புகள் பொருள் மயக்க அண்மை உறுப்பு என்று அழைக்கப்படுகின்றன. அண்மை உறுப்புப் பகுப்பாய்வைப் போலத் தொடரியலுக்குப் பல்வேறு வகையான ஆய்வு முறைகளை மொழியியல் உலகம் கண்டுள்ளது என்று முன்பே குறிப்பிட்டோம். தொடரமைப்பிலக்கணக் கொள்கையும் வகைமாற்றப் பலுக்கத் தொடரியல் கொள்கையும் (Transformational Generative Grammar) தம்முள் நெருக்கமான தொடர்பு கொண்டவை. இவை இரண்டைப் பற்றியும் தெரிந்து கொள்வது பெரிதும் வேண்டத்தக்கது.

தொடரமைப்பிலக்கணம் (Phrase Structure Grammar)

மொழியில் காணும் தொடர்களின் கட்டமைப்பை விளக்குகிற நோக்கில் இந்த இலக்கணம் எழுந்தது. அண்மை உறுப்புப் பகுப்பாய்வும் தொடர்கள் அமைந்துள்ள முறையை விளக்குவதுதான் என்றாலும் இவற்றிடையே குறிப்பிடத் தக்க வேறுபாடுகள் உண்டு. தொடரமைப்பு இலக்கணத்தின் இயல்பை விளங்கிக் கொள்ளும் போதே அந்த வேறுபாடுகளும் விளங்கும்.

ஒரு நீண்ட முற்றுத் தொடரில் பல சொற்களைக் காண்கிறோம். அந்தத் தொடரில் உள்ள சொற்கள் ஒரு குறிப்பிட்ட நெறிமுறையில் ஒன்றோடொன்று சேருகின்றன என்பதையும், அருகில் இருக்கின்றன என்பதாலேயே கண்டபடி ஒன்றோடொன்று சேருவதில்லை என்பதையும் முன்பே விளக்கினோம். குறிப்பிட்ட சொற்கள் குறிப்பிட்ட நெறி முறையில் சேரும்போதுதான் தொடர் உருவாகிறது. ஒரு தொடரே கூட முற்றுத் தொடராக அல்லது வாக்கியமாக அமையலாம். ஒன்றுக்கு மேற்பட்ட தொடர்கள் குறிப்பிட்ட நெறிமுறையில் ஒன்று சேர்ந்து அளவில் பெரிய முற்றுத் தொடரை உருவாக்கும். இந்தச் செய்திகளை எடுத்துக் காட்டுகளோடு மேலும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

(11) புத்தர் இந்தியாவில் பிறந்தார்

(12) பூ மணக்கிறது

(13) உங்கள் நண்பர் நீங்கள் அவருக்கு வாங்கித் தந்த புத்தகத்தை இன்று என்னிடம் தந்து படிக்கச் சொன்னார்.

தொடர் 11இல் மூன்று சொற்கள் உள்ளன. இந்தியாவில் என்பதும் பிறந்தார் என்பதும் சேர்ந்து ஒரு தொடர் ஆகிறது. பின்னர் புத்தர் என்பதனோடு அந்தத் தொடர் விளக்கம் ஒரு முற்றுத் தொடர் ஆகிறது. இந்த அளவு விளக்கம் அண்மை உறுப்புப் பகுப்பாய்விலேயே இருக்கிறது. தொடரமைப்பு இலக்கணம் பின்வரும் முறையில் மேலும் சிறப்பாக விளக்கமளிக்கிறது. தொடரமைப்பிலக்கணம் பின்வரும் முறையில் தொடர் 11ஐ விளக்கும்.



இந்தியாவில் என்பதும் பிறந்தார் என்பதும் சேர்ந்து உருவான தொடருக்கு அண்மை உறுப்புப் பகுப்பாய்வு பெயர் தரவில்லை. தொடரமைப்பிலக்கணம் பெயர் கொடுத்திருக்கிறது. தொடரமைப்பு இலக்கணம் எல்லாத் தொடர்களுக்கும் பெயர் கொடுக்கிறது. மேலே படத்தில் கண்ட செய்தியை விதிகளாக எழுதிக் காட்டலாம்.

விதி 1 : தொடர் ⇨ பெயர் + வினைத் தொடர்

விதி 2 : பெயர் ⇨ புத்தர்

விதி 3 : வினைத்தொடர் ⇨ இந்தியாவில் + பிறந்தார்.

விதி 3 இல் இன்னும் சீர்திருத்தம் செய்யலாம். சீர்திருத்தம் செய்தால் விதி 3 மேலும் விரிவு பெறும். மேலும் செம்மை செய்வது எப்படி என்று தொடர் 13ஐப் பகுப்பாய்வு செய்யும்போது விளக்குவோம்.

தொடர் 12ஐப் பாருங்கள். பூ மணக்கிறது என்ற தொடரில் இரண்டே சொற்கள் உள்ளன. இரண்டு சொற்களும் சேர்ந்து ஒரு தொடராக அமைகிறது. இந்தத் தொடரே முற்றுத் தொடராகவும் அமைகிறது. இரு சொற்களால் அமைந்த எல்லாத் தொடர்களும் முற்றுத் தொடர்கள் ஆவதில்லை. தொடர் 12 இரண்டு சொற்களால் ஆனது. அதுவே முற்றுத் தொடராகவும் அமைந்துள்ளது.

தொடர் 12 சிக்கல் இல்லாதது. விதியும் இந்தத் தொடருக்கு எளிதாகவே உள்ளது.

விதி 1 : தொடர் ⇨ பெயர் + வினை

பெயர் ⇨ பூ

வினை ⇨ மணக்கிறது

தொடர் 13ஐப் பகுப்பாய்வு செய்து பார்ப்போம்

உங்கள் நண்பர்		பெயரடை+பெயர்
நீங்கள் அவருக்கு வாங்கித் தந்த புத்தகத்தை	:	(பின்னால் விளக்கப்பெறும்)
இன்று	:	வினை அடை
என்னிடம் தந்து	:	வேற்றுமை ஏற்ற பெயர் +வி.எ.
படிக்கச் சொன்னார்	:	வி.எ.+வி.

மேற்கண்ட முறையில் சொற்கள் சேர்ந்து தொடர்கள் உருவாகின்றன. நீங்கள் அவருக்கு வாங்கித் தந்த புத்தகத்தை என்பது ஒரு தனி அலகு. அதற்கு உரிய தொடரமைப்பு வருமாறு.



இந்தத் தொடரமைப்புக்கு உரிய வாய்பாடு பின்வருமாறு அமையும்.

செயப்படுபொருள் தொடர்	⇨ பெயர்த்தொடர்- ஐ
பெயர்த் தொடர்	⇨ பெயரெச்சத் தொடர் - பெயர்
பெயரெச்சத் தொடர்	⇨ எழுவாய் - பெ.எ.தொ1
பெ.எ.தொ.	⇨ வே.ஏ.பெ - பெ.எ.தொ2



தொடர் 13 க்கு முழுமையாக இப்போது விதிகளை அமைத்துப் பார்க்கலாம்.


தொடர்
பெ.தொ
வி.தொ
பெ.தொ.
உங்கள்
நண்பர்
செ.பொ.வே.தா.
செ.பொ.வே.தொ.
நீங்கள் அவருக்கு வாங்கித் தந்த புத்தகத்தை
வி.தொ¹
வி.அ.
வி.அ
இன்று
வி.தொடா²
வி.எ.தொ
இ.வே.தொ
என்னிடம்
வி.எ.
தந்து
வி.தொ³
வி.எ.
படிக்கச்
வி
சொன்னார்.

நீங்கள் அவருக்கு வாங்கித் தந்த புத்தகத்தை என்ற பகுதி முன்பே விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

விதி	1	தொடர் ⇨ பெ.தொ. - வி.தொ
விதி	2	பெ.தொ. ⇨ பெ.அ-பெ
விதி	3	வி.தொ. ⇨செ. பொ.தொ - வி.தொ^{1}
விதி	4	செ.பொ.தொ ⇨ பெ.தொ - ஐ
விதி	5	பெ.தொ. ⇨ பெ.எ.தொ. - பெயர்
விதி	6	பெ.எ.தொ ⇨ பெயர் - பெ.எ.தொ^{1}
விதி	7	பெ.எ.தொ^{1} ⇨ வே.ஏ.பெ.- பெ.எ.
விதி	8	வி.தொ^{1} ⇨ வி.அ.- வி.தொ^{2}
விதி	9	வி.தொ^{2} ⇨ வி.எ.தொ - வி.தொ^{3}
விதி	10	வி.எ.தொ ⇨ வே.ஏ.பெ.-வி.எ.
விதி	11	வி.தொ^{3} ⇨ வி.எ.-வி.
விதி	12	பெ.அ ⇨ உங்கள்...
விதி	13	பெயர் ⇨ நண்பர், புத்தகம்,....
விதி	14	பெ.எ. ⇨ வாங்கித்தந்த
விதி	15	வே.ஏ.பெ. ⇨ எனக்கு,....
விதி	16	வி.அ. ⇨ இன்று,....
விதி	17	வி.எ. ⇨ தந்து,....
விதி	18	வி ⇨ சொன்னார்

இந்த விதிகளுக்கும் மேலே காட்டிய கிளைப் பிரிவுப் படத்திற்குப் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் கவனிக்க வேண்டும். தொடரமைப்டை விளங்கிக்கொள்ளப் படமும் விதிகளும் உதவும். இங்கே தந்துள்ள விதிகள் தொடர் 13ஐ ஒத்த பல்லாயிரக்கணக்கான தொடர்களுக்குட் பொருந்தும்.

அண்மை உறுப்புப் பகுப்பாய்வில் இப்படித் திட்டவட்டமாக விதிகள் வகுக்கப்படவில்லை. தொடர்களுக்கு இங்கே காண்பதுபோல் பெயர் தரப்படவில்லை. தொடரமைப்பு இலக்கணம் இப்படிப்பட்ட நோக்குகளில் சிறப்புடையதாக வரவேற்கப் பெற்றது.

தொடரமைப்பு இலக்கணம் ஒரு மொழியில் உள்ள தொடரமைப்பு வகைகள் எல்லாவற்றுக்கும் விதிவகுத்து அந்தத் தொடரமைப்பை வருவித்துக் காட்டும். தொடர் 12க்கு விதி வகுப்பது எப்படி என்றும், வருவித்துக் காட்டுவது எப்படி என்றும் இங்கே தெளிவுபடுத்திக்

கொள்வோம். தொடர் 12 பூ மணக்கிறது என இரண்டு சொற்களில் அமைந்துள்ளது.

விதி 1 தொடர் ⇨ பெயர் - வினை

விதி 2 பெயர் ⇨ பூ

விதி 3 வினை ⇨ மணக்கிறது

இதற்கு உரிய கிளைப் பிரிவுப் படத்தையும் புரிந்துகொள்ள வேண்டும்.



விதிகளின் மூலம் தொடர்களை வருவிக்கும் முறை

விதி 1ஐப் பயன்படுத்தும் போது பெயர் - வினை என்ற சங்கிலி கிடைக்கிறது. விதி 2ஐப் பயன்படுத்தும் போது பூ-வினை என்ற சங்கிலி கிடைக்கிறது. விதி 3ஐப் பயன்படுத்தும்போது பூ மணக்கிறது என்ற தொடர் கிடைக்கிறது. இந்த முறையில் தொடரமைப்பு இலக்கணம் எல்லாத் தொடர்களுக்கும் விதி வகுத்து விளக்கமும் தரும். தொடர் 13க்குத் தந்துள்ள விதிகளைப் பயன்படுத்தி அந்தத் தொடரையும் இவ்வாறே வருவிக்கலாம்.

தொடர்	பயன்பட்ட விதி
பெ.தெ-வி.தொ	1
பெ.அ-பெ-வி.தொ.	2
பெ.அ-பெ-செ.பொ.தெ-வி.தொ.1	3
பெ.அ-பெ-பெ.தொ.ஐ-வி.தொ.1	4
பெ.அ.-பெ-பெ.எ.தொ - பெ-ஐ-வி-தொ.1	5
பெ.அ.-பெ.பெ-எ.தொ.1-பெ-ஐ-வி.தொ.1	6
பெ.அ-பெ-பெ-வே.ஏ. பெ-பெ- எ-பெ-ஐ-வி.தொ 1	7
பெஅ-பெ-பெ-வே-ஏ.பெ.பெ.எ.பெ-ஐ-வி.அவி.தொ 2	8
பெ.அ-பெ- வே-ஏ.பெ-பெ-எ-பெ- ஐ- வி.அ. - பெ- வி.எ.தொ.வி.தொ 3	9
பெ.அ-பெ-வே.ஏ.பெ-பெ.எ-பெ- ஐ-வி.அ-வே.ஏ.பெ-வி.எ.வி.தொ3	10
பெ.அ-பெ-பெ-வே.ஏ.பெ-பெ-எ-பெ- ஐ-விஅ.வே.ஏ.பெ.-வி,எ.வி.எ-வி.	11

12 முதல் 18 வரை உள்ளவை சொல்வகை விதிகள். இந்த விதிகளைப் பயன்படுத்தித் தொடர் 13ஐ வருவிக்கிறோம்.

பெ.அ	பெ	பெ	வே.ஏ.பெ.
உங்கள்	நண்பர்	நீங்கள்	அவருக்கு
விதி12	விதி13	விதி13	விதி15

பெ.எ.	பெ.-ஐ	வி.அ
வாங்கித்தந்த	புத்தகம்-ஐ	இன்று
விதி14	விதி15	விதி16

வே.ஏ.பெ	வி.எ.	வி.எ	வி
என்னிடம்	தந்து	படிக்கச்	சொன்னார்
விதி15	விதி17	விதி17	விதி18

தொடரமைப்பிலக்கணம் அண்மை உறுப்புப் பகுப்பாய்வை விடச் சிறப்பாகச் செயற்படுகிறது என்பதில் ஐயமில்லை. தொடரமைப்பு இலக்கணம் பின்வரும் பணிகளைச் சிறப்பாகச் செய்கிறது.

1. தொடரமைப்புகளுக்கு விதி வகுத்து விளக்குகிறது.
2. கிளை வழி விளக்கப்படத்தில் காணும் ஒவ்வொரு கணுவுக்கும் தொடரமைப்பிலக்கணம் பெயர் கொடுக்கிறது.
3. தொடர்வகைகளைச் சுட்டிப் பேசவும் சிக்கல்களைக் கண்டறிந்து விளக்கவும் எளிதாக வழி வகுக்கிறது.

விரிவான செய்திகளுக்கு மேலும் படிக்கலாம்

1. Postal P.M (1964).
   Constituent structure; A study of contemporary models of syntactic Description, Indiana university Publications in Anthropology & Linguistics, Memoir 30.
2. C.F Hockett (1963).
   A Course in Modern Linguistics, New York.
3. Jean Aitchison (1989).
   Linguistics, Great Britain.
4. R.H. Robins (1991).
   General Lingustics, Longman. London & New York
5. டாக்டர் *முத்துச் சண்முகன்* (1979)
   இக்கால மொழியியல், மதுரை, இந்தியா.

6. John Lyons (1969)
Introduction to Theoretical Linguiststics, Cambridge University Press, Great Britain.
7. George Yule (1985)
The Study of Language, Cambridge University press London.

IV

வகைமாற்றப் பலுக்கத் தொடரியல்

தொடரமைப்பு இலக்கணம் பல நல்ல இயல்புகளைக் கொண்ட வலிமை வாய்ந்த இலக்கணமாகவே கருதப்பட்டது. ஆனாலும் தொடர்ந்து நிகழ்ந்து வந்த இலக்கணக் கோட்பாட்டு ஆய்வுகள் மேலும் வலிமை வாய்ந்த இலக்கணத்தை எதிர்நோக்கி நகர்ந்தன.

தொடரமைப்பிலக்கணத்தில் என்ன குறை?

தொடரமைப்பிலக்கணம் மொழியில் எல்லாத் தொடர் வகைகளுக்கும் விதி வகுக்கும் என்று உறுதியாக நம்ப இயலவில்லை. ஒரு மொழியில் உள்ள ஒலியன்களுக்கும் சொற்களுக்கும் எண்ணிக்கை வரம்பு உண்டு. ஆனால் தொடர்களுக்கு எண்ணிக்கை வரம்பு இல்லை. இயற்கை மொழியில் உள்ள தொடர்களின் நீளத்திற்கும் எல்லை இல்லை. எல்லையற்ற நீளம் கொண்ட தொடர்களைத் தொடரமைப்பு விதிகளால் வரையறுத்து விளக்க இயலாது. மொழியில் உள்ள எல்லாத் தொடர்களுக்கும் விதிவகுக்கத் தொடரமைப்பு இலக்கணத்தால் இயலாது. இந்தக் குறைபாடுகளை நீக்கினால்தான் செம்மையான இலக்கணத்தை உருவாக்க முடியும் என்ற உண்மை நன்கு உணரப்பட்டது. இப்படிப்பட்ட சூழலில்தான் வகைமாற்றப் பலுக்கத் தொடரியல் (Transformational Generative Grammar) உருவாயிற்று.

வகைமாற்றப் பலுக்கத் தொடரியல் மேலே குறிப்பிட்ட குறைகளிலிருந்து விடுபட்டு மொழியாராய்ச்சியை உயர் நிலைக்கு இட்டுச் சென்றது.

தொடரமைப்பு இலக்கணத்திற்குப் பின் தோன்றிய வகை மாற்றப் பலுக்கத் தொடரியல் ஆய்வு மேம்பாட்டு நோக்கில் பல்வேறு மாற்றங்களை ஏற்று வளர்ந்து வருகிறது.

தொடக்க நிலையில் வகைமாற்றப் பலுக்கத் தொடரியலில் தொடரமைப்புப் பகுதி, வகைமாற்றுப் பகுதி என இரண்டு பகுதிகளே இருந்தன. வகைமாற்றப் பலுக்கத் தொடரியல் என்ற பெயரே கூடப் பல் வேறு வடிவில் வழங்கியிருக்கின்றன.

வகைமாற்றத் தொடரியல்
வகைமாற்றத் தொடரிலக்கணம்

பலுக்கத் தொடரியல்

பலுக்கத் தொடரிலக்கணம்

வகைமாற்றப் பலுக்கத் தொடரியல்

மேற்கண்ட பல்வேறு பெயர்களில் இறுதியில் உள்ளதே முழுமையான பெயர். இந்தத் தொடரியலில் செந்தரக்கோட்பாடு (Standard Theory) என்று பலராலும் ஏற்கப்பெற்ற கோட்பாட்டு நிலை ஒன்று உண்டு. செந்தர நிலைக் கோட்பாட்டை ஒட்டி இங்கே நாம் வகைமாற்றப்பலுக்கத் தொடரியலை விளக்க இருக்கிறோம்.

வகைமாற்றப் பலுக்கத் தொடரியலில் தொடரமைப்பு இலக்கணத்தில் கண்டது போலவே, தொடரமைப்பு விதிகளைக் காணலாம். தொடரமைப்இலக்கணத்தில் கண்ட விதிகளிலிருந்து இவை சற்று மாறுபட்டிருக்கும். தொடரமைப்பு விதிகளோடு சொல்வழி விதிகளும் (Lexical Rules) இங்கே இடம்பெறும். இவற்றோடு தொடர்களைப் பல்வேறு வகையில் மாற்றியமைக்கிற ஒரு பகுதியும் இங்கே உண்டு. இந்தப் பகுதியை வகைமாற்றப்பகுதி என்று குறிப்பிடுகிறோம். இங்கே வரும் விதிகளை வகைமாற்று விதிகள் என்று குறிப்போம்.

வகைமாற்றப் பலுக்கத் தொடரியலில் மூவகை விதிகளைக் காணுகிறோம். தொடரமைப்பு விதி பல்வகைத் தொடரமைப்புகளை உருவாக்கும். சொல்வழி விதி தொடரமைப்பில் சொற்கள் வந்து சேர வழி வகுக்கும். வகைமாற்று விதி ஒரு குறிப்பிட்ட தொடரமைப்பின் மீது செயற்பட்டுத் தொடரமைப்பில் மாற்றத்தை உண்டாக்கும். மாற்றத்துக்கு உள்ளான தொடரமைப்பு மீண்டும் வகைமாற்று விதிகளால் மாற்றத்துக்கு உள்ளாகலாம்.

எண்ணிக்கைக்கு உட்பட்ட விதிகளைக் கொண்டு எண்ணிக்கைக்கு உட்படாத தொடர்களை உருவாக்கிக்காட்டும் விந்தையை வகைமாற்றப் பலுக்கத் தொடரியல் சிறப்பாகச் செய்து காட்டுகிறது.

தமிழில் சில எடுத்துக்காட்டுகளின் துணையோடு வகைமாற்றப் பலுக்கத் தொடரியலை விளங்கிக்கொள்ளலாம். கருத்து விளக்கத்திற்காக நம்முடைய வசதி கருதிச் சில தொடரமைப்பு விதிகளை அமைத்துக் கொள்வோம்.

தொடரமைப்புப் பகுதி

தொடரமைப்புகளை விளக்குகிற பாங்கில் இந்தப் பகுதியில் விதிகள் அமைக்கப்படும்.

விதி 1 தொடர் ⇨ பெ.தொ - வி.தொ.

விதி 2 பெ.தொ ⇨ (தொடர்) - (பெ.அ) -பெ.

விதி 3 வி தொ. ⇨ (வே.ஏ.பெ.தொ) - வி.தொ.1

விதி 4 வே.ஏ.பெ.தொ ⇨
{ செ.பொ.வே.தொ.
கருவி.வே.தொ.
உடனிகழ்ச்சி வே.தொ.
நோக்க வே. தொ.
இடவே.தொ. } (வே.ஏ.பெ.தொ)

விதி 5 செ.பொ.வே.தொ ⇨ பெ.தொ.ஐ

விதி 6 கருவி வே.தொ ⇨ பெ.தொ-ஆல்

விதி 7 உடனிகழ்ச்சி வே.தொ ⇨ பெ.தொ.-ஒடு

விதி 8 நோக்க வே.தொ ⇨ பெ.தொ-கு

விதி 9 இடவே. தொ ⇨ பெ.தொ.- இல்

விதி 10 வி.தெ1 ⇨ (வி.எ.தொ) வி.தொ2

விதி 11 { செய எ.தொ.
வி.எ.தொ. செய்து எ.தொ
செய்தால் எ.தொ } ⇨ (வி.எ.தொ.)

விதி 12 செய எ.தொ ⇨ தொ.செய.எ.விகுதி

விதி 13 செய்து எ.தொ ⇨ தொ-செய்து எ.வி.

விதி 14 செய்தால் எ.தொ ⇨ தொ.செய்தால் எ.வி.

விதி 15 வி.தொ2 ⇨ (வல்.அ) (வி.அ.)-வி

விதி 16 பெ.அ ⇨ நல்ல, பெரிய, சிறிய....

விதி 17 பெயர் ⇨ பையன், பெண், ஆசிரியர்....

விதி 18 வல்.அ. ⇨ மிகவும், மிக....

விதி 19 வி.அ ⇨ மெல்ல, நன்கு, உரக்க....

விதி 20 வி ⇨ பாராட்டு, சந்தி, புகழ்....

மேலே காணும் விதிகளை உருவாக்குவதிலும் ஆளுவதிலும் சில மரபுகள் உண்டு. அவற்றைப் படிப்படியாகப் பழகிக்கொள்ள வேண்டும்.

விதி 1 எப்படிப் படிக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தொடர் என்பது பெயர்த் தொடரும் வினைத் தொடரும் என்று விரிகிறது. இதில் ஒரு பகுதி பிறைக்கோட்டுக்குள் இருந்தால் அது விருப்ப உறுப்பாக அமையும், தொடர்ந்து நாம் மேலே செல்லச் செல்ல இந்த விதி சார்ந்த மரபுகள் படிப்படியாக விளங்கும்.

(14) ஆசிரியர் மாணவனைப் பாராட்டினார்

(15) அந்தப் பெண் நன்கு பாடுகிறாள்

(16) மாணவன் ஆசிரியரைச் சந்தித்தான்

தொடர் 14 எப்படி உருவாகிறது என்று ஆராய்ந்து பார்ப்போம்



நாம் மேலே தந்துள்ள விதிகள், ஆசிரியர் மாணவனைப் பாராட்டினார் என்ற தொடரை மேற்கண்ட முறையில் உருவாக்குகின்றன. விருப்ப உறுப்பாக அமைந்த பகுதிகள் தேவைக்கேற்ப விடப்பட்டுள்ளன. ஏனைய தொடர்களையும் விதிகளோடு பொருத்திப் பார்க்கலாம்.





வகைமாற்றப் பலுக்கத் தொடரியலை விளங்கிக்கொள்வதற்காக நம்முடைய தேவைக்கேற்ற முறையில் சில தொடரமைப்பு விதிகளை மேலே தந்து தொடர்களை அவற்றோடு பொருத்தி விளக்கினோம். இந்தப் போக்கில் விரிவான முறையில் தொடரமைப்பு விதிகள் இடம் பெறவேண்டும். இவற்றை அடுத்துச் சொல்வழி விதிகள் அமையும். இறுதியில் வகைமாற்று விதிகள் சிக்கல்வாய்ந்த எல்லாத் தொடரமைப்புகளையும் முறையாக அமைத்துக்கொடுக்கும்.

தொடரமைப்புப் பகுதியின் ஓர் உட்பிரிவு போலவே சொல்வழி விதிப் பகுதி அமைகிறது அம்புக் குறிக்கு வலப்பக்கம் சொற்களைத் தரும் விதிகள் யாவும் சொல்வழி விதிகளே. மேலே 16 முதல் 20 வரை உள்ள விதிகள் சொல்வழி விதிகள்.

வகைமாற்ற விதிப் பகுதி

தொடரமைப்பு விதிகளின் மூலம் நமக்குக் கிடைக்கும் அமைப்புகள் எண்ணிறந்தன. விதிகளின் மூலம் கிடைக்கும் அமைப்புகளைக் குறிப்பிட்ட நெறிமுறையில் வகைமாற்றம் செய்வதுதான் வகைமாற்று விதிகளின் வேலை. தொடரமைப்பு விதிகளின் மூலம் பின்வரும் அமைப்பு கிடைப்பதாக வைத்துக்கொள்வோம்.



இந்தப் படத்திற்கு உரிய தொடரமைப்பு விதிகள் பின்வருமாறு அமையும்

அ ⇨ இ + உ

உ ⇨ எ + ஒ

இந்த இரண்டு விதிகளின் மூலம் மேற்கண்ட அமைப்பு கிடைத்தது. இந்தக் குறிப்பிட்ட தொடரமைப்பை இ-எ-ஒ என்று நாம் குறிப்பிட்டுச் சுட்டலாம். இ-எ-ஒ என்பது அமைப்பு விளக்கம். வகைமாற்று விதி ஒரு அமைப்பை இன்னொரு அமைப்பாக மாற்றுகிறது.

இ-எ-ஒ

இ-ஒ-எ

மேற்கண்ட விதியை ஊன்றிக் கவனியுங்கள். எ.ஒ ஆகிய இரண்டும் இடம் மாறி இருக்கின்றன. இ-எ-ஒ என்பது அமைப்பு விளக்கம், இ-ஒ-எ என்பது அமைப்பு மாற்றம் , வகைமாற்ற விதி இப்படி உறுப்புகளை இடம் மாற்றும்; புதிதாக ஒன்றைக்கொண்டு வந்து சேர்க்கும்; இருக்கிற ஒன்றை நீக்கும். இப்படி வகைமாற்ற விதிகள் பல்வேறு பணிகளைச் செய்யும்.

வகை மாற்ற விதிகள் தொடரமைப்பு விதிகளோடு இணைந்த பிறகுதான் இலக்கணத்தின் வலிமை பன்மடங்காகப் பெருகியது. தொடரமைப்பு இலக்கணத்தில் கண்ட குறைகளை யெல்லாம் வகைமாற்றப் பலுக்கத் தொடரியல் முழுமையாக நீக்கியது.

(17) நான் நீங்கள் கொடுத்த புத்தகத்தைப் படித்தேன்.

(18) நான் அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னேன்.

தொடர்கள் 17, 18 சற்றே சிக்கல் வாய்ந்த தொடர்கள். தொடர் 17-இல் நான் புத்தகத்தைப் படித்தேன் என்பது தெளிவாகத் தெரிகிற புறத்தொடர். நீங்கள் கொடுத்த புத்தகத்தை என்ற தொடருக்குள் ஒரு பொதி தொடர் இருக்கிறது. பொதி தொடர்கள் புறத்தொடர்களில் பொதியப்படுகின்றன. தொடர்களில் காணும் பொதிவு பற்றிய உண்மைகள் வகைமாற்ற விதிகளின் மூலம் உணர்த்தப்படுகின்றன.

தொடர் 17 எப்படி உருவாகியுள்ளது என்று பார்ப்போம்.

பொதி தொடரில் உள்ள புத்தகம் என்ற பெயரும், புறத்தொடரில் உள்ள புத்தகம் என்ற பெயரும் ஒன்றே.

இப்படி ஒரே பெயர் அல்லது பெயர்த்தொடர் இரண்டிடங்களில் வந்தால் பொதி தொடரில் அந்தப் பெயரை நீக்கிவிடலாம். பெயரை நீக்கிய உடனே பெயரோடு சேர்ந்த வேற்றுமை உருபும் நீங்கி விடுகிறது.

இரட்டிப்புப் பெயர் நீக்க விதியும் வேற்றுமை உருபு நீக்க விதியும் செயற்பட்ட பிறகு தொடரமைப்பே மாறிவிடுகிறது.

வ.மா.விதி.1

அ.வி.பெ.தொ -	பெ.தொ.	பெ.	ஐ.	வி
1	2	3	4	5

பெ	ஐ	வி
6	7	8

2 3 4 5 ஒரு பொதி தொடர்

3-6

அ.மா. : 12005678

அ.வி. : அமைப்பு விளக்கம்

அ.மா : அமைப்பு மாற்றம்

வகைமாற்ற விதி 1 : இரட்டிப்புப் பெயரை நீக்கி வேற்றுமை உருபையும் நீக்கிய பிறகு கிடைத்த தொடர் அமைப்பு மாற்றத்துக்கு உள்ளான தொடர். வகைமாற்ற விதியில் மூன்று கூறுகள் இருக்கும்.

1. அமைப்பு விளக்கம்
2. சூழல்


தொடர்
பெ.தொ
வி.தொ
பெ.
வி
செ.பெயா.வே.தொ
வே.வி
பெ.தொ.
பெ.தொ.1
பெ
தொ.1
வி.தொ
வி
செ.பெயா.வே.தொ
வே.உ
பெ.
பெ.தொ
பெ.
நான் நீங்கள் புத்தகம் ஐ கொடுத்தீர்கள் புத்தகம் ஐ படித்தேன்
நான் நீங்கள் 0 0 கொடுத்த புத்தகத்தைப் படித்தேன்.

3. அமைப்பு மாற்றம்

மேற்கண்ட விதியில் மூன்று கூறுகளும் உள்ளன. சில வேளைகளில் சூழலை வெளிப்படையாகச் சொல்லத் தேவையில்லாமல் இருக்கலாம்.

அமைப்பு மாற்றத்துக்குப் பிறகு அந்தப் புதிய அமைப்பில் இன்னொரு வகைமாற்ற விதி செயற்படலாம்.

வகை மாற்ற விதி 2 :

அ.வி. :	பெ.தொ -	பெ.தொ	வி-	பெ.ஐ.		வி
	1	2	3	4	5	6

அ.மா.: 1 2 3+பெ.எ.வி.4 5 6

மேலே கண்ட விதியை எச்சஞ்சார் பெயர்த்தொடராக்க விதி என்று குறிப்பிடலாம். இந்த விதி செயற்பட்ட பிறகுதான் நீங்கள் கொடுத்த புத்தகம் என்ற வடிவம் கிடைக்கிறது.

இந்த விதி செயற்பட்ட பிறகு நான் நீங்கள் கொடுத்த புத்தகத்தைப் படித்தேன் என்ற தொடர் கிடைக்கிறது.

இவ்வாறே தொடர் 18க்கும் எளிதாக இப்போது விதியும் விளக்கமும் கூறலாம்.

வகைமாற்ற விதிகளின் துணையோடு வகைமாற்றப்பலுக்கத் தொடரியல் வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்து வருகிறது. இதன் வளர்ச்சி நிலைகளை விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் பல நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும்.

வளர்ந்து வரும் மொழியியல் துறையில் வகைமாற்றப் பலுக்கத் தொடரியல் கோட்பாடு மிக நுட்பமாகவும் தொடர்ச்சியாகவும் வளர்ந்து வருகிறது.

பலுக்கத்தொடரியல்வாணர்களிலேயே பல்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுபவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குள் அடிப்படையில் முரண்பாடு ஒன்றுமில்லை. பல்வேறு வகையாகப் பரிசோதனை முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விரிவான செய்திகளுக்கு மேலும் படிக்கலாம் :

1. Noam Chomaky(1965)
Aspects of the Theory of Syntax, Cambridge, Mass

2. S. Agasthialingam (1967)
A Generative Grammar of Tamil (A fragment of Tamil Syntax) Annamalai Nagar, India.

3. P. Kothandaraman (1972)
Studies in Tamil Linguistics Tamil Nuulagam., Madras.

4. Noam Chomsky (1996)
The Minimalisit Program. The MIT Press, Cambridge, Mass.

5. Andrew Redford (1989)
Transformational Grammar, First Course, Cambridge University press. Cambridge, NewYork.

இயல் எட்டு

பெயர்த்தொடர் அமைப்பு

இயல் எட்டு

பெயர்த்தொடர் அமைப்பு

மொழியில் உள்ள எல்லா வாக்கியங்களையும் இரு பெருங் கூறுகளாகப் பிரிக்கலாம். மரபு இலக்கணக்காரர்கள் இவற்றை எழுவாய் (**Subject**) என்றும், பயனிலை (**Predicate**) என்றும் கூறுவார்கள். எழுவாய் என்பது வாக்கியத்தின் முதல் பகுதியாகவும், பயனிலை என்பது இரண்டாம் பகுதியாகவும் செயற்படுகின்றன. எழுவாயும் பயனிலையும் வெவ்வேறு மொழி உறுப்புகளால் ஆனவை. பொதுவாக, எழுவாய் என்பது பெயர்த் தொடரால் ஆனது. பெயரைத் தலைமையாகக் கொண்டு மற்ற உறுப்புகள் இயங்குவதால் இதனைப் பெயர்த்தொடர் (**Noun Phrase**) என்று அழைக்கிறோம். தொடர் எந்த இலக்கண வகையை (**Grammatical Category**) தலைமையாக (**Head**) கொண்டு செயற்படுகிறதோ அதன் அடிப்படையிலேயே அத்தொடரின் பெயரைக் குறிப்பிடுகிறோம். சான்றாக, வினையைத் தலைமையாகக் கொண்டு செயற்படுகிற தொடரை வினைத்தொடர் (**Verb Phrase**) என்றும், பெயரடையைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் தொடரைப் பெயரடைத் தொடர் (**Adjectival Phrase**) என்றும், வினையடையைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் தொடரை வினையடைத்தொடர் (**Adverbial Phrase**) என்றும் மொழியியலார் கூறுவார்கள்.

நாம் இந்தக் கட்டுரையில் பெயர்த்தொடரின் அமைப்பைப் பொதுவாகவும் மேலோட்டமாகவும் விவரிப்போம். முன்பே குறிப்பிட்டதைப் போலப் பெயர்த்தொடர் என்பது பெயரைத் தலைமையாகக் கொண்டு தனியாகவோ மற்ற மொழி உறுப்புகளுடன் சேர்ந்தோ இயங்குவது. சான்றாக,

1) கண்ணன் வந்தான்

2) இராமன் பேசினான்

வாக்கியங்கள் (1) இலும், (2) இலும் **கண்ணன்** என்ற பெயரும் **இராமன்** என்ற பெயரும் வருகின்றன. பெயர் மட்டும் இவ்வாக்கியங்களில் இடம் பெற்றிருந்தாலும் அவை பெயர்த்தொடர் என்றே அழைக்கப்படும். இவ்வாக்கியங்கள் (1) உம், (2) உம் பெயர்த்தொடராலும் வினைத் தொடராலும் உருவாக்கப்பட்டவை.

3) பெயர்த்தொடர் + வினைத்தொடர்

பெயர்த்தொடரில் இடம்பெறும் பெரும்பாலான உறுப்புகள் பெயருக்கு இடப்பக்கத்தில் வருகின்றன. சான்றாக,

4) அந்தச் சிறிய ஊர்

5) இரண்டு பெரிய வீடுகள்

6) அந்த உயரமான மலை

போன்ற பெயர்த்தொடர்களை எடுத்துக்கொள்வோம். இவற்றில் **ஊர், வீடுகள், மலை** ஆகிய பெயர்கள் தலைமையாகச் செயற்படுகின்றன. அந்த என்ற அடைகொளியும் (Determiner) **இரண்டு** என்ற எண்ணுப் பெயரடையும் (Numeral Adjective) **சிறிய, பெரிய, உயரமான** ஆகிய பெயரடைகளும் (Adjectives) பெயர்த்தொடரின் உறுப்புகளாகச் செயற்படுகின்றன. இந்தச் சான்றுகளில் பெயர்கள் (Nouns) தொடரின் இறுதியிலும், அடைகள் (Modifiers) பெயருக்கு இடப்பக்கத்திலும் வருகின்றன.

அடை

பெயர்த்தொடரில் பல்வேறு உறுப்புகள் பெரும்பாலும் பெயருக்கு இடப்பக்கத்தில் வருவதை நாம் மேலே குறிப்பிட்டிருந்தோம். பெயருக்கு முன்னால் வருகின்ற உறுப்புகள் அனைத்தும் பெயரைத் தழுவியோ பண்புகளைச்சுட்டியோ வருவதாக அமைகின்றன. பெயருக்கு முன்னால் வரும் அனைத்து உறுப்புகளையும் அடை என்ற வகையில் அடக்கலாம். பல்வேறு தொடரியல் காரணங்களின் அடிப்படையில் நாம் இவ்வடைகளில் மேலும் உட்பகுப்பை ஏற்படுத்தலாம்.

அடைகொளி

தமிழில் **அந்த, இந்த** போன்ற அடைகொளிகள் பெயர்த் தொடர்களில் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக,

7) அந்தப் பையன்

8) இந்த வீடு

அந்த, இந்த என்ற அடைகொளிகள் பொருள் உள்ள இடத்தைச் சுட்டுவதாக அமைந்துள்ளன. இத்தொடர்களை உருவாக்குகின்ற பேசுவோன் (Speaker) தன்னுடைய பார்வைக்குள் உள்ள பொருள்களை அடைகொளிகள் மூலம் குறிப்பிடுகிறான். அருகில் உள்ள பொருள்களை **இந்த** என்ற அடைகொளியாலும், தூரத்தில் உள்ள பொருள்களை **அந்த** என்ற அடைகொளியாலும் குறிக்கிறான். இந்த அடைகொளிகள் பேசுவோன் பார்வையின் எல்லைக்குள் இருக்கும் பொருள்களை அண்மை / சேய்மை என்ற அடிப்படையில் பாகுபடுத்தியதை நாம் சுட்டிக்காட்டினோம். இந்த அடைகொளிகளுக்குள் **அந்த** என்ற அடைகொளி பார்வையின் எல்லைக்குள் வராத பொருள்களையும் சுட்டப் பயன்படுத்தப்படுகிறது.

9) நேற்று அடிபட்ட அந்தப் பையன் வகுப்புக்கு வரவில்லை.

10) நேற்று விளையாடிய அந்தச் சிறுமி காணாமல் போய்விட்டாள்.

வாக்கியங்கள் (9), (10) ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள **நேற்று அடிபட்ட அந்தப் பையன்** என்ற பெயர்த்தொடரிலும், **நேற்று விளையாடிய அந்தச் சிறுமி** என்ற பெயர்த்தொடரிலும் உள்ள **அந்த** என்ற அடைகொளி பேசுவோனுக்கு முன் உள்ள பொருளைச் சுட்டுவதாக அமையவில்லை. ஆனால் பேசுவோன் நினைத்துக் குறிப்பிடுகின்ற அதே பொருளைக் கேட்போனும் (Hearer) உணர்வதற்காக **அந்த** என்ற அடைகொளி இங்குப் பயன்படுத்தப்படுகிறது. அண்மை / சேய்மை என்ற அடிப்படையில் பார்வையின் எல்லைக்குள் உள்ள பொருள்களைச்சுட்ட அடைகொளிகள் பயன்படுகின்றன என்று நாம் மேலே குறிப்பிட்டோம். இதுவன்றி ஒரு தொகுதியில் (Set) உள்ள எந்த ஒரு பொருளைப் பேசுவோனும் கேட்போனும் உணர்ந்திருக்கிறார்களோ அதை உணர்த்தவும் **அந்த** என்ற அடைகொளி பயன்படுத்தப்படுகிறது. இங்குக் குறிப்பிட்டுள்ள பொருளை உணரப் பெயர்த்தொடர்கள் (11) ஐயும் (12) ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

11) காலை ஓடிய அந்தக் குதிரை

12) காலை ஓடிய ஒரு குதிரை

இங்குக் கூறப்பட்டுள்ள **அந்த** என்ற அடைகொளியின் பயன்பாடு ஆங்கிலத்தில் உள்ள the என்ற சொல்லின் பயன்பாட்டோடு நெருக்கமாக இருக்கும்.

பெயர்த்தொடர் அமைப்பை விளக்கும்பொழுது இரண்டு செய்திகளை மனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாகக் கவனிக்கப்பட வேண்டியது ஒரு பெயர்த் தொடருக்குள் வரக்கூடிய இலக்கண வகைகள்ஆகும். இவ்விலக்கண வகைகள் பெயர்த்தொடரின் உறுப்புகளாக வரும்பொழுது அவை எந்த முறைமையில் வருகின்றன என்பது இரண்டாவதாகக் கவனத்தில் கொள்ளவேண்டியதாகும்.

13) அடைகொளி + பெயரடை + பெயர்

இது பெயர்த்தொடருக்குள் வருகின்ற இலக்கண வகைகளைக் குறிப்பதோடு அவை வருகின்ற முறைமையையும் (Order) காட்டுகிறது. சில நேரங்களில் இம்முறைமை நெகிழ்வாகவும் அமைய வாய்ப்புண்டு.

14) **அந்தக்** குள்ளமான மனிதன்

15) குள்ளமான **அந்த** மனிதன்

16) **அந்தச்** சோகமான வரலாறு

17) சோகமான **அந்த** வரலாறு

அந்த என்பது (14) இலும் (16) இலும் தொடரின் முதலில் வந்துள்ளது. ஆனால் (15) இலும் (17) இலும் தொடரின் இடையில் வந்துள்ளது. அடைகொளியும்பெயரடையும் தொடருக்குள் வருகின்ற முறைமையில் நெகிழ்வுத் தன்மை உள்ளது. இதேபோல் அடைகொளியும் பெயரெச்சத் தொடரும் (Relative Clause) பெயர்த்தொடருக்குள் வரும்பொழுது இத்தகைய நெகிழ்வை வரும் முறைமையில் நாம் காண முடிகிறது.

18) **அந்தப்** போர்க்குணம் கொண்ட மக்கள்

19) போர்க்குணம் கொண்ட **அந்த** மக்கள்

20) **அந்த** நெடிய மரங்கள் நிறைந்த காடு

21) நெடிய மரங்கள் நிறைந்த **அந்தக்** காடு

இங்கு **அந்த** என்ற சுட்டடை (18) இலும் (20) இலும் பெயரெச்சத் தொடருக்கு முன்னும் (19) இலும் (21) இலும் பெயரெச்சத் தொடருக்குப் பின்னும் வருகிறது. அடைகொளியும் பெயரெச்சத்தொடரும் பெயர்த்தொடரில் வரும் முறையில் நெகிழ்வுள்ளதை இது காட்டுகிறது.

(13) இல் பெயர்த்தொடர் அமைப்பில் வரும் மூன்று இலக்கண வகைகளைச் சுட்டினோம்.

பெயரடை என்பது மேலும் சில உட்பிரிவுகளைக் கொண்டது. மேலோட்டமான நிலையில் இதை இருபெரும் உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அ) விளக்கப் பெயரடை; (ஆ) எண்ணுப் பெயரடை.

22) அந்த **அழகிய** மக்கள்

23) அந்தச் **சிறிய** மலை

இச்சான்றுகளில் **அழகிய, சிறிய** ஆகியவை பெயரின் குணத்தை / இயல்பை விவரிக்கிறது. ஆகையால் பெயரடைக்குள் விளக்கப் பெயரடை (Descriptive Adjective) என்ற உட்பகுப்பை ஏற்படுத்துகிறோம்.

24) அந்த வீரமான பத்துப் பையன்கள்

25) அந்தச் சிறிய மூன்று மலைகள்

இங்குப் **பத்து, மூன்று** ஆகிய எண்களைக் குறிக்கும் சொற்கள் அடைகளாக வந்துள்ளதால் இவற்றை எண்ணுப் பெயரடை (Numeral Adjective) என்று கூறுகிறோம். (13) ஐப் பின் வருமாறு விரிக்கலாம்.

26) அடைகொளி + விளக்கப்பெயரடை + எண்ணுப்பெயரடை + பெயர்

எண்ணுப்பெயரடைகளை மேலும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

27) அந்தக் குள்ளமான மூன்று மனிதர்கள்

28) அந்த மூன்றாவது உயரமான ஆள்

(27) இல் **மூன்று** என்ற இயல் எண்ணும் (Cardinal Numeral) (28) இல் மூன்றாவது என்ற இட எண்ணும் (Ordinal Numeral) வருகின்றன. ஆகையால் எண்ணுப் பெயரடைகளை இயல் எண்ணென்றும், இட எண்ணென்றும் பிரிக்கலாம் என்பதை மேலே காட்டிய சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. இவை இரண்டும் இணைந்தும் பெயர்த் தொடரில் வரும்.

29) அந்த நான்காவது ஆறு பையன்கள்

30) அந்தப் பத்தாவது ஐந்து பையன்கள்

நான்காவது என்ற இட எண்ணும் ஆறு என்ற இயல் எண்ணும் (29)இல் இணைந்து வருகின்றன. இதே போன்று **பத்தாவது** என்ற இட எண்ணும் **ஐந்து** என்ற இயல் எண்ணும் (30) இல் இணைந்து வந்துள்ளன. இவை விளக்கப் பெயரடையோடும் இணைந்து வரும்.

31) அந்த உயரமான நான்காவது ஆறு பையன்கள்

32) அந்த அழகான பத்தாவது ஐந்து பையன்கள்

(26) இல் சுட்டிக்காட்டிய இலக்கண வகைகளை இன்னும் விரிவுபடுத்திக் காட்டலாம்.

33) அடைகொளி + விளக்கப்பெயரடை + இட எண் + இயல் எண் + பெயர்

நாம் மேலே குறிப்பிட்டுள்ள பெயர்த்தொடரின் அமைப்பு இன்னும் சில பெயர்த்தொடர்களின் அமைப்பைக் கவனத்தில் கொள்ளவில்லை.

34) என்னுடைய பேனா

35) என்னுடைய கணவன்

36) என்னுடைய கை

இவற்றில் தலைமையாகச் செயற்படும் பெயருக்கு முன்னால் ஆறாம் வேற்றுமையாகிய உடைமைப்பொருளைக் குறிக்கும் **என்னுடைய** என்ற சொல் வந்துள்ளது (34-36). பெயர்த்தொடர்களில் வந்துள்ள உடைமைப் பொருளுக்குள் நாம் மேலும் சில வேறுபாட்டைக் காணலாம். (34),(35) ஆகிய பெயர்த்தொடர்களில் வரும் பெயரான **பேனா** என்பதும், **கணவன்** என்பதும் என்னிடமிருந்து பிரிந்து நிற்பவை; இருப்பினும் அவை எனக்குரியவை. ஆனால் பெயர்த்தொடர் (36) இல் வரும் **கை** என்பது என்னிடமிருந்து பிரிக்க இயலாதது. உரியவரிடமிருந்து பிரிக்க இயலாத ஒன்றை (36 இல் வருவது போன்றவை) தற்கிழமை (Inalienable Possession) என்றும், உரியவரிடமிருந்து பிரிந்து நிற்பவற்றைப் பிறிதின்கிழமை (Alienable Possession) என்றும் இலக்கணக்காரர்கள் கூறுவார்கள். இப்பிரிவு உடையவருக்கும் உடைமைப் பொருளுக்கும் உள்ள உறவின் வேறுபாட்டைக் காட்டுகிறது.

இத்தகைய பெயர்த்தொடர்களிலும் விளக்கப் பெயரடையும், எண்ணும் இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

37) என்னுடைய மூன்று பேனாக்கள்

38) என்னுடைய அழகான குழந்தைகள்

39) என்னுடைய உயரமான மூன்றாவது பையன்

அந்த என்ற அடைகொளிக்கும் தலைமைப் பெயருக்கும் இடையில் வருகின்ற இலக்கண வகைகள் **என்னுடைய** என்ற உடைமைத் தொடருக்கும் (Possessive Phrase) தலைமைப் பெயருக்கும் இடையில் வருகின்றன என்பதைச் சான்றுகள் (37),(39) மூலம் விளக்கலாம். தொடர்கள் (40),(41) ஏற்றுக் கொள்ளக்கூடியவை; (42),(43) ஏற்றுக் கொள்ள இயலாதவை.

40) என்னுடைய அந்தப் பேனா

41) கண்ணனுடைய இந்த மாடு

42) * அந்த இராமனுடைய வில்

43) * இந்த உன்னுடைய பணம்

இப்பெயர்த்தொடர்கள் (42-43) ஏற்றுக்கொள்ள இயலாதவை என்ற முடிவுக்கு வருவோமேயானால் அடைகொளியும் உடைமைத் தொடரும் ஒரே பெயர்த்தொடரில் வரும் முறைமை கட்டுப்படுத்தப்படுகிறது. அடைகொளியும் உடைமைத்தொடரும் இணைந்து (40-41) இல் காட்டிய முறைமையில் வருகிறதெனில் (33) ஐப் பின்வருமாறு எழுதலாம்.

44) உடைமைத்தொடர் + அடைகொளி + பெயரடை + இட எண்ணடை + இயல் எண்ணடை + பெயர்

பெயர்த்தொடரில் பெயரெச்சத்தொடரும் உறுப்பாக வருவதை நாம் குறிப்பிட வேண்டும்.

45) நேற்று வீட்டில் விளையாடிய குழந்தை

46) சென்ற தேர்தலில் தோற்ற அமைச்சர்

47) காவிரி நீரை எதிர்பார்க்கும் மக்கள்

(45),(47) இல் **நேற்று வீட்டில் விளையாடிய**, **சென்ற தேர்தலில் தோற்ற, காவிரி நீரை எதிர்பார்க்கும்** ஆகிய பெயரெச்சத் தொடர்கள் **குழந்தை, அமைச்சர், மக்கள்** ஆகிய தலைமைப் பெயர்களைத் தழுவி அமைந்துள்ளன. பெயரெச்சத்தொடர் என்பதும் பெயர்த் தொடரின் உறுப்பாக அமைந்துள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள செய்தியையும் உள்ளடக்க வேண்டுமென்றால் பெயர்த்தொடரின் அமைப்பைப் பின் வருமாறு காட்டலாம் :

48) பெயரெச்சத்தொடர் + பெயர்

இதை நாம் மாற்ற வேண்டியிருக்கிறது. பெயரெச்சத்தொடர் தலைமைப் பெயரோடு வருவதோடு மற்ற இலக்கண வகைகளுடனும் இணைந்து வருவதை நாம் காண முடிகிறது.

49) பல்கலைக்கழகத்திற்கு நாளை வரும் நாட்டின் முக்கிய அமைச்சர்

50) நம் நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்த மாபெரும் தியாகிகள்

51) நம் பொருளாதாரத்தைச் சுரண்டும் மேற்கத்திய தாராளமயமாக்கக் கொள்கை

(49) இல் **நம் பல்கலைக்கழகத்திற்கு வரும்** என்ற பெயரெச்சத்தொடர் **நாட்டின் முக்கிய** என்பது போன்ற மற்ற இலக்கண வகைகளுடன் இணைந்து வருகிறது. இதுபோன்று (50), (51) ஆகியவற்றில் **நம் நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்த, நம் பொருளாதாரத்தைச் சுரண்டும்** போன்ற பெயரெச்சத்தொடர்கள் **மாபெரும், மேற்கத்திய தாராளமயமாக்க** போன்ற மற்ற இலக்கண வகைகளுடன் இணைந்து வருவதை நாம் பார்க்கிறோம். இவற்றை உள்ளடக்கிய பெயர்த்தொடரின் அமைப்பை (52) காட்டுகிறது.

52) பெயரெச்சத்தொடர் + அடைகொளி + விளக்கப்பெயரடை+ இட எண்ணடை + அயல் எண்ணடை + பெயர்

53) வீட்டிற்கு ஓடி வந்த அந்தக் கருப்பான ஆறு திருடர்கள்

54) என்னைப் பார்க்க வந்த என்னுடைய அன்பான நான்காவது பெண்.

பெயரெச்சத்தொடர் பெயர்த்தொடரின் மற்ற இலக்கண வகைகளோடு இணைந்து வருகிறது. இதை முடிப்பதற்கு முன் வேறொரு செய்தியையும் நாம் இங்குக் குறிப்பிட்டுவிடலாம்.

எண்ணடை என்பதன்கீழ் இயல் எண்ணடையும், இட எண்ணடையும் வருமென்று நாம் முன்பு குறிப்பிட்டோம். கீழே குறிப்பிட்டுள்ள தொடர்களைப் பார்ப்போம்.

55) ஒரு சில புத்தகங்கள்

56) அந்தப் பல புத்தகங்கள்

சில, பல போன்றவை எண்ணுப் பெயரடைகளுடன் வருவதை நாம் ஒத்துக்கொள்வதில்லை.

57) * அந்தப் பல நூறு புத்தகங்கள்

58) * ஒரு சில பத்து மனிதர்கள்

ஆனால் **எல்லா** என்ற அளவடை (Quantifier) பெயர்த்தொடரில் தனியாகவும் வரும்; எண்ணுப்பெயரடையுடனும் வரும்.

59) அந்த எல்லாப் பையன்களும்

60) அந்த எல்லா நூறு மனிதர்களும்

எல்லா என்பது அளவடையாக வரும்பொழுது தலைமைப் பெயருடன் - **உம்** என்ற விகுதி கட்டாயமாக வரும். (61) உம் (62) உம் வழுவானவையாகக் கருதப்படும்.

61) * அந்த எல்லாப் பைய்யன்கள்

62) * அந்த எல்லா ஆயிரம் மனிதர்கள்

நாம் இதுவரை தலைமைப் பெயருக்கு முன்னால் (இடப் பக்கத்தில்)அடைகள் வரும் பெயர்த்தொடர்களின் அமைப்பை விளக்கினோம். பெயர்த்தொடர்களில் தலைமைப் பெயருக்குப் பின்னாலும் (வலப்பக்கத்திலும்) சில இலக்கண வகைகள் வருவதை நாம் இப்பொழுது விளக்குவோம்.

63) மாணவர்கள் நால்வர்

64) தலைவர்கள் பத்து பேர்

65) மாடுகள் ஆயிரம்

(63), (64), (65) ஆகிய பெயர்த்தொடர்களில் தலைமைப் பெயர்களாக **மாணவர்கள், தலைவர்கள், மாடுகள்** ஆகியவை செயற்படுகின்றன. **நால்வர், பத்து பேர், ஆயிரம்** ஆகியவை தலைமைப் பெயரை விவரிக்கும் அடைகளின் தன்மையோடு செயற்படுகின்றன. இவை

66) நான்கு மாணவர்கள்

67) பத்துத் தலைவர்கள்

68) ஆயிரம் மாடுகள்

ஆகிய பெயர்த்தொடர்களுடன் தொடர்புடையவை.இங்கு எண்ணுப் பெயரடைகள் தலைமைப் பெயருக்கு முன்னாலும், (63-65) இல் இவை தலைமைப் பெயருக்குப் பின்னாலும் வருவதை நாம் பார்க்கிறோம். **ஒன்று, இரண்டு** ஆகிய எண்ணுப் பெயரடைகள் தலைமைப் பெயருக்கு முன்னால் வரும்பொழுது **ஒரு, இரு** ஆகிய வடிவங்களில் வரும்.

69) ஒரு தெய்வம்

70) இரு உலகம்

தலைமைப் பெயருக்குப் பின்னால் **ஒன்று, இரண்டு** என்ற வடிவங்களில் வரும். ஒரு, இரு ஆகிய வடிவங்களைக் கொண்ட எண்ணுப் பெயரடை தலைமைப் பெயருக்குப் பின்னால் வராது.

71) தெய்வம் ஒன்று

72) * தெய்வம் ஒரு

73) உலகம் இரண்டு

74) * உலகம் இரு

தலைமைப் பெயர் உயர்திணையாக அமையும்பொழுது எண்ணுப் பெயரடைகளுடன் உயர்திணைப்பாலைக் காட்டும் விகுதியோ **பேர்** என்னும் சொல்லோ வரும்.

75) தேவர் இருவர் / இரண்டு பேர்

76) பாண்டவர்கள் ஐவர் / ஐந்து பேர்

தலைமைப் பெயர் அஃறிணையாக வரும்பொழுது எண்ணுப்பெயரடைகள் பெயர் வடிவில் வரும்.

77) பழங்கள் ஐந்து

78) மரங்கள் நூறு

79) முட்டைகள் மூன்று டஜன்

80) செருப்புகள் பத்து ஜோடி

அளவடைகளும் தலைமைப் பெயருக்குப் பின்னால் வரும்பொழுது உயர்திணைப்பால் விகுதியுடன் வருகின்றன.

81) மனிதர்கள் பலர்

82) தலைவர்கள் சிலர்

83) மக்கள் எல்லாரும்

பல, சில, எல்லா என்ற அளவடைகள் தலைமைப்பெயர் உயர்திணையாக இருக்கும் பொழுது **-அர்/-ர்** போன்ற விகுதியை ஏற்று வருகின்றன. தலைமைப்பெயர் அஃறிணையாக அமையும் பொழுது அளவடை வடிவங்கள் அப்படியே உள்ளன.

84) மரங்கள் பல

85) செடிகள் சில

86) பயிர்கள் எல்லாம்

அடைகள் (**Modifiers**) தலைமைப்பெயருக்கு முன்னால் வரும்பொழுது பெயரடை வடிவிலும் (**Adjectival form**), தலைமைப் பெயருக்குப் பின்னால் வரும்பொழுது பெயர் வடிவிலும் (**Nominal Form**) வருகின்றன. எண்ணுப் பெயரடைகள் வருவதை நாம் மேலே விளக்கினோம். விளக்கப் பெயரடைகளைக் கொண்டு இக்கருத்தை விவரிப்போம்.

87) பெரிய பையன் நாளை வருவான்

88) சின்ன மகள் ஊருக்குப் போகிறாள்

பெரிய, சின்ன ஆகிய பெயரடைகள் தலைமைப் பெயருக்குப் பின்னால் **பெரியவன், சின்னவள்** என்ற பெயர் வடிவில் காணப்படுகின்றன.

89) பையன் பெரியவன் நாளை வருவான்

90) மகள் சின்னவள் ஊருக்குப் போகிறாள்

நாம் இதுவரை பெயர்த்தொடர்களின் உறுப்புகளாக அமைந்துள்ள இலக்கண வகைகளைப் பார்த்தோம். அவற்றுள் சில தலைமைப் பெயருக்கு முன்னாலும், மாற்றங்களுடன் சில தலைமைப் பெயருக்குப் பின்னாலும் வருவதை நாம் பார்த்தோம். பெயர்த்தொடருடனோ வேற்றுமை உருபை ஏற்று வரும் வேற்றுமைத் தொடருடனோ **(Case Phrase)** கட்டுண்ட சொற்கள் சிலவும் விகுதிகள் சிலவும் வரும்.

(91) அந்தப் பெரிய பையன்மட்டும்

(92) பத்து வீடுகள் மாத்திரம்

(93) அந்தச் சிறுவன்தான்

(94) ஒரு சில உயர்ந்த மனிதர்கள்தான்

(91), (92) ஆகிய பெயர்த்தொடர்களில் **மட்டும், மாத்திரம்** ஆகிய கட்டுண்ட சொற்களும் (93), (94) ஆகியவற்றில் **தான்** என்ற கட்டுண்ட சொல்லும் வந்துள்ளன. இவை தலைமைப் பெயருக்குப் பின்னால் வருகின்றன. மற்ற இலக்கண வகைகளுடன் இவை வருவதில்லை. வேற்றுமைத் தொடரிலும் இவை தலைமைப் பெயருக்குப் பின்னால் வருகின்ற வேற்றுமை உருபுக்குப் பின் வருகின்றன.

(95) இந்தப் பழங்களைத்தான்

(96) அழகிய மாநகர் மதுரைக்குமட்டும்

(97) வீரத்திற்குப் பெயர் போன மருதுபாண்டியர்களிடம் மாத்திரம்

இங்கு வேற்றுமை உருபுக்குப் பின் கட்டுண்ட சொற்கள் வருகின்றன. **தான்** என்ற கட்டுண்ட சொல் தேற்றப் பொருளில் **(Emphatic Meaning)** வந்துள்ளது. தலைமைப் பெயருக்குப் பின்னாலோ, வேற்றுமை உருபை அடுத்தோ வருகின்ற - **ஏ** என்ற விகுதி இப்பொருளைக் குறிக்க வருகின்றது.

(98) அந்த உயரமான ஆளே

(99) வீரக்,கற்பு செறிந்த கண்ணகியே

(100) அந்தச் சிறுமியையே

(101) இலண்டன் மாநகரிலேயே

இவை தலைமைப் பெயருக்கு முன்னால் பெயர்த் தொடரில் வருவதில்லை.

பெயர்த்தொடர் வாக்கியத்தில் எழுவாயாக மட்டும் வருமென்பதில்லை; வினைத் தொடரின் பகுதியாகவும் வரும். அவ்வாறு வரும் பெயர்த் தொடர்களின் இலக்கணச் செயற்பாடு (Grammatical Function) வேறுபட்டு அமையும், வினைத் தொடருக்குள் வேற்றுமை உருபேலாமல் வருகின்ற பெயர்த்தொடர் செயப்படுபொருளாகச் செயற்படுகிறது. எழுவாயாகச் செயற்பட்டாலும், செயப்படுபொருளாகச் செயற்பட்டாலும் பெயர்த்தொடரின் அமைப்பு வேறுபடுவதில்லை. இங்கு மேலோட்டமாகவும் பறவை நோக்கிலும் பெயர்த்தொடரின் அமைப்பு விவரிக்கப்பட்டுள்ளது.

கலைச் சொற்கள்

அடை	-	Modifier
அடைகொளி	-	Determiner
அளவடை	-	Quantifier
இட எண்ணுப் பெயரடை	-	Ordinal Numeral Adjective
இயல் எண்ணுப் பெயரடை	-	Cardinal Numeral Adjective
இலக்கண வகை	-	Grammatical Category
உடைமைத் தொடர்	-	Genitive / Possessive Phrase
எண்ணுப் பெயரடை	-	Numeral Adjective
எழுவாய்	-	Subject
கட்டுண்ட சொல்	-	Bound Word / Form
கட்டுண்ட விகுதி	-	Bound Suffix
தலைமை	-	Head
தற்கிழமை	-	Inalienable Possession
தேற்றப் பொருள்	-	Emphatic Meaning
பயனிலை	-	Predicate
பிறிதின் கிழமை	-	Alienable Possession
பெயர்த் தொடர்	-	Noun Phrase
பெயர் வடிவு	-	Nominal Form
பெயரடை	-	Adjective
பெயரடைத் தொடர்	-	Adjectival Phrase
பெயரடை வடிவு	-	Adjectival Form
பெயரெச்சத் தொடர்	-	Relative Clause
விளக்கப் பெயரடை	-	Descriptive Adjective
வினைத் தொடர்	-	Verb Phrase
வினையடைத் தொடர்	-	Adverbial Phrase
வேற்றுமைத் தொடர்	-	Case Phrase

இயல் ஒன்பது

மொழி

இயல் ஒன்பது

மொழி

1. மொழியின் பெருமை

அரிய கலை

மொழி மனிதன் உருவாக்கிய அரிய கலை. எண்ணத்தைப் புலப்படுத்தக் கண்டுபிடித்த ஒலி வடிவம். முன்னோரின் கருத்துகளைப் பின்னோர் அறிந்துகொள்ளப் படைக்கப் பெற்ற வரி வடிவம். மற்றவரோடு உறவாடிக் களிக்கத் துணையாகும் பிணைப்புச் சங்கிலி. முன்னோரின் எண்ணங்களையும் செயல்களையும் பொறித்துவைத்துப் பேணிப் பாதுகாக்கப் பயன்படும் பெட்டகம்.

மானிட அடையாளம்

உலக உயிரினங்கள் பலவற்றிலிருந்து மனித இனத்தை வேறுபடுத்திக்காட்டுவது அவன் பேசுகின்ற மொழியேயாகும். விலங்குகளும் கூட மனிதனைப் போலவே வாழ்கின்றன; வளர்கின்றன; இனப்பெருக்கம் செய்கின்றன; தம் இனத்தோடு உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. என்றாலும் ஒழுங்குடைய ஒலிவடிவ மொழியைப் படைத்துக்கொள்ள இயலவில்லை. எனவே, பிற உயிரினங்களைக் காட்டிலும் மனித இனம் உயர்ந்தது, சிறந்தது என்பதைக் காட்டும் வெளி அடையாளமாக அமைவது அவன் படைத்துக்கொண்ட மொழியேயாகும்.

சமூகக் குறியீடு

ஓர் இனத்தை - ஒரு சமூகத்தை வகைப்படுத்திக் காட்டும் குறியீடாக மொழி அமைகிறது. தமிழன், மலையாளி, பஞ்சாபி, வங்காளி என ஒரு சமூகத்தைப் பிரித்து அறிந்துகொள்ளத் துணையாவது ஒருவன் பேசும் மொழியேயாகும்.

கருத்துக் கருவி

ஒரு சமூகத்தில் அடங்கிய அனைவரும் ஒருவரோடொருவர் தம் கருத்தைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படும் கருவி மொழியே. எம்மனிதனும் தான் மட்டும் தனியாக வாழ்ந்துவிட இயலாது. தன்னைச் சார்ந்த சமுதாயத்துடன் உறவாட, தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள, தன் சமுதாயத்துடன் தன்னைப்பிணைத்துக்கொண்டு ஒரே சமூகமாக இயங்கத் துணையாகும் கருவியாக மொழி அமைகிறது.

சிந்தனைக் களஞ்சியம்

நடைமுறை வாழ்க்கையில் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து கொண்டால் அவர்கள் இருவருக்குமட்டுமே அம்மொழியால் பயன் உண்டாகும் மொழியின் பயன்பாடு அதனிலும் விரிந்தது. முன்னோர் எண்ணங்களை வாழ்கின்றவர்கள் அறிந்து கொள்ளவும், வாழ்கின்றவர் களின் கருத்துகளை அவர்களுக்குப் பின்வருவோர் தெரிந்துகொள்ளவும் மொழி பயன்படுகிறது பழங்காலப் புலவர்களின் கருத்துகளை நாம் உணர்கிறோம். தமிழ்நாட்டில் வாழாத தற்காலத் தமிழர்களின் சிந்தனைகளை நாம் அறிந்து கொள்கிறோம். அவ்வகையில் அன்றாட வாழ்வியலுக்குப் பயன்படுவதைக் காட்டிலும் பன்னெடுங் காலத்திற்கும் பயன்படும் வகையில் உயர்ந்த சிந்தனைகளையும், ஒழுக்க நெறிகளையும் உலகிற்கு வழங்க, அவற்றைச் சேமித்து வைக்கும் களஞ்சியமாக மொழியே அமைகிறது. அவற்றைப் பயன்படுத்துவோர் மேலும் மேலும் சிந்தனைப் பயிரை வளர்த்துக்கொள்ளப் பயன்படும் எருவாகவும், நீராகவும் மொழி அமைந்துள்ளது .

2. எழுத்தும் பேச்சும்

கருத்துப் புலப்பாடு

வாயால் ஒலிக்கப்படும் மொழியால் மட்டுமே ஒரு கருத்தை வெளிப்படுத்த இயலும் எனக் கருத இயலாது. வேறு வகைகளிலும் கருத்தை வெளிப்படுத்தலாம். சாலை விதிகளைப் பின்பற்ற அறிவுறுத்தும் குறியீடுகள் கூடக் கருத்தைப் புலப்படுத்தும். அவ்விதிகளைக் கடைப்பிடிக்க வழிகாட்டும், நகரப் போக்குவரத்துக் காவலர்கள் கைந் நீட்டித் தடுத்தல், செல்லுமாறு கையசைத்தல் முதலியன கருத்தைப் புலப்படுத்துகின்றன. எனினும் அவற்றையெல்லாம் மொழியெனப் பொதுவாகக் கொள்வதில்லை. வாயினின்று வெளிப்படுகின்ற ஒலி வடிவால் கருத்தைப் புலப்படுத்துவதை மட்டுமே மொழி எனக் கொள்கிறோம்.

எழுத்துமொழி

மொழி என்றதும் பொதுவாக வரிவடிவில் எழுதப் பெற்றிருப்பது எனச் சிலர் எண்ணுகின்றனர். உண்மையில் அது மொழியன்று; வாயால் பேசுகின்ற மொழிக்கு நாம் கொடுத்த வரிவடிவமே எழுத்து மொழியாகும். எழுத்து மொழி, பேச்சு மொழியிலிருந்து உருவாவதாகும். எழுத்து மொழியே பெறாமல், பேச்சு மொழியாகவே விளங்குகின்ற மொழிகள் பல உள்ளன. நிலத்தின் மீது வீடு கட்டுகிறோம். நிலம் மேடு பள்ளமாக, சதுரமாக அமையாமல் இருக்கலாம். அந்நிலத்தின் மீது கட்டப்படுகிற வீடு திட்டமிட்டு அழகாகக் கட்டப்படுகிறது. ஆனால் நிலம்தான் முதன்மையானதே தவிர வீடன்று. வீடு கட்டப் பெறாமலேயே

நிலம் இருக்கும் ஆனால் நிலம் இல்லாமல் வீடு கட்ட முடியாது அது போலப் பேச்சு மொழி இல்லாமல் எழுத்து மொழி உருவாகியிருக்க இயலாது. ஆனால் எழுத்து மொழி இல்லாமல் பேச்சு மொழி மட்டும் வழங்கும். காலப்போக்கில் வேண்டுமானால், கிரீக்கு, இலத்தின் மொழிகளைப் போலப் பேச்சுமொழி வடிவத்திலிருந்து எழுத்து மொழிகளாக உருவானபின் அவற்றின் பேச்சு மொழிகள் வழக்கிழந்து போயிருக்கலாம்.

பேச்சுமொழி

பேச்சுமொழியின் அனைத்து வடிவங்களுக்கும் வரிவடிவம் கொடுக்க இயலாது. ஆதலின் பேச்சுமொழியின் ஒலிவடிவங்களை நோக்க எழுத்து மொழியின் வரி வடிவங்கள் குறைவு. 'கூறுகிறாள்' என்னும் சொல்லின் இறுதியில் உள்ள ளகரம் சரிவரப் பேச்சொலியில் ஒலிக்கப் பெறாமல் 'கூறுகிறா(ள்)' என்றவாறு அரைகுறையாக ஒலிக்கும் பொழுது அதற்கேற்ற வரிவடிவம் தமிழில் இல்லை. காபி, பிரெஞ்சு என வரிவடிவில் நாம் எழுதினாலும் அவற்றை உச்சரிக்கும்பொழுது வேறுவடிவில் ஒலிக்கிறோம். வேற்றுமொழிச் சொற்களைத் தமிழில் பேச்சு மொழியில் கலந்து பேசுகிறோம். (Gree zoo) சொற்கள் ஒலிப்பது போல வரி வடிவில் தமிழில் எழுத முடிவதில்லை. அதற்குக் காரணம் பேச்சு மொழியில் பயன்படுத்துகின்ற அனைத்து வடிவங்களுக்கும் வரி வடிவம் இல்லாமையே ஆகும்.

பேச்சொலி மாற்றம்

எழுத்து மொழி நிலையாக இருக்கும். சிறு மாறுதல்களுக்கு இடம் கொடுக்கும். பேச்சுமொழி இடத்திற்கு இடம், காலத்திற்குக் காலம், ஆளுக்கு ஆள் மாறுபடும் தன்மையது. தமிழில் வெளிவரும் நாளிதழ்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள மக்கள் புரிந்துகொள்ளும் எழுத்து மொழியில் வெளிவருகின்றன. அவை பயன்படுத்தும் மொழியில் பெரும் மாறுதல்கள் ஏற்படுவதில்லை. தமிழக மக்கள் அனைவரும் அம் மொழியைப் புரிந்துகொள்வர். ஆதலின் தமிழகத்தில் வாழும் மக்கள் அனைவருக்கும் அது பொது மொழியாகிவிடுகிறது. பேச்சுமொழி அவ்வாறன்று. திருநெல்வேலியில் வாழும் ஒருவர் பேசும் மொழிக்கும், கோயம்புத்தூரில் வாழும் ஒருவர் பேசும் மொழிக்கும் மாற்றங்கள் உண்டு. ஒருவர் பேசுகின்ற மொழியை மற்றொருவர் முழுமையாகப் புரிந்து கொள்வார் எனக் கூறவியலாது.

மரபியலாரும் மொழியியலாரும்

மரபைப் போற்றுகின்றவர்கள் எழுத்து வடிவம்கண்ட மொழியின் அமைப்பைப் பெரிதும் போற்றுவர். எழுத்து வடிவ மொழியே சிறப்புடையதென்றும், செம்மையுடையதென்றும், இலக்கியம் படைக்க

ஏற்றதென்றும் கருதுவர். மொழியியலார் பேச்சு மொழியினையே அடிப்படை மொழியாகக் கருதுவர். அதுவே இயற்கை மொழி எனக்கருதுவர். வாய்வழக்கில் உள்ள மொழியே வரிவடிவத்தில் உள்ள மொழியைக் காட்டிலும் நம்பகத் தன்மை கொண்டது என்பர்.

இலக்கணமும் பேச்சுமொழியும்

எழுத்து மொழியை நிலைநிறுத்திப் பாதுகாத்து வருவது இலக்கணங்களே. மொழி சிதைந்து அழியாமல் இருக்கும் வகையில் விதிகளை அறிவுறுத்திப் பலரும் ஒன்றுபோல் மொழியைக் கையாண்டு வர இலக்கணங்கள் துணையாகின்றன. என்றாலும் அவை பேச்சு மொழியை முழுவதும் ஒதுக்கியதாகக் கூறுவதற்கில்லை. அவை இலக்கணங்கள் வகுக்கும்பொழுது, பேச்சுமொழியையும் கருத்தில் கொண்டே வகுத்தன. அவை பேச்சு மொழியை 'வழக்கு' (தொல் காப்பியச் சிறப்புப் பாயிரம்), 'உலகியல் வழக்கு' (தொல்காப்பியம், அகத்திணையியல், நூற்பா, 53) எனச் சுட்டும். எழுத்துகளின் ஒலி வடிவத்தைப் புலப்படுத்தப் 'பிறப்பியல்' என்னும் இயல் தொல் காப்பியத்தில் அமைந்துள்ளது. தொல்காப்பியத்தில் வரும்,

> ''உப்ப காரம் ஒன்றெை மொழிப
> இருவயி னிலையும் பொருட்டா கும்மே'' (மொழி மரபு. 76)

என்னும் நூற்பாவுக்குப் பொருள் கூறும்பொழுது உரையாசிரியர்கள், 'தபு' என்னும் ஒரே சொல் இருவகையில் எடுத்துச் சொல்லும்பொழுது பிறவினையாகவும் (நீ சாவி) படுத்துச்சொல்லும் பொழுது தன் வினையாகவும் (நீசா) பொருள் தரும் என உரைக்கின்றனர். இவ் வெடுத்துக்காட்டு ஒரே சொல் இருவகையாகப் பேசப்படும் என்பதை இலக்கண உரை ஆசிரியர்கள் உணர்ந்து போற்றியுள்ளதைக் காட்டும். இலக்கண ஆசிரியர்களும் கூடப் பேச்சு மொழியை முற்றிலுமாக நீக்கிவிட முன்வரவில்லை எனத் தெரிகிறது. எழுத்து மொழி செம்மையானது எனினும், பேச்சு மொழிதான் உண்மையானது. எழுத்து மொழி நன்றே என்றாலும், பேச்சுமொழி தான் இன்றியமையாதது.

இலக்கியமொழி

மொழியின் வரிவடிவமாகிய எழுத்துமொழியை இலக்கிய மொழி எனவும் குறிக்கலாம். வாய்மொழி இலக்கியம் காலந்தோறும் மாற்றம் பெறும் அளவுக்கு எழுத்து வடிவ இலக்கியம் பெரும் மாற்றம் அடைவதில்லை. எழுத்து மொழி வடிவமே செய்யுள், உரை என்னும் வேறுபாடின்றி எல்லா இலக்கிய வடிவங்களிலும் கையாளப்படுகிறது. பல்வேறு பகுதியினரும், பல்வேறு சமுதாயத்தினரும், பல்வேறு தொழில் செய்வோரும் ஒன்றுபோல் பயன்படுத்தும் பொதுமொழியாகிறது. கற்றறிந்த புலவர்களாலும், இலக்கண இலக்கிய அறிஞராலும் செம்மையான மொழியாகப் போற்றப்படுகின்றது. பன்னூறு ஆண்டுகட்கு

முன் படைக்கப்பெற்ற இலக்கியங்களை அழியாமல் காப்பாற்றி வருகிறது. உயர்தனிச்செம்மொழி என்னும் உயர்ந்த நிலையை ஒரு மொழிக்குப் பெற்றுத்தருகிறது. எனவே இலக்கிய மொழியாக ஒரு மொழி கருதப்படுவதற்கு ஏதுவாக இருக்கும் எழுத்து வடிவ மொழியை அம் மொழி பெற்றிருப்பது அதற்குப் பெருமையைத் தரும் எனலாம்.

3. கிளைமொழி

மொழிவாழ்வு

உயிர் ஒவ்வொன்றுக்கும் சில இயல்புகள் உண்டு. அவற்றுள், வளர்ச்சி அடிப்படையானது. அவ்வளர்ச்சி ஒன்று பலவாக உருவாகின்ற முறையிலும் அமையும். மொழியும் ஒரு வகையில் உயிர்த்தன்மை பெற்றதே. அதனால்தான் வாழும் மொழி, வளரும் மொழி என்று கூறுகிறோம். ஒரு காலத்தில் வாழ்ந்து அழிந்துபட்ட விலங்கினங்கள் போல அழிந்து போன மொழிகளும் இருக்கலாம். குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பது போல ஒரு மொழி காலப்போக்கில் வேறொரு மொழியாக மாறிப்போவதும் உண்டு.

மூலமொழி

முதலில் உருவாகிய ஒரு மொழியிலிருந்து காலப்போக்கில் உருவாகிய பல மொழிகளை ஒன்றாக இணைத்துக் குறிக்க அவற்றை ஒரு குடும்ப மொழிகள் என்பர், இனமொழிகள் என்றும் சுட்டுவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலியவை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. அவற்றைத் திராவிடக் குடும்ப மொழிகள் என்பர்.

தனிமொழி

ஒரு மொழியைப் பேசுவோரிடையே கூட ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையாகப் பேசக்கூடும். ஒருவர் முகம்போல மற்றொருவர் முகம் இருப்பதில்லை. ஒருவர் குரலோசை போல மற்றொருவர் குரலமைப்பு இருப்பதில்லை. ஒருவருக்கொருவர் பழகும் சூழ்நிலை மற்றொருவருக்கு அமைவதில்லை. ஆதலின் ஒரே மொழி, பேசும் ஆளுக்குத் தகுந்தாற்போல வெவ்வேறு வகையாக அமைகிறது. இதனைத் (Idiolect) ''தனியாள் மொழி'' என்பர். ஒவ்வொருவர் பேசுவது வெவ்வேறு வகையாயினும் அதனை அம்மொழி பேசும் மற்றொருவர் புரிந்து கொள்வதில் எவ்விதச் சிக்கலும் இராது.

கிளை மொழி

பேசும் ஆளுக்கு ஏற்ப ஒரு மொழி வேறுபடுவது போல ஒரு வட்டாரத்தில் வாழ்பவர் ஒரு மொழியைப் பேசுகின்ற முறைக்கும், அதே மொழியை வேறொரு வட்டாரத்தினர் பேசுகின்ற முறைக்கும் வேறுபாடு தோன்றலாம். அவ் வேறுபாடு காரணமாக இரு வட்டார மக்களும்

பேசுகின்ற மொழி வெவ்வேறு மொழி இல்லை. ஒரே மொழிதான். அம் மொழியின் வெவ்வேறு வடிவங்களாக வெவ்வேறு வட்டாரத்தினர் பேசுவதைக் கொள்ளலாம். இவ்வாறு பேசும் ஒருமொழியின் பல்வேறு வடிவங்களை அதன் கிளைமொழிகள் (Dialects) என்பர். நிலங்களை அமைப்புக்கு ஏற்றவாறு நன்செய், புன்செய் என்கிறோம். நன்செய் நிலத்தில் நெல், கரும்பு, வாழை ஆகியவை பயிரிடப்படுகின்றன. இவை ஒரே வகை நிலத்தில் பயிராகின்றன. எனினும் இவற்றை வெவ்வேறு பயிர்கள் எனலாம். நெல்லிலேயே ஐ.ஆர்.எட்டு, ஐ.ஆர்.இருபது, சம்பா, குறுவை எனப் பலவகை பயிரிடப்படுகின்றன. பருவம், நீர் வசதி ஆகியவற்றுக்குத் தக்கவாறு அவை பயிராகின்றன. இவ்வாறு ஒரே பயிரின் பல்வேறு வகைகளைப் போல, ஒரே மொழியின் பல்வேறு வடிவங்களைக் கிளை மொழிகள் எனவும், ஒரே நிலத்தில் விளையும் பல வகைப் பயிர்களைப் போல ஒரே மொழியில் தோன்றும் பல மொழிகளை இன மொழிகள் எனவும் கொள்ளலாம். கிளை மொழிகளை வட்டார மொழிகள் என்றும் கூறுவர்.

வட்டாரச் சொற்கள்

ஒரு மொழியைப் பேசும் ஒரே பகுதியில் வசிப்போரிடையே கூட சொற்களைப் பயன்படுத்தும் முறையில் வேறுபாடுகளைக் காணலாம். ஒரு குடும்பத்தார் கூறும் சொற்களை, வேறொரு குடும்பத்தார் பயன்படுத்தத் தயங்குவர். அதனால் ஒன்றைக் குறிக்கப் பல்வேறு சொற்கள் உருவாயின. தாய் என்பதைக் குறிக்க ஆய், அம்மா, ஆத்தா, ஆயாள், அம்மே என்னும் சொற்களும், பாட்டி என்பதற்கு அம்மாயி, அப்பாயி, அம்மத்தாள், அம்மாச்சி, அப்பத்தாள், அத்தம்மாள், ஆயாள் என்னும் சொற்களும், அண்ணனைக் குறிக்க அண்ணாத்தை, அண்ணாச்சி, அண்ணா என்னும் சொற்களும், தந்தையைக் குறிக்க அப்பா, அப்பு, அப்பச்சி போன்ற சொற்களும் உறவுமுறைச் சொற்களாக வழங்குகின்றன. விரைவு என்பதனைக் குறிக்க வேகமாய், வெரசா, பொக்குனு, சட்டுனு, சல்தியா, சீக்கிரம், அவசரமா என்னும்சொற்களும், விடியற்காலை என்பதனைக் குறிக்கக் கருக்கல், காத்தாலே, காலம்பர, வெள்ளென என்னும் சொற்களும், இறைச்சியைக் குறிக்க மாமிசம், மச்சம், கறி, கசாப்பு, புலால் என்னும் சொற்களும், கருவுற்றிருத்தலைக் குறிக்கப் பிள்ளைத்தாய்ச்சி, வாயும் வயிறும், முழுகாமல், பயிறுஆதல் போன்ற சொற்களும் தமிழில் வழங்கி வருகின்றன.

கிளை மொழியியல்

ஒரு மொழியைப் பேசும் பல்வேறு மக்களிடையே உருவாகி யிருக்கும் பல்வேறு கிளைமொழிகளின் இயல்புகளைத் தற்கால மொழியியலார் பல்வேறு நிலைகளில் ஆய்ந்து வருகின்றனர். கிளை மொழிகள் அல்லது வட்டார மொழிகள் எவ்வாறு உருவாகின்றன,

எவ்வெவ் நிலைகளில் உருவாகின்றன, எவ்வெவ் வட்டாரங்களில் எவ்வெவ் அளவில் உருவாகின்றன, அவ்வாறு உருவாவதற்கு அடிப்படைக் காரணங்கள் யாவை என்பனவற்றையெல்லாம் ஆய்ந்து கண்டுள்ளனர். இவ்வகை ஆய்வுக்குக் கிளைமொழியியல் ஆய்வு (Dialectology) என மொழியியலார் சுட்டுவர்.

4. கிளைமொழிகளின் தோற்றம்

உருவாகும் முறை

ஒரு மொழியிலிருந்து பல்வேறு கிளைமொழிகள் தனி முயற்சியால் உருவாவதில்லை. செயற்கையாக எவரும் உருவாக்குவதில்லை. இவை இயல்பாக உருவாகின்றன. அவ்வாறு உருவாவதற்கு இயற்கையமைப்பு, நாகரிக நிலை, சமயம், சமுதாயப் பிரிவு, அறிவு நிலை போன்றவை காரணங்களாக அமைகின்றன.

இயற்கைத் தடுப்பு

ஒரே மொழி பேசும் மக்கள் பரந்து வாழ்கின்றனர். அவர்கள் வாழும் இடங்களில் குறுக்கே போக்குவரத்துக்கு எவ்விதத் தடையும் ஏற்படாமல் இருந்தால் கலந்துறவாடும் வாய்ப்பு அடிக்கடி ஏற்படும். அப்பொழுது ஒருவர் பேச்சை மற்றவர் கேட்க, அதே ஒலிப்பு முறையை மற்றவரும் பின்பற்ற ஒன்று போலவே பேச்சு மொழி அமையும். அவ்வாறின்றி இருபகுதி மக்களுக்கிடையே கடல்பகுதியோ, பேராறோ, பெருமலைகளோ அமைந்திருக்குமாயின் போக்குவரத்தும் ஒருவருக் கொருவர் பேசிப்பழகும் வாய்ப்பும் குறையும். ஒருவர் பேசுவதை மற்றவர் கேட்கும் வாய்ப்புக் குறையக் குறைய வெவ்வேறு வகையாக அவரவர் விரும்பும் வகையில் பேச்சுமுறை மாறிவிடும். அதுவே காலப் போக்கில் கிளை மொழியாகிவிடுகிறது. ஒருவருக்கொருவர் கலந்து பழகும் வாய்ப்பு மிகவும் குறைந்துவிட்டால் காலம் செல்லச் செல்லக் கிளைமொழியே தனியொரு இன மொழியாக மாறிவிடும் வாய்ப்புண்டு. தமிழில் இருந்து கிளைமொழியாகிப் பின்னர்த் தனியொரு மொழியாக உருவாகிவிட்ட மலையாள மொழியே அதற்குச் சான்றாகும். இயற்கைத் தடுப்பாக அமைந்த மேற்குத் தொடர்ச்சி மலையே அதற்குக் காரணமாகும்.

நாகரிகப்போக்கு

சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் ஒருவனுடைய பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும், அவன் வாழும் இடத்தில் உள்ள மற்றவரிலிருந்து வேறுபட்டிருக்கும். அதற்கு அவன் பழகும் மேல்மட்ட நிலையில் உள்ளவர்களின் தொடர்பே காரணமாகும். அவர்களுடைய பேச்சில் கொச்சை மொழிகளைக் காட்டிலும் தூய மொழிகள் மிகுதியா யிருக்கும். ஒரே குடும்பத்தைச் சார்ந்தவருள் நகரத்தில் வாழும் ஒருவரது

பேச்சு, அதே குடும்பத்தைச் சார்ந்த கிராமத்தில் வாழ்பவருடைய பேச்சிலிருந்து மாறுபடுகிறது. ஆதலின் ஒரே குடும்பத்தில் இருவேறு கிளைமொழிகள் உருவாகிவிடுகின்றன. இதற்கு நகரத்திற்கு வந்தவரின் நாகரிகச் சூழலே காரணமாகிறது.

சமய வேறுபாடு

ஒரே ஊரில் வாழும் இருவேறு சமயத்தினர் பேசும் மொழியில் வேறுபாடு ஏற்படுவது உண்டு. இசுலாமிய சமயம் சார்ந்தோர், தம் சமய அடிப்படையில் அரபி, உருது மொழிகளோடு தொடர்புடையவராகி விடுகின்றனர். அதன் காரணமாக அம்மொழிச் சாயல் பெற்ற சொற்களும் அவர்கள் பேச்சில் கலந்துவிடும். ஆனால் அவ்வூரில் வாழும் பிற சமயத்தினர் பேச்சில் அத்தகைய சொற்களுக்கு இடமில்லை.

சமுதாயப்பிரிவு

சமுதாயத்தில் உள்ள பல்வேறு பிரிவினரும் தங்கள் பிரிவைச் சார்ந்தோருடன் பேசும்பொழுது சில சொற்களைப் பயன்படுத்துவர். சமுதாயத்தில் உயர் நிலையினராகத் தம்மைக் கருதுவோர் மற்றவர் வழங்கும் சொற்களைத் தாம் பேசுவது இழுக்கு எனக் கருதலாம். தாம் வழங்கும் சொற்களே உயர்வானது என்னும் எண்ணத்தைக் கொள்வர். தமக்குள்ளே பேசிக்கொள்ளும்பொழுது அவற்றையே பேசுவர். எனவே சமுதாயப்பிரிவு என்ற நிலையில் கிளை மொழிகள் உருவாவதற்கு இடமுண்டு.

அறிவுநிலை

கல்வியறிவு காரணமாகவும் கிளை மொழிகள் உருவாகலாம். கற்றறிந்த ஒருவர் தம் உயரதிகாரிகளிடம் பேசும்பேச்சு ஒரு வகையாகவும், தம் மனைவி மக்களிடத்தில் பேசுவது மற்றொரு வகையாகவும், தமக்குத் தெரிந்த கீழ்நிலையில் உள்ள பாமரனிடம் பேசுவது வேறொரு முறையாகவும் இருக்கும். மேடையில் சொற்பொழிவாற்றுவது ஒரு வகையாகவும், மாணவருக்குப் பாடம் நடத்துவது ஒரு வகையாகவும் இருக்கலாம். எவரோடு பேசுகிறாரோ அவருடைய அறிவு நிலைக்குத் தகுந்தாற்போல் பேசும் சொற்களை மாற்றிக்கொள்வது இயல்பு. அதுவே பிறிதொரு மொழி உருவாவதற்கு ஏதுவாகிறது.

தற்கால நிலை

தற்காலத்தில் கிளைமொழிகள் உருவாகும் போக்கு குறைவதற்கான சூழ்நிலைகள் உள்ளன. இயற்கைத் தடுப்புகளை மீறி ஒருவருக்கொருவர் அடிக்கடி சந்திக்கவும், நெருக்கமாக உறவாடவும் விரைவான போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டுள்ளன. இதழ்களின் வளர்ச்சியால் எல்லாப் பகுதி மக்களும் ஒரே மொழியைப் படிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவை

ஒரே வகை மொழியை அனைவரும் அறியவும், கேட்கவும் வாய்ப்புகளைத் தருகின்றன. ஆதலின் ஒரு பகுதியின் பேச்சு மொழிகளை அம்மொழியைப் பேசும் அனைத்துப்பகுதி மக்களும், அனைத்துச் சமுதாயப் பிரிவு மக்களும், அனைத்துக் கல்வி நிலை மக்களும் அறியும் சூழ்நிலை ஏற்படுகிறது. இவையனைத்தும் கிளை மொழிகள் அளவின்றிப் பெருகாமல் ஓரளவு கட்டுப்பட்டிருக்க உதவுகின்றன.

5. இலக்கியக் கிளைமொழி

இலக்கியக் கிளைமொழி

கிளைமொழிகள் பற்றிய ஆய்வு அண்மைக் காலத்தில் மொழியியலாரால் ஆர்வத்துடன் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் கிளைமொழிகள் பற்றிய சிந்தனை நம் முன்னோரிடமும் இருந்துள்ளது. தொல்காப்பியம் செய்யுள் ஈட்டச் சொற்களாக இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கினைக் கூறி ஒவ்வொன்றுக்கும் விளக்கம் தருகிறது.

'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச்சொல் கிளவி''

என்பதே திசைச் சொல்லுக்குத் தொல்காப்பியர் தரும் விளக்கமாகும். மேற்குறிப்பிட்ட நான்கும் தமிழ்ச் சொற்களேயாயினும் இயல்பான தமிழ் வழங்கும் பகுதிக்குரிய சொல்மாறி, சுற்றியுள்ள திசைகளில் வழங்குவது திசைச்சொல் எனக் கொண்டால் இலக்கணம் சுட்டும் திசைச்சொல் வழக்குகளைக் கிளைமொழியாகக் கொள்ளலாம்.

இலக்கண விதிகள்

இலக்கண நூல்கள் சொற்களோடு சொற்கள் சேரும் புணர்ச்சி விதிகளைக் கூறும்பொழுது, 'உறழும்' எனக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். இக்கூற்று ஒரு சொல் அல்லது தொடரின் பல்வேறு வடிவங்கள் வழக்கிலிருந்ததையே காட்டுகிறது. தேன், குடம் ஆகிய இரு சொற்கள் சேரும்பொழுது தேன்குடம், தேங்குடம், தேக்குடம் என மூன்று வகையாக ஆகலாம் என்பது ஒரு தொடர் மூவகையாக வழங்கப் பட்டிருத்தலைக் காட்டும். அவ்வாறே பல+பல என இரண்டும் சேரும் பொழுது பலபல, பற்பல, பலப்பல என ஆவதாகக் கூறுவதையும் கொள்ளலாம். புளி+சோறு ⇨ புளிஞ்சோறு, புளிச்சோறு என ஆவதாகப் புணர்ச்சி விதிகள் கூறுகின்றன.

இலக்கிய வழக்குகள்

பழந்தமிழ் இலக்கியங்களிலும் தற்காலப் பேச்சுமொழி வடிவங்களைப் போல சில காணக்கிடக்கின்றன. அடைந்த என்னும் சொல் 'அடச்சிய' எனக் கலித்தொகையில் காணப்படுகின்றது

சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற காப்பியங்களில் கிளைமொழிச் சொற்கள் இடம் பெற்றிருப்பதை உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் சிலப்பதிகாரத்தில் (சிறு பெண் என்னும் பொருளில்) வரும் சிறுமி என்ற சொல் குடநாட்டு வழக்கு என்றும், மூடு என்னும் பொருளில் வரும் 'புதை' என்னும் சொல் மலை நாட்டு வழக்கு என்றும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார், நச்சினார்க்கினியர் சிந்தா மணியில் வரும் 'நீம்', 'நுன்' 'இதா' ஆகியவற்றைத் திசைச் சொற்களாகக் குறிப்பிடுவார். எனவே தமிழ் இலக்கியங்கள் இயற்றமிழ் மொழியால் இயற்றப்பட்டவையாயினும், திசைச் சொற்களும் அவற்றுள் இடம் பெற்றுள்ளன. இயற்றமிழைச் செந்தமிழ் என்றும், பிறவற்றைக் கொடுந்தமிழ் என்றும் குறிப்பிடும் வழக்கும் உண்டு. கொடுந்தமிழில் திசைச் சொற்களாகக் கருதப்படும் கிளைமொழிச் சொற்கள் அடங்கும்.

கொடுந்தமிழ்

பழங்காலத்தில் கொடுந்தமிழ் வழங்கும் நாடுகளாகத் தென் பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, கற்கா நாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு, சீதநாடு, மலாடு, புனல் நாடு எனும் பன்னிரண்டு நாடுகளைக் குறிப்பர். இவை செந்தமிழ் வழங்கும் நாட்டைச் சுற்றியுள்ள திசைகளில் இருப்பவை எனக் கருதப்பட்டது. எனவே அங்கு வழங்கும் சொற்களைத் திசைச் சொற்கள் என்னும் பெயரால் உரையாசிரியர்கள் குறிப்பிட்டனர்.

உரையாசிரியர்கள் குறிப்பு

தொல்காப்பிய உரையில் சேனாவரையர், ''தென்பாண்டி நாட்டார் ஆ, எருமை என்பவற்றைப் பெற்றமென்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப, பிறவுமன்ன'' என்பார். நன்னூல் உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் ''இவற்றுள் செந்தமிழ்ப்பாண்டி நாட்டின் தென்திசைக் கண்ணதாகிய தென்பாண்டி நாட்டார் ஆவினைப் பெற்றம் என்றும், சோற்றைச் சொன்றி என்றும், குட்ட நாட்டார் தாயைத் தள்ளையென்றும், குட நாட்டார் தந்தையை அச்சன் என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் கையர் என்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும், பூழி நாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும், அருவா நாட்டார் செறுவையைச் செய் என்றும், சிறுகுளத்தைக் கேணி என்றும், அருவா வட தலையார் புளியை எகினம் என்றும், சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும், தோழியை இகுளை என்றும் வழங்குவர்'' என்கிறார்.

6. கிளைமொழிப்பாகுபாடு

கிளைமொழிப்பாகுபாடு

கிளைமொழிகளைப் பல்வேறு வகையாகப் பகுத்து அவற்றின் தன்மைகளை மொழியியலார் ஆராய்வர். தென்தமிழ்நாடு,

வடதமிழ்நாடு, மேற்குத் தமிழ்நாடு, நடுத்தமிழ்நாடு ஆகிய தமிழக நிலப் பகுதியின் அடிப்படையில் அமைந்துள்ள மொழியியல்பினைக் கண்டு தெளிவது அவ்வவ் *வட்டாரக் கிளைமொழி* எனக் கூறுவர். அவ்வாறே பிராமணர், வெள்ளாளர், நாட்டுக் கோட்டை நகரத்தார், படையாச்சி, கள்ளர் என அவரவர் சார்ந்த வகுப்பின் அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதனை வகுப்புக்கிளை மொழி அல்லது சாதிக்கிளைமொழி என்பர். அவரவர் செய்யும் தொழிலுக்கு ஏற்பப் பயன்படுத்தும் மொழியில் வேறுபாடு காணப்படும். அவ்வகையில் மீனவர், குயவர் போன்ற தொழிலாளர்களின் அடிப்படையில் மொழியைப் பிரித்துக் காண்பதனைத் *தொழில் கிளைமொழி* எனக் குறிப்பிடுவர்.

வட்டாரக் கிளைமொழி

ஒரு மொழி வழங்கும் நாட்டில் வட்டாரத்திற்கு வட்டாரம் அது வேறுபட்டுக் கிளைமொழிகள் உண்டாகின்றன. மக்கட்குப் பெயரிடுவதில் அம்மை, அப்பன் என்பனவற்றைப் பெயருடன் சேர்த்து அழகம்மை, அடைக்கம்மை, மெய்யம்மை, தேனம்மை, வள்ளியம்மை, நாச்சம்மை, அழகப்பன், அடைக்கப்பன், மெய்யப்பன், தேனப்பன், வள்ளியப்பன், நாச்சியப்பன் எனச் செட்டிநாட்டுப் பகுதிகளில் கூறுவர். 'பெண் பூப்பெய்தினாள்' என நெல்லையிலும், 'சமைந்து விட்டாள்' என விழுப்புரம், கடலூர் மாவட்டப் பகுதிகளிலும், 'சடங்காகிவிட்டாள்' எனச் செட்டிநாட்டிலும், 'திரண்டுவிட்டாள்' என வேலூர், திவண்ணாமலை மாவட்டப் பகுதிகளிலும் கூறுவர். இவ்வாறன்றி 'மனுசியாகி விட்டாள்', 'ருதுவாகிவிட்டாள்' 'புத்தி யடைந்துவிட்டாள்' எனப் பலவகையாகப் பல்வேறு இடங்களில் கூறுவதும் உண்டு. ஒரே சொல் ஒரு பகுதியில் ஒரு பொருளும், பிறிதொரு பகுதியில் வேறு பொருளும் தருவதைக் காணலாம். ''அலக்கழிக்கிறான்' எனில் 'கிண்டல் செய்கிறான்'' என இராமநாதபுரத்திலும், 'நாள் கடத்துகிறான்' என விழுப்புரம்,கடலூர் மாவட்டப் பகுதிகளிலும், 'தொந்தரவு செய்கிறான்' எனத் திருநெல்வேலியிலும் பொருள்படும். ஒன்றைக் குறிக்க ஒரு பகுதியில் மட்டுமே வழங்கி வருவனவும் உண்டு. செட்டிநாட்டுப் பகுதியில் பந்தல், பிணநாட்பந்தலையும்; தடுமன், நீர்க்கோளையையும்; நடையன் செருப்பினையும் குறிக்கும். ஒரு சொல்லை உச்சரிக்கும் வகைகூட, தமிழகத்தில் இடத்திற்கு இடம் மாறுபடுவதைப் பின்வரும் பட்டியல் காட்டும்.

சொல்	தென்கோடிப் பகுதி	தெற்குப்பகுதி	நடுப்பகுதி	வடக்குப்பகுதி	மேற்குப் பகுதி
திருவிழா	திருளா	திருலா	திருவிசா	திருசா	தேர்
பழம்	பளம்	பழம்	பழம்	பயம்	பழம்
காலைச் சிற்றுண்டி	காபி	பலகாரம்	பலகாரம்	நாஸ்டா	காலைச்சோறு
பாட்டி	கண்ணம்மை	பாட்டி	ஆயா	ஆயா	ஆயா, பாட்டி
பெரியம்மா	மூத்தம்மை	பெரியதாயார்	பெரியம்மை	பெரியம்மே	பெரியத்தா
போனார்கள்	போனாவ	போனாங்க	போனாங்க	போனாங்க	போனாங்க
வாங்கினாயா	வேங்கினாயா	வாங்கினியா	வாங்கினியா	வாங்கினியா	வேங்கினே
இழுக்குது	இழுக்குது	இழுக்குது	இழுக்குது	இசுக்குது	இலுக்குது

இவற்றையெல்லாம் கிளைமொழிக் கூறுகளாகவே அறிஞர்கள் கருதுவர். இத்தகு வட்டார மொழி வழக்குகளில் எதனையும் புறக்கணிக்க இயலாது. இலக்கணம் செம்மையுற அமையவில்லை என்பதற்கும் இட மில்லை.

வகுப்புக் கிளை மொழி

சமயம், சாதி வகுப்புகளுக்கேற்ப மொழி மாறுபடுவதும் உண்டு. தங்களுக்குள் பேசிக்கொள்ளுங்கால், வைணவர்கள் தோசையைச் சக்கரத்தாழ்வார் என்றும், பழஞ்சோற்றை உய்யக்கொண்டார் என்றும், பாயசத்தைத் திருக்கண்ணமுதென்றும், பிறந்த வீட்டைத் திருமாளிகை யென்றும் குறியிட்டுப் பேசுவர். பிராமணர், 'வீட்டுக்கு' என்பதற்குப் பதிலாக 'ஆத்துக்கு' என்பர். முகமதியர்களுடைய மொழியில், 'ண்டு' என்பது 'மாமுண்டான்' 'ஏண்டாண்டேன்' என்பனவற்றில் வருவது போன்று அடிக்கடி வரும். தமிழகத்தில் பல்வேறு வகுப்பினரிடையே வழங்கி வரும் சொற்களைப் பின்வரும் பட்டியலால் அறியலாம்.

சொல்	முகம்மதியர்	பிராமணர்	நாடார்	இதரர்
அம்மா	உம்மா	அம்மா	அம்மா	ஆத்தா
அப்பா	அத்தா, வாப்பா	அப்பா	அப்பா	அய்யா, அப்பச்சி
மகள்	மக	பொண்ணு	மொவ	மவ
மைத்துனன்	மச்சான்	அத்திம்பேர்	மச்சான்	மாமா
மாமன்மகன்	மச்சினன்	அம்மாஞ்சி	மாப்பிள்ளை	மச்சான்
தாத்தா	முத்தாப்பா	தாத்தா	அய்யா	தாத்தா

தொழில் கிளைமொழி

தொழிலாளர் கிளைமொழிகளில் வழக்கில் காணமுடியாத பல பழந்தமிழ்ச் சொற்களைக் காண்பதற்கு வாய்ப்புண்டு. பிற தொழில்செய் வோருக்குத் தேவையற்ற, தம் தொழிலுக்கு மட்டுமே உரியனவாகிய பல அரிய சொற்களைத் தொழில் கிளைமொழிகள் கொண்டிருக்கும். கிளை மொழிகளில் காணப்படும் ஒலி மாற்றங்கள் மிகுதியாக இவ்வகைக்கிளை மொழிகளில் ஏற்படலாம்.

மீனவர் கிளைமொழி

இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்துவோர் மீனவர். சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் பின்தங்கியுள்ள சமூகத்தினர். சங்க இலக்கியத்தில் கூடக் காணமுடியாத நூற்றுக்கணக்கான சொற்கள் மீனவர் தமிழில் உண்டு. ஆயிரக்கணக்கான சொற்கள் தொழில் காரணமாக அவர்களது பேச்சு வழக்கில் வழங்குகின்றன. மீனவர் தமிழில், பெண்க ளின் பேச்சுக்கும் ஆண்களின் பேச்சுக்கும் கூட வேறுபாடு காணப்படும்.

மீனவர் கிளைமொழியில் காணப்படும் சிலவற்றின் பெயர்களைக் கீழே காணலாம்.

வலையின் பெயர்கள்	வலையின் பாகங்கள்
இழுப்பு கோவலெ	கடுப்பு
எடெவலெ	கைகடுப்பு
கல்லெ வலெ	நடுகடுப்பு
கவுத்து வலெ	கவ்ரு
கழிவலெ	கடமாங்கவ்று
கூனிவலெ	கீங்கா கவ்று
கோவலெ	மேக்ர கவ்று
கோனுவலெ	கெட்டு
சன்னுவலெ	கோடா (ம்)
செனிகுன்னிவலெ	மடங்கு
தாம்னி	மாலு
திருக்காவலெ	ஆக்கெ 'நங்கூரம்'
தூறி	கட்டாக்கெ
தெழிஞ்ச (எ) கவுத்துவலெ	கல்லாக்கெ
நடுத்தரவலெ	சீனி
நண்டுவலெ	
நொழீளாவலெ	**தோணியின் பெயர்கள்**
பனஞ்ராவலெ	ஆசின் தோணி
பரண்டெவலெ	கல் ஆசினி
பைண்ட்ராவலெ	கொட்டாஞ்சி ஆசினி

பாச்சிவலெ
பெதுவலெ
மன்சீசுவலெ
மம்டிவலெ
வாழாவலெ
றாவலெ

பூவாசினி
சீனித்தோணி
பொன்னுத்தோணி
மாந்தோணி

<u>துடுப்பின் பாகங்கள்</u>

தாவு 'துடுப்பு'
கடையா தாவு
தலெயா தாவு

குயவர் கிளைமொழி

மட்பாண்டம் செய்கின்ற தொழிலைக் கொண்டவரைக் குயவர் என்பர். அவர்கள் தொழில் செய்யும் முறையைக் குறிக்கும் சொற்கள் பிறர் வழங்கும் சொற்களின் வடிவங்களை ஒத்திருந்தாலும், சிறப்புப் பொருளில் கலைச்சொற்களாகப் பயன்படுகின்றன.

அவற்றுள் சில வருமாறு :

<u>1. கருவிகள்</u>

திருவை
இடிதிருவை
திருவைமுளை
திருவைக்கழி
இடுமம்
இடுமக்கட்டி
குதும்பை
குதும்பக்கட்டை
நெரவல்கட்டை
பலக்கட்டை
தட்டுகிறகட்டை
கவசரப்பலவை
நீர்சிலைத்துணி
குடத்துக்கல்
பானைக்கல்
தோண்டி தட்டுகிறக்கல்
கலயம் தட்டடுகிறக்கல்
மணெ 'மணல்'
கருக்காய்
கூளான்
உமி
ராட்டி

<u>மட்பாண்டங்கள் பெயர்கள்</u>

அடுப்பு
ரெட்டடுப்பு
கெளெடுப்பு
ஒத்தடுப்பு
சட்டி
ஆப்பசட்டி
ஆடெசட்டி
குழிசட்டி
குண்டு சட்டி
குண்டாஞ்சட்டி
குத்துசட்டி
பானை

உட்கிளைமொழி

இந்தியச் சமுதாயம் சாதி அடிப்படை கொண்டது. இந்தியா விடுதலையடைந்த பின்னரும் சமூக அமைப்பில் சிறிதளவே மாற்றம் கண்டது. அதுவும் புற மாற்றமே தவிர அக மாற்றமல்ல. அதன் காரணமாகப் பேச்சுமொழியும் வேறுபடலாயிற்று. தமிழ்நாட்டில் தனி ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு வகுப்பினரும் ஒவ்வொரு வகையாகப் பேசுகின்றனர். இவற்றை வகுப்புக் கிளைமொழி எனலாம். இதனைச் சாதிக் கிளைமொழி என்றோ வகுப்புக் கிளைமொழி என்றோ குறிப்பிடுவர்.

சமுதாயத்தின் உயர் பிரிவினராகக் கருதப்படும் ஒரே பிரிவினரிடையே கூட மொழி வேறுபாடு உண்டு. அதனை உட்கிளை மொழி (Sub-dialect) எனலாம். பிராமணர்களுக்குள் அய்யர்; அய்யங்கார், தீட்சிதர் என்னும் பிரிவுகள் உண்டு. இவை அவர்கள் பின்பற்றும் சமய அடிப்படையில் அமைந்தவையாகும். தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையுடையவர்கள் எனினும் அய்யர் பேச்சுக்கும், அய்யங்கார் பேச்சுக்கும் வேறுபாடுகள் உண்டு. இவ்வேறுபாடுடைய அவருடைய மொழிகளை உட்கிளை மொழிகள் (Sub-dialect) எனலாம்.

பின்வரும் பட்டியல் அவ்வேறுபாட்டைக் காட்டும்:

அய்யர்	அய்யங்கார்
அரிசி	அமுதுபடி
எள்சாதம்	எள்ளோரை
கறி	காரமுது
சமையல்	தளிகை
தயிருஞ்சா (தம்)	தத்தியோனம்
தூத்தம்	தீர்த்தோ(ம்)
நெய்வேத்தியம் பண்ணு	அம்சுபண்ணு
பரிமாறு	சாதி
பாயசம்	திருக்கண்ணமுது
ரசம்	சாத்தமுது
புளிசாதம்	புளியோதரை
ஸ்னானம் பண்ணு	தேர்த்தமாடு
ஸ்வாமி பொறப்பட்டார்	பெருமாள் ஏள்ரார்

கிளைமொழி ஆய்வு

கிளை மொழிகளின் இயல்பினை ஆய்ந்தறியத் துணை புரிவன வாகக் கிளைமொழிக் கேள்வித்தாள்கள், கிளை மொழி இலக்கணம், கிளைமொழி அகராதி, கிளைமொழிவரைபடங்கள் ஆகியவற்றைக் கொள்வர்.

கேள்வித்தாள்

தகுதிவாய்ந்த தகவல் தொகுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகட்குச் சென்று கிளைமொழிக் கேள்வித்தாள்களில் உள்ள சொற்களை உச்சரிக்கக் கூறித் தெளிவுறக் கேட்டுக் குறிப்பர். பதிவு நாடா (Tape recorder) இருக்குமாயின் நன்கு உதவும். பின்னர் அக்கேள்வித் தாளின் பயன்கொண்டு கிளைமொழியியல்பை ஒப்பிட்டுப் பார்ப்பர்.

இலக்கணம்

இப்பிரிவில் ஒலியனியல், சந்தி, உருபனியல், தொடரியல் என்ற பகுதிகளையும், அவை வந்து வழங்கும் முறைகளையும் ஆராய்ந்து காண்பர். அவற்றுக்கான இலக்கணத்தையும் வரையறுப்பர்.

அகராதி

இதில் கிளைமொழியின் சொற்களஞ்சியம் கொடுக்கப் பட்டிருக்கும். தகவல் தொகுப்பாளர் தந்த சொற்களைத் தனித்தனியாக வகுத்து, அவற்றுக்கான இலக்கணங்களைக் கண்டு அகராதிகள் ஆக்கப் படுகின்றன. இவற்றை ஒப்பிட்டால் மொழி மாற்றங்கள் தெளிவுறும். இம் மாற்றங்கள் கிளை மொழிகளைப் பிரித்துக்காட்டப் பயன்படும்.

வரைபடங்கள்

கிளைமொழி மாற்றங்கள் ஏற்பட்ட பகுதியினை வரைபடக்கோடு களால் (Isoglosses) பிரித்துக் காட்டலாம். அக்கோடுகளைப் பேச்சு மொழி எல்லைக்கோடு என மொழியியலார் குறிப்பர். குறிப்பிட்ட ஒரு மொழியில், குறிப்பிட்ட ஓர் ஒலிக் கூறு அல்லது இலக்கணக் கூறு வழங்கும் இடத்தை வரையறுத்துக் காட்டும் எல்லைக்கோடென அதற்கு விளக்கந்தருவர். 'அண்ணன்' என்னுஞ் சொல் 'அண்ணே' என மாறுமிடத்தையோ, 'ஆத்தாள்' என்னும் சொல் 'ஆயாள்' என்று மாறுமிடத்தையோ இக்கோடுகளால் வேறுபடுத்திக்காட்டலாம். இரண்டு மாற்றங்களும் ஓரிடத்தில் நிகழுமாயின் வரைகோடுகள் ஒன்றற்கொன்று குறுக்காக அமையுமாதலின் தெளிவாக வரையறுக்க இயலாது. பேச்சு மொழி எல்லைக் கோடுகள் நற்பயன் விளைவிக்கப் பெரிய நிலப் பகுதியினைத் தெளிவாக வரையறுக்க வேண்டும். நாட்டைப் பிரிக்கும்

ஆறுகள், மலைத் தொடர்கள் போன்றவற்றையொட்டியே இக்கோடுகள் பெரும்பாலும் அமையும். மொழியில் தோன்றும் மாற்றம் முதலில் எங்கேனும் தோன்றி அலைபோலப் பரவும். அவ்வாறு தோன்றும் இடத்தை மூல இடம் (Focal area) என்பர். மூல இடங்களில் தோன்றிய மாற்றம் பரவி வரும்பொழுது அம்மாற்றத்திற்கு உட்படாதவகையில் எஞ்சி நிற்கும் இடத்தை எஞ்சிடம் (Relic Area) எனக் கூறுவர்.

இந்திய
ஆட்சிப் பணி